உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீவித்தியாரண்ணியசுவாமிகள்
மொழியில் அருளிச்செய்ததை
திருவிடைமருதூர்
பிக்ஷுசாஸ்திரிகளென்னும்
ஸ்ரீ உலகநாதசுவாமிகளால்
மொழிபெயர்த்தருளிய

ஜீவன்முக்திப் பிரகரணம்.

இஃது
சமிவனக்ஷேத்திரமென்னுங்கோயிலூர்
ஸ்ரீ முத்துராமலிங்கசுவாமிகளின்
ஆதீனத்திற்குரிய
ஸ்ரீ சிதம்பரசுவாமிகள்
மாணாக்கர்களிலொருவராகிய
அ - இராமசுவாமிச் சுவாமி யவர்களால்,
திருத்தியும் விளக்கியுங் கூட்டியும்
புதுக்கி

பூரணம் - குப்புசெட்டியா ரவர்கள் வேண்டுகோளின்படி
சென்னை
கபாலி அச்சுயந்திரசாலையில் பதிப்பிக்கப்பட்டது.
நளஸு ஆவணிமீ
1916.
இரண்டாம் பதிப்பு.
இதன் விலை ரூபா - க.

Registered Copy Right.

சூசிபத்திரம்.

நெம்பர்.		பக்கம்.	வரி.
1	உதாரண ஆசிரியர்களின் பெயரகராதி. ...	௪	௧
2	உதாரண நூல்களின் பெயரகராதி	௫	௧
3	பாயிரம்	௬	௧
4	வித்தியாரண்ணியசுவாமிகளின்சரித்திரம் ...	௭	௧
	வடமொழி தென்மொழி பாடபேதங்களாற் சொற்பேதங்கள்...	௯	௧
	ஜீவன்முக்திப்பிரகரணமாகிய நூல்	௧௭	௧
	ஸங்கிரகம்	௧௮	௰௪
8	விஸ்தாரம்	,,	௰
9	ஜீவன்முக்திக்கிச்சொரூபம்	௨௪	௯
10	ஜீவன்முக்திக்கிப்பிரமாணம்	௩௧	௧
11	ஜீவன்முக்திக்கிச்சாதனம்...	௪௮	௰௫
12	ஜீவன்முக்திக்கிப்பிரயோசனம்	௱௪௬	௧

உச்சரிப்புச்சப்தஞ் செவ்வையாயிருத்தற்காகச் சிலசில இடத்தில் வடமொழிச் சொற்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

உதாரண ஆசிரியர்களின் பெயரகராதி.

சங்கராசாரியாள். ...
ஆனந்தபோத ஆசாரியாள் ...
வார்த்திகாசாரியாள் ...
வியாசபகவான். ...
பதஞ்சலிபகவான் ...
கிருஷ்ணபகவான் ...
பாஷியக்காராள் ...
பஞ்சபாதிகாசாரியாள் ...
நாரதபகவான் ...
வசிஷ்டர் ...
சனற்குமாரர் ...
ரிபுமுனிவர் ...
நிதாகர் ...
தாசூரர் ...
உத்தாலகர் ...
சுவேதகேது ...
வாலாகி ...
அசாதசத்துரு ...
லோகாள் ...
பூருவாசாரியாள் ...
யாக்ஞவற்கர் ...
பகீரதன் ...
உஸத்தாக்கோளர் ...
ஜனகமஹாராஜா ...
சாகல்லியன் ...
பிறவாகணன்
சுக்கிராசாரியர்
மாபலி
கௌடபாதாசாரியாள்
சர்வாநுபவயோகி
வாசிட்டவியாக்கியானக்கார
தார்க்கிகாள்
யோகபாஷியக்காரான்
கசன் ...
சிகித்துவசன் ...
பிரகலாதன் ...
வீதகவ்வியன் ...
சுகர் ...
விசுவாமித்திரர் ...
பராசர் ...

உதாரண நூல்களின் பெயரகராதி.

சுருதி ...
ஸ்மிருதி ...
இதிகாசம் ...
புராணம் ...
பராசரஸ்மிருதி ...
பிரகதாரண்ணியஉபநிடதம் ...
பிரகதாரண்ணிய சுருதி ...
பரமஅமுச உபநிடதம் ...
ஜாபால உபநிடதம் ...
கடவல்லி உபநிடதம் ...
தாபநீய உபநிடதம் ...
[illegible]ாகவதம் ...
வ[illegible]ட்டராம சம்வாதம் ...
[illegible]ஷ்ண அருச்சுன சம்வாதம் ...
[illegible]சுக்கிரசம் வாதம் ...
[illegible]ல்லி சுருதி ...
[illegible]சாஸ்திரத்தில்சூத்திரம் ...
[illegible]ற்கீதை ...
[illegible]திரபாஷியம் ...
[illegible]ாலவேஷயகீதை ...
விஷ்ணுபுராணம் ...
முண்டகோபநிடதம் ...
சாந்தோக்கிய உபநிடதம் ...
கௌசதகி உபநிடதம் ...
சூதசங்கிதை ...
மைத்திரசாகை ...
சாங்கியசாஸ்திரம் ...
கடவல்லி ...
பதஞ்சலிபகவான்சூத்திரம் ...
வியாசர்சூத்திரம் ...
வைத்திய சாஸ்திரம் ...
சேஷாரியை ...
பிரமானந்தப்பிரகரணம் ...
சுவேதாசுவதர உபநிடதம் ...
யோகசூத்திரம் ...
அடயோக சாஸ்திரம் ...
அபரோக்ஷாத்மாநுபூதிப் பிரகரணம் ...
சிரேயோகமார்க்கம் ...
யோக சாஸ்திரம் ...
ஞான சாஸ்திரம் ...
வேதாந்தப்பிரமாணம் ...
தைத்திரிய உபநிடதம் ...
பஞ்சதசப்பிரகரணம் ...
அருக, பௌத்த, தார்க்கிக, சைவ, வைஷ்ணவ, சாத்த, சாங்கிய, ஆதிசாஸ்திரம் ...

இந்நூல்களை இந்நூலாசிரியரெவ்விடத்தெவ்விடத்தெந்தெந்த நியாயத்திற் கெந்தெந்தவிடத்திலுதாரணங்கொடுக்கவேண்டுமோ ஆண்டாண் டனந்தமடங்குதாரணங் கொடுத்திருக் கின்றமையால் அவைகளை இங்கு தெரிவிக்கப்பட்டுள்ளன.

இதுவசனமாதலா லிடையிடையே வேண்டியவேண்டிய இடங்களில் உயிரெழுத்தும் உயிர்மெய்யெழுத்தும் பிரிந்துவரும்படி செய்திருக்கின்றனஏனெனில்கற்றோரன்றியில் மற்றோருக்கும் உபயோகப்படுமென்பதனால்.

பாயிரம்.

ஆனைமுகனுறுமுக னம்பிகைபொனம்பலவன்
ஞானகுருவாணியையுண்ணுடு. (௧)

உற்பவந்தொலைந்திட வொருபொருடோன்றிடக்
கற்பகக்களிற்றையே கருத்துளிருத்துவாம். (௨)

மோகமெனுங் கடல்கடந்து முத்தியெனுங் கரைகாண்பான் முதிர்ந்தநாலாம், பாகமெனு மலர்கொண்டு பக்தியெனும் புனலாட் டிப்பரிந்துசாத்திச், சோகமெனப் பாவித்துத் துரியமெனும் விளக் கேற்றிச்சோகநீங்கி, யாகமெனுங் கோயிலின்கண் ணறிவென்னுங் கணபதிக்கே யன்புசெய்வாம். (௩)

பேறுகிடைத்தி டப் பேதைமைநீங்கிட
ஆறுமுகத்த ருளையனையேத்துவாம்.

துன்பமதொழிந்திடச் சுரூபமெய்திட
நன்பரம்பரேசனை நாடொருமேத்துவாம்.

செம்பொருளநுபவந் திடமாயுதித்திட
வம்பலவாணனை யகத்துளிருத்துவாம். (௬)

வாராயென் கருணைவள்ளலேபோற்றி
வந்தெனக்குந்தன் மலத்தாள்சூட்டிச்
சீராருஞ்சிந்தை தெளியவேசாற்றிச்
சிந்திதமெய்துசிந்தாமணியேபோற்றி. (௭)

அஞ்சுநான்கு மடுக்கழிந் தோடிட
துஞ்சலில்லாச் சுகோததி மூழ்கிட
வெஞ்சலில்லா விறைவன் திருவடி
தஞ்சமென்று தமதுளத் திருத்துவாம். (௮)

பாயிரம் முற்றிற்று.

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ வித்தியாரண்ணியசுவாமிகளின் சரித்திரச்சுருக்கம்.

பூருவாச்சிரம விருத்தாந்தம்.

வடதிசையில் கர்ணாடதேசத்தில் துங்கபத்திராநதியின் தீரத்தில் பம்பையென்னும் நாமமுடைய க்ஷேத்திரமுண்டு. பூருவம் கிஷ்கிந்தாபுரியென்றும், இப்போது கோலகொண்டாவென்றும், வழங்குகின்ற அந்நகரத்திலே விருபாக்ஷமென்னும் நாமமுடைய மஹாதேவர் ந்தருளியிராநின்ற ஆலயமுண்டு. அந்நகரத்திலே ஸ்ரீ வித்தியா ரியசுவாமிகள் திருவவதாரஞ் செய்தனர். பூருவாச்சிரமத்தில் - மா தவர், மாதவாரியர், மாதவாசாரியர், மாதவாமாத்தியர், என்னுந் திருநாமங்களை யுடையராயிருந்து பின்னர் உத்தராச்சிரமத்தில் வித்தியாரண்ணியர் என்னுந் திருநாமமடைந்தனர். ஜன்மத்தினால் மாதவரென்னும் நாமமும் மஹத்தான வித்துவத்தன்மையினால் இவர்கள் இராஜாவின் குலகுருவாயிருந்ததனால் மாதவாரியர், மாதவாசரியர், என்னுந் திருநாமமடைந்திருந்தனர். ஸ்ரீ வசிஷ்ட மஹாமுனிவரைப் போல இராஜாவின் பிரதானமந்திரியாக விருந்தனராகலின் அக்காலத்தில் செய்த கிரந்தங்களில் மாதவாமாத்தியர் என்னுந் தமது திருநாமத்தைப் பிரசித்தஞ்செய்திருக்கின்றனர். வித்தையை ஆரண்ணியம்போலு முடைத்தாயிருந்தமையால் வித்தியாரண்ணியர் என்னுந் திருநாமமுடைத்தாயிருந்தனர். வித்தை ஐசுவரியம் லட்சுமி தேசுடைத்தன்மை முதலியபூதிகளால் ஜகத்தை * உத்தாரணம்பண்ணும்

* ரக்ஷிக்கும் பொருட்டென்றும் பாடம்.

பொருட்டு ஈசுரனுடைய கலைதானே இந்தமூர்த்தமாக எழுந்தருளிய தென்றி யாவராலும் மதிக்கும்படி யிருந்தமையால் இராஜாவின் சபையின்கண்ணே யாவருஞ்சாஷ்டாங்கஞ் செய்யாநிற்பர். ஸ்ரீ வித்தியாரண்ணியசுவாமிகள் பராசரஸ்மிருதியின் வியாக்கியானத்தின் உபோத்காதத்தில் இரண்டுசுலோக மருளிச்செய்திருக்கின்றனர். அவற்றின் பொருளிது. ஸ்ரீமதியென்னும் பெயரையுடையவள் மாதா. சுந்தரமான கீர்த்தியையுடைத்தான மாயணரென்னும் பெயரையுடையவர் பிதா. சாயணர் சோமநாதர் என்பவர் சகோதரர். பௌத்தாயின சூத்திரம். கிருஷ்ண யசுர்வேதத்தில் அந்தர்க்கெதமான பௌத்தாயின சாகை பாரத்துவாச கோத்திரம் இவைகளையுடைய சர்வக்ஞமாதவ னென்று தமது குலகோத்திர முதலியவைகளை அருளிச்செய்திருக்கின்றனர். இந்த வித்தியாரண்ணிய சுவாமிகளுடைய ஜன்மமானது சாலிவாகனசகாப்தம்-௧௨௦௦-வது. வருஷத்திலுண்டாயிற்றென்று கவிச்சரித்திரக்கிரந்தத்திற் கூறியிருக்கின்றது. அன்றும்பிரப்பட்டயத்தில் சாலிவாகனசகாப்தம் - ௧௨௧௨-வது வருஷத்தி லென்றும், அந்தப்பட்டயத்தில் - ௧௨௮௧-வது வருஷத்தில் பிரஜாபதிநாம சம்வற்சரத்தில் வைசாகமாசத்தில் கிருஷ்ணபட்சத்தில் சூரியகிரகணசமயத்தில் மகாமந்திரீஸ்வரரும் உபநிஷத்மார்க்கப் பிரவருத்தகருமாகிய ஸ்ரீமன்மாதவராஜர் மாதவபுரமென்று பெயரிட்டுக் கச்சரமென்னும் நாமத்தினல் பிரசித்தமாயுள்ள கிராமத்தை ௨௪ - பிராமணருக்குத்தானஞ் செய்தனரென்றும், எழுதியிருக்கின்றது. இதனல் சாலிவாகன சகாப்தம் ௧௨௦௦. அல்லது ௧௨௦௦-ல் ஸ்ரீ வித்தியாரண்ணியசுவாமிகள் திருவவதாரஞ் செய்தருளியதாகவேண்டும். குருபத்ததியின்ரீதியினல் ஸ்ரீ சங்கராசாரியருடைய திருவவதாரத்திற்கு. ௪௦௦ வருஷத்திற்குப்பின்னர் ஸ்ரீ வித்தியாரண்ணிய சுவாமிகள் திருவவதாரஞ்செய்ததாகக் காணப்படுகின்றது. இந்த ரீதியினல் ஸ்ரீ வித்தியாரண்ணியசுவாமிகளுக்கு எ௦௦ வருஷமென்று அறியப்படுகின்றது. சித்தா

ந்தகௌமுதியென்னும் பெயரிய வியாகரண கிரந்தத்தின்கர்த்தாவா கியபட்டோஜி தீக்ஷிதருக்கு சற்றேறக்குறைய-ங00-வருஷமாயிற்று. அவர் ஸ்ரீ வித்தியாரண்ணியசுவாமிகளா லருளிச்செய்த மாதவவிருத் தியென்னும்பெயரிய வியாகரணகிரந்தத்தைத் தமதுகிரந்தத்தில் பிர மாணங்கொடுத்திருக்கின்றனர். இதனாலும் ஸ்ரீவித்தியாரண்ணியசு வாமிகள், ங00-வருஷத்திற்குப்பூருவம் எழுந்தருளியிருந்ததாகஅறிய ப்படுகின்றது. ஸ்ரீவித்தியாரண்ணியசுவாமிகள் மஹாஞய்த் துரந்தா ராய்ப் பண்டிதராயிருந்தனர். இவர்கள் சொற்பகாலத்திற்றனே சர் வவித்தைகளையும் அத்தியயனஞ்செய்தனர். அனேகமாகச்சொல்வ தினலென்னை, அனேகஉக்கிருஷ்ட பண்டிதர்களாலங்கீகரிக்கப்ப ட்ட சர்வசிரோமணியாகிய சங்கரமதத்தில் ஸ்ரீஆசாரிய சுவாமிகளை யன்றி ஸ்ரீவித்தியாரண்ணிய சுவாமிகளைப்போல அன்னிய வித்து வான்கள் உண்டாகவில்லை. இவர்களே அபூர்வவித்துவானுகவிருந்த னர். இதுவித்துவான்களுடைய முகத்தினாலும் அவர்களது கிரந்த ங்களாலு மறியப்படுகின்றது.

ஸ்ரீவித்தியாரண்ணியசுவாமிகள் வைத்தியசாஸ்திரம், தர்மசா ஸ்திரம், ஜோதிஷசாஸ்திரம், வியாகரணசாஸ்திரம், வேதாந்தசாஸ்திர த்திலும் அனேககிரந்தங்களருளிச்செய்திருக்கின்றனர். அவைகளில் சில பிரசித்தமான கிரந்தநாமங்க ளெழுதப்பட்டுள்ளன. இந்தவித் தியாரண்ணியசுவாமிகள் நான்குவேதங்களின்பேரில் மஹாகெம்பீர மானபாஷியஞ்செய்திருக்கின்றனர். அவ்வகளுள்ளே இருக்குவேத பாஷியம் ஐதரேயப்பிராமணபாஷியம் தைத்திரியசமிதையின்பாஷி யமுதலிய இவை அச்சிட்டிருக்கின்றன. அவைகளில் மாதவவே தார்த்தப்பிரகாசமென்று நாமந்தரிக்கப்பட்டிருக்கின்றது. பிரமமீ மாம்சையின், கக௨ - அதிகரணசூத்திரங்களின்பேரில் அதிகரண ரத்னமாலை யென்னுங் கிரந்தமருளிச்செய்து, அதனது டீகாவுந்

தாமே யருளிச்செய்திருக்கின்றனர். சர்வதரிசனசாரசங்கிரகஞ்செய்தனர். அதில்- வேதாந்தத்திற்குப்பின்னமான எவ்வளவோ பிராசீனமதங்களைக்காட்டி இருக்கின்றனர். அநுபூதிப்பிரகாசமென்னுங் கிரந்தஞ்செய்திருக்கின்றனர். அதில்- வேதாந்தத்தின் சர்வஉபநிடதங்களின் சாரார்த்தங்களை சர்வாக்ஞாயிகைகளோடு சஞ்சேபமாகக் காட்டியிருக்கின்றனர். பிரமகீதையென்னும் பெயரையுடைய • கிரந்தஞ்செய்திருக்கின்றனர். அதிலே மாத்துவராமாநுஜ சங்கிரமதங்களைப்பிரதிபாதித்து சுருதிசம்மதமான அத்தொய்தசித்தாந்தத்தைஸ்தாபனம்பண்ணினர். இதன்மேல் பிரகாசிகையென்னும் பெயரையுடைய டீகையிருக்கின்றது. பஞ்சதசியென்னும் பெயரினையுடைய கிரந்தஞ் செய்திருக்கின்றனர். அதனது வர்ணனை சரித்திரமுடிவிற் கூறப்படும் * ஜீவன்முக்தி விவேகஞ்செய்திருக்கின்றனர். அதிலே சந்நியாசவிபாகபூர்வகமாக ஜீவன்முக்தியினது விலட்சணசுகத்தின் பிரகாரத்தைக் காட்டியிருக்கின்றனர். திருக்குத்திரிசியவிவேகமும், ஸ்ரீ ஆசாரியசுவாமிகளா லருளிச்செய்த அபரோக்ஷாத்மாநுபூதிப் பிரகரணத்திற்கு டீகையுஞ்செய்தருளினர். முமூக்ஷுகளுக்குப் பெரும்பாலு முபயோகிகளான கோப்பியக்கிரந்தங்க ளின்னு மனேக மருளிச்செய்திருக்கின்றனர்.

ஸ்ரீ வித்தியாரண்ணியசுவாமிகள் பூருவாச்சிரமத்தில் விஜயநகரத்தில் யதுவமுசத்தில் புக்கதேவஇராஜாவின் குலகுருவும் பிரதான மந்திரியுமாக இருந்தனரென்று அதிகாரணரத்னமாலை முதலியகிரந்தங்களிற் கூறியிருக்கின்றது. இவர்களுடைய பிரதாபத்தா லந்தராஜாவினுடைய ராச்சியமும் ராச்சியத்தில் தர்மமும் அபிவிருத்தியாயின. கோவநகரத்தில் துலுக்கஜனங்க ளிருந்தனர். அவர்களைத் தூரத்தி இந்தவாசனுணை செல்லும்படியாகச் செய்தனர். சப்தநாதரென்னும் மஹாதேவமூர்த்தியையும் ஸ்தாபனம்பண்ணினர். கச்சரமென்னும்

* ஜீவன்முக்திப்பிரகாணமென்றும் பாடம்.

நகரத்தை மாதவபுரமென்னும் பெயரிட்டுப் பிராமணர்களுக்குத் தானஞ்செய்து தன்ருயின்பெயரால் பூதானமுஞ்செய்தனர். அங்கே பிராமணர்களுக்குப் பூமியை விபாகஞ்செய்து தமதுதாயின் பேரை யநுசரித்துக் கிராமங்களை உண்டுபண்ணினர். முன்னமே சென்று கொண்டிருந்தநதியானது இந்த வித்தியாரண்ணியசுவாமிகளுடைய பரிசயத்தினுல் மாதவதீர்த்த மென்னும் பெயரையடைந்தது.

வித்தியாசாலை அன்னசத்திரம் தேவாலயம் அகணிதமாகச் செய்தனர். சிரௌதஸ்மார்த்ததர்மத்தின் பிரவருத்தகராகி இருந்தனர். தம்மா லருளிச்செய்யப்பட்ட கிரந்தங்களை மிகவுஞ் சுத்தமாக்கி பனையேடுமுதலியவற்றில் அனேகபுஸ்தகங்களெழுதி சிலபுஸ்தகங்களை மடாலயங்களிலும் சிலபுஸ்தகங்களை வித்தியாசாலைகளிலும் சில புஸ்தகங்களை க்ஷேத்திரங்களிலும் வைத்தருளி சிலபுஸ்தகங்களை மலைகளின் குகைகளில் வைத்தனர். சிலபுஸ்தகங்களை பூமியில் புதைத்துவைத்தனர். ஆங்கலபூமியின்கண் வாசம்பண்ணுநின்ற ஒருவன் பூமியை வெட்டிச் சிலபுஸ்தகங்களை எடுத்தனனென்னு மிவ்வார்த்தை, சா - வருடத்திற்குமுன்னேநடந்தது. இவர்கள் கிரகாச்சிரமத்திலும் அத்தொய்தத்துவத்தில் நிஷ்டாசம்பன்னராய் விவேகவைராக்கியாதி சகலசற்குணங்களையு முடைத்தாயிருந்தனர். இப்படிப் பட்ட சற்புருடர் பூதபௌஷ்ய வர்த்தமானகாலத்தில் துர்லபம். இந்தப்பிரகாரம் வித்தியாரண்ணியசுவாமிகள் கிரகாச்சிரமத்தில் காலக்ஷேபஞ்செய்திருந்தனர். பின்னர் ஓர்சமயத்தில் காயத்திரிதேவியை அபரோக்ஷமாக்க இச்சையுண்டாமையினுல் சகலதேசத்திலுமுள்ள பிராமணர்களை வரவழைத்துக் காயத்திரியின் செபஞ் செய்தனர். அத்தியந்தமனுஷ்டானமாகியுங் காயத்திரி அபரோக்ஷமாகவில்லை. அப்போது காயத்திரிசெபத்தின் மகிமையினுலும், தேவிஅபரோக்ஷமாகாமையினுலும், பூர்வபுண்ணிய புஞ்சபரிபாகத்தினுலும், தமக்கு

அதிசயமான தீவிரவைராக்கியமுண்டாயிற்று. அஃதுண்டாகவே எந்தத்தினத்தில் வைராக்கியமுண்டாமோ அந்தத்தினத்திலேயே சந்நியாசம் கொள்ளற்பாலதாம் என்பது முதலிய சுருதிவசனுனுசாரமாக அப்பொழுதே வித்வச்சந்நியாசதாரணஞ் செய்தனர். பின்னர் காயத்திரிதேவி யெழுந்தருளிவரங்கொடுக்கத்தொடங்கினள். அப்பொழுது தாந் தேவியின்வரத்தை ஏற்றிலர். ஆயினும் அமோகதரிசனத்தையுடையதேவி பலாத்காரத்தினுல் வரங்கொடுக்கத்தொடங்கி மிகவும் பின்றெடர்ந்தனள். அப்பொழுது சுவாமிகள் சர்வஜனங்களின் தாரித்திரங்களும் பங்கமாகும்படிகருணைகூர்ந்து, வாராய்தேவி எனது இச்சை னனுசாரமாக இந்தகர்ணுடதேசமுழுதுஞ் சுவர்ணமுத்திரையின் வருஷம் வருஷிப்பாயாக வென்று வரம்வேண்டினர் அப்பொழுது தேவியு மப்படியே ஆகுமென்றருளி அந்தர்த்தானமாயினள். ஆகவே தாம் அந்தக்கர்ணுடதேசத்து ராஜாவைவரவழைத்து சுவர்ணமுத்திரையின் வருஷவிஷயத்தைக் குறித்துக் கேட்டருளினர். அப்பொழுது அந்தராஜா ஜனங்களின் கிரகத்தின் மீதும், பத்து அடி அளவிலும், கிரகத்திறுற்புறத்தும், விழுகின்ற சுவர்ணமுத்திரைகள் அந்தந்தச் ஜனங்களுக்காகட்டும், மார்க்க முதலிய சேஷபூமியின் கண்ணேவீழாநின்ற சுவர்ணமுத்திரைகள் என்னுடைய தாகட்டுமென்று சொன்ளுன். அப்பொழுது தமது ஆக்கினையினுல்-கவ-சாமபரியந்தஞ் சுவர்ணமுத்திரையின் வருஷம் வருஷித்தது, அந்தமுத்திரைகளை அந்தத்தேசத்துச் ஜனங்கள் ஹொநமென்றுசொல்லுவர்-பின்னே அந்தத்தேசத்து அரசன் அதற்குச் சமானமாகவே றேயு முத்திரைசெய்து அந்தத்தேசத்திலே விவகாரம் நடத்தினுன் இந்தவார்த்தை உலகிற் பெரும்பாலும் பிரசித்தமாயிருக்கின்றது.

இனிஉத்ராச்சிரம விருத்தாந்தம்.

———:o:———

உத்தராச்சிரமத்தில் ஸ்ரீ வித்தியாரண்ணியசுவாமிகள் யாக்கியவல்கியர்போல மிகவும் * உபரமமுடையராய்ப் பிரமவிசாரத்திற்றூனேதற்பரராயிருந்தனர் ஒருதரம் ஸ்ரீ வித்தியாரண்ணியசுவாமிகள் பகிர்பூமியிற்சென்றபோது பாத்சாவென்னும் ஒரு அரசனுடை சுவர்ணச்செங்கலானது கிடந்தது. அங்கே அந்தச்சுவர்ணச் செங்கல்லுக்குச் சமீபத்தில் மற்றொருகருங்கல்லைவைத்து அவ்விரண்டு கன்மீதுந்தமதுவிரண்டு காலையும்வைத்து உட்கார்ந்து மலோத்சர்க்கஞ்செய்து மீண்டுபோயினர். அப்பொழுது அந்த பாத்சாவென்னுமரசன் சோதித்து மிகவுஞ்சந்தோஷத்தையுடையவனாய் அந்தச்சுவாமிகளுக்குக் கிராமமுதலியவைகளைக் கொடுக்கத்தொடங்கினான். அவைகளையுமங்கீகரிக்கவில்லை. இப்படிப்பட்ட விரக்தியுடையராய் ஸ்ரீ வித்தியாரண்ணியசுவாமிகளிருந்தனர். இந்தவார்த்தையுமுலகத்தில் வழங்கிவருகின்றது. பின்னொருகாலையில் ஸ்ரீகாசியின்கண்ணே ஓர் பிரயத்தினத்தினால் ஸ்ரீவேதவியாசரையடைந்து தாமியற்றிய வேதபாஷியத்தைச் சுத்தமாக்கும்பொருட்டுக் காண்பித்தனர். ஸ்ரீவியாசபகவானும் ஓரிடத்திலும் அவ்வித்தியாரண்ணியசுவாமிகளாற் செய்தபாஷியத்தில் தோஷங்காணாமையினால் அந்தச்சுவாமிகளுக்கு வித்யாரண்ணியர் என்னுந்திருநாமந்தரித்தருளினார். இதுவும் வழங்கிவருகின்றது. உத்தராவத்தையில் யாத்திரை செய்ய முடியாமலிருந்தபோது தமது குருவின் ஆஞ்ஞையினால் ஸ்ரீ சங்கராசாரியரால் ஸ்தாபிதமான சிருங்கேரிதிருமடாலயத்தில் ஆதிபத்தியத்தையடைந்து ஸ்ரீ சங்கராசாரியர் பதவியினால் பிரசித்தராய் அனேகமதங்களின் கண்டனபூர்வகமாகத்தமது சுருதி சம்மதமான அத்தொய்தமதத்தை ஸ்தாபனஞ்செய்திருந்தனர். இந்தப்படி சிருங்கேரியில் சிலகாலமிருந்து பிந்தினவயதில் ஸ்ரீபஞ்சதசியென்னுங்கிரந்தஞ் செய்யத்தொடங்கினர். அதில்—

* உபராமமென்றும் - பாடம்.

* விவேகபஞ்சகந்தீபிகைபஞ்சகம் என்னும் பத்துப்பிரகரணஞ் செய்து சமரசமானபரப்பிர்ம்மபாவத்தை அடைந்தருளினர். அப்பொழுது சர்வவேதசாஸ்திரார்த்தங்களையு மறிந்த மஹாஞன ஸ்ரீ பாரதி தீர்த்த சுவாமிகள் ஸ்ரீவித்தியாரண்ணிய சுவாமிகளின் அபிப்பிராயத்தை யநுசரித்து ஆநந்தபஞ்சகமென்னும் மேற்பிரகரணங்களைச் செய்தருளிக் கிரந்தத்தைச்சம்பூரணமாக்கினர். இந்தக்கிரந்தத்தில் சர்வவேதங்களின் நிஷ்கர்ஷமான அர்த்தங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. முன்னே காயத்திரிதேவி பிரசன்னமானபோது ஸ்ரீ வித்தியாரண்ணியசுவாமிகளைப் பார்த்து நீர் உத்தராவத்தையில் ஓர்கிரந்தஞ்செய்யாநிற்பீர் அதை யாதொருவர் நன்ருய்ப்படிப்பாரோ அவர்க்குச் சகலகிரந்தங்களின் அத்தியயனத்திலுஞ், சிரவணத்திலுஞ், சாமர்த்தியமுண்டாகுமென்றுவரந்தந்தருளினள்;

ஆதலால் பஞ்சதசியென்னு மந்தக்கிரந்தமானது வரமுடைய கிரந்தமாம் இப்படிப்பட்ட வரமுடைய பஞ்சதசியென்னுங் கிரந்தத்தையும், அத்தியந்தம் அதிவிரக்தராய் அதிசுந்தரவிவேகத்தோடிருக்கும்போதியற்றியஜீவன் முக்திப்பிரகரணமென்னுங் கிரந்தத்தையுஞ், சர்வமுமுக்ஷுக்களும் படித்துவேதாந்தப் பிரக்கிரியையில் குசலராய் பிரமாத்ம ஏகத்வத்தைச் சாக்ஷாத்கரித்துச் ஜீவன்முக்தி விதேகமுக்திக்கு உரியராகலாம் இதிற் சந்தேகமில்லை.

ஸ்ரீ வித்தியாரண்ணியசுவாமிகளினது சரித்திரத்தை விரிக்கிற் பெருகுமெனுங் கருத்தாற் சுருக்கிவரையலாயிற்று அச்சரித்திர விரிவைக்காணக்கருத்துடைய புண்ணியபுருடாளாங்காங்கே அனேக சாஸ்திரங்களி லறைந்திருக்கின்றதை யாராச்சிசெய்தறிந்துகொள்ளலாம்.

---

* விவேகா - தீபிகா - என்றும் பாடம்.

வடமொழி தென்மொழி பாடபேதங்களாற் சொற்பேதங்கள்.

முக்தி ...	முத்தி ...
சந்நியாசம் ...	சன்னியாசம் ...
கேட்க	கேக்க - கேழ்க்க ...
சூதசங்கிதை ...	சூதசங்கீதை ...
பிரயோஜனம் ...	பிரயோசனம் ...
பாதகம் ...	வாதகம் ...
சாஸ்திரம் ...	சாத்திரம் ...
ஜாக்கிரம் ...	சாக்கிரம் ...
ஜாக்கிர ...	சாக்கிர ...
சொப்பனம் ...	சொற்பனம் ...
சொப்பன ...	சொற்பன ...
சாக்ஷி ...	சாட்சி ...
விக்ஷேபம் ...	விட்சேபம் ...
ஸபலம் } ஜபலம் } ...	சபலம் ...
ஜன்மம் ...	சன்மம் ...
மோக்ஷ ...	மோட்ச ...
முமுக்ஷு ...	முமுட்சு ...
ஜலம் ...	சலம் ...
வியவகாரம் ...	விவகாரம் ...
சுழுப்தி ...	சுழுத்தி ...
அருச்சுனன் ...	அர்ச்சுனன் ...
பிரத்தியக்ஷம் ...	பிரத்தியட்சம் ...
விரக்தி ...	விரத்தி ...
பக்தி ...	பத்தி ...
ஜாக்கிரதை ...	சாச்கிரதை ...
சக்ஷு ...	சட்சு ...

இவ்வண்ணமனேகசொற்பேதங் ளிந்நூலின்கண்ணேயுள அவைகளிற் சிற்சிலவரையப்பட்டுள்ளன.

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ குருவே நம:

ஜீவன்முக்திப்பிரகரணம்.

இந்நூல் மொழிபெயர்த்தருளிய ஆசிரியர் மங்களா சரணையோ டியற்றிய அவதாரிகை.

சத்தியக்கியானனந்த பரிபூரண பராமத்துவைதராயிருக்கிற யாதொரு பரமசிவனனவர் சுத்தசத்துவப்பிரதானமாய்ச் சொட்சமாய்ச் சூட்சுமமாய்ச் சொரூபானுவரணமாய்ச் சுவாதீனமாயிருக்கிற தன்னு டைய மாயாசத்திவசத்தினலே நாமரூபப்பிரபஞ்சமுழுவதுஞ் சிவசத் தியாத்மக மென்கிறத்தை யெல்லாருக்குந் தெரியப்படுத்துகிறதற்காகச் சாம்ப நடேசரூபத்தைத் தரித்துக்கொண்டு தன்னுடைய யெதார்த் தரூபஞ் சிதாகாசமென்று போதிக்கிறதாயிருக்கிற சிதம்பரச் சேத்தி ரத்தில் சனகாதிரிஷீசுவராளுக்கும் பின்னும் பதஞ்சலி வியாக்கிர பாதாள் முதலான * பக்தாளுக்கும் சொரூபானந்தாவிற் பாவத்தை யபிநயம் பண்ணிக் காண்பிக்கிறதின் பொருட்டாவிற்ப வித்து அம் பாளைத்தானே சாட்சியாக வைத்துக்கொண்டு இப்பவுங் கூட ஆனந் தத் தாண்டவம் பண்ணுகிறாரோ அப்படிப்பட்ட சர்வக்ஞராய்ச் சர்வ சத்திமானய் பக்தசனப்பிரியராயிருக்கிற ஸ்ரீசாம்பநடேச மூர்த்தியைத் திரிவித கரணத்தினலும் நமஸ்காரம்பண்ணிப் பிரார்த்தித்துக்கொண்டு அவருடைய பிரசாத லேசாலேசத்தினலுஞ் சற்குரு கிருபையினலுஞ் சகல சுருதி ஸ்மிருதி இதிகாச புராணசாரமாய்ச் ஜீவன்முக்திக்கந்த ரங்கசாதனமாய்ப் பரமகாருணியாளான ஸ்ரீ வித்தியாரண்ணிய சுவாமி

---

* அனேகமென்றும் - சில என்றும் - பாடம்.

2

களினாலே † கீர்வாணத்தினாற் பண்ணப் பட்டதாயிருக்கிற ஜீவன்முக்திப்பிரகரணத்தின் அர்த்தத்தைக் கீர்வாணந் தெரியாதவர்களாய்ச் சாதனசம்பன்னராயிருக்கிற சாதுக்களுக்கு எளிதாய்த் தெரியும் பொருட்டுப் புத்திக்கித்தோணினமட்டுக்குந் தமிழினாலே சங்கிரகித்துச் சொல்லுகிறேன்.

இனி யிந்தப்பிரகரணாதியிலிருக்கிற மங்களசுலோகத்தின் அர்த்தம்.

யாதொரு பரமேசுவரனானவர் லீலையினாலே மூச்சுக்காத்து விடுகிறதுபோல யெளிதாய்ச்சகலவேதங்களையு முண்டுபண்ணி யதின் வழியாய்ச் சகலபிரபஞ்சத்தையும் சிருட்டித்தாரோ அப்படிப்பட்ட ஜகச்ஜன்மாதி தடத்தலட்சணராயும் அத்தூலாதி அதத்துவா விர்த்திலட்சணராயுஞ் சச்சிதானந்த சொரூபலட்சணராயு மிருக்கிற ஸ்ரீ சற்குரு சொரூபமான பரமேசுவரனைத் திரிவிதகரணத்தினாலும் நமஸ்காரம் பண்ணுகிறேன்.

ஜீவன் முக்தி பிரகரணார்த்த ஸங்கிரகம்.

நூல்.

இனி இந்தச் ஜீவன் முக்திப்பிரகாணத்தின் அர்த்தத்தைமுந்திச் சங்கிரகித்துச்சொல்லிப் பின்பு விஸ்தாரமாய்ச்சொல்லுகிறோம்.

சங்கிரகமாவதேதென்றால் விவிதிஷாசன்னியாசமென்றும் வித்துவச் சன்னியாசமென்றும் இரண்டுசன்னியாசமுண்டு இந்தவிரண்டுவித சன்னியாசமுங் கிரமமாக விதேகமுக்திக்குஞ் ஜீவன்முக்திக்கும் யேதுவாயிருக்கும் இந்தச் சன்னியாசங்களுக்கு ஏதுயேதென்றால் வைராக்கியமேயேது. இந்தவைராக்கியம் மந்தமென்றுந், தீவிரமென்றுந், தீவரதரமென்றுந், மூன்றுவிதமாயிருக்கும். அதிற்புத்திரதாரதனாதி நசித்துப்போகும்போது துக்கம்பொறுக்கமாட்டாமலிந்தச் சமுசாரம் மகா பொல்லாதது இத்தைச்சுடவேண்டு மென்றந்தக்கால

† கிரந்தத்தினாலென்றும் பாடம். கிரந்தம் - ஆரியம்.

மட்டுக்குந் தோணுநின்ற யாதொருபுத்தியுண்டோ அதுமந்தவைராக்கியம், இந்தச்ஜன்மத்திற் புத்திரதாராதியான சமுசாரம் நமக்கு வேண்டா மென்று சொற்பப் புண்ணியத்தினாலே தோணு நின்ற யாதொரு திடபுத்தியுண்டோ அது தீவிரவைராக்கியம், திரும்பிப் பிறப்பை யுடைத்தான பிரமலோக முதலான தொன்றும் நமக்கு வேண்டாமென்று மகா புண்ணியபெலத்தினாலே தோணு நின்ற யாதொரு திடபுத்தியுண்டோ அது தீவிரதரவைராக்கியம், இதில் மந்தவைராக்கியவானுக் கொருசன்னியாசமுமில்லை. தீவிரவைராக்கியவானுக்கு யாத்திராதிசத்தி யில்லாவிட்டாற் குடீசகமென்றும் அந்த சத்தியிருந்தால் வெகூதகமென்றுஞ் சொல்லப்பட்ட விரண்டு விதசன்னியாசத்தி லதிகாரமுண்டு. தீவிரதரவைராக்கியவானுக்குப் பிரமலோகவிச்சையினாலே முமூட்சுத்துவ மில்லாவிட்டால், அமுசமென்றும், வெகுஜன்மத்திற் பண்ணப்பட்ட புண்ணியபுஞ்சபரிபாகத்தினால் வரப்பட்ட அத்தியந்தசித்தசுத்தியினாலே முமூட்சுத்துவமிருந்தால், சாக்ஷாது ஞானசாதனமா யிருக்கிற பரமா அமுசமென்றுஞ் சொல்லப்பட்ட இரண்டுவித சன்னியாசத்தி லதிகாரமுண்டு. அதில் அமுசனுக்குப் பிரமலோகத்தில் தத்துவஞானம் வந்து மோட்சம் வரும். பரமாமுசனுக்கு இந்த லோகத்திலேயே ஞானம்வந்து சீக்கிரத்தில் மோட்சம்வரும். இந்த நாலுபேர்களுடைய ஆச்சிரமதருமமும், பராசர ஸ்மிருதியில் விஸ்தாரமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. நாமிந்தச் ஜீவன் முக்திப்பிரகரணத்தில் பரமா அமுசனையே விசேஷமாய் வர்ணிப்போம். அந்தப்பரமாமுசன் விவிதிசுவென்றும், வித்துவானென்றும், இரண்டுவிதமாயிருப்பன் இப்படி விதேகமுக்திக்குஞ் ஜீவன்முக்திக்குஞ் சாதனமான விவிதிஷா சன்னியாசமும் வித்துவச் சன்னியாசமும் உண்டென்கிறதிற் பிரமாணமேதென்றால், பிரகதாரண்ணிய முதலான சுருதியும் ஸ்மிருதியும் பிரமாணஞ். சுருதி யென்ன சொல்லுகிறதென்றால், அந்த

துமலோகமென்றும், ஆத்துமலோகமென்றும், இரண்டுலோகமுண்டு. அதில்*அனாத்துமலோகமாவதேதென்றால், மநுஷியலோகமென்றும், பிதிர்லோகமென்றுந், தேவலோகமென்றும், மூன்றுவிதம். இந்தலோக மூன்றுக்குங் கிரமமாகப் புத்திரன், கருமம், உபாசனை, மூன்றுஞ் சாதனமாயிருக்கும். ஆத்துமலோகமாவதேதென்றால், ஆத்துமாவென்பது பிரத்தியகபின்ன பரப்பிரமம். லோகமென்பது கரதலாமலகம் போல அந்தப்பிரமசொரூபம் அநுபவிக்கப்படுவது. இப்படி வித்துவான்களினாலே அநுபவிக்கப்பட்ட பிரமசொரூபத்தை அப்பிரதிபந்த அபரோட்சமாக அநுபவிக்கவேண்டுமென்கிற இச்சையுள்ளவாள் விவிதிஷாசன்னியாசத்தை பண்ணிக்கொள்ளக்கடவர்களென்று சுருதி சொல்லுகிறது. ஸ்மிருதியேதென்றால், முமூட்சுவானவன் பிரமக் ஞானலாபத்தின்பொருட்டு சாந்தியாதி சகலசாதனங்களோடே கூடினவனாய் இந்தப்பரம அமுசசன்னியாசத்தைப் பண்ணிக்கொள்ள வேண்டுமென்கிறதேஸ்மிருதி. இந்தச்சன்னியாசம், வித்தையினிச்சையாகிய விவிதிசையினாற் பண்ணிக்கொள்ளப் படுகிறபடியினாலே, இதற்கு விவிதிஷாசன்னியாசமென்றுபெயர். இதைச்சிஞ்ஞாசுசன்னியாசமென்றுஞ் சொல்லுவார்கள். ஞானயேதுவாயிருக்கிற இந்தவிவிதிஷா சன்னியாசமானது மேன்மேற்ஜன்மத்தைக் கொடுக்கப்பட்ட கருமாதியைமனதினாலே விடுகிறதாயும், பிரைஷமந்திர உச்சாரண பூர்வமாகத்தெண்டதாரணாதியாச்சிரம ரூபமாகவும், இரண்டுவிதமாயிருக்கும். இதுகளுக்குள்ளே முந்தினமானத சன்னியாசத்தில், ஸ்திரீகள் முதலானபேர்களுக்கும் அதிகாரமுண்டு மைத்திரைமுதலான ஸ்திரீகள் பிரமஞானத்தை யடைந்தாளென்கிற சுருதியே, இதற்குப்பிரமாணம். பிரமசாரி, கிரகஸ்த, வானப்பிரஸ்தாளுக்கு, ஏதாகிலும் ஒரு நிமித்தத்தினால் பிரசித்தமான வாகிய சன்னியாசம் பண்ணிக்கொள்கிறதற்குப் பிரதிபந்தமிருந்தால், அப்போ அவர்களுக்குந் தன்தன்னாச்

---

* அனாத்தும லோகம். என்றும் - பாடம்.

சிரமதருமத்தைப் பண்ணிக்கொண்டு ஞானசாதனமான இந்தமானத சன்னியாசத்தில் அதிகாரமுண்டு, விரோதமில்லை. சுருதி ஸ்மிருதி யிதிகாச புராணங்களிலேயும், லோகத்திலேயும், அப்படிப்பட்டவாள் வெகுபேர்களைக் கண்டிருக்கிறோம். அதுவேயிதற்குப் பிரமாணம். தெண்டதாரணுதி ஆச்சிரம ரூபமான வாகிய பரம அமுசசன்னியாசம் பூருவாசாரியர்களினாலே, வெகுவாய்ச் சொல்லப்பட்டிருக்கிற படியினாலே, அதை நாமிங்கே விஸ்தரித்துச் சொல்லவில்லை. இப்படி விவிதிஷாசன்னியாசஞ் சொல்லப்பட்டுது.

இனிவித்துவச் சன்னியாசத்தைச் சொல்லுகிறோம். அதேதென்றால், நன்று யனுஷ்டிக்கப்பட்ட, சிரவண மனன நிதித்தியாசனங்களினாலே பிரமத்தை யறிந்திருக்கிற வித்துவான்களினாலே ஜீவன் முக்தியின்பொருட்டுப் பண்ணிக்கொள்ளப்படுகிற பரம அமுசசன்னியாசம் வித்துவச்சன்னியாசமென்று சொல்லப்படும். இதைஞானவான் சன்னியாசமென்றுஞ் சொல்லுவார்கள். இந்தச் சன்னியாசம் * வியாக்ஞவற்கராலே பண்ணிக்கொள்ளப்பட்டது. அந்தப்படிசொல்லுகிற பிரகதாரண்ணியசுருதியே யிதற்குப் பிரமாணம். பின்னும், பரமஅமுசவுபநிடதம் ஜாபால உபநிடதமுதலான சுருதி, ஸ்மிருதியும் அப்படியே தத்துவஞானிகளா யிருக்கிற பெரியவாளுடைய, ஆசாரமும் இந்தவித்துவச்சன்னியாசம், உண்டென்கிறதிற், பிரமாணம். இந்தவித்துவச் சன்னியாசிகளுக்கு, ஆசாரமேதென்றால், முன் விவிதிஷாசன்னியாசத்தில் ஒப்புக்கொள்ளப்பட்ட கௌபீனந்தெண்டங் கமண்டலமுதலான சகலத்தையும் விட்டுப் போட்டு ஒரு லோகவிவகாரமு மில்லாமல் திகம்பரனுய்ச் சீதோஷ்ண மானவமானுதி துவந்துவமில்லாமல் ஒருபதார்த்தத்தையும் ஒருவனிடத்தில் நின்றும் வாங்காமல் பிரம மார்க்கத்தில் நன்று

* யாக்கியவல்கியர் என்றும் பாடம்.

யிருந்துகொண்டு சுத்தசத்துவமனதாய்ப் பிராணதாரணத்தின்பொரு ட்டு, பிக்ஷாகாரம் பண்ணிக்கொண்டு, லாபா லாபங்களிலே சம னாய்ச் சனங்களொருத்தரு மில்லாத வீடு, மடங், கோவில், புல்லு டைத்தானதரை, புத்தடி, மரத்தடி, அக்கினிகோத்திரசாலை, நதி தீரத்தின் மணல்மேடு, பருவத் குகை, அதின்சிகரம், மலையருவி விழாநின்றபிரதேசஞ், செம்மையான வெறுந்தரை. யிதுமுதலான இடங்களிலே ஒருயிடத்தில் இதுவே நமக்குத் தியானஸ்த்தான மென்று நியமம்வையாமற் சுத்தப்பிரமத்தியான பரனாயிருந்துகொண்டு, சதாப்பரிபூரண சச்சிதானந்தகனப் பிரமசொரூபமே நாமென்கிற நிஷ்டாபரனாய், ஞானாக்கினியினாலே சகலகருமங்களையுந் தகித்துப் போட்டு வர்த்தமானதேகம்போன உடனே நிருபாதிகப் பிரமமாகச் சேஷித்திருக்கிறதே ஆசாரம். இப்படி வெகு சுருதிஸ்மிருதிகளினா லிரண்டுவித பரம அமுசசன்னியாசமும் வெகுவிசாரம்பண்ணிச் சாதிக்கப்பட்டிருக்கிறபடியினாலே இதில் யாதொரு விவாதமு மில் லைச் சித்தம்.

கேள்வி? லோகத்தில் ஆராகிலுங் கலைக்கியானத்தைப்போல உச்சாகத்தினாலே - ஒருக்கால் பிரமஞானத்தை இச்சிக்கிறதுங்கண் டோம் அப்படியே கொஞ்சம் படித்தமாத்திரத்தினாலே சாதனசம்ப த்தியில்லாத அகங்காரியாயிருக்கிறவன் மேலெழுந்தவாரியாயறிந்து கொண்டு நான்பிரமஞானி யென்றுசொல்லுகிற விவகாரத்தையுங் கண்டோம் அவாளிரண்டு பேர்களூ மிரண்டுவித சன்னியாசத்தைப் பண்ணிக்கொள்ளக் காணாதபடியினாலே விவிதிசா சன்னியாசத்து க்கு யேதுவானவித்தையி னிச்சையாகிய விவிதிஷையும் வித்துவச் சன்னியாசத்துக்கு ஏதுவான பிரமஞானமாகிய வித்துவத்துவமு மெப்படிப்பட்டது யென்றுகேட்டால், அதற்குத்தாஞ் சொல்லு கிறோம். எப்படியென்றால், தீவிரமாயிருக்கிற பசியுள்ளவனுக்குப் போசனத்தைவிடவேறே வியாபாரம் ருசியாதோ போசனத்திலுந்

தாமிசஞ்சகியாதோ அப்படிப்போல யாதொருத்தனுக்குச் ஜன்ம யேதுக்களாயிருக்கிற கருமங்களொன்றும் ருசியாமல் ஞானசாதன மான சிரவணாதிகளில் மகாசுருக்குண்டாகிறதோ அந்தப்புருஷனு டைய பிரபலஞானயிச்சையாகிய விவிதிஷையே விவிதிஷாசன்னி யாசத்துக்குயேது. அவதிபரியந்தங் கிடைத்திருக்கிற ஞானமாகிய வித்துவத்துமே வித்துவச்சன்னியாசத்துக்குயேது. ஞானத்துக்க வதி ஸ்ரீசங்கராசாரிய சுவாமிகளாலே சொல்லப்பட் டிருக்கிறது அதேதென்றால் தேகமே நாமென்கின்ற ஞானம்போலத் தேகோக மென்கின்ற ஞானத்தை வாதிக்கிறதாயிருக்கிற பிரமமேநாமென்கி ன்ற ஞானம் யாதொரு புருஷனுக்குண்டாகிறதோ அவன் தனக்கு மோட்சம்வேண்டா மென்றாலும் முக்தனாகிவிடுவனென்கிற ஸ்ரீசங்கரா சாரிய சுவாமிகளுடைய வசனமே ஞானத்துக்கு அவதி.

இப்படியே பிரமசாக்ஷாத்காரம் வந்தால் அதினாலாத்மாவுக் கும் அனாத்மாவுக்கும் அத்தியாசமாகிய 'இருதயக்கிரந்தியும் ஆத்மா சாக்ஷியோ கர்த்தாவோ சாக்ஷியானாலும் இவருக்குப் பிரமத்துவ முண்டோ இல்லேயோ பிரமத்துவம் இருந்தாலும் அதுபுத்தியினாலே அறியக்கூடுமோ கூடாதோ அதையறிந்த மாத்திரத்தினால் முக்தி யுண்டோ இல்லேயோ யென்றிதுமுதலான சமுசயங்களும் பிரார த்தபின்னங்களா யிருக்கிற சஞ்சிதாகாமியகருமங்களும் நசித்துப் போய்விடுமென்கிற சுருதியும்-ஞானத்துக்கவதி ஆனதால் கீழ்ச் சொன்னபிரகாரம் விவிதிஷையும் வித்துவத்துவமும். வந்தவர்களே இரண்டுவித சன்னியாசங்களுக்கு கிரமமாக அதிகாரிகளென்று சித்த மாச்சுது.

சங்கை? இப்படியாயுள்ளளவில்-விவிதிஷா சன்னியாசத்துக் குப் பலமான தத்துவஞானத்தினாலேதானே ஆகாமியஜன்மந் தள்ளப் பட்டுப்போகிறபடியினாலேயும் வர்த்தமானஜன்மத்தின் சேஷமான சுகதுக்கத்தைப் புசித்தேதள்ளவேண்டி இருப்பதினாலேயும் இந்த

வித்துவச்சன்னியாசப் பிரயாசத்தாற் பிரயோஜனம் யென்ன வென்று சங்கைவந்தால் ஜீவன்முக்திக்கி யேதுவாக வித்துவச்சன்னியாசம் அவசியம் வேண்டிஇருப்பதினாலே இப்படி ஒருகாலுஞ் சங்கிக்கக்கூடாது. ஆனதால். ஞானத்தின்பொருட்டு வித்துவச்சன்னியாசம்போலச் ஜீவன்முக்தியின்பொருட்டு வித்துவச்சன்னியாசத்தையுஞ் சம்பாதிக்கவேண்டுஞ் சித்தம்.

இப்படி யிந்தப்பிரகரணார்த்தஞ் சங்கிரகித்துச்சொல்லப்பட்டுது

ஜீவன்முக்திக்கிச்சொரூபம்.

இனி யிந்த அர்த்தத்தை விஸ்தரித்துச் சொல்லுகிறோங்

கேள்வி? ஜீவன்முக்திக்கிச் சொரூபம் என்ன அதற்குப்பிரமாணமேதுஅந்தச் ஜீவன்முக்தி எந்தச்சாதனத்தாற் சித்திக்கும் அது சித்தித்ததுகொண்டு பிரயோஜனமேதென்கிறகேள்வி? நாலுக்கும் இந்தப்பிரகரணமுடியுமளவிற் கிரமமாக உத்தரஞ்சொல்லுகிறோம்.

அதிற் ஜீவன்முக்திக்கிச்சொரூபமே தென்கின்ற முந்தின கேள்விக்கி உத்தரம் ஏதென்றால், கர்த்துருத்வ போக்துருத்துவ சுகதுக்காதிரூபமான சித்ததருமந் துக்கரூபமானபடியினாலே பந்தமென்று சொல்லப்படும் சீவித்திருக்கிற புருஷனுக்குச் சித்ததருமமான அந்தக்கர்த்துருத்துவாதி பந்தம் நீங்குகிறதே ஜீவன்முத்திக்கிச் சொரூபமென் றுத்தரம்.

சக்கை ? இந்தப்பந்தமானது சாட்சியிடத்தில் நின்றும் நீக்கப்படுகிறதா அல்லது சித்தத்தில்நின்றும் நீக்கப்படுகிறதாவென்று இரண்டு விகற்பம் தத்துவஞானத்தினாலேதானே சாட்சிக்கும் அகங்காரத்துக்கும் பிராந்திசென்னிய தாதான்மிய அத்தியாசமாகிய பந்தம்நீக்கப்பட்டபடியினாலே முந்தினவிகற்பங்கூடாது. ஜலத்தினுடையநெகிழச்சிபோலவும், அக்கினியினுடைய சூடுபோலவுங், கர்த்துருத்தவாதி

பந்தஞ்சித்தத்தினுடையசுபாவமான தாற்சித்தத்தில்நின்றும் அந்தப் பந்தத்தின் நீக்கங்கூடாதபடியினாலே இரண்டாம் விகற்பமுங்கூடா தென்று சங்கைவந்தால், அப்படிச்சங்கிக்கக்கூடாது. ஏனென்றால், சித்தத்தில்நின்றும் பந்தத்துக்கு அத்தியந்த நீக்கங்கூடாவிட்டாலுந் தியான அப்பியாசபெலத்தினாலே அடக்கங்கூடும். எப்படியானாற்ஜல த்தினுடைய நெகிழ்ச்சி மண்ணின் சம்பந்தத்தால் அடக்கப்படுகிறதோ அக்கினியினுடையசூடு மணிமந்திராதியினால் அடக்கப்படுகிறதோ அப்படிப்போலக் கர்த்துருத்துவாதி ரூபபந்தமுந்-தியானுப்பியாசத்தி னாலே அடங்கும். ஆனபடியினாலே கர்த்துருத்துவாதி சித்தவிர்த்திக ளுடைய அடக்கமே ஜீவன்முக்திக்கிச் சொரூபமென்று சித்திச்சுது.

சங்கை? பிராரத்தகருமமானது சகல அக்ஞானதற்காரிய நாசத்தில் சமர்த்தமான தத்துவஞானத்தைப் பிரதிபந்தித்துக்கொண்டு தன்னுடையபலத்தைக் கொடுக்கிறதின் பொருட்டுத் தேகேந்திரி யாதிகளைத் தோற்றிவைக்குமே சித்தவிரித்திக ளன்றியிலேபோனாற் சுகதுக்கபோகங் கூடாதே ஆனதால் கர்த்துருத்துவாதி சித்தவிர் த்திகளுடைய அடக்கந்தானெப்படிக் கூடுமென்று சங்கித்தால் அது வுங்கூடாது. யேனென்றால், சித்த விர்த்திகளின் அடக்கத்தாற் கிடைக்கத்தக்கதான ஜீவன் முக்தியானது சுகாதிசயரூபமானதாற் பிராரத்தபலத்துக்குள்ளாகக்பட்டதன்றோ ஆனபடியினாலே விரோத மில்லை.

சங்கை? ஆனாற் கருமந்தானே ஜீவன்முக்திச் சுகத்தைக் கொடுக்கிறபடியினாலே முயற்சி தேவை யில்லையென்றாற், கிருஷி வாணிச்சியமுதலான தொழிலிற் கருமம் உள்ளபடி பலன்கிடைக்கு மென்று முயற்சிபண்ணாமலிருக்கக்காணோமே அந்தப்படியே யிங்கு ஞ்சரியென்றுத்தரம்.

சங்கை? கருமம் பிரத்தியக்ஷமானதாற் பிரத்தியக்ஷமாயிருக் கிற சாதன மன்றியிலே பலத்தைக்கொடுக்கச் சமர்த்தம் அன்றான

தாற் கிருஷி முதலானதில் முயற்சிவேண்டுமென்றால் ஜீவன்முக்தியி லுஞ் சமாதானஞ் சரியென்றுத்தரம்.

சங்கை? முயற்சிபண்ணினபோதிலுஞ் சிலயிடத்தில் கிருஷி முதலானது பலிக்கக்காணேமேயென்றால், அந்தயிடத்தில் பிரபல மான பின்னொரு கருமத்தினற் பிரதிபந்தமுண்டென்றறியவேண்டு மென்றுத்தரம்.

சங்கை? அந்தப்பிரதிபந்தமெதினுற்போகுமென்றால், மழை முதலானதற் கனுகூல்மாயிருக்கிற வருணசெபம் யாகமுதலானபின் மத்தினுற் போகுமென்றுத்தரம்.

மிகவுஞ் சொல்லியென்ன பிராரத்தகருமத்தில் மிகவும் விசு வாசமுள்ள உன்னுலே தியான அப்பியாசமாகியமுயற்சி வியர்த்த மென்று மனதிற்கூட நினைக்கக்கூடாது. பின்னொருவிதமாகச் சமாதானஞ் சொல்லுகிறோம்.

எப்படிபிரார்த்தகருமந் தத்துவஞானத்தைக் காட்டிலும்பிர பலமோ அப்படிப்பிராரத்துவத்தைகாட்டிலுந் தியானஅப்பியாசம் பிரபலம். இதற்குத்திருஷ்டாந்தமேதென்றால், தியானிகளாயிருக்கிற உத்தாலகவீதகவ்வியாதிகள் தங்களிச்சைப்படிசரீரத்தை வைத்துக் கொள்ளவும் விடவுஞ் சமர்த்தாளாயிருந்தார்களென்கிறதே திருஷ்டாந் தம் இப்போது அற்பாயுசுகளாயிருக்கிறவர்களுக்கு அப்படிப்பட்ட தியானங்கிடைக்காவிட்டாலும் இராகத்துவேஷங் கர்த்துருத்துவமுத லானசித்தவிர்த்தி நிரோதமாத்திரமான தியானஅப்பியாசத்தில் என்ன பிரயாசம், யாதொன்று மில்லை. இந்தப்படி சாஸ்திரத்தினற் சொல் லப்பட்டமுயற்சி பிரபலமென்று ஒப்பாவிட்டால் வைத்தியசாஸ்தி ரத்தைத்தொட்டு மோக்ஷசாஸ்திர பரியந்தம் எல்லாம் வியர்த்தமாய்ப் போகத்திரியும்-ஒருயிடத்தில் முயற்சி பலன்கொடாததுகண்டு முய ற்சி முழுவதுந்துற்பலமென்று சொல்லக்கூடாது. ஏனென்றால், ரோ

கியாயிருக்கிறபுருஷன் ஒருக்கால்ஒளஷதஞ்சாப்பிட்டு அதினால் ரோகம் போகாததுகண்டு மறுபடி ஒளஷதஞ்சாப்பிடாமலிருக்கக்காணோமே. ராஜாவானவன் ஒருயிடத்தில் அபஜெயங்கண்டதுகொண்டு மறுபடி யானை குதிரை முதலான சேனையைவிடவுங்காணோமே. ஆனதால், முயற்சியைப் பண்ணவேண்டும்.

இந்தவிஷயத்தில் ஆனந்தபோதஆசாரியாள் நிரம்பவுமழகாய்ச் சொல்லியிருக்கிறார்கள். அதேதென்றால், அஜீரணபயத்தினாற்போசனத்தையே விடுகிறவர்களாயும் பிச்சைக்காரனுடைய பயத்தாற்சமையலேவேண்டாமென்கிறவர்களாயும், அழுக்குமுதலானதின்பயத்தாற் போர்வையையேவேண்டா மென்கிறவர்களாயும், வேலிகட்டப்பயந்து பயிரிடாதவர்களாயுமிருக்கிற புத்திமான்களுடைய புத்திவிசேஷத்தைக்குறித்து நாமென்னவென்று மகிழ்வோம். ஆச்சரியம்! ஆச்சரியம்!! என்றிப்படி விசேஷபரிகாசம் பண்ணியிருக்கிறார்கள். ஆனபடியினாலே, முயற்சிதுற்பலமென்று ஒருநாளுஞ்சொல்லக்கூடாது.

இதுவுமன்றி வாசிட்டத்தில் ஸ்ரீவசிஷிட்டராம சம்வாதத்திலே முயற்சியேபிரபலமென்று வெகுவாய்ச்சொல்லியிருக்கிறது.. அதெப்படியென்றால், வாரீர் ஸ்ராமா இந்தச் சமுசாரதிசையிலே எந்தக்காலத்திலும் புத்திரன் தனஞ் சுவர்க்கலோகம் பிரமலோகமுதலான எந்தப்பலனும் புத்திரகாமேஷ்டிவாணிக்ஷியம் யாகஞ் சகுணப்பிரம உபாசனைமுதலானவை புருஷனுடையானன்முயற்சியினால்யாவருக்குஞ்சித்திக்கும். அந்தமுயற்சி சாஸ்திரத்தால் நிஷேதிக்கப்பட்டதென்றும் அதினால் விதிக்கப்பட்டதென்றும் இரண்டுவிதம் அதிற் பரதனத்தையபகரிக்கிறது பரஸ்திரீயைப்பிடிக்கிறது முதலானது சாஸ்திரநிஷித்தமான முயற்சி அதினால், நரகமுதலான அனர்த்தம் வந்துநேரிடும் நிஷ்காமமாக தன்தன்வருண ஆச்சிரமத்துக்கு உசிதமானநித்தியகருமம் உபாசனைமுதலானது சாஸ்திரவிகிதமுயற்சி அதினாற், பரம்பரையாகப் பரமபுருஷார்த்தங்கிடைக்கும். ஆனபடியி

ஞலே, வாலிபமுதற் செம்மையாய் அப்பியாசிக்கப்பட்ட சற்சாஸ் திரஞ் சாதுசங்கம் முதலான சற்குணங்களோடேகூடின தன்னு டைய நன்முயற்சியினுற் றனக்கிதமான புருஷார்த்தத்தை அடைய வேண்டுமென்று வசிட்டர் சொன்னுர். அப்படிச்சொன்ன வசிட்ட ரைப்பார்த்து ராமர் சொல்லுகிருர். வாரீர் ஏகுரோ மூன் யென் ஞலே செய்யப்பட்ட தரும அதர்ம சமுஸ்காரமாகிய வாசனைக்கூட் டம் என்னை எப்படி ஆட்டிவைக்கிறதோ அப்படியன்ருே நான் பர வசனுகி இப்போநடக்கிறேனுனதால் நானென்னசெய்வேன் அய்யா வென்று ராமர்சொன்னுர் அதற்கு. வசிட்டர் சொல்லுகிருர் வாரீர் ராமா யாதொருகாரணத்தினுலே நீர் வாசனுபரவசரோ ஆனபடியி ஞலே உம்முடைய உச்சாகமாகிய முயற்சியினுலே சம்பாதிக்கப் பட்டமனேவாக்குக்காயசென்னிய வியாபாரத்தினுலேதானே கால த்திரயத்திலும் நசியாமல் நித்தியமாயிருக்கிற மோக்ஷத்தையடை குவீர், வெறுென்றினுலே யடையமாட்டீர் வாரும் இராமா வாசனைக் கூட்டம் யென்னை யேவிவைக்கிறதென்றீரே, சுபவாசனையே உம் மையேவிவைக்கிறதா, அல்லது, அசுபவாசனை யேவிவைக்கிறதா, சுபாசுபவாசனையேவிவைக்கிறதா, தருமசமுஸ்காரமாகிய சுபவாசனை யினுலெ யேவப்பட்டீராஞல், அப்போ அந்தச்சுபவாசனையினுலே தானே இந்தச்ஜன்மத்தின் முயற்சி விசேஷமாயில்லாமற் சீக்கிரத் தில் மோக்ஷத்தை யடைகுவீர். அதர்மசமுஸ்காரமாகிய அசுபவாச னை உம்மையேவினுல் அப்போ அந்த அசுபவாசனையை அதற்கு விரோதியாயிருக்கிற இந்தச்ஜன்மத்தில் சம்பாதிக்கப்பட்ட சுபவா சனையினுலே நீரேஜெயிக்கவேண்டும். எப்படி யென்றுல், இராஜா வானவன் யுத்தத்திலே மந்திரிமுதலான பேர்களைக்கொண்டு பரஸை ன்னியத்தைச் ஜெயிக்கிறுப்போலப் பின்னெருவனுலே ஜெயிக்கக் கூடாது. தருமஅதர்ம சமுஸ்காரரூபமான சுப அசுபமார்க்கங்களோ டேகூடினவாசனு நதியானது உம்மையலைத்து வைத்தால் அப்போ

அந்தவாசனுநதியினுடைய அசுபமார்க்கத்தையடைந்துச் சுபமார்க்கத் தோடே சேர்த்துவிடவேண்டும். இப்படி, அசுபவாசனையில் நின் றுந்திரும்பினமனது சுபவாசனையையடையும் சுபவாசனையில் நின்றுந் திரும்பினமனது அசுபவாசனையையடையும். இதற்குத்திருஷ்டாந்தம் எப்படியானால் மண்ணைத்திங்காநின்ற குழந்தையை அந்தமண்ணைத் திங்கிறதில் நின்றுந் திருப்பிப் பழத்தைத் திங்கும்படி செய்ய லாமோ. முத்துமாலையை யிழாநின்றபாலனை அதில்நின்றுந் திரும்பிப் பந்தைக்கொண்டு விளையாடும்படி செய்யலாமோ அப்படிபோல மனதையுஞ் சற்சங்கத்தினாலுந் துற்சங்கத்தினாலுங் கிரமமாகச் சுப வாசனையிலேயும் அசுபவாசனையிலேயுங் கூட்டிவைக்கலாம். ஆன தாற்றன்னுடைய நல்லமுயற்சியினாலே அசுபவாசனையி லிருக்கிற மனத்தைச் சுபவாசனையிற் றிருப்பவேண்டும். இதற்கு உபாயமே தென்றாற் சொல்லுகின்றோம் சஞ்சலமாயிருக்கிற பசுவைக் கட்டுத் துறையில் நிறுத்துகிறதற்கு இரண்டு உபாயமுண்டு. அதிற் பச்சைப் புல்லைக்காட்டிச் சொறிஞ்சுகொடுக்கிறது முதலானதோ ருபாயம். அதட்டிச் தடியினால் அடிக்கிறது முதலானது இரண்டாம் உபாயம் இதில் முந்தின உபாயத்தால் அந்தப்பசுவைச் சீக்கிரமாகக் கட்டுத் துறையில் நிறுத்திக் கட்டலாம். இரண்டாம் உபாயத்தால் அந்தப்பசு நாலுதிக்கிலும் அலைந்து திரிந்தபிற்பாடு மெள்ளமெள்ள அதைநிறுத் திக்கட்டலாம். இந்ததிருஷ்டாந்தம்போலே சஞ்சலமனதாகிய குழந் தையைச் சுவாதீனப் படுத்திக்கொள்ளுகிறதற்கு இரண்டு உபாய முண்டு. அதிற் சர்வசமமாய்ச் சர்வாதிட்டானமாயிருக்கிற பிரமமே யெல்லாம் அதுவே நாமென்கிற மிருதுயோகம் ஒருபாயம் - ரேசக பூரக கும்பக மென்று சொல்லப்பட்ட பிராணயாமமாகிய அடயோ கம் இரண்டாம் உபாயம். இதில் முந்தின உபாயத்தாற் சஞ்சல மானமனதை யெளிதாய்ச் சுவாதீனப் படுத்திக்கொள்ளலாம். இர ண்டாம் உபாயத்தால் அந்தமனதை மெள்ளமெள்ளச் சுவாதீனப்படு

திக்கொள்ளலாஞ் சீக்கிரமாய்ச் சுவாதீனப் படுத்தக்கூடாது. ஆன தால், இராமா நீரும் இந்த மனதாகிய குழந்தையைக் கீழ்ச்சொன்ன மிருதுயோகமாகிய முயற்சியினாலே யெளிதாய்ச் சுவாதீனப்படுத்திக் கொள்ளும். இப்படி மிருதுயோகாப்பியாசம் பண்ணுகிறகாலத்திலே யெப்போ இந்த அப்பியாச பெலத்தினாலே சீக்கிறமாகச் சுத்தவாசனை உண்டாகிறதோ அப்போ அப்பியாசபலமாயிற் றென்றறியும். சொற்பக்காலத்திலே சுத்தவாசனை யுண்டாமோயென்று மலைக்க வேண்டாஞ் சுத்தவாசனை யுண்டாயிற்றா இல்லையா வென்று சந்தேகம்வந்தால் அப்போது சுத்தவாசனையைத்தானே பழகும் அதினாற் குற்றமில்லை. இப்படியா யுள்ளளவில் எவ்வளவுமட்டுக்கும் நீர் வேதாந்தவிற்பத்தி யில்லாததினால் பிரமசொரூபத்தை அறிய வில்லையோ அவ்வளவுமட்டுக்குங் குருசாஸ்திரபிரமாணங்களால் நிர்ணய ம்பண்ணப்பட்ட சுத்தவாசனையைப்பழகும் அதற்குமேல் அந்த அப்பி யாசத்தினாலே சுத்த சித்தராய்ப் பிரமசொரூபத்தைக் கரதலாமலகம் போல நன்றாய் அறிந்திக்கொண்டு சகலதுக்கமுந்தீர்ந்து கிருதகிருத் தியராய்ச் சுத்தவாசனையையும் விட்டுவிடுமென்று இப்படி வெகுவாய் இராமனைக்குறித்து ஸ்ரீ வசிட்டர் முயற்சியைப் பலமாகச்சொல்லி யிருக்கிறபடியினாலே, யோகாப்பியாசமென்று சொல்லப்பட்ட தியா னப்பழக்கத்தினாற் காமாதிசித்த விர்த்திகளுடைய நீக்கங்கூடும் ஆன படியினாலே, ஜீவன்முக்தியிலே யாதொரு விவாதமுமில்லை. இப்படிச் ஜீவன்முக்திக்கிச் சொல்லப்பட்டது.

ஜீவன்முக்திக்கிப்பிரமாணம்.

இனி ஜீவன்முக்தி யுண்டென்கிறதிற் பிரமாணம் யேதென்கிற இரண்டாங்கேள்விக்கி உத்தரம் சொல்லுகிறோம்

கடவல்லி பிரகதாரண்ணியங் தாபநீயங் முதலான சுருதிகள் ஜீவன்முக்தியிற் பிரமாணம் ஸ்மிருதிகளும் பிரமாணம் ஸ்மிருதிகளில் ஜீவன்முக்தன் திடப்பிரக்ஞன் பகவற்பத்தன் குணாதீதன் பிராமணன் அதிவர்ணாச்சிரமியென்றிது முதலான நாமங்களாலே அங்கங்கே ஜீவன்முக்தி உண்டென்று சொல்லப்படுகிறது. அதில், வாசிட்டத்தில் * ஜீவன்முக்தன் சொல்லப்படுகிறான் அதேதென்றால், ஏராமா லௌகீக வைதீகமான சகலகருமத்தையும் விட்டுப்போட்டு ஆத்தும விசாரத்தையே சதாப் பண்ணிக்கொண்டிருக்கின்ற புருஷாளுக்கு முந்திச் ஜீவன் முக்தியுண்டாய்ப் பின்பு விதேகமுக்தியுண்டாகும். இந்த விரண்டுவிதமுக்திக்கும் பேதம் ஏதென்றால், தேகயிந்திரிய முதலானது இருக்கிறதும் இல்லாததுமே பேதம் அநுபவகாலத்தில் தொய்தப்பிரதீதியில்லாதது இரண்டுக்குஞ் சரியென்று ஸ்ரீவசிட்டர் சொன்னார். இராமர்கேழ்கிறார்! வாருமையா ஏகுரோஜீவன் முக்தனுக்கும் விதேகமுக்தனுக்கும் லக்ஷணமேது சொல்லும் அதைக்கேட்டு நானும் அந்தமுக்திகள் வரும்படிசாஸ்திரத்திற் சொன்ன முயற்சியைப் பண்ணுகிறேனென்று இராமர் கேட்டார். மறுபடி ஸ்ரீவசிட்டர் சொல்லுகிறார் (1) யாதொருபுருஷனுக்குச் சகலபிராணிகளாலேயும் அனுபவிக்கப்படாநின்ற இந்த நாமரூபப்பிரபஞ்சம் முழுவதும் உள்ளிலும் வெளியிலுஞ் சித்தவிர்த்தி யில்லாததினாலே தோணவில்லையோ சுழுத்தியிற்போலச் சகலமுந் தன்னிடத்திலே அடங்கிச் சொப்பிரகாசமான சிதாகாசமாத்திரம் பிரகாசிக்குமோ அவனே ஜீவன்முக்தன்.

---

* ஜீவன்முக்தன் லட்சணஞ் சொல்லப்படுகிறது. என்றும் - பாடம்

(2) சிற்குச்சந்தன வனிதை வெகுமானுதியினுலே சுகம்வந்தாலுந்தனஹானி புத்திரஹானி அவமானம் முதலானதாற் றுக்கம் வந்தாலும் இவ்வளவுமட்டுக்கு நமக்குச் சுகம்வந்துதேயென்று சந்தோஷமும் இப்படி நமக்குத் துக்கம்வருமோவென்று விசனமுஞ் சமுசாரியைப்போல யாதொருத்தனுக்கு உண்டாக இல்லையோ அவன் ஜீவன்முக்தன்.

(3) சமாதிகாலத்திலே சிற்குச்சந்தனுதிப் பிரதீதி இல்லாததினுலேயும் ஒருக்கால் சமாதியைவிட்டு யெழுந்திருந்து விவகாரம் பண்ணும்போது சிற்குச்சந்தனுதிப்பிரதீதியிருந்தாலும் இது தள்ளத்தக்கது பொல்லாது. இது கூட்டத்தக்கது நல்லது யென்கிறபுத்தி இல்லாததினுலேயுஞ் சுகதுக்கம்வந்தாலும் அதின்மூலமாய் சந்தோஷவிதனமிரண்டும் வாராது யாதொருத்தன் இந்தஜன்மத்தில் முயற்சியன்றியிலே தானே பிராரத்தகன்ம வசத்தினுல் வந்த பிச்சானுதியைக்கொண்டு சரீரதாரணத்தை உடைத்தாயிருக்கிறுனே அவன் ஜீவன்முக்தன்.

(4) யாதொருத்தன் சக்ஷுவாதி யிந்திரியங்கள் காரணுஞானத்தில் லயத்தையடையாமற்றன்றன் கோளகங்களினுலே இருக்கிறபடியினுலே ஜாக்கிரதை யடைந்திருக்கிறுனே மனதுக்கு வெகிர்முக விருத்தியில்லாததினுலே சுழுத்தியடைந் திருக்கிறுனே ஆனபடியினுலே யாதொருத்தனுக்கு இந்திரியங்களாலே விடயாநுபவரூபமான ஜாக்கிரமில்லையோ, யாதொருத்தனுடைய ஞானமானது நான் பிரமவித்தென்கிற அபிமான முதலான வாசனை யன்றியிலே யிருக்கிறதோ அவன் ஜீவன்முக்தன்.

(5) யாதொருத்தன் சமாதியைவிட்டு வெளியில் விவகாரம் பண்ணும்போதுபூருவ அப்பியாசத்தினுலே போஜனுதிப்பிரவிருத்தியிராகமுள்ளவன்போலவும், பௌத்தகா பாலிகாதிக ளிடங்களிலே துவேஷி போலவுஞ், சர்ப்பசோர வியாக்கிராதிகளிடத்திற் பயந்த

வன்போலவும், இதரயோகிகளைக்காட்டிலும் அதிகமாகச் சமாதி யனுட்டானம் பண்ணுகிறதில் மாச்சரிய முள்ளவன்போலவும், பார்க்கிறபேர்களுக்குத் தோணினாலுந் தன்னுடையமனது சொரூபத்தில் விசிராந்தியை யடைந்திருக்கிறபடியினாலே ஆகாசம்போலே உள்ளே தான் சொட்சமாயிருக்கிறானோ அவன் ஜீவன்முக்தன்.

(6) லோகத்திலே பெத்தனாயிருக்கிற புருஷனுக்குச் சாஸ்திரியமாயிருக்கிற கருமத்தைப்பண்ணும்போது நான் கர்த்தாவென்று சின்மாத்திரா யிருக்கிற பிரத்தியகாத்துமா அகங்காரத்தோடே சேர்க்கப்படுவர் நான் சுவர்க்கத்தை யடையப்போகிறேனென்று சந்தோஷத்தினாலே புத்திவிர்த்திசம்பந்தமும் ஆத்துமாவுக்கு வருஞ் சாஸ்திரியகருமத்தைப் பண்ணவிட்டால் நான் கருமத்தைப்பண்ணவில்லையென்று ஆத்துமாவினிடத்தில் அகங்கார சம்பந்தமும் யெனக்குச் சுவர்க்கங் கிடைக்கமாட்டாதென்று விசனத்தினாலே புத்திவிர்த்திசம்பந்தமும்வரும். அப்படி முக்தனுக்கு ஆத்தும அகங்காரங்களுக்குத் தாதாத்மிய அத்தியாசமில்லாததினாலேயுஞ் சந்தோஷம் விசனமில்லாததினாலேயும் யாதொருத்தனுக்குக் கீழ்ச்சொன்ன இரண்டுதோஷமு மில்லையோ அவன் ஜீவன்முக்தன்.

(7) தான் வசவு அடிக்கிறது முதலானதிற் பிரவிருத்தியாததினாலே யாதொருத்தனிடத்திலே நின்றும் லோகம் பயப்படவில்லையோ தன்னைக்குறித்து லோகம் வசவு அடி முதலானதி லேற்படாததினாலே லோகத்தில் நின்றும் யாதொருத்தன் பயப்படவில்லையோ அவன் ஜீவன்முக்தன்.

(8) ஒருக்கால் துஷ்டன் தூஷணவசவுமுதலானதிற் பிரவிருத்தித்தபோதிலுந் தனக்கு அதின்மூலமாய்ச் சித்தவிகற்பமுண்டாகாதபடியினாலே லோகத்தினிடத்தில் நின்றுஞ் ஜீவன்முக்தனுக்குப் பய

மில்லைச் சத்துருமித்துரு மானுவமானுதி சம்சாரவிகற்பமில்லாதவனும் அறுபத்துநாலு கலைக்கியானம் வந்திருந்தபோதிலும் அதில் அபிமானமும் அதின் விவகாரமு மில்லாதவனுயுஞ் சித்தமானது சத்துவமென்று சொல்லப்பட்ட சொரூபத்தோடேயிருந்தாலும் விர்த்தியுண்டாகாததினுலே சித்தமில்லாதவனுயும், முன்பழக்கத்தினுலே தியானவிர்த்தியிருந்தாலும் லௌகீகவிர்த்தியில்லாததினுலே ஒருசிந்தையு மில்லாதவனுயும் யாதொருத்தனுண்டோ அவன் ஜீவன்முக்தன்.

(9) லோகத்திலே ஒருவன் வீட்டிலே கலியாணம்உச்சவம் முதலானது நடக்கும்போது அவனுக் கிஷ்டனுயிருக்கிற பின்னெருவன் அந்தவீட்டில்வந்து வீட்டுக்காரனுடைய பிரீதியின் பொருட்டுஅவன் காரியத்தையெல்லாந் தான் மேற்போட்டுக்கொண்டு செய்தபோதிலும் அந்தவீட்டுக்காரனுக்கு வராநின்ற லாபாலாபத்தினுற் பின்னெருவனுக்குச் சந்தோஷம் விசனம் வாராததுகண்டோம். அப்படிப்போலே யாதொருத்தன் பிராரத்தவசத்தினுலே வராநின்ற தன்னுடைய காரியத்தில் விவகாரம்பண்ணினபோதிலும் விவேகபெலத்தினுலே லாபாலாபசென்னியமாயிருக்கின்ற சந்தோஷ விஷாதரூபமான சித்ததாபத்தை யடையாமல் பரிபூரண பரமானந்த பரமசீதளமாயிருக்கின்ற பிரமானுசந்தான பெலத்தினுலே குளிர்ந்தமனதோடே கூடிக்கொண்டிருக்கிறுனே அவன் ஜீவன் முக்தன்.

(10) இப்படிப் பிராரத்தகரும மிருக்குமட்டுக்குஞ் ஜீவன்முக்திச்சுகத்தை யநுபவித்துப்போட்டுப் பிராரத்த நாசத்தினுலே வர்த்தமான தேகம்விழுந்துபோகும்போது சலித்துக்கொண்டிருக்கிற வாயு ஓய்ந்துபோகிறுப்போலே ஜீவன்முக்தனும் உபாதியினுலேவரப்பட்டசமுசாரத்தை விட்டுப்போட்டு நிர்விட்சேப நிராவரண பரிபூரண

பரப்பிரமசொரூபனாக இருப்பன். அப்போ விதேகமுக்தனென்று சொல்லப்படுவான். அந்தவிதேகமுக்தனுக்கு யாதொரு சமுசாரவிகற்பமுங்கிடையாது * இப்படிப்பட்ட விதேகமுக்தனுஞ் ஜீவன்முக்தனுஞ் சுவாநுபவத்திற் சமானுளென்று சொல்லியிருப்பதால் ஜீவன்முக்தனுக் கெவ்வளவுக்கெவ்வளவு நிர்விகர்ப்பமுண்டாகிறதோ அவ்வளவுக்கவ்வளவு உத்தமம் இப்படி வாசிட்டத்திலே ‡ ஜீவன்முக்தன் விசேஷமாய்ச் சொல்லப்பட்டான்.

இனிப்பகவற்கீதையின் இரண்டாமத்தியாயத்திற் சொல்லப்பட்ட திடப்பிரக்ஞனைச்சொல்லுகிறோம்.

திடஞானமென்றும் அதிடஞானமென்றும் ஞானமிரண்டுவிதம்.

எப்படியாளுற், சோரபுருஷனிடத்திற் பிரீதியுள்ளநாரியானவள் வீட்டுக்காரியமெல்லாம் பண்ணினபோதிலும் அவளுடையபுத்தியந்தச்சோரபுருஷனையே தியானம்பண்ணிக்கொண்டிருக்குமோ வீட்டுக்காரியம் பிரத்தியட்சமாய்ப் பண்ணப்பட்டபோதிலும் அது உடனே மறக்கப்படுமோ அப்படிப்போல அத்தியந்தம் வைராக்கியமுள்ளவனுயுந் தியானுப்பியாசபெலத்தினுலே சுவாதீனப்பட்ட சித்தத்தையுடைத்தானவனுயுமிருக்கிற புருஷனுக்குத் தத்துவஞானமுண்டாகும்போது அவனுடையபுத்தியானது நாரியினுடையபுத்தி சோரபுருஷனையே தியானம் பண்ணுகிறதுபோலே நிரந்தரந்தத்துவத்தையே தியானம் பண்ணிக்கொண்டிருக்கும் அந்தஞானந் திடஞானமென்று சொல்லப்படும்.

---

* அப்படிப்பட்ட - என்றும் - பாடம்.

‡ ஜீவன்முக்தன் லட்சணம் விசேஷமாய்ச் சொல்லப்படுகிறது - என்றும் - பாடம்.

வைராக்கியந் தியானப்பியாசம் ஒன்றுமில்லாதவனுக்கு யேதாகிலும் ஒருபுண்ணிய விசேஷத்தினாலே தத்துவஞானமுண்டானபோதிலும் அவன் புத்தியானது நாரியினுடைய புத்தி வீட்டுக் காரியத்தை மறக்கிறதுபோலே உடனே தத்துவத்தை மறந்துவிடும் அந்தஞானம் அதிடஞானமென்று சொல்லப்படும்.

இப்படியே வாசிட்டத்திலுஞ் சொல்லியிருக்கிறது.

இப்படிப்பட்ட திடஞானத்தை உடைத்தானவனே திடப்பிரக்ஞனென்று சொல்லப்படுபவன்.

இந்தத் திடப்பிரக்ஞன் காலபேதத்தினாலே சமாகிதனென்றும், உத்திதனென்றும், இரண்டுவிதமாயிருப்பன். இவர்களிரண்டு பேர்களுடைய லட்சணத்தையும் அருச்சுனன் கேட்டான் ஸ்ரீபகவான் சொல்லுகிறார்.

(1) வாராய் அர்ச்சுன யாதொருபுருஷன் எப்போ பாகியமாகியு மாந்தரமாகியு மிருக்கின்ற சகல விஷயங்களையும் விட்டுப்போட்டுத் தன்னிடத்திற் றன்னாலே தானே சொரூபானந்தத்தை யநுபவிக்கிறானோ அப்போ, அவன் சமாகிதத்திடப்பிரக்ஞனென்று சொல்லப்படுவன்.

இந்தத் திடப்பிரக்ஞனுக்கு முகப்பிரசாதமாகிய அடையாளத்தா லறியத்தக்கதான ஓரானந்தமுண்டு அந்த ஆனந்தமானது விஷயங்களைவிட்டுவிட்டபடியினாலேயும் புத்திவிர்த்தி பரமானந்தரூபமான ஆத்துமசொரூபத்திற் கலந்து லயித்திருக்கின்றபடியினாலேயும் விஷயங்களினாற் கிடைத்ததன்று பின்னையோவென்றால், ஆத்மாவினிடத்திற் கிடைத்ததென் றறியவேண்டும். நிர்விகற்பசமாதியிற் கிடைத்த அந்தஆனந்தஞ் சவிகற்பசமாதியிற்போலப் புத்தி

விர்த்தியினு லறியத்தக்கதன்று பின்னையோவென்றாற், சொப்பிரகாச சித்துரூபான ஆத்மாவினாலேயே விளங்கும். அந்த ஆனந்தம் புத்தி விர்த்தி ரூபமன்று பின்னையோவென்றால், அந்த விர்த்தியின்சமுஸ் காரரூபமென் றறியவேண்டும்.

(2) வாரா யருச்சுன யாதொருத்த னெப்போ ஆமையானது தன்னுடைய அவையவங்களைத் தன்னிடத்தி லடக்கின்றாப்போலே சகல இந்திரியங்களையுஞ் சகல விஷயங்களில் நின்றுந் திருப்பித் தன்னிடத்தி லடக்கிக்கொள்ளுகிறானோ அப்போ அவன் சமாகிதத் திடப்பிரக்ஞன்.

உத்திதத்திடப்பிரக்ஞனவதாரென்றாற், சொல்லுகிறோம்.

(1) யாதொருத்தனுக்கு ரோகாதி நிமித்தத்தாற் றுக்கம் வந்தாலும் மூடனானவன் நான் மகாபாவி யென்னைச் சுடவேண்டுமென்று விதனப் படுகின்றதுபோல விதனம்வாராதோ அப்படியே ராஜ்ஜிய புத்திரலாபாதி நிமித்தத்தாற் சுகம் வந்தாலும் மூடனாயிருக்கிறவன் சுகசாதனமான புண்ணியத்தை யனுஷ்டியாமற்றானே முன்வந்த சுகத்துக்குச் சமானமான சுகத்தை யபேட்சிக்கிறதுபோல அபேட்சையும் வாராதோ. காமக்குரோத பயங்களு முண்டாகமாட்டாதோ அவன் உத்திதத் திடப்பிரக்ஞன்.

(2) யாதொருத்தன் ஒருஇடத்திலும் அன்னியாளுடைய லாபாலாபத்தைத் தனதுபோலே தோற்றிவிக்கிற சித்தவிர்த்தியா கியசினேக மன்றியிலேயுஞ் சுகயேதுவான தன்னுடைய ஸ்திரீ புத்திரன் முதலான சுகத்தைக்கண்டு சிலாகிக்காதவனாகியுந் தனக்கநுயையை யுண்டுபண்ணாநின்ற அன்னியர்களுடைய வித்தைமுதலான அசுகத்தைக்கண்டு நிந்திக்காதவனாயு மிருக்கிறானோ அவன் உத்தித த்திடப்பிரக்ஞன்.

(3) யாதொருத்தன் விவகாரம் பண்ணும்போது ராகத்துவே ஷமில்லாததாயுந் தனக்குச் சுவாதீனமாயு மிருக்கிற இந்திரியங்க ளோடே கூடினவனுகி விவகாரம்பண்ணுகிருனே அவனுத்திதத் திடப்பிரக்ஞன்.

இப்படிப் பகவான் அருச்சுனனைப்பார்த்துத் திடப்பிரக்ஞ னுடைய லட்சணத்தை வெகுவாய்ச் சொல்லியிருக்கிருர்.

இனிப்பகவற் கீதையின் பன்னிரண்டாமத்தியாயத்திற் பகவ ற்பக்தன் பகவானுலே வர்ணிக்கப்பட்டிருக்கிருன்.

அதெப்படியென்ருல், சர்வபிராணிகளிடத்திலேயுந் துவேஷ மில்லாதவனும், மைத்திரி கருணையுள்ளவனும், யானென தென்னப் பட்ட அகங்கார மமகாரமில்லாதவனுயுஞ், சுகதுக்கங்களிலேசம னுயுஞ், சதாசந்துஷ்டனுயுந், திடமாகச் சொரூபநிச்சயத்தையுடைத் தானவனுயுஞ், சொரூபத்தைத்தானே யெப்போதுந் தியானம்பண் ணுகின்றவனுயுஞ், சத்துருமித்துரு, மானுவமானஞ், சீதோஷ்ணஞ், சுகதுக்கம், முதலான துவந்துவங்களிற்சமனும், நிந்தையையும், ஸ்துதியையும், சமமாகப்பார்க்கிறவனும், மௌனியாயும், ஒருயிடத் தில் நியமமாக வாசம்பண்ணுதவனுயுஞ், சர்வாத்மாவாயிருக்கிற நம் மிடத்தில் வாசுதேவோகமென்கிற திடபக்தியை யுடைத்தானவனு யும், யாதொருத்தனுண்டோ அவன் நம்முடைய பக்தனென்று அருச்சுனனுக்குப் பகவான் சொல்லியிருக்கிருர்.

சங்கை? முன்முமுக்ஷுத் திசையிற்ருனே துவேஷமில் லாமை மைத்திரி கருணை முதலான குணங்கள் ஞானசாதனமாக வேண்டியிருப்பதினுலே அப்போதே யந்தக்குணங்களுண்டே இப் போஜீவன்முக்தனிடத்தில் அந்தக்குணங்களுண்டென்று சொல்லுகி றதில் விசேஷமென்னவென்ருற், சொல்லுகிருேம்.

முன் அந்தக்குணங்கள் புருஷனுடைய முயற்சியினாலே சம்பாதிக்கத் தக்கதுகளாயுஞ்சாதனரூபங்களாயு மிருந்துதுகள் இப்போ ஞானதியான பெலத்தால் முயற்சியன்றியிலேதானே லட்சணங்களாயிருக்கு மென்கின்றதே விசேஷம்.

இந்தப்படி வார்த்திகாசாரியாள் சொல்லியிருக்கிறார்கள்.

இனிப்பகவற்கீதையின் பதினாலாமத்தியாயத்திற் குணாதீதன் பகவானாலே வர்ணிக்கப்பட்டிருக்கிறான்.

அருச்சுனனுடையகேள்வி ? வாரீர் ஸ்ரீகிருஷ்ண குணாதீதனுக்குப் பிறராலறியத்தக்கதான லட்சண மென்ன ? அவனுடைய மனதின் சஞ்சாரப் பிரகாரமென்ன ? அவன் யெந்தச்சாதனத்தாற் குணங்களைத் தாண்டினவன் ? சொல்லுமையாவென்று கேட்ட அருச்சுனனைப்பார்த்து ஸ்ரீபகவான் சொல்லுகிறார்.

சுகதுக்கங்கள் அதற்குச் சாதனமான பிரியாப்பிரிய விஷயங்கள் ஸ்துதிநிந்தைகள் சத்துருமித்திராள் மானவமானங்கள் சொன்னமோடுகள் முதலானதுகளிற்சமனாகி யாதொரு முயற்சியுமன்றியிலே வெகுதீரனாய் ஆத்மநிஷ்டனாயிருக்கின்றதே பிறராலறியத்தக்கதானகுணாதீதலட்சணஞ். சத்துவாதிகுணத்திரய விகாரங்களான பிரகாசம் பிரவிருத்தி மோகங்களென்று சொல்லப்பட்ட ஞானம் முயற்சி அவிவேகம் மூன்றுகளுஞ் ஜாக்கிர சொற்பனங்களி லுண்டாகிச் சுழுத்தி சமாதி சூன்யசித்தாவத்தைகளில் நீங்கிப்போகிறதுகள் மூடனாயிருக்கின்றவன் ஜாக்கிரத்திற் றனக்குப் பிரதி கூலமாயுண்டாகிற அந்தப்பிரகாசாதிகளைக்கண்டு துவேஷிப்பன் சூன்யசித்தாவத்தையில் அனுகூலமான பிரகாசாதிகள் நிவிர்த்திக்கும்போது அதுகளை இச்சிப்பன் அப்படி இல்லாம லிரண்டுபேர்கள் சண்டைப்

படம்போ ததற்குச் சாட்சியாயிருக்கிற பின்னொருவன் தனக்குச் ஜெயாபஜெயமில்லாததினாலே உதாசீனனாயிருக்கிறது போலப் பிரகாசாதிக ளுண்டாகும்போதும், நிவிர்த்திக்கும்போதும், மயங்காமற், குணவிகாரங்களானசக்ஷுவாதிகள் குணவிகாரங்களான ரூபாதிகளிலே பிரவிருத்தித்ததினாலும், நிவிர்த்தித்ததினாலுஞ், சர்வசாக்ஷியாய், அசங்கசித்துரூபனாயிருக்கின்ற நமக்கு யாதொருலாபமும் நஷ்டமும் மில்லையென்று உதாசீனமாயிருக்கிறதே குணாதீதனுடைய மனதின் சஞ்சாரப்பிரகாரம். விபசாரமன்றியிலே யிருக்கிற பக்தியோடேகூடிய ஞான தியானாப்பியாசத்தினாலே சர்வப்பிரத்தியக பின்ன பரமாத்மாவாயிருக்கின்ற நம்மைச் ஸேவைபண்ணுகிறதே சத்துவாதி மூன்றுகுணங்களையுந் தாண்டுதற்குச் சாதனமென்று. பகவான் அருச்சுனனுக்குக் குணாதீதனைச் சொல்லியிருக்கிறார்.

ஸ்ரீ வியாசாதிகளினாலே பிராமணன் வர்ணிக்கப்பட் டிருக்கிறான்.

(1) அதெப்படி யென்றால், அரையிலே கட்டிக் கொள்ளுகிற சோமன் மேலுக்குப் போட்டுக் கொள்கிற உத்தரீய மிரண்டும் இல்லாமற் பாய்முதலான தொன்றுமில்லாத வெறுந்தரையிற் கையைத் தானே தலையணையாக வைத்துக்கொண்டு சயனம் பண்ணுகிறவனாயுங் குப்பையிலே கிடக்கிற கந்தையினாலே கௌபீனாதியைத் தரித்துக்கொண்டவனாயும், பிராரத்தகருமத்தால் வரப்பட்ட பிக்ஷா அன்னத்தினாற் தேகதாரணம் பண்ணுகின்றவனாயுந், தெண்டதாரியாயுஞ், சதாசொரூபத்தியானபரனாயும், யேகாங்கியாயுஞ், சாந்தனாயும், யாதொரு பிரமக்ஞானியுண்டோ, அவன் பிராமணன்.

இந்த பிராமணன் சரீரஞ் ஜீவித்திருக்கும்பொருட்டுப் போசனம், போர்வை, படுக்கைகளை, யபேட்சித்தபோதிலும், போசனாதியிலிருக்கப்பட்ட குணதோஷங்களை விசாரிக்கமாட்டான். ஏனென்

ருல் சட்ரசோபேத போசனத்தாலுஞ், சாலுவை சகலாத்து முத லான போர்வையினுலும், அமுசதூலமெத்தை முதலான படுக்கை யினுலும், பசியடங்கிறதுங், குளிர் நீங்கிறதுங், தூக்கம் வருகிறது, மெப்படியோ, அப்படியே பிக்ஷா அன்னங், கந்தைதுணி, வெறு ந்தரையிற் படுக்கைகளினுலும், பசியடக்கமுதலானது சித்திக்கும் படியாயிருக்கச்சே,போசனுதியிலே குணதோஷ விசாரம் பண்ணுவது சித்ததோஷமேயன்றியிலே வேறே இல்லே.

இப்படியே பாகவதத்திலு மிதுகுண மிதுதோஷமென்று பார்க்கிறதேதோஷம் இந்தயிரண்டையும் பாராமலிருக்கிறதே குண மென்று சொல்லியிருக்கிறது. ஆனதால், பிரமக்ஞானபெலத்தினுற் சகலசித்ததோஷமும் போயிருக்கிற பிராமணனுக்குப் போசனுதியிலே குணதோஷ விசாரமெங்கே வரப்போகின்றது கிடையாது, இந்தப் பிராமணனுக்குத் தெண்டங் கௌபீன, முதலானதை விட்டுப் போட்டுத், திகம்பரனுய்த், தன்னிச்சைபடி யிருந்துகொண்டு, சொ ரூபானந்தாநுபவத்தி லிருக்கிறதேமுக்கியமானுலுஞ், சாதனசம்பன் னுளாயிருக்கின்ற சாதுக்கள். தன்னுடைய ஆச்சிரமதரும மகிமை யைப் பார்த்துத் தன்னிடத்திற் சிரத்தையோடே கூடிணவர்களாகி வேதாந்த மகாவாக்கிய உபதேசம்பெற்றுக்கொண்டு கிருதார்த்தர்க ளாக வேண்டுமென்கிற லோகானுக்கிரக இச்சையினுலே, தெண்ட கௌபீனுதி தாரணமேயொழியத் தனக்குச் சிலபலத்தின் பொருட் டன்று. சிஷனுக் கனுக்கிரகம்பண்ணும்போதிலுந் தியானவிரோத மான அவனுடையகிரக கிருத்தியவார்த்தையைச் சொல்லக்கூடாது. பிரமோபதேசமானது அன்னியவார்த்தை யாகாதபடியினுலே தியா னத்துக்கு விரோதமாகாது. ஆனதாற், பிரமோபதேசங்கூடும். இப் படியே சுருதிகள் கோஷிக்கிறதுகள்.

அதெப்படியென்ருல், 'ஏஜீவர்களே? ஆத்மா ஒருத்தரையே யறியுங்கோள், மற்ற வீண்வார்த்தைகளே விட்டுவிடுங்கோளென்றுங்,

தீரனுயிருக்கிற புருஷஞனவன் முந்தி யாத்மாவைப் பரோக்ஷமாக ச்சிரவணமனனங்களினு லறிந்துகொண்டு பின்பு அப்பிரதிபந்தா பரோட்ச சாக்ஷாத்காரம் வரும்பொருட்டு அந்த ஆத்மாவைத்தானே சதாத்தியானம் பண்ணவேண்டும். வெகுசத்தங்களை விருதாவாகச் சொல்லக்கூடாது. அப்படிச் சொன்னதினுல் வாக்குக்கு வலியும் மனதுக்குக் கிலேசமுமே யன்றியிலே வேருென்று மில்லையென்றும் இப்படி வெகுவாய்ச் சுருதிகள் கோஷிக்கிறதுகள்.

ஆனதாற் சிஷியனுடைய கிரககிருத்தியவார்த்தை யொன்றுஞ் சொல்லாமற் பிரமஉபதேசம் பண்ணுகிறகாலந்தவிர மற்றக்காலத்திற் சொரூபத்தியானத்தையே பண்ணவேண்டுமென்று சித்தமாச்சுது. அந்தத்தியானமும் யேகாங்கியா யிருந்தால் நிர்விக்கினமாக நடக்கும். அப்படியில்லாவிட்டால் நடக்கமாட்டாது, ஸ்மிருதியு மிப்படியே சொல்லுகிறது.

அதேதென்றால், ஒருவனுயிருக்கிற சன்னியாசியே முக்கிய சன்னியாசி. இரண்டுபேர்கள் கூடினுல் ஸ்திரீபுருஷாள், மூன்றுபேர்கள்கூடினுல் ஒருகிராமம், நாலுபேர்கள் கூடினுல் ஒருநகரம், இப்படி ஸ்திரீபுருஷாளென்று சொல்லப்பட்ட மிதுனங், கிராமம், நகர, மொன்றையும் பண்ணக்கூடாது. அப்படி பண்ணினு லதினுற் சன்னியாசிகளுக் கொன்றுக்கொன்று ராஜாக்களுடைய வார்த்தையும், பிக்ஷையினுடைய வார்த்தையும், வந்துநேரிடும். அதினுற் தியானங்கெட்டுப்போம் ஆனதால், அச்சன்னியாசியானவன் கூட்டங்கூடாமல் ஏகாங்கியாகவே இருந்து தியானம் பண்ணவேண்டுமென்று ஸ்மிருதி சொல்லுகிறது.

(2) ஒருவரைக்குறித்தும் ஆசீர்வாதம் பண்ணுதவனுயுஞ், சுவார்த்தமாகட்டும், பரோபகாரார்த்தமாகட்டும், ஒரு காரியத்தையு

மாரம்பிக்காதவனும் ஒருவரைக்குறித்து நமஸ்காரம் பண்ணுதவனு யுந், தோத்திரம் பண்ணுதவனுயும், ஒருகருமமு மன்றியிலே யதிக கெம்பீரனும், யாதொருத்தனுண்டோ அவன் பிராமணன்.

இந்த யிடத்திற் சித்தவிட்சேப யேதுவான நமஸ்காரந் தோத்திரங்கள், நிஷேதிக்கப்படுகிறதே யொழிய சித்தப்பிரசாதயேதுவான நமஸ்காரந் தோத்திரங்கள் நிஷேதிக்கப்படவில்லை. அந்தப்படி ஸ்மிருதி சொல்லுகிறது.

அதேதென்றால், சர்வாதிஷ்டானராயிருக்கிற பரமேசுரரானவர் தன்னுர் கற்பிக்கப்பட்ட சராசரமானசகல பிரபஞ்சத்திலும் ஆகாசம்போலே பரிபூரணமாக இருக்கிறுரென்கின்ற சர்வசமபுத்தியினுலே, சண்டாளன், ஊர்ப்பன்றி, கழுதை, குதிரை, யானை, பசு, பிராமணன், மரமுதலான சகலத்தையுங் குறித்து தடிபோலே சாஷ்ட்டாங்கமாக நமஸ்காரம்பண்ணலாம். அதினுற் சித்தப்பிரசாதம் உண்டாகுமென்றும். பணக்காரனைக்குறித்து அவனுடைய பணந் தனக்குக் கிடைக்கிறதற்காக வெகு ஆதரவோடேகூட அவனை எப்படித் தோத்திரம் பண்ணுகிறுனே, அப்படிச் சகல ஜகத்கர்த்தாவாயுஞ், சமஸ்த புருஷார்த்த தாதாவாயு மிருக்கிற பரமே சுரனை யாதரவோடே ஸ்துதிபண்ணு நின்ற யெந்தப்புருஷன்தான். இந்தச் சமுசாரபந்தத்தினின்றும் முக்தனுக மாட்டானென்று ஸ்மிருதி சொல்லுகிறது.

ஆனதாற், சித்தப்பிரசாத யேதுவான நமஸ்கார தோத்திரங்கள் பிராமணனுக்குங் கூடும்.

(3) யாதொருத்தன் பாம்புக்கூட்டத்தில் நின்றும் பயப்படுகிறதுபோல ராஜவார்த்தை முதலானதற்கு யேதுவான ஜனக்கூட்

டத்தில் நின்றும் பயப்படுகிருனோ நரகத்தில் நின்றும் பயப்படுகிறது போல, ஆசத்திக்கு யேதுவாயும், புருடார்த்தவிரோதியாயு மிருக்கிற பூசனையில் நின்றும் பயப்படுகிருனோ, பிணத்தில் நின்றும் பயப்படுகிறதுபோல நிஷித்தமாயும், அசூசிக்கிருப்பிடமாயும் இருக்கிற ஸ்திரீயினிடத்தில் நின்றும் பயப்படுகிருனோ, அவன்பிராமணன்.

ஸ்திரீ யசூசிக்கிருப்பிடமென்கிறதை ஸ்மிருதிசொல்லுகிறது.

அதெப்படியென்ருல், வாயினுற் சொல்லக்கூடாத ஸ்திரீகளுடைய அவயவத்துக்கும், அழுகிச்சொட்டாநின்ற மூக்குப்புண்ணுக்கும், ஒருபேதமு மில்லாவிட்டாலும், மூடனுயிருக்கிறவன், தன்னுடைய மனேவிகாரத்தால், அந்தஸ்திரீகளுடைய யோனிப்பிரதேசத்தை வெகுசுந்தரமாகவும், அதினல் வெகு சுகங்கிடைக்கிறதாகவும், எண்ணிக்கொண்டு அனியாயமாய்க் கெட்டுப்போகிருனென்றும், ஒருமாமிசத்தோடேகூடினதோ விரண்டுபாகமாய்ப் பிரிக்கப்பட்டு அபானவாயுவினுலும், மலமூத்திரத்தினுலும், வாசனைகட்டப்பட்டுக் கொண்டு, யோனியென்று விவகரிக்கப்படுகிறது, அப்படிப்பட்ட மகாகுணசாலியாயிருக்கிற யோனியில் யெவாள் ரமிக்கிருளோ அந்த மஹா அரிதானகிருத்தியம் பண்ணுநின்ற பெரியவாளைக்குறித்து அனந்தகோடி நமஸ்காரம் பண்ணவேண்டுமென்றும். இப்படி வினேதமாய் ஸ்மிருதிசொல்லுகிறது.

மூடாளுக்குச் சனங்களோடேகூடின பிரதேசமானது பயம், ஆலசியம், ஒன்றுமன்றியிலே வியர்த்தமாகச் சீமைவம்புவளக்கிறதற்குச் சகாயமானதால் அந்த இடம் அவர்களுக்கு வேண்டியிருக்குஞ். சனங்களொருவரும் இல்லாத விஜனப்பிரதேசமானது பயம், ஆலசியம், முதலானதைக் கொடுக்கிறபடியினுலே அந்த இடம் மூடாளுக்கு வேண்டி இராது.

(4) அப்படி இல்லாமல் யாதொருபுருஷனுக்குச் சனங்க ளோடே கூடின இடந், தியானத்துக்குஞ், சொரூபானந்த அநுப வத்துக்கும், விரோதமாம் ஆனபடியினாலே, சூனியப்பிரதேசம்போ லே மனதைக் கிலேசப்படுத்துமோ, அப்படியே ஜனங்கள் ஒருவரும் இல்லாத விஜனப்பிரதேசமானது நிர்விக்கினமாகத் தியானத்துக் குஞ், சொரூபானந்த அநுபவத்துக்கும், அனுகூலமானபடியினா லே யாதொருத்தனுடைய மனதுக்கு அத்தியந்தம் அனுகூலமா கத்தோன்றுமோ அப்படிப்பட்டவன் பிராமணனென்றுபெரியவாள் சொல்லியிருக்கிறார்கள்.

இனிச் சூதசங்கிதையினுடைய முக்திகண்டத்தின் ஐந்தா மத்தியாயத்தில் ஸ்ரீபரமசிவனாலே விஷ்ணுவைக்குறித்துச் சொல்லப் பட்ட அதிவரணாச்சிரமியைச் சொல்லுகிறோம்.

அதெப்படியென்றால், வாருமையா விஷ்ணுவே அதிவரணாச் சிரமியானவன் பிரமச்சாரிமுதலான சகலஆச்சிரமிகளுக்கும் பிராம ணாதி சகலவருணங்களுக்கும் யெல்லா அதிகாரிகளுக்குங் குருவாக வேயிருப்பனேயொழிய ஒருவருக்குஞ் சிஷ்யனாயிருக்கமாட்டான். பர மசிவனாயிருக்கிற நாம் யெப்படி யெல்லாருக்குங் குருவோ ஒருவருக் குஞ் சிஷன்அன்றோ. அப்படி அதிவருணாச்சிரமியு மென்றறியும். ஆன தால், அவனே யெல்லாருக்குஞ்சிரேட்டன் அவனுக்குச்சமனாகட்டும் அதிகனாகட்டும் ஒருவனுங் கிடையாது. இதிற்சமுசயமில்லை. அவனு க்கு லட்சணம் ஏதென்றாற், சொல்லுகிறோம்.

(1) வாரீர் விஷ்ணுவே யாதொருத்தன் சரீரயிந்திரியாதிக ளுக்குப் பின்னராயும், அதற்குசாட்சியாயும், அவத்தாத்திரய மில் லாதவராயும், அதற்குச் சாட்சியாயும், யெப்போதும், யெல்லாத் தையும், அறிந்துகொண் டிருக்கிறபடியினாலே, சொப்பிரகாச சித்

தரூபராயும், சத்தரூபராயும், பரமப்பிரீதிக் கிருப்பிடமானபடியி ஞலே ஆனந்தரூபராயுமிருக்கிற பிரத்தியகாத்துமாவை வேதாந்த மகாவாக்கியங்களுடைய சிரவணமனன நிதித்தியாசனங்களினுலே மாயாதற்காரிய மொன்றுமன்றியிலே சச்சிதானந்த பரிபூரணராயிருக் கிற மகாதேவராகஅறிகிறுனேஅவன் அதிவருணுச்சிரமி.

(2) யாதொருபுருஷன் சண்டாளசரீரத்திலும், பசுமுதலான தின்சரீரத்திலும், பிரமாவினுடைய சரீரத்திலும், பின்னுந் தாரதன்மி யத்தோடே கூடின சகல சரீரத்திலும், ஆகாசம்போலே யெப்போ தும் யெங்கும் வியாபித்து நிறைந்திருக்கிறவராயும், ஆனபோதிலும், ஒன்ருேடுஞ் சம்பந்தமன்றியிலே அசங்கராயும், நித்திய சுத்த புத்த முத்த சத்திய பரமானந்த சொரூபராயு மிருக்கிற, யாதொருமகா தேவருண்டோ அவரேநாம் நாமேயவரென்று வேதாந்த மகாவாக் கிய சிரவணுதிகளால் ஒரு பிரதிபந்தமும் அன்றியிலே அபரோட்ச மாக அறிகிறுனே அவன் அதிவருணுச்சிரமி.

(3) யாதாமொருவன் மாயையினுலே கற்பிக்கப்பட்ட வருண ஆச்சிரமங்கள் யாதொன்றுஞ் சித்தரூபனுயிருக்கிற நமக்குக்கிடை யாதென்றுஞ், சுவர்ணத்தில், ஆர, கேயூர, கடாகாதிகள், போலவுஞ் சுத்தியில் ரசிதம்போலவும், ரச்சுவிற் சர்ப்பம்போலவும், மாயாகாரிய மான மகதாதிஜகத்து முழுவதும் நம்மிடத்திற் கற்பிக்கப்பட்டதென் றுஞ், சூரியனுடைய சன்னிதானத்தில் உலகஞ்சேட்டிக்கிறதுபோல அந்தச் சகலஜகத்தும் நம்முடைய சன்னிதானத்திற் சேட்டிக்கிற தென்றும், வேதாந்த வாக்கியங்களினுலே அறிகிறுனே அவன் அதி வருணுச்சிரமி.

(4) யாவனெருவன் விவேகத்தினுலே திக்குப்பிரமை நசித்துப் போனபோதிலுந் திரும்பி ஒருதிக்குப் பின்னெருதிக்காகத் தோற்

றுவதுபோலத் தத்துவஞானத்தினுலே நசித்துப்போன ஜகத்து மறுபடி தோணினும் இது நிஜமாக நமக்குக் கிடையாதென்றுஞ், சொற்பனப்பிரபஞ்சமானது மாயையினுலே நம்மிடத்தி லெப்படித் தோணுகிறதோ அப்படிச் ஜாக்கிரப்பிரபஞ்சமும் மாயையினுலே நம்மிடத்திற் தோணுகிறதென்றுஞ், சொற்பனப் பிரபஞ்சமானது நிஜமாக விசாரித்துப் பார்க்கும்போது யெப்படியானுல் நம்மைக் காட்டிலும் வேறன்ருே, அப்படிச் ஜாக்கிரப்பிரபஞ்சமும், நம்மைக் காட்டிலும் வேறன்றென்றும், வேதாந்த வாக்கியங்களினுலே அறிகிருனே அவன் அதிவருணுச்சிரமி.

(5) யாதொருத்தனுக்குச் சொரூபஞான பெலத்தால் வருணுச்சிரம ஆசாரங்கள் யெல்லாம் நழுவிப்போயிற்ருே யாதொருத்தன் அதுகளை விட்டுப்போட்டுச் சொரூபமாத்திரமாக யிருக்கிருனே அவன் வருணுச்சிரமங்களைத் தாண்டின அதிவருணுச்சிரமியென்று சகல வேதாந்திகளினுலுஞ் சொல்லப்படுவன்.

அக்ஞானம், அதின்காரியம், ஒன்று மொருக்காலுங் கிடையாது, சச்சிதானந்த பரிபூரண பரமாத்துவைதமான பிரமசொரூபமே யெப்போதுமுள்ளதென்று வெகுதிடமாக அறிந்திருக்கிற அதிவருணுச்சிரமிக்கு விதிநிடேதங் கூட்டுவது தள்ளுவது ஒன்று மொருக்காலுங் கிடையாது. அவனுடைய இப்படிப்பட்ட நிஸ்டையை மூடாள் சருமசக்ஷுவினுலே யென்னவிதமா யறியப்போருள் அறியவேமாட்டாள். ஆனதால், நிர்த்துவந்துவமாய், நிர்விகாமாய், நிராகாரமாய், நிரஞ்சனமாய், நிராபாசமாய், நிர்விட்சேபமாய், நிராவரணமாய், நித்தியசுத்தமாய், சச்சிதானந்தமாத்திரமாயிருக்கிற, பிரத்தியகபின்ன பரப்பிரமசொரூபத்தை அதிதிடமாக, நாமென்று அபரோட்சமாக அறிந்திருக்கிற அதிவருணுச்சிரமியானவன் சகல வருணுச்சிரமிகளான அதிகாரிகளுக்குங் குருவென்கிறதில் யாதொரு

சமுசயமுமில்லையென்று சர்வக்ஞராய் சர்வசமனாய், சர்வஜீவர்களுக்கும் அத்தியந்தம் அனுகூலராயிருக்கிற, ஸ்ரீ பரமசிவனானவர் உத்தமோத்தமாதிகாரியான ஸ்ரீ மகாவிஷ்ணுவைப் பார்த்து வெகுகிருபையினாற் சொல்லியிருக்கிறார். ஆனதாலிப்போது முமூக்ஷுக்களாயிருக்கிற சீவாளானபேர்கள் ஸ்ரீ பரமசிவவசனத்தைச் சத்தியமாக நம்பியெந்தவிதமும் வெகுபிரயாசப்பட்டு முயற்சிபண்ணி வேதாந்த மகாவாக்கிய சிரவணாதிகளாற் கீழ்ச்சொன்னபடி சொரூபசாக்ஷாத்காரத்தை யடைந்து கிருதார்த்தாளாகவேண்டுமேயொழிய வேறே கதிகிடையாது. சத்தியஞ், சத்தியஞ் சத்தியம்.

இந்தப்படி கடவல்லியாதி சுருதிகளுஞ் ஜீவன்முக்தனைத் தொட்டு அதிவருணாச்சிரமிபரியந்தஞ் சொல்லுகிற ஸ்மிருதிகளுஞ் ஜீவன்முக்தி உண்டென்கிறதிற் பிரமாணமென்று சித்தமாச்சுது

ஜீவன்முக்திக்கிச்சாதனம்.

இனிச் சீவன்முக்திக்கிச் சாதனம் ஏதென்கிற மூன்றுங்கேள்விக்குத்தரமான ஜீவன்முக்திக்கிச் சாதனத்தை சொல்லுகிறோம்.

அதேதென்றால், தத்துவஞானம், வாசனாட்சயம், மனோநாசம், மூன்றுஞ் ஜீவன்முக்திக்கிச் சாதனம் அந்தப்படி வாசிட்டத்தில் உபசாந்திப் பிரகாரணத்தினுடைய முடிவில் ஸ்ரீ வசிட்டர் சொல்லியிருக்கிறார்.

அதேதென்றால், வாரீர் இராமா தத்துவஞானம், வாசனாட்சயம், மனோநாசம், மூன்றுகளும் வெகுகாலபரியந்தஞ் சமமாக அப்

பியாசிக்கப்பட்டுதுகளேயானுற் ஜீவன் முக்தியாகிய பலத்தைக் கொடுக்கும். அப்படி யில்லாமல் ஒவ்வொருகாலத்தி லொன்றொன்றாக யெவ்வளவுகாலபரியந்தம் அப்பியாசித்தாலும் அதுகள் அந்தப்பலத்தைக் கொடுக்கமாட்டாதுகள். எப்படியானால், பஞ்சாக்ஷராதி மந்திரங்களில், முதநாள் ஓரக்ஷரம், மறுநாள் ஓரக்ஷரம், அதற்குமறுநாள் ஓரக்ஷரம், விழுக்காடு எத்தனைகாலஞ் செபித்தாலும் அதுகள் சாஸ்திரத்திற் சொன்னபடி பலத்தைக்கொடுக்கமாட்டாதுகளோ. லோகத்திலே கறி பருப்பு அன்ன முதலானதுகளில் ஒன்றொன்று கிடைத்ததுகொண்டு யெப்படித் திருப்தி கிடைக்கும்படியான போசனஞ் சித்திக்கமாட்டாதோ. அப்படிப்போல, வெகுகாலபரியந்தஞ் சமமாக அப்பியாசிக்கப்படாத தத்துவஞானாதிகளுஞ் சித்தியைக்கொடுக்கமாட்டாதுகள். ஆனதால், இந்த மூன்றுகளையும் வெகுகாலமட்டுக்குஞ் சமமாக அப்பியாசிக்கவேண்டும். அப்படி யப்பியாசித்தால் அதினுற் தாமரைத்தண்டை யொடித்ததினால் அதுக்குள்ளே யிருக்கப்பட்ட நூலுகள் அறுந்துபோவதுபோல அனாதிகாலத்தைத் தொட்டு வந்த திடமாயிருக்கிற இருதயக்கிரந்திகள், அறுந்துபோய்விடுஞ். சந்தேகமில்லை. அனேக கற்பகோடி காலத்தைத்தொட்டு வரப்பட்ட இந்த சமுசாரவாசனையானது தத்துவஞானாதிகளைச் சமமாக வெகுகாலம் அப்பியாசிக்காவிட்டால் ஒருக்காலும் நசிக்கமாட்டாது. இந்தத் தத்துவஞானம், வாசனாக்ஷயம், மனோநாசங்கள், மூன்றுகளும் ஒன்றுக்கொன்று காரணமானதால், வெகுகாலமட்டுக்குஞ் சமமாகப் பழகாதபோனால் இதுகளைச் சாதிக்கிறது நிரம்பவும் வருத்தம்.

இந்த மூன்றுகளுக்குள்ளே இரண்டிரண்டாகச்சேர்ந்து மூன்று துவந்துவமுண்டு. அதில், மனோநாசமும், வாசனாக்ஷயமுஞ் ,சேர்ந்து ஒரு துவந்துவந். தத்துவஞானமும், மனோநாசமுங், கூடிப்பின் ஒரு துவந்துவம். வாசனாக்ஷயமுந், தத்துவஞானமுங், கூடிமற்றொருதுவந்து

வம். மனோநாச மில்லாவிட்டால் வாசனக்ஷயமில்லை வாசனக்ஷயமில்லை விட்டால் மனோநாசமில்லையென்றும், தத்துவஞான மில்லாவிட்டால் மனோநாசமில்லை மனோநாசம் இல்லாவிட்டால் தத்துவஞானமில்லை யென்றும். வாசனக்ஷய மில்லாவிட்டால் தத்துவஞானமில்லை தத்துவஞானமில்லாவிட்டால் வாசனக்ஷய மில்லை யென்றும். வாசிட்டத்திற் சொல்லியிருக்கிறதே இதற்குப்பிரமாணம்.

இதில் யுத்தியேதென்றாற்? சொல்லுகிறோந் தீபச்சுவாலையின் பரம்பரைபோலே விர்த்திகளுடைய பரம்பரைரூபமாகப் பரிணமத்தையடைகிறதே மனது. இந்தமனமானது அது இது அப்படி இப்படி அதுகூடும் இதுகூடாது அதுநல்லது இதுபொல்லாது அத்தைப்பண்ணவேண்டும் இத்தைவிடவேண்டுமென்று இது முதலானதை மனனம் பண்ணுகிறபடியினாலே இதற்குமனதென்றுபெயர்.

இந்தமனதினுடைய நாசமாவதேதென்றால்? விர்த்திரூப்பரிணமத்தை விட்டுப்போட்டு நிரோதாகாரமாகப் பரிணமிக்கிறதே மனோநாசம்.

இந்தப்படி பதஞ்சலிபகவான் யோகசாஸ்திரத்திற் சூத்திரம் பண்ணியிருக்கிறார்.

அதினுடைய அர்த்தத்தை மேலே விஸ்தாரமாகச் சொல்லப்போகிறோம்.

வாசனையாவதேதென்றால்? முன்பின் ஒன்றையும் ஆலோசியாமற் சீக்கிரத்திலுண்டாகாநின்ற குரோதாதிவிர்த்திக்கேதுவான சித்தத்தினுடைய சூக்ஷுமஅவஸ்தையாகிய சமஸ்காரமானது வாசனையென்றுசொல்லப்படும். இந்தவாசனை அனாதிகாலத்தைத் தொட்டு இருதயத்தில் வசிக்கிறபடியினாலே யிதற்குவாசனை யென்று. பெயர்

இதினுடைய க்ஷயமாவதேதென்றால்? விவேகசென்னியமா யிருக்கிற சாந்தியாதிவாசனை திடமாகும்போது பாகிய நிமித்தத்தி னாலே குரோதாதிவிர்த்தியுண்டாகாம லிருக்கிறதே வாசனக்ஷயம்.

இப்படியா யுள்ளளவில் விர்த்திகளுடைய அடக்கமாகிய மனோநாசமில்லாவிட்டால் விர்த்திகளுண்டாகும்போது ஒருக்காற் பாகிய நிமித்தத்தாற் குரோதாதியுண்டாகும் ஆனதால், வாசனக்ஷய மில்லை. அப்படியே வாசனக்ஷயம் இல்லாதபோது விர்த்திகள் மேன் மேலுண்டாகும் ஆனதால், மனோநாசமில்லை. இப்படி மனோநாச வாசனக்ஷயத் துவந்துவத்தில் யுத்திசொல்லப்பட்டுது.

தோணுகின்ற ரூபரசாதியான சகலஜகத்தும் பரமார்த்தமாகப் பிரத்தியகபின்ன பரப்பிரமசொரூபம். இந்தச்ஜகத்து வேறாகத்தோ ணினபோதிலும் மாயாமயமானதால் எதார்த்தமாக இல்லவே இல்லை யென்கிற நிச்சயமே தத்துவஞானம். இது எதார்த்த தத்துவத்தை அறிகிறபடியினாலே இதற்குத் தத்துவஞானமென்று பெயர்.

இந்தஞானம் யெப்போ சித்திக்குமென்றால்? தோணுகின்ற நாமரூபப் பிரபஞ்சமெல்லாம் யெப்போ சச்சிதாநந்தசொரூபமாகத் தோணுகிறதோ அப்போது சித்திக்கும். இப்படிப்பட்ட தத்துவஞா னமில்லாதபோது ரூபரசாதிவிஷயங்கள் சத்தியமென்கிறபிரமை திடமாயிருக்கும். ஆனதால், அந்த ரூபரசாதி கோசரவிர்த்திகள் விறகு போடப்போட அக்கினிச்சுவாலை நசியாததுபோல நசிக்கமா ட்டாதுகள். ஆனபடியினாலே, தத்துவஞானம் இல்லாவிட்டால் மனோநாசமில்லை. அப்படியே மனோநாசம் இல்லாதபோது விர்த்திக ளினாலே ரூபரசாதி விஷயங்கள் கிரகிக்கப்படும் ஆனதாற், பிரமத்தை த்தவிர வேறொன்றுமில்லை பிரமமேயிருக்கிறதென்கின்ற தத்துவஞா னமுண்டாக மாட்டாது. இப்படித் தத்துவஞான மனோநாசத் துவந்துவத்தில் யுத்திசொல்லப்பட்டுது.

குரோதாதிவாசனைகள் நசியாதபோது சாந்தியாதிவாசனை இல்லாதபடியினாலே தத்துவஞான முண்டாகமாட்டாது. அப்படியே பரமாத்துவைதமான பிரமசொரூபமேயெல்லாம் அதுவேநாமென்கிற தத்துவஞானம் இல்லாவிட்டாற் குரோதாதிவாசனைக்கி நிமித்தமான பாகியவிஷயஞ் சத்தியமென்கிறபிரமை போகாததினாலே வாசனாக்ஷயம் இல்லையென்கிறதே வாசனாக்ஷய தத்துவஞானத் துவந்துவத்தில் யுத்தி.

இப்படி இந்த மூன்று துவந்துவங்களுக்கும் வாசிட்டத்திற் சொன்னபடி விதிரேக முகமாக அன்னியோன்னிய காரணத்துவமும் யுத்தியுஞ் சொல்லப்பட்டுது.

இனி அன்னுவயமுகமாக இந்த மூன்றுதுவந்துவங்களுக்கும் ஒன்றுக்கொன்று காரணத்துவமுண்டென்கிறதில் நாம் யுக்திசொல்லுகிறோம். அதேதென்றால்? மனோநாசம்வந்தால் வாசனையைக் கிளப்பிவிடுகிறதில் நிமித்தமானபாகியவிஷயந் தோணாதபடியினாலே வாசனை க்ஷயித்துப்போம் அப்படியே வாசனைக்ஷயித்தால் ஏதுவில்லாததினாற் குரோதாதிவிர்த்தி யுண்டாகமாட்டாது. ஆனதால், மனது நசிக்கும். இது மனோநாச வாசனாக்ஷயத் துவந்துவம்.

அகண்டாகாரவிர்த்தியொன்றினாலே பிரத்தியகபின்ன பிரமசொரூபத்தை அறியவேண்டுமென்று சுருதியிற்சொல்லியிருக்கிறபடியினாலே பிரமாகாரவிர்த்தி யொன்றைத்தவிர மற்றசகலமனோவிர்த்தியின் நாசம்வந்தால் தத்துவஞானமுண்டாகும் அப்படியே தத்துவஞானம்வந்தால் மித்தியாரூபமான ஜகத்திற் சசசிருங்கத்திற்போல விர்த்தி யுண்டாகாதபடியினாலும் ஆத்மசொரூபம் அறியப்பட்டுப்போனபடியால் மறுபடி விர்த்திக் குபயோகமில்லாதபடியினாலும் விறகில்லாத அக்கினிபோல மனது நசித்துப்போம். இது மனோநாச தத்துவஞானத் துவந்துவம்.

சத்துருவிடத்திலும், மித்துருவிடத்திலும், பெந்துவிடத்தி லுந், தன்னுடையதேகத்திலும், பின்னும், உத்தமம், மத்திமம், அதமங்களாயிருக்கிற உபாதிகளிலுஞ், சமமாயிருக்கிற ஆத்மா ஒருத்தர். அவரே நாமென்று திடஅபரோக்ஷஞானமுள்ளவனுக்குத் தன்னுடைய சரீர அவயவத்திற்போலப் பிறருடைய சரீரத்திலும் ஏன் கோபம் வரும் வரமாட்டாதென்று வார்த்திகாசாரியாள் சொல்லியிருக்கிறபடியி னாலே தத்துவஞானம் வந்தால் வாசனைக்ஷயிக்கும் அப்படியே குரோதாதிவாசனக்ஷயரூபமான சாந்தியாதி வந்தால் தத்துவஞான முண் டாகும். இதுவாசனக்ஷய தத்துவஞானத் துவந்துவம்.

இந்தத்தத்துவஞான வாசனக்ஷய மனோநாசங்களுக்குச் சாதனத்தை ஸ்ரீவசிட்டர் சங்கிரகித்துச் சொல்லியிருக்கிறார்.

அதெப்படியென்றால்? வாரீர் இராமா தத்துவஞானத்துக்குச் சிரவணாதி சாதனம். வாசனக்ஷயத்துக்குப் பிரதிகூலவாசனையின் பழக்கஞ் சாதனம். மனோநாசத்துக்குத் தியானஞ் சாதனம். ஆன படியினால் இத்தன்மைத்தென்று பிரித்தறிந்துகொண்டு சகல போகாசையையுந் தூரத்தில் விட்டுப்போட்டு யெவ்வருத்தப் பட்டாகிலும் யெந்த உபாயத்தாலாகிலும் இந்தமூன்றையுஞ் சம்பாதித்துப்போடு வோமென்கிற உச்சாகமாகிய முயற்சியை நடுவிலே விட்டுவிடாமற் றிடமாகப் பலன்கிடைக்கும் வரைக்கும் பண்ணுவதே தத்துவஞா னாதி மூன்றுங் கிடைக்கிறதற்குச் சாதனம். போகேச்சைக்குக் கொஞ்சமாகிலும் இடங்கொடுத்தால் நெய் முதலானதால் அக்கினி மேன்மேல் சொலித்து விருத்தியடைவதுபோலப் போகாசை யும் மேன்மேல் விருத்தியடையுமேயொழிய ஒருக்காலும் நாசத்தை யடையமாட்டாது. ஆனதாற் போகாசையைக் கொஞ்சங்கூட இல் லாமற்றூரத்தில் விட்டுப்போட்டு இந்தமூன்றையுஞ் சாதிக்கவேண்டு மென்று ஸ்ரீ வசிட்டர் சொல்லியிருக்கிறார்.

சங்கை? முன்னேயே விவிதிஷா சந்நியாசத்துக்குத் தத்துவஞானம் பலம் வித்துவச் சந்நியாசத்துக்குச் ஜீவன்முக்தி பலமென்று கிரமஞ் சொல்லப்பட்டுதே அப்படியாயுள்ளளவில் முந்தி விவிதிஷா சந்நியாசத்தினாலே தத்துவஞானஞ் சம்பாதித்துக் கொண்டு பின்பு வித்துவச்சந்நியாசம் பண்ணிக்கொண்டு பந்தரூபங்களான வாசனை மனோவிர்த்திகளுடைய நாசத்தைச் ஜீவித்திருக்கிற புருடன் ஜீவன்முக்தியின்பொருட்டுச் சம்பாதிக்க வேண்டுமென்று அர்த்தந் தோணுகிறதே இப்போ இவடத்திற் றத்துவஞானாதி மூன்றையுஞ் சமகாலத்தில் அப்பியாசிக்கவேண்டுமென்று நியமம் பண்ணப்படுகிறதே ஆனதால், முன்னுக்குப் பின்விரோதம் வருகிறதேயென்றால்? அப்படி விரோதம் வரவேண்டியதில்லை யேனென்றால்? விவிதிஷா சந்நியாசிக்கித் தத்துவஞானம் பிரதானமாக அப்பியாசிக்கத்தக்கது வாசனாக்ஷயம் மனோநாசங்கள் அப்பிரதானமாக அப்பியாசிக்கத்தக்கதுகள். வித்துவச் சந்நியாசிக்கி வாசனாக்ஷயம் மனோநாசங்கள் பிரதானமாக அப்பியாசிக்கத் தக்கதுகள். தத்துவஞானம் அப்பிரதானமாக அப்பியாசிக்கத்தக்கதென்று நியமமானபடியினாலே இரண்டுவித சந்நியாசிகளுக்குந் தத்துவஞானாதிகளைச் சமமாக அப்பியாசிக்கிறதில் யாதொரு விரோதமுமில்லை.

சங்கை? தத்துவஞானமுண்டான மாத்திரத்தினாலேதானே கிருதார்த்தனானவனுக்கு மேற்பழகத்தக்கதான வாசனாக்ஷய மனோநாசங்களுடைய அப்பியாசப்பிரயாசத்தா லென்னபலமென்றால்? அதற்குச் சமாதானஞ் ஜீவன்முக்திக்கிப் பிரயோஜனஞ் சொல்லும்போது சொல்லப்போகிறோம்.

சங்கை? தத்துவஞானம் வஸ்துதந்திரமானதாற் கருமத்தைப் போல பண்ணுகிறதற்கும் பண்ணாமலிருக்கிறதற்கும் பின்னொருவிதமாகப் பண்ணுகிறதற்கும் யோக்கியமாகாதபடியினாலே வித்துவச்

சந்நியாசிக்கி அப்பிரதானமாகத்தான் தத்துவஞான அப்பியாசம் யெப்படிக்கூடுமென்றால்? யேதாகிலும் ஒருவழியாற் றிரும்பித்திரும் பித் தத்துவத்தை நினைக்கிறதே தத்துவ ஞான அப்பியாசமென்றுத் தரம்.

இந்த அப்பியாசம் வாசிட்டத்தில் லீலோபாக்கியானத்திற் சொல்லப்பட்டிருக்கிறது. அதெப்படியென்றால் ? சிஷியனுக்கு வேதா ந்தசாஸ்திரத்தின் அர்த்தத்தைப் பாடஞ்சொல்லுவதுந், தான்தானே மனனம்பண்ணுவதும், யோக்கியாளான சாதுக்களோடே யொன்று க்கொன்று சொரூபவிசாரஞ்செய்வதும், யேகாந்தத்தில் நிதித்தியா சனம்பண்ணுவதும், பிரமாப்பியாசமென்று சொல்லப்படும். இதம் விர்த்திக்கிவிஷயமான ஆகாசாதிபாகியப் பிரபஞ்சமும், அகம்விர்த்தி க்கிவிஷயமான அகங்காராதி ஆந்திரப்பிரபஞ்சமும், சிருஷ்டியாதியி லேயே உண்டாகவில்லே. ஆனதால், இப்போ எங்கேயிருக்கும் இனி மேற்றான் யெப்படியிருக்கப்போகிறது காலத்திரயத்திலுந் திரிசியப் பிரபஞ்சம் இல்லவேயில்லேயென்றுபழகிறநிச்சயமும் பிரமாப்பியா சமென்று சொல்லப்படுமென்று லீலேகதையிற் சொல்லியிருக்கிறது.

சங்கை? அந்தலீலேகதையிற்றானே வாசனக்ஷய மனோநாச அப்பியாசங்களேயுஞ் சொல்லியிருக்கிறதே இப்படித் தத்துவஞானாதி மூன்றுகளுடைய அப்பியாசங்களேயுஞ் சரியாகச்சொல்லி யிருக்கச் சே இதுபிரதானமென்றும் இது அப்பிரதானமென்றும் நியமம் எப் படிக்கூடுமென்றால்? கூடலாமே ஏனென்றால்? முமூக்ஷுவா யிருக் கிற புருஷனுக்குச் ஜீவன்முக்தியென்றும், விதேகமுக்தியென்றும், இரண்டு பிரயோஜனமுண்டன்றோ அந்தப் பிரயோஜனனுசாரமாக இது பிரதானமென்றும், இது அப்பிரதானமென்றுந், தத்துவஞானாதி களுக்குநியமங்கூடும். அதெப்படி யென்றால்? சொல்லுகிறேன் ஜீவித்திருக்கிற புருஷனுக்குத் தெய்வசம்பத்தால் மோக்ஷமென்றும்.

அசுரசம்பத்தாற் பந்தமென்றும். பகவற்கீதையின் பதினாறுமத்தியாயத்திற் பகவான் சொல்லிப்போட்டந்த அத்தியாயத்திற்றானே இரண்டுவித சம்பத்துக்களையுஞ் சொல்லியிருக்கிறார்.

அதிற் பயமில்லாமை, சித்தசுத்தி, ஞானசாதனமானதியான நிஷ்டை, தானம், இந்திரியநிக்கிரகம், நிஷ்காமமாயனுஷ்டிக்கிறயாகந், தன்தன்வேதாத்தியயன கிருச்சிராதிதவசு, உள்ளும் வெளியுமொத்திருக்கிறநட்பு, இமிசையில்லாமை, பொய்யில்லாமை, கோபமில்லாமை, ஆசையில்லாமை, சந்நியாசஞ், சாந்தி, கோட்சொல்லாமை, பிராணிகளிடத்திற்றயை, குளிர்ந்தவார்த்தை, யெவ்வளவுதான் தருமஞ்செய்தபோதிலும் அகங்காரமன்றியிலே நாஞ்செய்ததெவ்வளவென்று வெட்கம், சுகம்வந்தாலும், துக்கம்வந்தாலுஞ், சாஸ்திரசென்னியவிவேகத்தாற் சித்தமசையாமலிருப்பது, நல்லசரீரகாந்தி, குரோதம்வந்தாலும் அதைஅடக்குவது, சாஸ்திரீயகாரியத்திற் றைரியம்,மண்ஜலம் முதலானதாற்பாகியசௌசம், விவேகத்தினால் ராகத்துவேஷாதிகளுடைய நிவாரணமாகிய ஆந்தரசௌசம், ஒருவரைக்குறித்துந் துரோகமில்லாமை, நமக்குச்சரியாரென்கிற அகங்காரமில்லாமை, இதுமுதலானநற்குணங்கள் தெய்வசம்பத்து.

ஒருவனுடைய திரவியமுதலானதையபகரிக்கிறதின் பொருட்டுக்கருமிபோலவும், உபாசகன்போலவும், ஞானிபோலவும், அபினயம்பண்ணுவதாகிய டம்பம், அடங்காத அகங்கார கெறுவம், காமங், குரோதம், லோபம், அவிவேகம், நித்திரை, ஆலசியம், பயம், மைதுனம், இதுமுதலானதுற்குணங்கள் அசுரசம்பத்து.

இந்த அசுரசம்பத்துக்குள்ளே நரகத்துக்குத் துவாரமாகவுந் தன்னை அத்தியந்தங்கெடுத்துப் போடுகிறதாகவும் இருக்கப்பட்டது ராகந், துவேஷம், லோபம், மூன்றுமேயென்று பகவான்சொல்லியிருக்கிறார்.

இந்த விரண்டுவிதசம்பத்துக்குள்ளே சாஸ்திரத்திற் சொன்னபடி முயற்சியினுற் சம்பாதிக்கப்பட்ட தெய்வசம்பத்தாகிய சத்துவாசனையினுலே அசுரசம்பத்தாகிய துர்வாசனையை நாசம்பண்ணினுற் ஜீவன்முக்திச் சுகங்கிடைக்கும். வாசனுக்ஷயம்போலே மனோநாசமுஞ் ஜீவன்முக்திக்கேது. அந்தப்படி சுருதிசொல்லுகிறது.

அதெப்படியென்ருல்? மனுஷியாளுக்கு மனதே பந்தத்துக்கும், மோக்ஷத்துக்குங், காரணம். சத்தாதிவிஷய ஆசையோடேகூடினமனது பந்தகாரணம். அந்தஆசையில்லாதமனது மோக்ஷகாரணம். யாதொன்றினுலே விஷயாசையைவிட்டமனதே மோக்ஷகாரணமோ. ஆனதால், முமூக்ஷுவானவன் தினந்தோறுந் தன்னுடையமனது விஷயாசையைவிட்டுநீங்கும்படி செம்மையாய் முயற்சி பண்ணவேண்டும். வைராக்கியத்தோடேகூடின தியானுப்பியாசத்தினுலே நிரோதிக்கப்பட்ட மனதானது யெப்போ ஒருவிஷயமனனமுமன்றியிலே பரமானந்தரூபராயிருக்கிற ஆத்மாவினிடத்திலே பாலிலேவிட்டஜலம்போலே யேகரசமாக ஐக்கியத்தையடைகிறதோ அப்போ அந்தமனது நசித்தமனதென்று சொல்லப்படும். எவ்வளவு காலமட்டுக்கும் பழகினதினுலே மனதாத்மாவினிடத்திலே லயிக்குமோ அவ்வளவுகாலவரைக்கும் வைராக்கியதியானுப்பியாசங்களைவிடக்கூடாது. ஆத்மாவினிடத்திலே மனதுலயிக்கிறதே தியானபலமானஞானம். அதுவேமோக்ஷம். மற்றதெல்லாம் இப்போசொன்ன நியாயத்துக்கு விஸ்தாரமேயொழிய வேறேயில்லையென்று சுருதிசொல்லுகிறது. ஆனதால், மனோநாசமுஞ் ஜீவன்முக்திக்கேது வென்று சித்தமாச்சுது.

தீவிரபந்தமென்றும், மிருதுபந்தமென்றும், பந்தம் இரண்டுவிதம். அதில்அசுரசம்பத்துச்சாக்ஷாது துக்கயேதுவானபடியினுலே

தீவிரபந்தம். தொய்தமாத்திரந்தோற்றஞ் சுயந்துக்கரூபமாகாதபடியினுலேயும், அசுரசம்பத்தை யுண்டுபண்ணுகிறபடியினுலேயும், மிருதுபந்தம். இதில் வாசனுக்ஷயத்தாற் றீவிரபந்தமாத்திரம் நீக்கப்படும். மனோநாசத்தால் இரண்டுவிதபந்தமும் நீக்கப்படும்.

சங்கை? ஆனல், மனோநாசமேபோதும் வாசனுக்ஷயம் வேண்டாமென்றால்? அப்படிக்கூடாது ஏனென்றாற்? போகேதுவான பிரபல பிராரத்தத்தால் மனது சமாதியைவிட்டு வெளியில்வரும்போது வரப்பட்ட தீவிரபந்தத்தை நீக்குகிறதற்காக வாசனுக்ஷயமும் வேண்டும்.

சங்கை? போகேதுவான பிரபல பிராரத்தந் தன்பலமான போகத்தைக்கொடுக்க யேற்படும்போது வாசனுக்ஷயத்தாற் றீவிர பந்தந்தான் எப்படி நிவிர்த்திக்கும் அந்தத்தீவிரபந்தமும் போகமன்றோ ஆனதால், வாசனுக்ஷயம் வியர்த்தந்தானேயென்றால்? வியர்த்தமன்று யேனென்றாற்? ருமதவிர்த்திகள் தீவிரபந்தஞ் சாத்திக ராசதவிர்த்திகளிரண்டும் போகமென்று நியமமானதால் வாசனுக்ஷயத்தாற் றீவிரபந்தத்துக்கு நிவிர்த்தியுங்கூடலாந் தொய்தமாத்திரத்தோற்றமாகிய மிருதுபந்தத்தாற் போகமுங்கூடலாம் ஆனபடியினுலே வாசனுக்ஷயஞ் ஜபலந்தான்.

சங்கை? இப்படியாயுள்ளளவில் மிருதுபந்தத்தையும் ஒப்புக்கொள்ளவேண்டியிருப்பதாற் றீவிரபந்தம் வாசனுக்ஷயத்தினுலேதானே நீக்கப்பட்டுப் போகிறபடியால் மனோநாசம் வியர்த்தமென்றால்? அதுகூடாது. ஏனென்றாற்? றுற்பலபிராரத்தத்தால் வரப்பட்டதாயும் அவசியம் புசிக்கத்தக்கதன்றியிலேயுமிருக்கிற போகத்தை நீக்குகிறதற்காக மனோநாசமும் வேண்டும் இந்தப்படி ஜீவன்முக்தியைக்குறித்து வாசனுக்ஷய மனோநாசங்கள் சாக்ஷாது சாதனங்களானபடியி

ஞலே பிரதான்மென்றுந், தத்துவஞானமானது இந்தவிரண்டுகளையு முண்டுபண்ணுகிறதிற் சாக்ஷாது சாதனமானதாலுஞ், ஜீவன்முக்தி யைக்குறித்துப் பரம்பரைசாதனமானதாலும், அப்பிரதானமென்றுஞ் சித்தமாச்சுது. ஜீவன்முக்திக்கி வாசனுக்ஷயம் மனேநாசங்கள் எப் படி முக்கியசாதனங்களோ அப்படி விதேகமுக்திக்கித் தத்துவஞா னஞ் சாக்ஷாது சாதனமானதால் முக்கியசாதனம் வாசனுக்ஷயம் மனேநாசங்கள் தத்துவஞானத்தில் சாக்ஷாது சாதனமானதாலும், விதேகமுக்தியைக்குறித்துப் பரம்பரைசாதனமானதாலும், அமுக்கிய சாதனமென்றிப்படி யிரண்டுவிதமுக்திகளாகிய பிரயோசனங்களை யனுசரித்துத் தத்துவஞானுதிகளுக்குப் பிரதானத்துவமும், அப்பிர தானத்துவமுஞ், சித்திச்சுது. இந்த விதேகமுக்தி அப்பிரதிபந்த அப ரோக்ஷமான ஞானம் எப்போ உண்டாகிறதோ அப்போ சித்திக்கும். அந்தப்படி பாஷியக்காருள் சூத்திரபரஷியத்திற் சொல்லி யிருக் கிருள்.

சங்கை? வர்த்தமானதேகம் விழுந்துபோனபின்பு விதேக முக்தியென்று வெகுபேர்கள் சொல்லுகிருர்கள் அந்தப்படி சுருதி ஸ்மிருதி இதிகாசபுராணங்களிலேயுஞ் சொல்லியிருக்கிறதே அப்ப டியிருக்க நீரிங்கே ஞானமுண்டாகிறகாலத்திலேதானே விதேகமு க்தியென்று சொல்லுவதெப்படிக்கூடுமென்ருல்? இரண்டுமதமுங் கூடும்படி சமாதானஞ் சொல்லுகிறேம்.

அதேதென்ருல்? விதேகமுக்தியென்பது தேகமன்றியிலே யிருக்கின்றமோக்ஷம். அந்தவிதேகமுக்தி ஒருதேகமுமில்லாதகால த்திற் சித்திக்கத்தக்கதென்கிற அபிப்பிராயத்தால் வெகுபேர்கள் வர்த்தமானதேகம் விழுந்துபோனபின்புதான் விதேகமுக்தியென்று சொன்னுர்கள். வரப்போகிறதேகமன்றியிலே யிருக்கப்பட்ட முக்தி யே விதேகமுக்தியென்கிற அபிப்பிராயத்தால் ஞானசமகாலத்தில்

விதேகமுக்தியென்று நாமேசொன்னோம் ஆனதால் இரண்டுமெதமுங் கூடும். வரப்போகிற தேகத்தை நிவிர்த்திபண்ணுகிறதற்காகவே ஞானத்தின் சம்பாதனமானபடியினாலே நாமேசொன்னபடி மேல் வரப்போகிற தேகமில்லாத மோக்ஷமே விதேகமுக்தியென்று சொல்லவேண்டும்.

வர்த்தமானதேகம் ஞானத்துக்குமுன் ஆரம்பிக்கப்பட்டபடியினாலே அது ஞானத்தால் நிவிர்த்திக்கப்படமாட்டாது. அக்ஞானிகளுக்குக்கூட பிராரத்தகருமம் நசித்தஉடனே வர்த்தமானதேகம் நீங்கிப்போகிறபடியினாலே அந்தத்தேகத்தின் னிவிர்த்தி ஞானபலமென்று சொல்லக்கூடாது.

சங்கை? ஆனால், வர்த்தமானலிங்கதேகநிவிர்த்தி ஞானபலமாகட்டுமென்றால்? ஞானம்வந்தபோதிலுஞ் ஜீவன்முக்தாளுக்கு லிங்கதேகநிவிர்த்தி வரக்காணாதபடியினாலே அந்தசங்கை கூடாது.

சங்கை? ஞானஞ் சிலகாலம் பிராரத்தகருமத்தால் பிரதிபந்திக்கப்பட்டதுகொண்டு லிங்கதேகநிவிர்த்தியைப் பண்ணாதேபோனாலும் பிரதிபந்தமான பிராரத்தம் நசித்தவுடனே அதினுடைய நிவிர்த்தியைப் பண்ணுமென்றாற்? பஞ்சபாதிகாசாரியாள் ஞானம் அக்ஞானத்தையே நிவிர்த்திபண்ணுமென்று சொல்லியிருக்கிறபடியினாலே அந்தச்சங்கையுங்கூடாது. ஆனதால், லிங்கதேகநிவிர்த்திக்கிச் சாதனமேதென்றாற்? சாமக்கிரியினுடையநிவிர்த்தியென்று சொல்லப்படும். ஒருகாரியத்தை நிவிர்த்திபண்ணுகிறதற்குச் சாதனம் விரோதியினுடைய இருப்பென்றுஞ், சாமக்கிரியின் னிவிர்த்தியென்றும், இரண்டுவிதம். அதெப்படியென்றால்? விரோதியான வாயுவினுடைய இருப்புனாலும், எண்ணை திரிமுதலான சாமக்கிரியின் னிவிர்த்தியினாலும்; தீபமானது நிவிர்த்திக்கப்படுகின்றதன்றோ அதுபோல லிங்கதேகத்தை நிவிர்த்திபண்ணுகிறதற்குச் சாக்ஷாதுவிரோதியைக்

காணேம் ஆனதாற் சாமக்கிரியின் னிவிர்த்தியினல் லிங்கதேகம் நிவிர்த்திக்குமென்று சொல்லவேண்டும். லிங்கதேகம் ஆரம்பத்துக் குப் பிராரத்தமென்றுஞ், சஞ்சிதமென்றும், இரண்டு சாமக்கிரியுண்டு அந்த இரண்டு சாமக்கிரியினுலும் அக்ஞானிகளுடைய லிங்கதேக மிந்தலோகத்திலும் பரலோகத்திலுமிருக்கும். ஞானிகளுக்கு சஞ் சிதகருமம் ஞானத்தினல் நிவிர்த்தித்துபோனபடியினுலும், பிராரத்த கருமம் போகத்தினல் னிவிர்த்தித்தபடியினுலும், எண்ணை திரி முத லான சாமக்கிரியில்லாத தீபம்போலே கீழ்ச்சொன்ன இரண்டுவித சாமக்கிரியின் னிவிர்த்தியினல் லிங்கதேக நிவிர்த்திவரும் ஆனபடியி னுலே அந்தலிங்கதேக நிவிர்த்தி ஞானபலமன்று ஆன்தால், வரப் போகிறதேகமில்லாத விதேகமுக்தி ஞானசமகாலத்தில் வருமென்று சித்தமாச்சுது.

உனக்குச்சம்மதமான வர்த்தமானதேகமில்லாத விதேகமுக்தி பிராரத்ததேகம் விழுந்துபோனபின் பிருக்கட்டும் நமக்குச் சம்மதமான விதேகமுக்தி ஞானசமகாலத்திலே யுண்டாகும் இதில் யாதொரு விரோதமுமில்லை.

அசுரவாசனையினுடைய நாசத்தைப்பண்ணுநின்ற தெய்வவா சனை ஞானசாதனமென்று சுருதிசொல்லுகிறது. அப்படியே பகவற் கீதையுஞ் சொல்லுகிறது. அதெப்படியென்றல்? மானமில்லாமை, டம்பமில்லாமை, இமிசையில்லாமை, கோபமில்லாமை சத்தாதிவிஷ யங்களி லிராகமில்லாமை, குருசிசுருடை, இரண்டுவிதசௌசஞ், சமஞ், தமம், தைரியம், அகங்காரமில்லாமை, ஜனனமரணஞ், சரைவியாதி முதலானதால் வரப்பட்ட துக்கத்தை நினைக்குகை, இஷ்டம்வந் தாலும் அனிஷ்டம் வந்தாலுஞ் சமசித்தமாயிருக்குகை, சர்வப்பிரத்தி யகபின்னரான பரமேசுரனிடத்தில் விபசாரமன்றியிலே யிருக்கிற பக்தி, ஒருவருமில்லாத சுத்தமான பிரதேசத்தில் வாசங், கூட்டங்

கூடின இடத்தில் வெறுப்பு, சதாவேதாந்த நிஷ்டை, அபரோக்ஷமான ஜீவப்பிரம ஐக்கியஞானம், இதுமுதலானது ஞானசாதனமென்று கீதையிற் சொல்லியிருக்கிறது. மனோநாசம் ஞானசாதனமென்று சுருதிஸ்மிருதிகளில் வெகுவாய்ச் சொல்லியிருக்கிறது.

விவிதிஷா சந்நியாசியினாலே சம்பாதிக்கப்பட்ட தத்துவ ஞானாதி மூன்றுகளுக்குள்ளே இக்காலத்திலிருக்கப்பட்ட வித்துவச் சந்நியாசியினிடத்தில் தத்துவஞானமாத்திரந் தொடர்ந்துவரும் வாசனைக்ஷய மனோநாசங்கள் மறுபடியும் முயற்சியினாற் சம்பாதிக்கத் தக்கதுகள் அதேனென்றால்? லோகத்திலே சகுண உபாசனை பண்ணினவனும், அந்தஉபாசனை பண்ணாதவனும், இரண்டுவித்தியாதிகாரி அதிற்சகுணப்பிரம சாக்ஷாத்கார பரியந்தமான உபாசனை பண்ணிப் போட்டுப் பின்பு ஞானத்திற் பிரவருத்தித்திருக்கிற அதிகாரிக்கி வாசனைக்ஷய மனோநாசங்கள் திடமாயிருக்கிறபடியினாலே ஞானம்வந்தபின்பு வித்துவச்சந்நியாசமுஞ், ஜீவன்முக்தியுந், தனக்குத்தானே சித்திக்கும். அப்படிப்பட்ட அதிகாரிதான் சாஸ்திரத்தில் முக்கியாதிகாரி இக்காலத்திலிருக்கப்பட்டவாள் வெகுபேர்கள் சகுண உபாசனை பண்ணாமற் றானே உச்சாகமாத்திரத்தினாற் சுருக்கிலே ஞானத்திற் பிரவருத்திக்குறார்கள். தாற்காலிகமாக வாசனைக்ஷய மனோநாச அப்பியாசங்களையும் பண்ணுகிறார்கள் அதுகொண்டு சிரவணமனன நித்தியாசனங்கள் சித்திக்கிறதுகள். திடமாக அப்பியாசிக்கப்பட்ட அந்தச்சிரவணாதிகளால் அக்ஞானஞ், சமுயம், விபரீதம், மூன்றும். போய் விடுகிறபடியினாலே தத்துவஞானம் நன்றாயுண்டாகிறது. அப்படி உண்டான ஞானத்துக்குப்பாதகம் ஒன்றுமில்லாததினாலேயும், நசித்துப்போன அக்ஞானம் மறுபடியுண்டாகும்படியான காரண மில்லாததினாலேயுங், கெடுதலில்லை. வாசனைக்ஷயம் மனோநாசங்களோ வென்றால்? திட அப்பியாசமில்லாததினாலேயும், போகத்தைக் கொடுக்கத் தக்கதான பிராரத்தத்தால் அடிக்கடி வாதிக்கப் படுகிறபடியினா

லேயுங், காற்றோடேகூடின இடத்திலிருக்கப்பட்ட தீபம்போல உடனே நிவிர்த்தித்துப் போகிறதுகளானபடியினாலே இக்காலத்தி லிருக்கப்பட்ட வித்துவச்சந்நியாசிகளுக்கு ஞானமாத்திரந் தொடர்ந்துவரும் வாசனாக்ஷயம் மனோநாசங்கள் முயற்சியினாற் சம்பாதிக்கத் தக்கதுகளென்று சித்தமாச்சுது.

வாசனையாவதேதென்றால்? அதின்சொரூபம் வாசிட்டத்திற் சொல்லப்பட்டிருக்கிறது. அதெப்படியென்றாற்? றிடபாவனையினாலே முன்பின் ஒருவிசாரமுமன்றியிலே யுண்டாகாநின்ற குரோதாதி விர்த்திகளுக்கேதுவான சமஸ்காரமேவாசனை. அந்தவாசனை மலின வாசனையென்றுஞ், சுத்தவாசனையென்றும், இரண்டுவிதம். இதிற்றால தேகாதி பஞ்சகோசங்களுக்கும், அதுகளுக்குச் சாக்ஷியான ஆத்மாவுக்கும், இருக்கப்பட்ட பேதத்தை மறைக்காநின்ற அக்ஞானத்தினாலே உண்டாகிற பிராந்திபரம்பரையாகிய கனமாயிருக்கிற ஆகாரத்தை யுடைத்தானதாயுங், கன அகங்காரத்தோடே கூடினதாயுந், திரும்பித்திரும்பிச் ஜன்மத்தைக் கொடுக்கிறதாயு, மிருக்கிற வாசனை மலினவாசனையென்று சொல்லப்படும்.

மலினவாசனையினால் வரப்பட்ட கனஅகங்காரங் கீதையிற் சொல்லப்பட்டிருக்கிறது அதேதென்றால்? இந்தத்தனம் இப்போ யென்னாலே அடையப்பட்டுது, இதை அடையப்போகிறேன், இதுயிருக்கிறது, இனிமேல் எனக்கு இது உண்டாகப்போகிறது, இந்தச் சத்துரு யென்னாலே ஜெயிக்கப்பட்டான், பின்னுஞ் சிலசத்துருக்களை நானே ஜெயிக்கப்போகிறேன், நான் யெல்லோருக்குஞ் சமானன் நான்போகி, நான்சித்தன், நான்பெலவான், நான்சுகி, நான்பாக்கியவான், நான் ஜனக்கட்டுள்ளவன், என்னோடேசமனாயாருண்டு, நான் யாகம் பண்ணப்போகிறேன், நான் தானம்பண்ணப்போகிறேனென்றிதுமுதலான அவிவேகமூலமான அகங்காரத்தினாலே மூடப்பட்

டவாளாயும், அனேக சித்தப்பிரமையையுடைத்தான பெயர்களாயும், அக்ஞானமாகிய வலையினுல் சூழப்பட்டவாளாயும், விஷயபோகங்களிலே யேற்பட்டவாளாயும், இருக்கிறஜனங்கள் மஹாகோரமாயிருக்கிற ரௌரவாதிநரகத்தில் விழுவார்களென்று பகவான்சொல்லியிருக்கிருர்.

வாரா யருச்சுனு வெகு குரூரர்களாயும். ஈசுரனிடத்திலும் ஈசுரபக்தாளிடத்திலுந் துவேஷியர்களாயும், அத்தியந்தம் அசுசியர்களாயும், மலினவாசனேயோடே கூடினவர்களாயுமிருக்கிற துஷ்டஜனங்களே அசுரயோனிகளிலேதானே நாமே தள்ளிவிடுவோம். அப்படியசுரயோனிகளேயடைந்து ஜன்மஜன்மத்திலேயும் மூடாளாய் நம்மையும், நம்முடைய பத்தாளேயுஞ், சரணமாயடையாமற்முனே மேன்மேல் அதமகதியை அடைவார்களென்று. பகவான்சொல்லியிருக்கிருர்.

ஆனதால், முமூக்ஷுக்களானபேர்கள் வெகுஜன்மபரம்பரையைக்கொடுக்கிறதாயும், நாளுவித நரக துக்கசாகரத்தில் மூழுகடிக்கிறதாயும், இருக்கிற மலினவாசனேயை யெம்முயற்சியினுலுந் தூரத்தில் விட்டுப்போட்டுச் சுத்தவாசனேயைச் சம்பாதித்துக்கொண்டு கிருதார்த்தாளாகவேண்டும்.

சுத்தவாசனேயாவதேதென்றுல்? பிரத்தியகபின்ன பிரமதத்துவத்தைத் திடாபரோக்ஷமாக அறிந்தபுருஷனிடத்திலிருக்கப்பட்டதாயும், வருத்தவிதை குதிர் நிரம்புகிறதற்குமாத்திரம் எப்படி உபயோகிக்குமோ ருசியான அன்னத்தின்பொருட்டும், பயிருண்டாகிறதின்பொருட்டும், உபயோகிக்கமாட்டாதோ. அப்படிப்போலத் தேகஞ் ஜீவித்திருக்கிறதின்பொருட்டு மாத்திரம் உபயோகிக்கிறதாயும், டம்பங் கெறுவமுதலான அசுரசம்பத்தை உண்டுபண்ணுததாயுஞ், ஜன்மாந்தாத்துக் கேதுவன்றியிலேயுமிருக்கிற வாசனே சுத்த வாசனேயென்று வாசிட்டத்திற்சொல்லியிருக்கிறது.

கீழ்ச்சொன்ன மலினவாசனை- லோகவாசனையென்றுஞ், சாஸ்திரவாசனையென்றுந், தேகவாசனையென்றும், மூன்றுவிதமாயிருக்கும். அதிற் சகலஜனங்களும் நம்மை யெந்தப்படியிருந்தால் நிந்திக்கமாட்டார்களோ தோத்திரமாத்திரம் பண்ணுவார்களோ அந்தப்படிநடக்கவேண்டுமென்கிற துரபிமானம் லோகவாசனை. அந்தவாசனைசம்பாதிக்கிறதற் கருமையானபடியினால் மலினவாசனையென்று சொல்லப்பட்டுது. இதற்குதாரணமேதென்றால்? இந்தலோகத்திலே சகலகுணங்களோடேயுங் கூடினபுருஷன் ஆரென்றுகேட்ட வான்மீகியைப்பார்த்து இட்சுவாகு வமுஷங்களிலுண்டானவரான ஸ்ரீராமன்தானீர்கேட்ட சகலகுணங்களோடேயுங் கூடினவரென்று நாரதர் வெகுபிரகாரமாய்ச் சொல்லியிருக்கிறார். அப்படிப்பட்ட ஸ்ரீராமனையுஞ் ஜகத்துமுதலியவனைத்திற்கும் ஆதாரமாயிருக்கிற மஹாபதிவிரதையான சீதாதேவியையும் பார்த்து வாயினாலே சொல்லக்கூடாததாயுங் காதினாலே கேட்கக்கூடாததாயுமிருக்கிற அபவாதத்தைச் ஜனங்கள் சொல்லியிருக்கிறார்கள். அப்படியிருக்க மற்றபேர்களுக்குச் ஜனஅபவாதம்வருகிறதில் கேழ்க்கவேண்டியதென்ன. அப்படியே தென்தேசத்திலிருக்கிற ஜனங்களை வடதேசத்திலிருக்கிற ஜனங்கள் தங்கள் தங்கள் குலங் கோத்திரம் பெந்துவர்க்கம் இஷ்டதேவதைமுதலானதில் அபிமானத்தால் நிந்திக்கிறார்கள். தங்களைத்தோத்திரம்பண்ணிக் கொள்ளுகிறார்கள். வடதேசத்தில் வசிக்கிறவாளைத் தென்தேசத்தில் வசிக்கப்பட்டவர்களும் அப்படியே நிந்திக்கிறார்கள் தங்களையுந் தோத்திரம்பண்ணிக்கொள்ளுகிறார்கள். பின்னுந் தன்தேச ஆசாரங் குலதருமம் பாஷையின்பேதம் அதிலிருக்கப்பட்டசுபசப்தம் அபசப்தம் முதலானதில் அபிமானத்தாற் றங்களுடைய ஸ்துதியையும் பிறருடைய நிந்தையையுஞ் ஜனங்கள் பண்ணுகிறார்கள். இதுகளெல்லாம் லோகவாசனைக்குதாரணம்.

இந்தலோகவாசனை நசிக்கிறதற்குபாயமேதென்றால்? சகல ஜனங்களுக்குஞ் சந்தோஷம்வரும்படி நடக்கத்தக்கதான உபாயம் யாதொன்றுமில்லைத் தன்தன்மனதுக்குத் தோணினபடி சொல்லாநின்ற ஜனங்களுடைய சொல்லினாலேநமக்கென்ன எவ்விதமும் நமக்குஇதத்தையே அனுஷ்டிக்கவேண்டுமென்கிற விவேகமே லோகவாசனை நசிக்கும்படியான உபாயம். இந்த அபிப்பிராயத்தை வைத்துக்கொண்டுதான் மோக்ஷசாஸ்திரத்தில் அங்கங்கே தியானபுருஷனுக்கு நிந்தையிலுஞ் ஸ்துதியிலுஞ் சமமாயிருக்கிற புத்திவேண்டுமென்று சொல்லியிருக்கிறது.

சாஸ்திரவாசனையாவதேதென்றால்? கருமசாஸ்திரபாட அபிமானமென்றும், அந்தச்சாஸ்திர அர்த்தஅபிமானமென்றும், அந்தச்சாஸ்திர அர்த்தஅனுஷ்டானஅபிமானமென்றுஞ், சாத்திரவாசனை மூன்றுவிதம். அதிற் சாஸ்திர பாடஅபிமானத்துக் குதாரணமாவதேதென்றால்? பரத்துவாசரென்கப்பட்டவர் மூன்று புருஷாயுசு மட்டுக்கும் வெகு வேதங்களை அத்தியயனம்பண்ணி நாலாம் புருஷாயுசுலே இந்திரனாலே மறுபடியும் வேதபாடத்தில் பிரவருத்திக்கப்பட்டவராய்க் கொண்டு அப்போது மிஞ்சியிருக்கிற வேதத்தினுடைய அத்தியயனத்தின்பொருட்டு முயற்சிபண்ணினார் அப்படிப்பட்ட பரத்துவாசர்க்குக்கூட வேதபாடமுழுவதுங் கிடைக்காமற் போனபடியினாலே அந்தப்பாடஅபிமானம் மலினவாசனையென்று சொல்லப்பட்டுது.

பின்புஅவருடையபாடத்தின் அசாமார்த்தியத்தை இந்திரன் பார்த்து வேதபாடத்தில்நின்றுந் திருப்பி அதைக்காட்டிலும் அதிகமாயிருக்கிற புருஷார்த்தத்தின்பொருட்டுச் சகுணப்பிரமஉபாசனையை உபதேசித்தானென்று இதெல்லாந் தைத்திரியப்பிரமாணத்திற் சொல்லப்பட்டிருக்கிறது.

அப்படியே வெகுசாஸ்திர அர்த்தத்தை அறியவேண்டுமென் கின்ற அபிமானமும் பரமபுருஷார்த்தத்துக்குச் சாதனமாகாதபடியி ஞலே மலினவாசனையென்று காலவேஷயகீதையிற் சொல்லியிருக்கி றது. அதேதென்ருல்? ஒருரிஷியானவர் வெகுவிதமான சாஸ்திரபுஸ் தகபாடங்களோடேகூட மஹாதேவரைப் பிரதக்ஷண நமஸ்காரங் கள்பண்ணித் தரிசனம்பண்ணுகிறதற்காகப் பரமசிவன் சன்னிதா னத்தில் வந்தார் அப்போது அந்தச்சன்னிதானத்தில் அவரைப்பார் த்துப் பின்னெரு ரிஷியானவர் பாரஞ்சுமக்கிற கழுதைபோல நன் ருய்ப்புஸ்தகபாரங்களைச் சுமக்கிறீரென்று கிருபையினலே பரிகாசம் பண்ணினர் அதைக்கேட்டு முந்தினரிஷியானவர் புஸ்தகபாரங்களை யெல்லாம் லவணசமுத்திரத்தி லெறிந்துபோட்டார். அப்போ கிரு பாமூர்த்தியாயிருக்கிற மஹாதேவரானவர் அந்தரிஷியை ஆத்தும வித்தையிலே பிரவருத்திப்பித்தாரென்று சொல்லியிருக்கிறது.

ஆத்துமவித்தையும் அந்தர்முகனன்றியிலேயுங் குருகிருபை ஈசுரகிருபை இல்லாதவனுபமிருக்கிறவனுக்கு வேதசாஸ்திரமாத்திரத் தினலேதானே யுண்டாகமாட்டாது.

நாரதபகவானனவர் அறுபத்துநாலுவித்தைகளிலுஞ் சமர்த் தரானபோதிலும் ஆத்துமவித்தை இல்லாததினலே சோகத்தோடே கூடினவராய்ச் சனற்குமாரரைச்சரணமாயடைந்து வாருமையாகுரு வே? ஆத்துமவித்தையிருக்கிறவனே சோகத்தைத்தாண்டுவனென்று தங்களைப்போலிருக்கப்பட்ட பெரியவாளிடத்தில்நின்றும் நான்கேட் டிருக்கிறேன் எனக்கு அறுபத்துநாலுவித்தைகள் வந்திருந்தபோதி லும் நான் மந்திரவித்தேயொழிய ஆத்மவித்தன்று ஆனதாற் றுக்கத் தையே அநுபவிக்கிறேன் சுகம்லேசாலேசமுங்கிடையாது அப்படிப் பட்ட யென்னைத் துக்கசமுத்திரத்தில் நின்றுங் கரையேற்றிவைக்க

வேண்டுமென்று பிரார்த்தித்தார். சனற்குமாரருஞ் சுத்தசித்தராய் உத்தம அதிகாரியாயிருக்கிற நாரதபகவானுக்கு ஆத்துமவித்தையை உபதேசித்து அவரைச் சோகசாகரத்தில்நின்றுங் கரையேற்றினரென்று சாந்தோக்கிய உபநிடதத்திற்சொல்லியிருக்கிறது. அப்படியே பின்னும் வெகு சுருதிஸ்மிருதிகளிலேயுஞ் சொல்லியிருக்கிறது.

ஆனதால், இக்காலத்திலிருக்கப்பட்டவாளும் ஈசுரபக்தியோடே கூடச் சற்குருவைச் சரணமாயடைந்து அவருடையமுகத்தினலே மஹாவாக்கிய உபதேசம்பெற்று மனனம் நிதித்தியாசனம்பண்ணி அதினல் நிர்விகற்ப சாக்ஷாத்காரத்தையடைந்து ஜீவன்முக்திச்சுகத்தை அநுபவித்துச் சகலசமுசார துக்கத்தையும் போக்கவேண்டுமேயொழியத் தான்தானே யேதாகிலுஞ் சிலவேதாந்தங்களைப் பார்த்துப்போட்டு வாக்குமாத்திரவேதாந்தத்தால் மோக்ஷசுகத்தை அடையக்கூடாது. சமுசார துக்கத்தையும் போக்கக்கூடாது. அப்படியிருக்க வேதாந்த பின்னசாஸ்திர வாசனையினலே மோக்ஷசுகங்கிடைத்துச் சமுசார துக்கம் போகுமென்கிற வார்த்தைக்கிக்கூட இடமில்லை.

வாக்குமாத்திர வேதாந்தத்தினற் பிரயோசனமில்லையென்று விஷ்ணுபுராணத்திற் சொல்லியிருக்கிறது.

அதெப்படியென்றல்? கலியுகம்வரும்போது சகலஜனங்களும் உபஸ்தஇந்திரியத்தால் வரப்பட்ட சம்போகசுகத்திலேயுஞ், சிங்நுவை இந்திரியத்தால் வரப்பட்ட ஆகாரசுகத்திலேயும், ஆஸத்தாளாய்க்கொண்டு வாக்குமாத்திரத்தினலே பிரமதத்துவத்தைச்சொல்லுவார்களேயொழிய வேதாந்தசாஸ்திரத்திற்சொன்னபடி வைராக்கியாதி சாதனங்களை யனுஷ்டிக்கமாட்டார்களென்று சொல்லியிருக்கிறது. அந்தப்புராணத்திற்றனே சாஸ்திர அர்த்தஅனுட்டானபிமானம் மலினவாசனையென்கிறதற் குதாரணஞ் சொல்லியிருக்கிறது.

அதேதென்றால்? நிதாகரானவர் ரிபுவினாலே, அடிக்கடி ஆத்மதத்துவத்தை உபதேசிக்கப்பட்டபோதிலுங் கருமஅனுஷ்டான த்திற் சிரத்தையை விடவேயில்லையென்கிறதே உதாரணம். தாசுரன் கருமஅனுஷ்டானத்தின்பொருட்டுப் பூமியிலொரு இடத்திலுஞ் சுத்தஸ்தலத்தை யடையவில்லையென்று வாசிட்டத்திற் சொல்லியிருக்கிறது அதே இதற்குதாரணம்.

இந்தசாஸ்திரவாசனை பிரமாப்பியாசத்திற்கு விரோதியானதாலும், மேன்மேற் ஜன்மத்துக்கு யேதுவானதாலும், மலினவாசனைதான். அந்தப்படி முண்டகோபநிடதத்தில் வெகுவாய்ச்சொல்லியிருக்கிறது. கீதையிலும் பகவான் நிரம்பச்சொல்லி யிருக்கிறார். கெறுவத்துக்கேதுவானபடியினாலேயுஞ் சாஸ்திரவாசனை மலினவாசனையே. சுவேதகேதுவானவர் சொற்பகாலத்தினாலேதானே சகல வேதங்களையும் அத்தியயனம்பண்ணிப்போட்டுக் கெறுவத்தினாலே தன்னுடைய பிதாவுக்கெதிரவே வணக்கமன்றியிலே யிருந்தானென்று சாந்தோக்கிய உபநிடதத்திற் சொல்லியிருக்கிறது.

வாலாகியென்கிறவன் சிலவுபாசனைகளை அறிந்துகொண்டு கெறுவத்தோடே கூடினவனாய் வெகுதேசங்களிலே வெகுபிராமணாளை அவமானம்பண்ணிப்போட்டு காசியிலே அசாதசத்துருயென்கிற பிரமவித்துச்சிரேஷ்டரைச் ஜெயிக்கிரதற்கு யேற்பட்டானென்று கௌஷதகி உபநிடதத்திற் சொல்லியிருக்கிறது.

தேகவாசனையாவதேதென்றால்? தேகமேநாமென்கிற தேகாத்மப் பிரமையினாலும், தேகத்துக் குணத்தைச் சம்பாதிக்கவேண்டுமென்கிற பிரமையினாலுந், தோஷத்தைப்போக்கவேண்டுமென்கிற பிரமையினாலும், தேகவாசனை மூன்றுவிதமாயிருக்கும். அதில்- மூடஜனங்களும், லோகாயுதாளுஞ், சைதன்னியத்தோடேகூடின

தேகமே ஆத்மாவென்று யெண்ணுகிருர்களென்று பாஷியக்காருள் தேகாத்மப்பிரமையைச் சொல்லியிருக்கிருள். அப்படியே சுருதியுமிருக்கிறது லோகாளுடைய அநுபவமுங் கண்டிருக்கிறோம்.

தேகத்திற் குணசம்பாதனம் பண்ணுவது லௌகிகமென்றுஞ், சாஸ்திரீயமென்றுஞ், இரண்டுவிதம். அதில்-ரம்மியமாயிருக்கிற ராகத்தோடேகூடக் கானம்பண்ணுகிறதற்காக விளக்கெண்ணெமிளகு நெய்முதலானதைச் சாப்பிடுவதுந், தேகத்தைத் தொடும்போது அதுமெதுவாயிருக்கிறதாகப் புஷ்டியைப் பண்ணத்தக்கதான ஔஷத ஆகாரங்களைப் புசிப்பதுஞ், சரீரம் அழகாயிருக்கிறதின்பொருட்டு அப்பியங்கஸ்நானமுதலானதைப் பண்ணிக்கொண்டு நல்லவஸ்திராபரணங்களைத் தரிப்பதுஞ், சரீரம் வாசனையா யிருக்கிறதின்பொருட்டு புஷ்பமாலைகளைத் தரித்துக்கொண்டு சந்தனமுதலானதைப் பூசிக்கொள்ளுவதும், லௌகிகமான குணசம்பாதனம். கங்காஸ்நானம் முதலானதைப் பண்ணுவதுஞ், சாளிக்கிராமாதி தீர்த்தமுதலானதைப் புரோக்ஷித்துக்கொள்ளுவதுஞ், சாஸ்திரீயகுண சம்பாதனம்.

தேகத்தினுடைய தோஷத்தைப் போக்குவது லௌகிகமென்றுஞ், சாஸ்திரீயமென்றும், இரண்டுவிதம். அதில்-வைத்தியசாஸ்திரத்திற் சொல்லப்பட்ட ஔஷதங்களினலே முகங்கழுவுவது முதலானது லௌகிகம். சௌசம் ஆசமனீயம் முதலானது சாஸ்திரீயம். இந்த மூன்றுவிதமான தேகவாசனைகளும்மலினவாசனை யென்கிறதை மேற்சொல்லுகிறோந் தேகமே ஆத்துமாவென்பது அப்பிரமாணமானதாலுஞ், சகலதுக்கயேதுவானதாலும், மலினவாசனை. இந்த அர்த்தத்திற் பூருவாசாரியாள் நிரம்பச்சொல்லியிருக்கிறபடியினலே நாம் விசேஷமாய்ச் சொல்லவில்லை. குணசம்பாதனமும் வெகுமுயற்சிபண்ணினபோதிலும் வெகுபேர்களிடத்தில் முழுவதுஞ் சித்திக்கக்

காணும். ராகத்தோடே கானம்பண்ணுகிற பிரசித்தாளாயிருக்கிற பாடகாளும், வேதஅத்தியயனம் பண்ணிவைக்கிறவாளுங், கீழ்ச்சொன்ன முயற்சிபண்ணினபோதிலும் நல்லகண்டத்தொனியை அடையவில்லை. நியமமாய்ச் சரீரபுஷ்டியுங் காணப்படவில்லை. அழகும், வாசனையும், வஸ்திராபரணமாலை முதலானதுகளுக்கே யொழியத் தேகத்திலே கிடையாது. அந்தப்படி விஷ்ணுபுராணத்திற் சொல்லியிருக்கிறது. அதேதென்றால்? ரத்தம், மாமிசம், யெலும்பு, நரம்பு, சீ, மலம், மூத்திரம், மச்சை, சுக்கிலம், இதுகளுடைய கூட்டமான தேகத்தி லியாதொருத்தன் பிரீதிபண்ணுகிறானோ அவன் நரகத்திலேயும் பிரீதிபண்ணவேண்டுமென்றுந், தன்னுடைய சரீரத்திலிருக்கப்பட்ட நாத்தத்தைக்கண்டு யாதொருபுருஷன் வைராக்கியத்தை யடையவில்லையோ அவனுக்கு வேறே யென்னவைராக்கிய யேதுவை உபதேசிக்கலாமென்றுஞ், சொல்லியிருக்கிறது. சாஸ்திரீயகுண சம்பாதனமும் பிரபலமாயிருக்கிற பின்னொருசாஸ்திரத்தினால் வாதிக்கப்படுகிறது.

பிரபலசாஸ்திரமேதென்றால்? யாதொருபுருஷனுக்கு வாத பித்த சிலேஷ்டுமமாகிய மூன்றுதாதுக்களோடேகூடின பிரேதரூபமான தேகத்தில் ஆத்துமபுத்தியிருக்கிறதோ. புத்திரமித்திரகளத்திராதிகளிலே நமதென்கிறமமதையிருக்கிறதோ. பாஷாணம் மிருத்து தாரு தாம்பிரமுதலானதினுடைய விகாரமான சிவவிஷ்ணுவாதி மூர்த்திகளிலேமாத்திரந் தேவதாபுத்தியிருக்கிறதோ. கங்காநதிஜலமாத்திரத்திற் றீர்த்தபுத்தி இருக்கிறதோ. அவன் தத்துவவித்துக்களான பெரியவாளுடைய சபையிற்கோவரகழுதையென்று சொல்லப்படுவனென்கிற பாகவதவசனமுந், தேகமானது அத்தியந்தம் மலினமாயிருக்கப்பட்டது. ஆத்துமாவானவர் அத்தியந்தம் நிர்மலராயிருக்கப்பட்டவர். ஆனதாற் றேகத்துக்கு யெவ்வளவு சௌசம்பண்ணின

போதிலுஞ் சுத்திகிடையாது. ஆத்மா நித்தியசுத்தரானதால் அவருக்குச் சௌசப்பிரசித்தியே கிடையாதென்கிற சூதசங்கிதையினுடைய வசனமும், பிரபலசாஸ்திரம்.

தேகம் அத்தியந்தம் மலினமென்கிறது மைத்திரசாகையிற் சொல்லப்பட்டிருக்கிறது. அதேதென்றால்? யெலும்பு, நரம்பு, தோல், மச்சை, மாமிசஞ், சுக்கிலஞ், சுரோணிதஞ், சிலேஷ்டமெங், கண்ணீர் இவைகளினாலே ஊழலாயும், மலமூத்திரம் வாதபித்தங்களினாலே நிறைந்திருக்கிறதாயுந், துற்கந்தமாயும், நிச்சாரமாயுமிருக்கப்பட்ட இந்தத்தேகத்தில். விஷயபோகங்களினாலே என்ன சுகமென்றும், இந்தச்சரீரம் ஸ்திரீபுருஷாளுடைய மைதுனத்தாலுண்டானதாயும், மூத்திரத்துவாரத்தால் வெளிப்பட்டதாயும், அஸ்தி மாமிசஞ் சருமங்களாற் கட்டப்பட்டதாயும், மலமூத்திரம், பித்தங், கபம், மச்சை, மேதசு, வசைமுதலான மலங்களினாற் பணத்தினாற் பொக்கிஷம் போல நிரம்பப்பட்டதாயுஞ், சைதன்னிய சூனியமாயும், அனேக ரோகஸ்தானமாயும், வெகுவித துக்கத்துக்கு ஸ்தானமாயும், பிரத்தியக்ஷ நரகமாயு மிருக்கிறதானபடியினா லிதைப்போல வேறே கெட்டபதார்த்தஞ் ஜகத்திலே கிடையாதென்றுஞ், சொல்லியிருக்கிறது. இன்னம் பூருவாசாரியாள் இந்த அர்த்தத்தில் நிரம்பச் சொல்லியிருக்கிறாள். அதென்னவென்றால்? நவத்துவாரங்களினாலும் நிரந்தரம் மலம்பெருகுகிறபடியினாலுங், கணக்கில்லாதமயிற்கால் வழியாற் சதாவேர்வை பெருகுகிறபடியினாலும், ஆர்தான் சோம்பலன்றியிலே இந்தத்தேகத்துக்குச் சௌசம்பண்ணி நிருவகிப்பாள். ஒருவராலேயும் ஆகமாட்டாது. இப்படி பாகியசௌசமே கிடைக்கவில்லை. ஆந்தரசௌசமோ சொற்பனத்திலுங்கிடைக்கவே கிடையாதென்று இப்படிச்சொல்லியிருக்கிறாள்.

ஔஷதம் புசிப்பது முதலானதாற் சாந்தமானரோகம் மறுப டியும் அடிக்கடி யுண்டாகிறபடியினாலே லௌகீகமான சரீரதோஷ த்தினுடைய நீக்கங்கூடாது. கீழ்ச்சொன்ன பாகவதவசனஞ் சூதச ங்கிதைவசனம் ஆகிய இவ்வசனங்களினாற் சாஸ்திரீயமான சரீரதோ ஷநீக்கமுங்கூடாது. ஆனபடியினாலே தேகவாசனை மலினவாசனை யே. அந்தப்படி வாசிட்டத்தில் ஸ்ரீ வசிட்டர்சொல்லியிருக்கிறார்.

அதேதென்றால்? வாரீர்இராமா மாதாபிதாக்களினாலேயுண்டு பண்ணப்பட்ட கால்முதற் சிரசுபரியந்தமான தேகமேநானென்கிற புத்தியானது மித்தியாஞானமானபடியினாலே பந்தத்தின்பொருட் டாகும். அந்தப்புத்தி சகலநரகங்களுக்கு மேதுவாகும். ஆனதால், அந்தப்புத்தியை யெவ்வித முயற்சியினாலாகிலுந்தள்ளவேண்டும். அப் படித்தள்ளும்போது சகலமுங்கெட்டுப்போகிறதாயிருந்தாலும் அதற் குப்பின்வாங்காமல் வெகுதைரியத்தோடே கூடினவனாய் அதைத் தள்ளவேண்டும். எப்படிப்பட்ட ஆபத்துவந்தாலும் யோக்கியனாயிரு க்கிறபுருஷன் நாய்மாமிசத்தைப் புசிக்கிறவளாயும் அதைத்தானே கையில் வைத்துக்கொண்டிருக்கிறவளாயுமிருக்கிற சண்டாளஸ்திரீ யை யங்கீகரிப்பனா மாட்டானே அப்படிப்போல எப்படிப்பட்ட ஆப த்துவந்தாலுந் தேகம்நானென்கின்றபுத்தியைச் சொற்பனத்திலுங் கூட அங்கிகரிக்கக்கூடாதென்று சொல்லியிருக்கிறார். இப்படியா யுள்ளளவில் லோகவாசனை, சாஸ்திரவாசனை, தேகவாசனை, மூன்றும். அவிவேகிகளுக்கு வேண்டியதாகத் தோணினபோதிலும். விவிதிஷா சந்நியாசிக்கி ஞானவிரோதியானபடியினாலும், வித்துவச்சந்நியாசிக் கிச் ஜீவன்முக்திச் சுகவிரோதியானபடியினாலும், விவேகிகளினாலே தள்ளத்தக்கதுதான். அந்தப்படி சூதசங்கிதையிற் சொல்லியிருக்கி றது. டம்பங் கெறவம் முதலான அசுரவாசனையாதொன்றுண்டோ அது நரகயேதுவானபடியினாலே மலினவாசனையென்கிறது அதிப் பிரசித்தமானதால் எந்த உபாயத்தினாலாகட்டும் இந்நாலுவாசனை

களையும் நாசம்பண்ணவேண்டும். எப்படி வாசனை நாசம்பண்ணவேண்டுமோ அப்படி மனோநாசமும் பண்ணவேண்டும்.

மனதாவதேதென்றால்? சாவயமாய் அநித்தியமாய் அரக்குச் சுவர்ணம் மெழுகுமுதலானதுபோல வெகுவிதபரிணாமயோக்கியமாயிருக்கிறதிரவியம் மனது. சக்ஷுராதி இந்திரியத்தினாலே கடபடாதி விளங்குவதுபோலச் சாக்ஷியாயிருக்கிற பிரத்திகாத்துமாவினாலேகாமாதிவிர்த்திகள் பிரகாசமாகவிளங்குகிறதுகள். அந்தவிர்த்திகளுக்குபாதானகாரணமாயிருக்கப்பட்ட மனது கண்ணுக்குமுன்னே வெளிச்சத்திலிருக்கப்பட்ட கடபடாதியுங் காதுக்குச்சமீபத்திற் றிடமாயுச்சரிக்கப்பட்ட சப்தமும் யாதொன்று சாவதான மன்றியிலேபோனால் அறியப்படவில்லையோ யாதொன்று சாவதானமாயிருந்தால் அறியப்படுகிறதோ அதுவே அன்னுவயவிதிரேகங்களினாலே சகல விஷய ஞானத்துக்குஞ் சாதாரணகாரணமானமனதென்று பிரகதாரண்ணிய உபநிடதத்திற் சொல்லப்பட்டிருக்கிறது. அந்தமனது மனனம் பண்ணுகிறபடியினாலே மனதென்றுஞ், சிந்தனைபண்ணுகிறபடியினாலே சித்தமென்றுஞ், சொல்லப்படும். அந்தச்சித்தம்-மூன்றுகுண காரியமான ஞானம், பிரவிருத்தி, மோகம், மூன்றுமநுபவிக்கப்படுகிறபடியினாலே திரிகுணாத்துமகமாயிருக்கும். அந்தப்படி கீழேகுணாதீத லக்ஷணத்திற் சொல்லியிருக்கிறோம். சாங்கியசாஸ்த்திரத்திலும், பகவற்கீதையினுஞ், சித்தந் திரிகுணாத்துமகமென்று நிரம்பச்சொல்லியிருக்கிறது. அந்தச்சித்தத்தினுடைய மூன்றுகுணங்களுஞ் சமுத்திரத்தின் அலைகள்போல நிரந்தரம் பரிணாமத்தையடையும்போது ஒருக்கால் ஒருகுணம் மேற்கொண்டிருக்கும். மற்றவிரண்டுகுணங்கள் உள்ளடங்கியிருக்கும். அதிற் றமோகுணமேற்கொண்டிருக்கும்போது அசுரசம்பத்துண்டாகும். ரசோகுணம் மேற்கொண்டிருக்கும்போது லோகாதிவாசனைகள் மூன்றுகளுமுண்டாகுஞ் சத்துவகுணம் மேற்கொள்ளும்போது தெய்வசம்பத்துண்டாகும். இப்படி அந்தக்கரணங்

திரிகுணாத்துமகமாகத் தோணினாலுஞ் சத்துவகுணமே இதற்குமுக்கியமான உபாதானகாரணம். ரசோகுணந் தமோகுணம் இரண்டுஞ் சகாயமானபடியினாலே ஞானிக்கித் தியானாப்பியாசத்தினாலே ரசசு, தமசு, இரண்டுகுணங்களையும். போக்கடிக்கும்போது சத்துவகுணமே அந்தக்கரணசொரூபமாக மிஞ்சும். அந்தப்படி வாசிட்டத்திற் சொல்லியிருக்கிறது. அந்தச்சத்துவமுஞ் சஞ்சலத்துக்கேதுவான ரசோகுணமில்லாததினாலே ஏகாக்கிரமாயும், பிராந்தியினாற் கற்பிக்கப்பட்ட அனாத்துமரூபமான தூலபதார்த்தாகாரத்துக்கேதுவான தமோகுணமில்லாததினாலே*சூக்ஷுமமாயும், இருப்பதினால் ஆத்தும தரிசனத்துக்கு யோக்கியமாயிருக்கும். அந்தப்படி கடவல்லியில் யேகாக்கிரமாயுஞ் சூக்ஷுமமாகியுமிருக்கிற புத்தியினாலே ஆத்துமசொரூபத்தைத் தரிசிக்கலாமென்று சொல்லியிருக்கிறது.

பெருங்காற்றாலே அலையாநின்ற தீபத்தைக்கொண்டு ரத்தினலக்ஷணப் பரிட்சை யெப்படிப்பண்ணக்கூடாதோ. பெருத்திருக்கிற கடப்பாரையைக்கொண்டு வெகுசூக்ஷுமமான பட்டுமுதலான வஸ்திரத்தை யெப்படி யிழையிடக்கூடாதோ. அப்படிப்போலச் சஞ்சலமாயுந் தூலமாயுமிருக்கிற புத்தியைக்கொண்டு அசஞ்சலராயும், அதிசூக்ஷுமராயும், இருக்கிற ஆத்துமாவைத் தரிசனம்பண்ணக்கூடாது. அப்படிப்பட்ட இந்தச்சத்துவந்தானே தியானாப்பியாசமில்லாத அக்ஞானிகளிடத்திலே தமோ ரசோகுணத்தோடே சேர்க்கப்பட்டுக்கொண்டு வெகுவித தொய்தப்பிரபஞ்சத்தைச் சிந்திக்கிறபடியினாலே சித்தமாகும். அந்தச்சித்தமானது தமோகுணம் அதிகமாகிறதினாலே அசுரசம்பத்து விருத்தியடையும். அப்போது தூலமாகுமென்று ஸ்ரீவசிட்டர் சொல்லியிருக்கிறார்.

அதெப்படியென்றால்? அனாத்துமாவாயிருக்கிற தேகாதியில் ஆத்துமபுத்தியினாலுந், தேகமாத்திரத்தில் எப்போதும் ஆஸத்தையி

---

* சூக்ஷுமமாயுங்கொண்டு-என்றும்-பாடம்.

ஞலும், புத்திரன் ஸ்திரீமுதலான சமுசாரத்திஞலும், அகங்காரத்தி ஞலுண்டாகப்பட்ட இது நமதென்கிறமமதையிஞலும், மானசதாப மாகிய ஆதியிஞலுஞ், சுரந், தலைவலி, வயிற்றுவலி, முதலானவியாதி யிஞலுஞ், சமுசாரத்திற்ருனே துக்கம் நீங்கிச் சுகமுண்டாகுமென் கிற புத்தியிஞலும், அதிற்ருனே இது தள்ளத்தக்கது இது கூட்டத் தக்கதுயென்கிற சிந்தையிஞலும், புத்திராதிகளிடத்திற் சிநேகத்தி ஞலும், பணத்தாசையிஞலும், நல்ல ஸ்திரீகள் ரத்தினங்கள் ஆபரண ங்களிஞலும், பின்னும் மேலெழுந்தவாரியாய்ப் பார்க்கும்போது ரம்மியம்போலே தோணுநின்ற சத்தாதிவிஷயத்திஞலுஞ், சித்தமா னது. தூலமாகுமென்று சொல்லியிருக்கிருர். இப்படி நாசம்பண்ண த்தக்கதுகளான வாசனை மனதுகளுடைய சொரூபம் நிரூபிக்கப் பட்டுது.

இனிவாசனுக்ஷய மனோநாசங்களைக் கிரமமாக நிரூபிக்கிருேம்.

அதில் - வாசனுக்ஷயப் பிரகாரத்தை ஸ்ரீ வசிட்டர்சொல்லி யிருக்கிருர். அதெப்படியென்ருல்? வாசனையின்சம்பந்தமே பந்தம் அதின் க்ஷயமே மோக்ஷம். ஆனதால், இராமா நீர் முந்திமானசவா சனைகளை விட்டுப்போட்டுப் பின்பு விஷயவாசனைகளைவிடும். அதின் பிறகு நிர்மலமாயிருக்கிற மைத்திரியாதி வாசனைகளை அப்பியாசி யும். அதற்குப்பிறகு அந்த மைத்திரியாதி வாசனைகளோடே விவகா ரம்பண்ணினபோதிலும் மனதில் நான் மைத்திரியாதி வாசனைகளை யுடைத்தானவனென்கிற அபிமானமன்றியிலே சகல ஆசைகளும் நீங்கினவராகிச் சின்மாத்திரவாசனையைப் பழகும். பிற்பாடு சவிகற் பமாயிருக்கிற சின்மாத்திரவாசனையையும் விட்டுப்போட்டு. ஒருவிக ற்பமுமன்றியிலே நிர்விகற்பமாயிருக்கிற சின்மாத்திரசொரூபத்திற் சமாதியையடைந்து எந்தமுயற்சியிஞலே கீழ்ச்சொன்ன மனோவி

காரத்தையெல்லாம் விட்டீரோ அந்தமுயற்சியையும் விட்டுவிடுமெ ன்று ஸ்ரீ வசிஷ்டர் சங்கிரகித்துச் சொல்லியிருக்கிறார்.

அதைத்தானே நாமிங்கே விஸ்தாரமாய்ச் சொல்லுகிறோம்.

அதேதென்றால்? சத்தாதிவிஷயங்களை இச்சிக்கிறகாலத்தி லுண்டாகிற சமஸ்காரமான வாசனையென்றும், அந்தவிஷயங்களைப் புசிக்கிறகாலத்திலுண்டாகிற சமஸ்காரம் விஷயவாசனையென்றுஞ், சொல்லப்படும் கீழ்ச்சொல்லப்பட்ட லோகவாசனை, சாஸ்திரவா சனை, தேகவாசனை, அசுரவாசனை, நாலுகளும். இந்தமானசவாசனை விஷயவாசனைகளைக்காட்டிலும் வேறன்று. அந்தநாலுவித வாசனை களையும் இங்கே இரண்டுவித வாசனைகளாகச் சொல்லியிருக்கிறது. இந்த இரண்டுவித வாசனைகளையும் முந்திவிடவேண்டும்.

சங்கை? வாசனைகளுக்கு மூர்த்திஇல்லாதபடியினாலே அது களை எப்படிவிடுகிறது. மூர்த்தி இருந்தாலன்றோ வாருகோலுனாலே கூட்டப்பட்ட தூளியோடேகூடின செத்தைகளைப்போல வாசனைக ளைவிடலாமென்று சங்கைவந்தால் அது கூடாது. ஏனென்றால்? லோ கத்திலே சுபாவமாய் வரப்பட்டபோசனக்கிரியையும், நித்திரையையும், மூர்த்தியன்றியிலேபோனாலும். போசனத்தியாகமாகிய உபவாசமும், நித்திரையின்றியாகமாகியசாகரணமும், எப்படிக்கூடுமோ. அப்படி ப்போல வாசனைகளுக்கு மூர்த்தியன்றியிலேபோனாலும் அதுகளை விடலாம். ஆனதாற் கீழ்ச்செய்யப்பட்ட சங்கைகூடாது.

சங்கை? இன்றையத்தினம் நிராகாரமாயிருந்து ராத்திரி நித்திரையன்றியிலே நாலுசாமத்திலும் பரமசிவபூசை பண்ணுவோ மென்கிற சங்கற்பம்பண்ணிக்கொண்டு அந்தப்படி சாவதானமாயிருப் பதேபோசனநித்திரைகளைத் தள்ளிவிடுவனதென்றால்? அப்படியே

இங்கு பிரணவஷ்மந்திரத்தினுல் ஏஷனை மூன்றுகளையும் விட்டுப்போட்டுப் பிரமாதமன்றியிலே சாவதானமாயிருக்கிறதை ஆர்தடிகொண்டு விலக்கினுர்களென் றுத்தரம்.

வைதீகமந்திரத்தில் அதிகாரமில்லாத பேர்களுக்குத் தங்கள் தங்கள் பாஷையினுலே ஏஷனைமூன்றுகளையும் விட்டுப்போட்டேனென்று சங்கற்பித்துக்கொண்டு சாவதானமா யிருக்கலாமே அவடத்திற் கறி பருப்பு அன்னம் படுக்கை முதலானதுகளுடைய சன்னிதித்தியாகம் இருக்கிறதேயென்முல்? இவடத்திலுஞ் சிற்குச் சந்தனம் ஸ்திரீமுதலானதின் சன்னிதித்தியாகம் வேண்டியதுதான். அவடத்திற் பசிமுதலானதை மறக்கும்படியான புராணசிரவணஞ், சிவபூசை, நிர்த்தனங், கானம், வாத்தியமுதலானதாற் சித்தத்தைச் சுவாதீனப்படுத்துக்கொள்ளலாமேயென்முல்? இவடத்திலும் மைத்திரியாதிகளிலே சித்தத்தைச் சுவாதீனப்படுத்திக்கொள்ளலாம்.

மைத்திரிகளாவதேதென்முல்? பதஞ்சலிபகவான் சூத்திரத்திற் சொல்லியிருக்கிருர். அந்த அர்த்தத்தை நாமிங்கே சொல்லுகிறேம்.

சுகிகளாயிருக்கிற பிராணிகளிடத்திலே மைத்திரியைப் பாவிக்கிறவனுக்கு ராகம் நீங்கிச் சித்தம் நிர்மலமாகும். அதெப்படியென்முல்? முன் றன்னு லநுபவிக்கப்பட்ட சுகவிசேஷத்தை அனுசரித்து அந்தச்சுகம்போலே இருக்கப்பட்ட சகலசுகமுந் தனக்குவேண்டுமென்று உண்டாகிறசித்தவிர்த்தியே ராகம். அப்படிப்பட்ட ராகமானது திஸ்டமானசிற்குச் சந்தனவனிதாதி விஷயரூபமாயும் அதிஷ்டமான புண்ணியரூபமாயுமிருக்கிற சுகத்திற்குச் சாதனமான சாமக்கிரி இல்லாததினுலே புருஷனுடைய சித்தத்தை மலினமாகப் பண்ணிவைக்கும். எப்போ அந்தப்புருஷன் சுகிப்பிராணிகளிடத்

திலே சகலமானசுகிகளும் நம்முடையவாளென்கிற மைத்திரியைப் பாவிக்கிறானே அப்போது அவாளுடையசுகந் தன்னுடையசுகம் போலே யாகிறபடியினாலே அந்தச்சுகத்தில் வரப்பட்டராகம் நிவிர்த்திக்கும். அதற்குவமையேதென்றால்? தனக்கு ராச்சியமில்லாவிட்டாலும் புத்திராதிகளுக்குக் கிடைத்திருக்கிற ராச்சியத்தைத் தனது ராச்சியமாகப் பாவிக்கிறவனுக்கு அந்தராச்சியசுகந் தனது சுகம் போலே எப்படியாகுமோ அப்படிப்போலச் சுகிகளிடத்தில் மைத்திரியைப் பார்க்கிறவனுக்கு அவாளுடையசுகம் தன்னுடையசுகம் போலேயாகிறபடியினாலே ராகம் நிவிர்த்தித்துப்போய்விடும். அப்போதுவருஷாகாலம்போய்ச் சரற்காலம்வரும்போது நதிகளுடைய சலம் நிர்மலமாவதுபோலப் புருஷனுடையசித்தம் நிர்மலமாகிவிடும்.

அப்படியே தன்னால் அநுபவிக்கப்பட்டதுக்கவிசேஷத்தை அநுசரித்து இப்படிப்பட்டதுக்கமெல்லாம் ஒருக்காலும் நமக்குவேண்டாமென்றுண்டாகிற சித்தவிர்த்தி துவேஷம். அந்தத்துவேஷந் துக்கயேதுவான சத்துருசர்ப்பசோரவியாக்கிராதிகளிருக்கச்சே நீங்கமாட்டாது. துக்கயேதுக்களான சகலசத்துருவாதிகளையுஞ்சங்கரிக்கவுஞ் சத்தியிருக்கமாட்டாது. ஆனதால் துவேஷமானது சதாபுருஷனுடைய இருதயத்தைத் தகிக்குந் தனக்கெப்படித் துக்கம்பிரதிகூலமானதால்வேண்டாமோ அப்படியே அன்னியாளெல்லோர்களுக்குந் துக்கம்வேண்டாமென்கின்ற கருணையைத் துக்கிப்பிராணிகளிடத்தில் எப்போ பாவிக்கிறானே அப்போ சத்துருவாதிகளிடத்தில் வரப்பட்ட துவேஷம் நிவிர்த்தித்துப்போய்ப் புருஷனுடைய சித்தம் நிர்மலமாய்விடும். அப்படியே ஸ்மிருதிசொல்லுகிறது. அதேதென்றால்? தன்தன் பிராணங்கள் தனக்கெப்படி இஷ்டங்களோ அப்படியே சகலசெந்துக்களும். பிராணங்களிஷ்டமானபடியினாலே

தன்னிடத்திற்போலப் பிறரிடத்திலுஞ் சாதுக்கள் தயைபண்ணுவா ளென்று ஸ்மிருதிசொல்லுகிறது.

அந்தத் தயையினுடைய பிரகாரத்தைப் பெரியவாள் சொல் லியிருக்கிறுள்.

அதெப்படியென்றுல்? இந்தப்பிரபஞ்சத்திற் சகலமானபேர் களுஞ் சுகிகளாயிருக்கட்டும். ஒருவருக்குந்துக்கம் வரவேண்டாம். எல்லாரும் புண்ணியங்களேபண்ணட்டும். ஒருவரும் பாவத்தைப்பண் ணவேண்டாமென் றிப்படிப் பெரியவாள் பிராத்திக்கிறுள். ஆனதாற் றுக்கிகளிடத்திற் கருணையைப்பாவிக்கிறவனுக்குத் துவேஷம் நீங்கிச் சித்தம் நிர்மலமாகும்.

அப்படியே புண்ணியவான்களிடத்தில் முதிதையும், பாவிக ளிடத்திலு உபேட்சையையும், பாவிக்கிறவனுக்கு விதனமன்றியிலே சித்தம்நிர்மலமாகும். அதெப்படியென்றுல்? லோகத்திலே பிராணிகள் சுபாவமாய்ப் புண்ணியபலமான சுகத்தை இச்சிக்கிறுர்கள். அதற்கு ச்சாதனமான புண்ணியத்தை யனுஷ்டிக்கிறுர்களில்லை. அப்படியே பாவமானதுக்கத்தைத் துவேஷிக்கிறுர்கள். அதற்கேதுவான பாவ த்தைத்தானேமுயற்சியோடேகூட அனுஷ்டிக்கிறுகள். அதனுற் புருஷனுக்கு மரணகாலவிதனமுண்டாகும் அந்தப்படி சுருதியிற் சொல்லியிருக்கிறது. எப்போ இந்தப்புருஷன் புண்ணியவான்களிட த்திற் சந்தோஷமாகியமுதிதையைப் பாவிக்கிறுனே அப்போ அந் தப்புண்ணியவாசனையினுலே தானும் பிரமாதமன்றியிலே புண்ணிய த்திற் பிரவருத்திப்பன். அப்படியே பாவிகளிடத்திலுபேட்சையைப் பாவிக்கிறதினுலே தானும்பாவத்தில் நின்றும் நிவிர்த்திப்பன். ஆன படியினுலே நாமேன் புண்ணியத்தைப் பண்ணுதேபோனேம்

என்பாவத்தைப் பண்ணினேமென்கிற மரணகாலத்தில் வரப்பட்ட விதனமுண்டாகமாட்டாது. அதினாற் சித்தம் நிர்மலமாகுஞ்.

சுகிகளிடத்தில் மைத்திரியைப்பாவிக்கிறவனுக்கு ராகத்தினுடைய நிவிர்த்திமாத்திரம் பிரயோசனமன்று. பின்னையோவென்றால்? பிறர்குணங்களிலே பொறுமையாகிய அசூயையுங், குணங்களிருக்கச்சே பிறருடைய தோஷத்தைத்தானே பிரகாசம்பண்ணுவதாகிய ஈரிஷைமுதலானது நிவிர்த்திக்கிறதும், பிரயோசனம். ஏனென்றால்? எப்போ மைத்திரிவசத்தினாலே பிறருடையசுகந்தன்சுகம்போலேயாகிறதோ அப்போ தன்குணத்திலே எப்படி அசூயைமுதலானதுண்டாகும் உண்டாகவேமாட்டாது. இப்படியே பின்னுஞ் சில தோஷங்களுடைய நிவிர்த்தியை நியாயமாக யுக்தியினாலே பார்த்துக்கொள்ளத்தக்கது.

துக்கிகளிடத்திற் கருணையைப்பாவிக்கிறவனுக்குச் சத்துருவாதி இமிசைக்கேதுவான துவேஷம் எப்படி நிவிர்த்திக்கிறதோ அப்படியே நம்முடையசத்துருக்கள் துக்கத்தை அநுபவிக்கிறார்கள். நாஞ்சுகத்தையே அநுபவிக்கிறோமென்கிற கெறுவமுதலானது நிவிர்த்திக்கும். நான்ஈசுரன், நான்போகி, நான் சித்தியுள்ளவன், நான் பெலவான், நான்சுகி, நான்பாக்கியமுள்ளவன், யெனக்குச்சமானமாக யாரிருக்கிறானென் றிப்படிக் கெறுவப்பிரகாரத்தைக் கீதையிற்சொல்லியிருக்கிறது. அந்தக்கெறுவமெல்லாங் கருணையினுடைய பாவனையினாலே நிவிர்த்திக்கும். இந்தப்படி சுகி, துக்கி, புண்ணியவான், பாவி, நாலுபேர்களிடத்திலும். மைத்திரி, கருணை, முதிதை, உபேட்சை, நாலுகளையும். பாவிக்கிறதினாலே ராகந், துவேஷம், புண்ணியம்பண்ணாமை, பாவம்பண்ணுவது, முதலானதுகளினால் வரப்பட்ட சித்தமலம்நீங்கிச் சித்தம் நிர்மலமாகும். ஆனதால், இந்தநாலுகளையும் பழகவேண்டும்.

சங்கை? புண்ணியவான்களிடத்தில் முதிதையைப்பாவிக்கிறவனுக்குப் புண்ணியத்திற் பிரவருத்திபலமாகச் சொல்லப்பட்டுதே. தியானம்பண்ணுகிற புருஷனுக்கு அது கூடாது. ஏனென்றால்? மலினமாயிருக்கிற சாஸ்திரவாசனையினாலே புண்ணியத்தையுட்படுத்தி முன்சொல்லப்பட் டிருக்கிறதன்றோ ஆனதால், முன்னுக்குப் பின்விரோதம்வந்துதேயென்றால்? அது தேவையில்லைத் திரும்பித் திரும்பிச் ஜன்மத்தைக்கொடுக்கிற காமியகருமம் மலினமென்று முன்னேசொன்னோம். இப்போஇங்கே தியானப்பியாசத்தினாலுண்டாகிறதாய்ச் சித்தமலத்தைப் போக்கிவைக்கிறதாய்த் திரும்பிச் ஜன்மத்தைக் கொடாததாயிருக்கிற நிஷ்காமபுண்ணியத்தை முதிதைக்கிப்பலமாகச்சொன்னோம். ஆனதால், யாதொருவிரோதமுமில்லை.

சங்கை? இந்தநியாயப்படி தியானமில்லாத பேர்கள்கூடப் புண்ணியவான்களிடத்திலே முதிதையைப்பாவித்துப் புண்ணியத்திலேயே பிரவருத்திப்பார்களேயென்றால்? பிரவருத்திக்கட்டுமே அதினால் நம்மதென்ன கெட்டுப்போகும் ஒன்றும் போகாது. எவாள் மைத்திரியாதிகளினாற் சித்தத்தை நிர்மலமாகப் பண்ணிக்கொள்ளுகிறார்களோ அவாளே தியானிகள்.

வாசிட்டத்தில் மைத்திரியாதிகளை அப்பியாசிக்கச்சொல்லிக் கோடி காண்பித்திருக்கிறது. ஆனதாற் பயமில்லாமை முதலான தெய்வசம்பத்தும், மானம், டம்பமில்லாமை முதலான ஞானசாதனமும், ஜீவன்முக்ததிடப்பிரக்ஞாதி லக்ஷணத்திற் சொன்னதருமங்களுஞ் சுபவாசனைகள். ஆனதால், மலினவாசனைகள் நீங்கவேண்டியதின்பொருட்டு அதுகளையும் அப்பியாசிக்கவேண்டும்.

சங்கை? அனந்த சுபவாசனைகளிருக்கிறதுகளே அவ்வளவு வாசனைகளையும் ஒருவனாலே அப்பியாசிக்கிறதற்குச் சத்தியிராதே.

அந்தச்சுத்தவாசனைகளினாற் போக்கத்தக்கதான சகலமலினவாசனைகளும் ஒருவனிடத்திலிராதே. ஆனபடியினாலே, யெல்லாச்சுபவாசனைகளையும் அப்பியாசித்துப் பிரயோசனமில்லையே, வைத்தியசாஸ்திரத்திற்சொன்ன சகலஔஷதங்களும் ஒருவனாற் புசிக்கிறதற்குக் கூடாதே. அப்படிப்புசித்ததினாற் போக்கத்தக்கதுகளான சகலரோகங்களும் ஒருவனிடத்திலிராதுகளேயென்றால் ? தன்னுடைய சித்தத்தை முன்னே சோதித்துக்கொண்டு அதிலெவ்வளவு மலினவாசனைக ளெப்போ அநுபவிக்கப்படுகிறதுகளோ அப்போது அவ்வளவு சுபவாசனைகளை அந்த மலினவாசனைகளுடைய நிவிர்த்தியின் பொருட்டு அப்பியாசிக்கவேண்டும். புத்திர, மித்திர, களத்திராதியினாற் பீடிக்கப்பட்டபுருஷன். அதில்நின்றும் விரக்தனாய்க்கொண்டு அந்தத் துக்க நிவிர்த்தியின்பொருட்டு எப்படிச்சந்நியாசம்பண்ணிக்கொள்ள வேண்டுமோ. அப்படியே வித்தியாமதம், தனமதம், குலமதம், ஆசாரமதம், முதலான மலினவாசனைகளினாலே பீடிக்கப்பட்டபுருஷன். அந்தத்துக்கம் நிவிர்த்திக்கிறதின்பொருட்டு அதற்கு விரோதியான விவேகத்தை அப்பியாசிக்கவேண்டும்.

அந்தவிவேகத்தைச் ஜனகமஹாராஜா காண்பித்திருக்கிறார். அதெப்படியென்றால் ? இப்போ யெவாள் மஹாஉத்தமமான லோகங்களிலேவசிக்கிறார்களோ அவாள் சிலநாளையிலே கீழேவிழுந்துவிடுவார்கள். அப்படியிருக்க ஏ மனதே இந்தராஜ்ஜியமுதலான சொற்பமகிமையி லுனக்கென்ன நம்பிக்கை. அப்படியே முன் வெகுபிரசித்தாளாய்ச் சக்கிரவர்த்திகளாயிருந்த ராஜாக்களெல்லா மெங்கே. அவாளுடைய தனமுதலானதுமெங்கே. முன் மகாகுலத்திலுண்டானவாளாயும் உத்தமாசாரசம்பன்னாளாயுமிருந்த பெரியவாளெல்லோருமெங்கே. ஒருவரையுங்காணோமே. உனக்குமாத்திரந் தன்குலமுதலானதிலென்னநம்பிக்கை. எத்தனைகோடி பிரமாக்களோ போய்

விட்டார்கள். அவாளுடைய பிரபஞ்சங்க ளெத்தனைகோடிக ளிருந்தவிடந் தெரியாமற்போய்விட்டுதுகள். நீமாத்திரமெப்படித்தீர்க்க காலஞ்ஜீவித்திருக்கப் போகிறையோ தெரியவில்லை. அதுவுமன்றியிலே இப்பொழுதுகூட யெவாள் கண்ணைத்திறந்தமாத்திரத்திற் ஜகத்துக்களுண்டாகிக் கண்ணைமூடினவுடனேநசித்துப்போகிறதுகளோ. அப்படிப்பட்ட மஹாத்மாக்களிருக்கச்சே. என்னைப்போலிருக்கப்பட்டவாளுடைய பவிஷியம் யென்னவென்று இப்படிச் ஜனகமஹாராஜா விவேகத்தைக்காண்பித்திருக்கிறுர்.

சங்கை? நித்தியாநித்தியவஸ்து விவேகாதிசாதனமன்றியிலே பிரமஞானமுண்டாகாது. ஆனபடியினாலே இந்த விவேகந் தத்துவஞானமுண்டாகிறதற்குமுன் வேண்டியதன்றே? இங்கேயோ வென்றால்? பிரமசாக்ஷாத்காரம் வந்தவனுக்குச் ஜீவன்முக்தியின் பொருட்டு வாசனக்ஷயமுதலான சாதனத்தைச் சொல்லுகிறதற்காக ஆரம்பிக்கப்பட்டதே. ஆனதால், அகாலத்திலே இதென்னகூத்துவந்ததென்றால்? இது கூத்தன்று. ஏனென்றால்? முந்திச்சாதன சம்பத்தியுள்ளவனுக்குப் பின்பு பிரமஞானமென்று எல்லாருக்கும் பிரசித்தமான சாதாரணமார்க்கம். ஜனகருக்கோவென்றால்? பூருவபுண்ணியவிசேஷ பரிபாகத்தினாலே ஆகாசபலம்போலே அகாரணத்தினாலே சித்தர்கீதையின் சிரவணமாத்திரத்தினாலேயே பிரமஞானமுண்டாயிற்று. பின்பு சித்தவிசிராந்தியின்பொருட்டு இந்தவிவேகம் பண்ணப்பட்டபடியினாலே இதுயுக்தந்தான்.

சங்கை? ஆனபோதிலும். பிரமஞானம் வந்தபிற்பாடு இந்தவிவேகம் பண்ணப்பட்டபோதிலுஞ் ஜனகருக்கு மலினவாசனை தொடாதபடியினாலே சுத்தவாசனை யப்பியாசம்வேண்டாமே. ஆனதால்,

இந்த விவேகம்வேண்டியதில்லையென்றால்? ஜனகருக்கு மலினவாசனை தொடர்ந்து வராததுகொண்டு விவேகம் வேண்டாதே போனாலும். யாக்ஞவற்கர், பகீரதன், முதலானபேர்களுக்கு மலினவாசனைதொடர்ந்துவந்திருக்கிறபடியினாலே அவர்களுக்கு விவேகம் வேண்டியதுதான். யாக்ஞவற்கருக்கும், அவருடையபிரதிவாதிகளான உஸத்தாக் கோளர் முதலானவர்களுக்கும். வெகுவித்தியாமதமுண்டென்று பிரகதாரண்ணியசுருதியை விசாரித்துப்பார்க்கும்போது நன்றாய்த் தெரியப்படுகிறது. யாக்ஞவற்கருக்குப் பிரதிவாதிகளைச் ஜெயிக்கிறதற்கேற்பட்டபடியினாலே வித்தியாமதம் யெப்படியுண்டோ. அப்படியே வெகுபிரமவித்துக்களுக்குமுன்னே நிறுத்தப்பட்டதுகளாயுஞ், சுவர்ண அலங்காரங்களோடே கூடினதுகளாயும், இருக்கிற ஆயிரம்பசுக்களைத் தான் கிரகித்துக்கொண்டு பின்பு ஜனகமஹாராஜா சபையிலிருக்கப்பட்ட பிரமவித்துக்களைப்பார்த்து நாம் பிரமநிஸ்டர்களின்பொருட்டு நமஸ்காரம்பண்ணுகிறோம். நமக்குப் பசுக்களிலேதானிச்சை யென்று பரிகாசமாய்ச் சொன்னபடியினாலே தனத்திலாசையுமுண்டு. இதுவுமன்றியிலே அந்தச்சபையிலிருந்த பிரமவித்துக்கள் இவரொருவர் நமக்குக்கிடைக்கும்படியாயிருந்தகோதானத்தை அபகரித்துக்கொண்டாரேயென்று மஹாகெறுவத்தோடே கூடினவாளாய்ப் பிரம விஷயமாக வெகு கேள்விகேட்டார்கள் அதுக்கெல்லாமுத்தரஞ்சொல்லிப்போட்டு வேதாந்தமரியாதையைத்தாண்டி அதிகசங்கை பண்ணின சாகல்லியனைக் குரோதத்தினாற் சபித்துக் கொன்றுபோட்டார். இப்படிப் பிரமகத்திபண்ணின யாக்ஞவற்கருக்கு மோக்ஷமில்லை யென்று சங்கிக்கக்கூடாது. ஏனென்றால்? பிரமஞானிக்கி மாதாவினுடைய வதத்தினாலும், பிதாவினுடையவதத்தினாலுஞ், சுவர்ணத்தை யபகரிக்கிறதினாலுங், கெற்பசிசுவதத்தினாலும், மற்ற சகல பாவ கருமத்தினாலும், ஒருபலமுமில்லையென்று கௌஷதகி உபநிடதத்திற் சொல்லியிருக்கிறபடியினாலும், அப்படியே சேஷாரியையிலே

லட்சம் அசுவமேதயாகம் பண்ணினபோதிலும், லட்சம்பிரமகத்தி பண்ணினபோதிலும், பரமார்த்தமான பிரமசொரூபத்தை அறிந்தவனுக்கு அந்தப்புண்ணியபாவ சம்பந்தங்கிடையாதென்று சொல்லியிருக்கிறபடியினாலுங், கீழ்ச்செய்த சங்கைகூடாது. நிரம்பச்சொல்லியென்ன பிரமவித்துக்களாயிருக்கிற யாக்ஞவற்காதிகளுக்கு மலினவாசனைகளுடைய தொடர்ச்சி யுண்டவேயுண்டு.

பகீரதனும் பிரமதத்துவத்தை அறிந்துராஜ்ஜியபரிபாலனம் பண்ணும்போது மலினவாஸனைகளினாற் சித்தவிசிராந்தி வாராததுகண்டு சகலத்தையும் விட்டுப்போட்டுப் பின்பு சித்தவிசிராந்தியை அடைந்தானென்று வாசிட்டகதையிற் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனதாற் பிறருடைய தோஷத்தைப்போலத் தன்னுடைய மனதிலிருக்கப்பட்ட மலினவாசனைகளை நன்றாய்ச்சோதித்துப்பார்த்து அதுகள் நிவிர்த்திக்கும்படியான உபாயத்தைச் செம்மையாயப்பியாசிக்கவேண்டும். அப்படியே ஸ்மிருதியிற் சொல்லியிருக்கிறது. அதேதென்றால்? லோகத்திலே புத்திமானாய்ச் சமர்த்தனாயிருக்கிறபுருஷன் பிறருடைய தோஷங்களை வெகுசாக்கிரதையா யெப்படியாராய்ந்து பார்க்கிறானோ அப்படிப்போலத் தன்னுடைய தோஷங்களை நன்றாயாராய்ந்துபார்க்கிற யெந்தப்புருஷன்தா னிந்தச்சமுசாரதுக்கத்தில் நின்றும் விடுபட்டு மோக்ஷசுகத்தை யடையமாட்டானென்று ஸ்மிருதியிற்சொல்லியிருக்கிறது.

முன்னம் முன்னே வித்தியாமதம் நிவிர்த்திக்கிறதற்கு உபாயமேதென்றால்? எந்தஇடத்திலாகட்டும் யாராகட்டும் நம்மையுஞ் ஜெயிக்கிறவாளிருப்பாள். அதினாலபஜெயஞ் சிலயிடங்களில் யெப்படியும் வந்துவிடுமென்கிற விவேகமே பிறரைக்குறித்துத் தன்மனதிலிருக்கப்பட்ட வித்தியாமதம்போகும்படியான உபாயம். அதற்

குதாரணமேதென்றால்? சுவேதகேதுவானவன் வித்தையினாலேமத த்தனாய்ப் பிறவாகணனென்கிற ராஜாவினுடைய சபையிலேபோய் வசிக்கும்போது அந்தராஜா பஞ்சாக்கினிவித்தையிற் பரிட்சைபண் ணினான் அப்போ அந்தவித்தை சுவேதகேதுவுக்குத் தெரியாதபடி யால் அதற்குத்திரஞ் சொல்லமாட்டாமல் ராஜாவினால் வெகுவித மாயவமானம் பண்ணப்பட்டவனாய்க்கொண்டு தன்பிதாவினுடைய சமீபத்தில்வந்து ராஜாவினுடைய சபையிற் றனக்குவந்த அவமானத் தைச்சொல்லிக்கொண்டான் பிதாவாகிய உத்தாலகர் தனக்குவித்தி யாமதமில்லாததினாலே அந்தராஜாவிடத்தில் வந்துசேர்ந்து அவனிட த்தில்நின்றுந்தானே அந்தவித்தையை யடைந்தாரென்றும், வாலாகி யென்கிறவன் வித்தையினாலே கெறுவத்தையடைந்து காசியிலே அசாதசத்துருவென்கிற ராஜாவோடே வாதம்பண்ணி அந்தராஜாவி னால் அவமானப்பட்டபிற்பாடு வித்தியாகெறுவத்தை விட்டுப்போட்டு அந்தராஜாவைத்தானே பிரமவித்தியாலாபத்தின் பொருட்டுச் சரண மாயடைந்தானென்றும், உஸத்தாக்கோளர் முதலானபேர்கள் யாக்ஞ வற்கராற் ஜெயிக்கப்பட்டாரென்றும், உபநிடதங்களிற் சொல்லியிரு க்கிறதே உதாரணம். எப்போதன்னைக்குறித்துப்பரன் வித்தியாமதத் தினால் நிந்தித்து அவமானம்பண்ணுகிறானோ அப்போ பரன் நம்மை நிந்தித்தாலும், அவமானம்பண்ணினாலும், அதினால் நமக்கென்னகெ டுதல் ஒன்றுமில்லையென்கிற விவேகத்தைப் பழகவேண்டும். அந்தப் படி பெரியவாள்சொல்லியிருக்கிறாள். அதேதென்றாற்? தியானம் பண்ணுநின்ற யாதொருபுருஷனுக்குப் பிறராற் பண்ணப்பட்ட நிந் தையும், அவமானமும், அலங்காரம்போலே தோணுகிறதே அப்ப டிப்பட்ட புருஷனுடைய சித்தத்துக்கு விட்க்ஷேபம்வரும்படியாக வா யாடிகளான வாதிகள் எப்படிப்பண்ணிவைப்பாள் மாட்டார்களெ ன்று சொல்லியிருக்கிறாள்.

நிந்தையைச் சகிக்கிறதற் குபாயமேதென்றால்? ஆராகிலும் நம்மை நிந்தித்துக்கொண்டு சந்தோஷத்தை யடைவாளேயானால் அதைக்காட்டிலும் நமக்கு வேறேயென்ன அனுக்கிரகம்வேண்டியது. ஏனென்றால்? லோகத்திலே நன்மைவேண்டுமென்று யெண்ணுகிறபுருஷாள் பருடையசந்தோஷத்தின்பொருட்டுத் தேசாந்தரங்களிலேபோய் வெகுவருத்தப்பட்டுச் சம்பாதித்த தனமுதலானதுகளைக் கொடுத்துவிடுகிறார்களே. அப்படியொன்றுமன்றியிலே நம்மை நிந்தித்தமாத்திரத்தாற் பராளுக்குச் சந்தோஷம்வருமானால் அதைவிட நமக்கென்னநன்மைவேண்டும் அதுவேநன்மையென்றும். எப்போதுஞ் சுகமன்றியிற் றுக்கத்தோடேகூடின இந்தச் ஜீவலோகத்திலே யாராகிலும் நம்மை நிந்தித்ததினாலே சுகத்தையடைவாளேயானால் அப்போநமக்குப் பிரத்தியக்ஷமாயாகட்டும் அப்பிரத்தியக்ஷமாயாகட்டுந் தங்களுக்குத்தோணினபடி வேண்டியமட்டுக்கும் நிந்திக்கட்டும். ஏனென்றால்? வெகுதுக்கத்தோடேகூடின இந்தச்ஜகத்திலே சுகங்கிடைக்கிறது துர்லபமன்றோ. ஆனதாற், பராள்நம்மை நிந்தித்துக்கொண்டு சுகத்தையடைகிறதே நமக்குநன்மையென்று இப்படிப்பட்டவிவேகத்தைப் பழகிறதே நிந்தையைச் சகிக்கிறதற்குபாயம். இதுபோலவே அவமானத்தைச் சகிக்கிறதற்குபாயத்தை யுக்தியினாலே பார்த்துக்கொள்ளவேண்டும், அந்தப்படி ஸ்மிருதியிற் சொல்லியிருக்கிறது.

அதேதென்றால்? தியானியானவன் பெரியவாளுடைய மரியாதையைமாத்திரந் தாண்டாமல் மூடாளானபேர் தன்னைக்காணும்போது அவமானம் பண்ணும்படியாயும், அவாள்தன்னோடே சேர்ந்து வம்புபண்ணித் தியானவிரோதம் பண்ணாமலிருக்கும்படியாயும், நடக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறது.

தனத்திஞசை நிவிர்த்திக்கிறதற்குபாயமேதென்ருல்? முன்னே தனத்தைசம்பாதிக்கிறதேதுக்கம். பின்பு அதைக்காப்பாத்துகிறதுந் துக்கந்தான். பிற்பாடு வியாபாரம்பண்ணியும், வட்டிக்கிக்கொடுத்தும், நிலமுதலானதைவாங்கியும், அதைவிருத்திபண்ணுகிறதுந் துக்கந்தான். சிலவுபண்ணும்போதுந் துக்கந்தான். இப்படியிருக்கச்சே அந்தத்தனஞ் சோராதியினுல் நசித்துப்போனுல் அப்போவரப்பட்ட துக்கத்துக்குக்கணக்கில்லே. ஆனதாற் தனத்தைச்சுட வேண்டும். அதினுற்றுக்கமேயொழியச் சுகம் லேசமுங் கிடையாதென்கிற விவேகமே தனத்திஞசை நிவிர்த்திக்கிறதற்குபாயம்.

பராளேக்குறித்துத் தன்மனதில் வரப்பட்டகோபம் நிவிர்த்திக்கிறதற் குபாயமேதென்ருல்? எ மனதேயுனக்கு அபகாரம்பண்ணுகிறவனிடத்திற் கோபம்வருமாஞற் கோபத்தினிடத்தி லுனக்கேன் கோபம்வரவில்லே அப்படிக்கோபம் அபகாரியோவென்ருல், அபகாரிதான். அதெப்படியென்ருல்? தருமார்த்தகாமமோக்ஷமான புருஷார்த்தம் நாலேயும். ஒருகோபந்தானே அதம்பண்ணிப்போட்டுப் புருஷனே நரகத்திற் றள்ளிவிடுகிறதன்ரே. ஆனதால், அதைப் போலே வேறேஅபகாரிகிடையாது. இந்த அர்த்தத்தை நீ நன்ருய் விசாரித்துப்பார்த்துக் கோபத்தினிடத்திற் கோபத்தைப்பண்ணு அதினுற்சாந்திவந்துனக்குப் பரமபுருஷார்த்தங் கிடைக்குமென்றுங், கோபமானது வசவடிமுதலான தன்னுடைய பலபரியந்தம் வளர்ந்தேயாஞல் அப்போ தருமார்த்தங்கீர்த்திமுதலானதை நாசம்பண்ணிப்போடுந் தனக்குச் சத்தியில்லாததினுலே பலபரியந்தம் வளராமல் மனதிற்ருனே யுண்டாயிருக்குமேயாஞல் அப்போ தன்மனதைத்தானே நன்ருய்த்தகிக்கும். ஆனதால், யாதொருகோப மிந்த லோகத்திலும், பரலோகத்திலும், உபகாரத்தின்பொருட்டாகாமல் அனர்த்தத்தின் பொருட்டாகிறதோ அப்படிப்பட்டகோபஞ் சாதுக்

களுடையமனதில் யெப்படியுண்டாகும் உண்டாகவேமாட்டாதென்றும், இப்படிப்பட்டவிவேகத்தைப் பழகுவ்தே பாரானைக்குறித்து வரப்பட்ட கோபம் போகிறதற்குபாயம்.

தன்னைக்குறித்துப்பாராள் எப்போ கோபித்துக்கொள்ளுகிறார்களோ அப்போ இந்தச்ஜனங்கள் நாமொரு அபராதமும்பண்ணாமலிருக்கச்சேகூட அகாரணத்திலே வீணாய் நம்மைக்குறித்து யேன் கோபம் பண்ணுகிறார்களென்று நினைக்கக்கூடாது. ஏனென்றால்? யாதொருகாரணத்தினாலே பாராள்கோபம் பண்ணுகிறதற்குமுன்னமே நாமிந்தச்சமுசாரத்தில்நின்றும்விடுபட்டு அசரீரனாய்ச் சரீரத்திரயமன்றியிலே சச்சிதானந்த பிரமசொரூபமாத்திரமாக மிஞ்சுவதாகிய மோக்ஷத்தையடையவில்லையோ. அதுவே நம்மிடத்தில் வெகுபெரிதான அபராதமன்றோ. ஆனதால், நம்மிடத்திலொரு அபராதமுமில்லையென்று நாமெப்படிநினைக்கலாம் நினைக்கக்கூடாது. இப்படி இந்தவிவேகம் பாராள் கோபித்துக்கொண்டபோதிலும் அதினாற்றன்னுடையமனதில் விக்ஷேபம்வாராமலிருக்கிறதற்கெப்படி உபாயமோ அப்படிப் பின்னும் ஒருபாயமுண்டு. அதேதென்றால்? ஏ கோபித்துக்கொள்ளுகிற ஜனங்களே உங்களுடைய கோபத்தின்பொருட்டு நான் நமஸ்காரம் பண்ணுகிறேன் ஏனென்றால்? உங்களுடையகோபமானது யென்னிடத்திலிருக்கப்பட்ட சகலதோஷங்களையும் நன்றாய்த் தெரியப்படுத்தி அதின்வழியாக யெனக்கு நல்லவைராக்கியத்தையுண்டுபண்ணுகிறதுமல்லாமல் உங்களுடையமனதையும் பொசுக்கிறதன்றோ இதைவிட யெனக்கு வேறேயென்ன உபகாரம்வேண்டும் ஆனதாலுங்களுடைய கோபத்தின்பொருட்டு நான் அனந்தநமஸ்காரம்பண்ணுகிறேனென்றிப்படிச் செய்கிறவிவேகமும் ஒருபாயம்.

ஸ்திரியினிடத்தில் வரப்பட்ட ஆசைநீங்கும்படியான விவேகம் வாசிட்டத்திற்சொல்லப்பட்டிருக்கிறது. அதெப்படியென்றால்?

எலும்பு, நரம்பு, மாமிசங்களினுற் கட்டப்பட்டுத் தோலினல் மூடப் பட்டிருக்கிற பொம்மைரூபமான ஸ்திரீயினுடைய அவயவங்களுக் குள்ளே யெந்த அவயவந்தான் சுந்தரமாயிருக்கப்பட்டது யெல்லாம் அத்தியந்தம் அமங்களந்தான். அதெப்படி யென்றுல்? ஏ மனதே யெந்தஸ்திரீயினுடைய நேத்திரத்தைக்கண்டு மயங்கிக் கருநெய்தற் புஷ்பம்போலவுந், தாமரை மடல்போலவும், வெகுசுந்தரமாயும், மச் சம்போலக் காதுபரியந்தம் நீண்டதாயுமிருக்கிற நேத்திரத்தினுலே இந்தநாயகியானவள் நம்மிடத்தில் ஒருதரங் கடாக்ஷம் பண்ணி நம் மைத் தன்னியனுகப் பண்ணுவாளாவென்று யெண்ணியெண்ணி மய ங்கிச் சாகிறயோ அந்தநேத்திரத்திலிருக்கப்பட்ட மாமிசம், ரத்தங், கண்ணீர், பூளை, நாத்தமுதலானதை. விவேகத்தினுலே வெவ்வே ருய்ப்பிரித்து நீ நன்ருய் விசாரித்துப்பாரு அப்படி விசாரிக்கும்போது அந்த நேத்திரம் உனக்கேற்க ரம்மியமாயிருந்தால் நீ மயங்குகிறது யுக்தந்தான் அப்படியில்லாமலிருக்கச்சே யேன்வீணுய் மயங்கிமயங் கிச்சாகிருய் அப்படியே ஸ்திரீயினுடைய யெந்த ஸ்தனங்களைக்கண்டு மயங்கிச் சுவர்ணகும்பங்கள் போலவுஞ், செவ்விளநீர்கள் போலவும், உருண்டு திரண்டு வெகுஉன்னதங்களாயும், இன்னம் ஒருதரம் பாரோ மோவென்று வெகுவாய்த் திருஷ்டிக்கிப்பிரியங்களாயு மிருக்கிற ஸ்தனங்களோடேகூடின இந்தநாயகியானவள். ஒருதரமாகிலும் நம் மைத்திடமா யாலிங்கனம் பண்ணிக்கொள்ளுவாளா நாமுமிந்த நாய கியை ஒருதரமாகிலு மாலிங்கனம் பண்ணிக்கொண் டிவளுடைய சம் போக சாம்பிராஜ்ஜியசுகத்தை யடையும்படியான சுகிர்தம்பண்ணி இருப்போமோவென்று இப்படி வெகுவிதமாகமயங்கிறயோ அந்தஸ் தனங்க ளிலிருக்கப்பட்ட மாமிசமுதலானதைமுன்போல விவேகத் தினுலே பிரித்துப்பார்த்து ரம்மியமாயிருந்தால் அப்போ அந்தவிஷ யத்தில் நீ பிரவருத்திக்கிறது யுக்தந்தான் அப்படி ரம்மியமன்றியிரு க்க என் விருதாவாய்க் கெட்டுப்போகிருய் எந்தஸ்தனங்களிலே மேரு

பருவதசிருங்கத்தில் விளங்காநின்ற கெங்காப்பிரவாகம்போலிருக்கப்பட்ட முத்தாரங்கள் காணப்பட்டுதுகளோ அந்தஸ்தனங்கள்தானே சிலநாளையிலே மயானத்திலேயுந், திக்குவிதிக்கிலேயும், நாய்களினுலே சோற்றுப்பிண்டம்போலே பட்சிக்கப்பட்டதுகளாகக் காணப்படுதுகளோ அப்படிப்பட்ட ஸ்தனங்கள்முதலான ஸ்திரீயினுடைய அவயவங்களிலே ஆசைவைக்கிறது நரகத்துக்கேதுவன்றியில் வேறேயில்லை. பின்னும் யாதொருத்தனுக்கு ஸ்திரீ இருக்கிறுளோ அவனுக்குப் போகேச்சையுண்டு அவளில்லாவிட்டால் அந்த இச்சைக்கேது கிடையாது. ஆனதால், ஸ்திரீயொருத்தியைவிட்டால் வெகு வாகுவாய்ச் ஜகத்திலிருக்கிற விஷயங்களெல்லாம் விடப்பட்டதுகளாகும். அவ்விடுதியினுற் சுகங்கிடைக்குமென்று இது முதலின்னம் வெகுவிதமாய் வாசிட்டத்திற் சொல்லப்பட்டவிவேகமே ஸ்திரீயினுசைபோகிறதற்குபாயம்.

புத்திரனிடத்தில் வரப்பட்ட ஆசைபோகும்படியான உபாயம் பிரமானந்தப் பிரகரணத்திற் காண்பிக்கப்பட்டிருக்கிறது. அதேதென்றுல்? முன்னே புத்திரனுண்டாகாமலிருக்கச்சே புத்திரனில்லையென்றும், யெவ்விதமாகிலும் புத்திரனை உண்டுபண்ணிக்கொள்ளவேண்டுமென்றும், மாதாபிதாக்களுக்குத் துக்கம். பின்பு கெற்பமானபோதிலும் பாதியிலே பிண்டம் யெங்கே கரைந்துபோய்விடுமோவென்று துக்கம். பிறகு சுகப்பிரசவமாக வேண்டுமேயென்று துக்கம். பிரசவகாலத்தில் வரப்பட்ட துக்கத்துக்கோ கணக்கில்லை. பிறந்தபின்பு வாலக்கிரகம்பிடித்தாலும், ரோகம்வந்தாலுந், துக்கந்தான். குமாரனுயிருக்கச்சே அசல்வீட்டுப்பிள்ளைகளோடே சண்டைப்பட்டு விஷமம்பண்ணும்போதுந் துக்கமே. உபநயனம்பண்ணினபிற்பாடு வித்தைவாராமலிருந்தாலதுவுந்துக்கமே. வித்தைவந்தபோதிலுந் தரித்திரத்திற்குற் கலியாணம்பண்ணச் சத்தியில்லா

விட்டால் அதொருதுக்கம். யெவ்வனம்வந்தவுடனே பரஸ்திரீக ளைப் பிடிக்கிறதினால் மஹாதுக்கம். வீட்டிலே நாலுகுட்டிகள்பிற ந்து வெகுகுடும்பியாயிருக்கச்சே அன்னவஸ்திரங்களுக்குக் கிடை யாமலிருந்து கஷ்டப்படுவதொருதுக்கம். பணங் காசு வித்தை குடும்ப மெல்லாமொத்திருக்கச்சே அந்தப்பிள்ளை செத்துப்போனால் அப்போ மாதாபிதாக்களுக்குவரப்பட்ட துக்கத்துக்கு முடிவில்லை. இப்படிப் புத்திரனாலே உற்பத்தியாகிறதற்குமுன்னேதொட்டு மரணபரியந்தந் துக்கம் அநுபவிக்கத்தக்கதாகயிருக்கச்சே அந்தப்புத்திரனைப் புத்தி மானாயிருக்கிறவனொருதா னிச்சிப்பனென்கிற விவேகம் புத்திரனிடத்தி லாசைவாராமலிருக்கிறதற் குபாயம்.

எப்படி வித்தியாமதந், தனம், ஆசை, கோபம், ஸ்திரீ, புத்திரா னிடத்தில். ஆசைகளாகிய மலினவாசனைகள் நீங்கும்படியான உபா யங்காண்பிக்கப்பட்டதோ. அப்படிப்போல மற்ற மலினவாசனைக ளும் நீங்கும்படியான உபாயத்தைச் சாத்திரத்தினாலும், யுக்தியினாலும், பார்த்துப் பழகவேண்டு. அப்படிச் செய்யப்பட்ட விவேகாப்பி யாசமாகிய சுத்தவாசனையின் பழக்கத்தினாலே மலினவாசனைகளெல் லாம் நீங்கும். அப்போது ஜீவன்முக்திரூபமான பரமபதங்கிடைக் கும். அந்தப்படி வாசிட்டத்திற் சொல்லியிருக்கிறது.

அதேதென்றால்? வாருமிராமா நீர் சகலமலினவாசனைகளும் போகும்படியான முயற்சியைப் பண்ணினீரேயானால் அப்போ உமக் குச் சகல ஆதிகளும் வியாதிகளும் அந்தக்ஷணமே நீங்கிப்போய் விடும். ஆனதாற் புருஷமுயற்சியினால் நடுவிலே யெப்படிப்பட்ட விக்கினம் வந்தாலும் பின்வாங்காமல் வெகுதைரியத்தோடே கூடச் சகலவாசனைகளையும் விட்டுப்போட்டு நிர்விகற்ப சமாதிநிஷ்டையை யடையும். அதினாலுமக்குச் ஜீவன்முக்திப் பதங்கிடைக்குமென்றிரா மனைப்பார்த்து ஸ்ரீ வசிட்டராற் சொல்லப்பட்டிருக்கிறது.

சங்கை? இவடத்திற் புருஷமுயற்சியென்பது கீழ்சொல்லப்பட்ட விஷயதோஷங்களுடைய விவேகமன்றோ? அந்தவிவேகம் அடிக்கடிபண்ணப்பட்டபோதிலும். பிரபலமாயிருக்கிற இந்திரிய வியாபாரத்தினலே கெடுக்கப்பட்டுபோகுமே. அப்படியே பகவானுங் கீதையிற்சொல்லியிருக்கிருரே. ஆனதால் விவேகாப்பியாசம் பண்ணியும் வியர்த்தந்தானேயென்றால்? அது சரிதான். ஆனல், அப்பியாசத்தினற் சம்பாதிக்கப்பட்ட விவேகத்தை ரக்ஷிக்கிறதின்பொருட்டு இந்திரியங்களை நிரோதம்பண்ணவேண்டும். அதுவுங்கீதையிற் சொல்லப்பட்டிருக்கிறதன்றோ? இந்த அர்த்தம் வேறே ஸ்மிருதியிலுஞ் சொல்லப்பட்டிருக்கிறது.

(1) அதெப்படியென்றால்? யாதொரு சந்நியாசியானவன் பிக்ஷையெடுத்துப் போஜனம் பண்ணும்போது இந்த அன்னமுதலானது சட்ரசபேதமாய் நாக்குக்கு நல்லருசியாயிருக்கிறதென்றும், இது அப்படியில்லையென்று மெண்ணுமற் பராளுக்கு யிதமாயுஞ், சத்தியமாயுஞ், சொற்பமாயுமிருக்கிற வசனத்தைச் சொல்லுகிருனே அவன் சிங்குவை இந்திரியமிருந்தாலும் அதில்லாதவன்றான்.

(2) யாதொருசந்நியாசி இப்போபிறந்தபெண்ணையும், பதினறுவயதுள்ள யெவ்வனஸ்திரீயையும் நூறுவயதான கிளவியையும், பார்த்து அவாள் மூன்றுபேர்களையுங்குறித்துத் தன்மனதிலொருவிகாரமுமன்றியிருக்கிருனே அவனுபஸ்த இந்திரியமிருந்தாலும் அந்த இந்திரியமில்லாதவன்றான்.

(3) யாதொருசந்நியாசி பிக்ஷையெடுக்கிறதற்காகவுஞ், சலமலம் விசற்சனம் பண்ணுகிறதற்காகவுஞ், சொற்பமாய்ச் சஞ்சாரம் பண்ணுகிருனே யெப்போவாகிலும் யாத்திரைமுதலானது பண்ணவேண்டுமென்று தோணின லொருயோசனை தூரத்திக்குமேற்

சஞ்சாரம் பண்ணவில்லையோ அவன் பாதஇந்திரியமிருந்தாலும் அதில்லாதவன்ருன்.

(4) யாதொருசந்நியாசியினுடைய நேத்திர இந்திரியமானதொருவிடத்திலிருக்கும்போதுஞ், சஞ்சரிக்கும்போதும், நாலுநுகத்தடிபரியந்தமான பூமியைவிட்டுப்போட்டதிகப்பிரதேசத்திற் சஞ்சரித்து ரூபத்தைக்கிரகியாமலிருக்கிறதோ அவனுக்கந்த இந்திரியமிருந்தாலும் அதனுடைய வியாபாரம் அதிகமாக இல்லாததினுலே அந்தச் சந்நியாசி நேத்திர இந்திரியமில்லாதவனென்று சொல்லப்படுவன்.

(5) யாதொருசந்நியாசி தனக்கிதமாயுஞ், சொற்பமாயும், மனதுக்குஞ், சுரோத்திரத்துக்கும், ரம்மியமாயுந், துக்கத்தைப்போக்கிவைக்கிறதாயு மிருக்கிற ஜனங்களுடைய வசனத்தைக் கேட்டுங் கேட்கவில்லைப்போல இருக்கிருனே அவன் சுரோத்திர இந்திரியமிருந்தாலும் அதில்லாதவனே.

நிரம்பச்சொல்லுவானேன் சகலவிஷயங்களும் யெதிரேயிருந்தபோதிலும் அதுகளையநுபவிக்கிறதற்கு யோக்கியங்களான சகல இந்திரியங்களோடேகூடியிருந்தபோதிலுந் தூங்குகிறவன்போலொரு இந்திரியவியாபாரமுமன்றியிலே இருக்கவேண்டும். பின்னுமொரு ஸ்திரீயோடேயும் வார்த்தை சொல்லக்கூடாது. முன்றன்னுலே காணப்பட்டஸ்திரீயை நினைக்கவுங்கூடாது. ஸ்திரீகளுடைய கதையையுஞ்சொல்லக்கூடாது. சித்திரத்திலெழுதப்பட்ட ஸ்திரீயைக் கூடக் கண்ணுற்பார்க்கக்கூடாதென்று ஸ்மிருதியிற் சொல்லியிருக்கிறது.

ஆனபடியினுலே லோகத்திலே யேகவாரபோசனம், ராத்திரிபோசனமுபவாசம், மௌனமுதலான விரத்தைக் கருமியாயிருக்

கிறவன் சங்கற்பித்துக்கொண்டு அந்தப்படியந்த விரதத்தைச் சாவதானமாய் நடுவிலே விட்டுவிடாமல் ரட்சிக்கிறானே அப்படிப்போல இந்திரிய வியாபாரத்தினுடைய நிரோதமாகிய விரதத்தை ஞானியாயிருக்கிற சந்நியாசியானவன் சங்கற்பித்துக்கொண்டு அதைச்சாவதானமா யிரட்சித்தால் அதினால்விவேகம் ரட்சிக்கப்படும். இப்படி வெகுகாலபரியந்தஞ் சிரத்தையோடேகூட நிரந்தரம் அனுஷ்டிக்கப்பட்ட விஷயதோஷ விவேகம், இந்திரியநிரோதம், ஆகிய இவைகளினாலே மைத்திரியாதிபாவனைகள் திடப்படும். அதினால் மலின வாசனைகள் நசிக்கும். அதற்குப்பிறகு மூச்சுக்காற்றைவிட்டுக் கிரகிப்பதுபோலவும், கண்ணைக்கொட்டித் திறப்பதுபோலவும், புருஷமுயற்சியன்றியிலேதானே யுண்டாகாநின்ற மைத்திரியாதி வாசனைகளோடே லோகத்தில் விவகாரம்பண்ணினபோதிலும் அந்தலோகத்தினுடைய அதிகங்குறைச்சலொன்றையும் மனதில் நினையாதபடிக்கி நித்திரை, மயக்கம், மனோராச்சியரூபமான சகலசித்த விவகாரத்தையும். முயற்சியினாலேலயப்பண்ணிக்கொண்டு சின்மாத்திவாசனையைப் பழகவேண்டும்.

சின்மாத்திரவாசனையாவதேதென்றால் ? சர்வாதிஷ்டான சின்மாத்திரரூபமானபிரத்தியகபின்ன பரப்பிரமத்தினிடத்திற் கற்பிக்கப்பட்ட பாகியாந்தரமான சகலஜகத்தும் அன்னியோன்னிய அத்தியாசத்தினாலே அவிசாரதிசையிற் சித்ரூபமாயுஞ், சடரூபமாயுந், தோணும். கடந்தோணுகிறது, படந்தோணுகிறது, குட்டியந்தோணுகிறது, குசூலந்தோணுகிறதென்கிறதே இதற்கனுபவம். இப்படி அவிசாரதிசையிற் சகலஜகத்துஞ் சிற்சட உபயரூபமாய்த் தோணினாலும் விசாரித்துப்பார்க்கும்போதுகற்பிதஜகத்து அதிட்டானசித்தினாலே தோற்றப்படுகிறபடியால் அந்தச்ஜகத்துச் சடந்தான். இப்படியாயுள்ளளவில் மூர்த்தி அதிஷ்டானமாகச் சித்தித்திருக்கிற பிரமசித்தே

பின்பு ஆரோபிதமாய்த் தோணுநின்ற சடஜகத்துக்கு நிசமாயிருக்கப்பட்ட சொரூபமென்று இப்படிச் சுருதியுக்திகளினால் நன்றாய் விசாரித்தறிந்துகொண்டு பின்பு கற்பிதமான சகல சடஜகத்தையுஞ் சர்வாதிஷ்டான பிரத்தியகபின்ன பிரமசித்ரூபமாக நினைத்துப் பின்பு அகண்டேகரசமான பிரமமேநாம் நாமேபிரமமென்று பாவனைபண்ணுவதே சின்மாத்திரவாசனை.

இந்த அர்த்தம் மாபலிசுக்கிரசம்வாதத்தால் நன்றாய்த்தெரியப்படுகிறது. அதெப்படியென்றால்? ஏ சுக்கிரபகவானே இங்கே காலத்திரயத்திலு மிருக்கப்பட்ட வஸ்துவென்ன அதற்குப் பரிமாணமெவ்வளவு இந்தச் ஜகத்திற்கு நிசமானரூப மென்ன நீரார் நானார் இந்தச்ஜனங்களெல்லா மார் இதை யெனக்குச் சங்கிரகித்துத் தெரியும்படியாகச் சொல்லுமென்று கேட்ட மாபலிச்சக்கிரவர்த்தியைப் பார்த்துச் சுக்கிரபகவான் பதிலுத்தாஞ்சொன்னதென்னவென்றால்? இங்கே யெப்போதுமிருக்கப்பட்டது சித்துத்தான். அந்தச் சித்து யேகரசமானதா லதற்களவுகிடையாது. அதுவேயெங்கும் பரிபூரணமாயிருக்கப்பட்டது. சடமாய்த்தோணுநின்ற இந்தச்ஜகத்துக்குச் சித்தே நிசமான ரூபம். நீயுஞ்சித்து. நானுஞ்சித்து. இந்தச் ஜனங்களுஞ் சித்துத்தான். இதுவே சகலவேதாந்தசாரமான சங்கிரக அர்த்தமென்று சுக்கிரபகவானாலே வாசிட்டத்திற் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியே ஆரோபிதமான சகலஜகத்தும். அதிஷ்டானப் பிரமசொரூபமேயொழிய வேறில்லையென்று சுருதிகளினாலும், ஸ்மிருதிகளினாலுஞ், சூதசங்கிதைமுதலான புராணங்களினாலும், வெகுவாய்க் கோஷிக்கப்பட்டிருக்கிறது.

ஆனதாற் சொற்பனத்திற்காணப்பட்ட சராசரமான் சகலஜகத்தும். அதைக்காணுநின்ற சித்ரூபமான நம்மைக்காட்டிலும்

எப்படி வேறன்றோ ; அப்படியே ஜாக்கிரத்திற் காணப்பட்ட சராசரமான சகலஜகத்தும் அதைக்காணுகிற சித்துருபமான நம்மைக்காட்டிலும் வேறன்றென்கிற அநுபவயுக்தியாற் பார்த்துச் சர்வாத்மகமாய்ச் சர்வபரிபூரணமாயிருக்கிற சின்மாத்திர பிரத்தியகபின்ன பிரமசொருபத்தை யெப்போதுந் தியானிக்கவேண்டும்.

எவ்வளவுகாலந் தியானம்பண்ணினதினுற் சடஜகத்து அணுமாத்திரங்கூடத் தோணுமற் சர்வஞ்சின்மாத்திரம் நாமுஞ்சின்மாத்திரமென்கிற விர்த்தி தயிலதாரைபோலத் தொடர்ந்துவருமோ அவ்வளவுகாலமட்டுக்கும் இந்தச்சின்மாத்திரவாசனையில் முயற்சிபண்ணவேண்டும்.

சங்கை ? முன்னேதானே சின்மாத்திர வாசனுப்பியாசம் பண்ணினதினுலே மலினவாசனைகள் நிவிர்த்தித்துப் போகலாமே அப்படியிருக்க மைத்திரியாதிகளை அப்பியாசிக்கத் தேவையில்லையே என்றுல்? அதுகூடாது. ஏனென்றுல்? சுவர்திடமாயிருக்காமற் போனுல் வீடு யெப்படித் திடமாயிராதோ ; பேதிக்கிச்சாப்பிட்டுப் பிரபலமலமுதலானதை நீக்கிக்கொள்ளாமற் புசிக்கப்பட்ட ஔஷதம் யெப்படிரோகத்தை நிவிர்த்திபண்ணமாட்டாதோ ; அப்படிப் போல மைத்திரியாதிபாவனை திடப்படாவிட்டாற் சின்மாத்திரவாசனை திடப்படமாட்டாது. அந்தச்சின்மாத்திரவாசனை திடப்படாததினுல் மலினவாசனைகளும் நிவிர்த்திக்கமாட்டாதுகள். ஆனதால், மைத்திரியாதிகளும் வேண்டியதுதான். இப்படியா யுள்ளளவில் நான் பிரமாதமன்றியிலே யேகாக்கிரமாயிருக்கிற மனதினுலே சின்மாத்திரத்தைப் பாவிக்கப்போறேனென்கிற கர்த்துருகாணுனுசந்தானத்தோடேகூடினதாயுந் தியானமென்று சொல்லப்பட்டதாயுமிருக்கிற சின்மாத்திரவாசனை மூச்சுக்காற்று விடுகிறதுபோல யெப்போ சுபாவமாய்ச் சித்திக்குமோ அதுவரைக்கும் அந்தவாசனையை

ப்பழகிப் பின்பு சவிகற்பமான அந்தச்சின்மாத்திர வாசனையையும் விட்டுப்போட்டுக் கீழ்ப்பண்ணப்பட்ட தியானப்பியாச பரிபாகத்தினாலே கர்த்துருகாரணானுசந்தான மொன்றுமன்றியிலே சமாதியென்று சொல்லப்பட்ட நிர்விகற்பசின்மாத்திரவாசனையைப் பழகவேண்டும்.

தியான சமாதிகளுக்கு லக்ஷணத்தைப் பதஞ்சலிபகவான் சூத்திரத்திற் சொல்லியிருக்கிறார். அதைமேலே விஸ்தாரமாய்ச் சொல்லுகிறோம்.

வெகுகாலபரியந்தம் நிரந்தரமாய்ச் சிரத்தையோடேகூடி யனுஷ்டிக்கப்பட்ட அந்தநிர்விகற்ப சின்மாத்திரசொரூப நிஷ்டையாகிய சமாதி திடப்பட்டபிற்பாடு கர்த்துருகாரணானுசந்தானமாகிய விகற்பத்தை விடுகிறதற்காக யாதொருமுயற்சியுண்டோ அந்தமுயற்சியையும் விடவேண்டும்.

சங்கை? இப்படியாயுள்ளளவில் அந்த முயற்சியைவிடப் பின்னொருமுயற்சி அதைவிடுகிறதற்குப் பின்னொருமுயற்சியென்றிப்படி அனவஸ்தைவருமேயென்றால்? அப்படி வரவேண்டியதில்லை. ஏனென்றால்? லோகத்திலே கலங்கியிருக்கிற ஜலத்தினுடைய கலக்கந் தெளிகிறதற்காக அந்தஜலத்திற் போடப்பட்ட தேத்தாங்கொட்டையினுடைய தூளியானது ஜலத்திலிருக்கப்பட்ட கல்மஷத்தோடேகூடத் தானு மெப்படி நிவர்த்தித்துப்போகிறதோ; அப்படிப்போல கர்த்துருகாரணானுசந்தானத்தை விடுகிறதற்கேதுவான முயற்சியும் அந்த அனுசந்தானத்தைநீக்கிப்போட்டுத் தானும் நீங்கிப்போகும். அதுவும் நீங்கிப்போனபிற்பாடு மலினவாசனைகள்போலச் சுத்தவாசனைகளும் நசித்துப்போனபடியினாலே மனதொரு வாசனையுமன்றியிலே நிர்வாசனையாய்ச் சாந்தமாகிவிடும். அந்தப்படி வாசிட்டத்தில் வெகுவாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது.

அதேதென்றால்? ஏ இராமா வாசனைகளினாலே மனதிற்குப் பந்தமானதால் அதுகள் நீங்கினால் முக்திதான். நீரும் விவேகத்தினாலே வாசனாக்ஷயத்தைச் சம்பாதியும். சமுசயவிபரீதமன்றியிற்றிடமாயிருக்கப்பட்ட தத்துவஞானத்தினாலே வாசனாக்ஷயம் வரும்போது சித்தமானது யெண்ணெஇல்லாத தீபம்போலச் சாந்தியையடையும். அதினாற் ஜீவன்முக்திப்பதங்கிடைக்கும். வெகுசாத்திரத்தை விசாரித்துப் பார்த்தபோதிலும், வெகுசாதுக்களோடே சகவாசம்பண்ணி அவாளோடே வெகுகாலபரியந்தம் விசாரம்பண்ணியறியவேண்டியதை யறிந்தபோதிலும், ஒருவாசனையுமன்றியில் நிர்வாசனையாயிருக்கிற மனதினுடைய சாந்தியைத்தவிர வேறேஉத்தமகதி கிடையாதென்றிப்படி வெகுவாய் வாசிட்டத்திற் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனதால் வாசனாக்ஷயத்தினாற் ஜீவன்முக்திகிடைக்குமென்று சித்தமாச்சுது. இப்படி வாசனாக்ஷயப் பிரகாரத்தைச் சொன்னோம்.

இனிச்ஜீவன்முக்திக்கிச் சாதனமான மனோநாசத்தை நிரூபிக்கிறோம்.

சங்கை? வாசனாக்ஷயஞ் சித்தித்துதேயானால் அதினாலே தானே மனது தனக்குத்தானே நசித்துப்போமேயென்றால்? அது சரிதான். ஆனாலும் மனோநாசத்தையுஞ் சுதந்தரமாக நன்றாயப்பியாசிக்கவேண்டும். அப்படி யப்பியாசிக்கப்பட்ட மனோநாசத்தினாலே வாசனாக்ஷயமானதுரக்ஷிக்கப்படும். இந்திரிய நிரோதாப்பியாசத்தினாலேதானே வாசனாக்ஷயம் ரக்ஷிக்கப்பட்டுப் போகிறபடியினாலே மனோநாசாப்பியாசந் தேவையில்லையென்று சொல்லக்கூடாது. ஏனென்றால்? மனோநாசஞ் சித்தித்துதேயானால் அப்போ இந்திரியநிரோதந் தனக்குத்தானே சித்திக்கும். அதற்காக வேறே அப்பியாசப்பிரயாசந் தேவையில்லை. ஆனபடியினாலே மனோநாசாப்பியாசம் வேண்டும். எனக்கு இந்திரிய நிரோதாப்பியாசப் பிரயாசம்போல உம

க்கு மனோநாசாப்பியாசப்பிரயாசம் இருக்கிறதேயென்றால்? அந்த மனோநாசாப்பியாசம் அவசியம் வேண்டியிருப்பதினாலே அந்தப்பிர யாசம் நமக்குச்சுகமாயிருக்கட்டும். மனோநாசமன்றியிலே இந்திரிய நிரோதம்யெவ்வளவு அப்பியாசிக்கப்பட்டாலுந் திடமாகமாட்டாது. ஆனதால், மனோநாசாப்பியாசஞ் சுதந்தரமாக வேண்டியதுதான். இந்திரிய நிரோதாப்பியாசம் இதுபோலே அவசியமன்று; அப்படியே வாசிட்டத்திற் ஜனகமஹாராஜா மனோநாசத்தைச் சொல்லியிருக்கி றார். அதெப்படி யென்றால்? இந்தப்பெரிதான சமுசாரமாகியவிரு க்ஷத்துக்கு மனதொன்றே வேர் அந்தமனது சங்கற்பரூபமானதாற் சங்கற்பநாசத்தினாலே அதை நாசம் பண்ணுகிறேன் அதினாலே அந்த விருக்ஷம் இருந்தவிடந்தெரியாமற் போயேபோய்விடும். அகோ! ஆச்சரியம்!! ஆச்சரியம்!!! நானிப்போதான் விழித்துக்கொண் டேன். இப்போதான் விழித்துக்கொண்டேன். எனென்றால்? ஆத்ம அபகாரியாயிருக்கிற சோரனை இப்போவன்றோ கண்டேன். இந்தச்சோரனுக்கு மனதென்றுபெயர். இந்தச்சோரனை இந்தக்ஷ ணம் நாசம்பண்ணுகிறேன். இவனாலேயன்றோ நானிவ்வளவுநாட்ப ரியந்தம் அதம்பண்ணப்பட்டேன். ஆனபடியினாலே இப்போநானிவ னையதம்பண்ணிப்போடுகிறேனென்று ஜனகமஹாராஜா சொல்லி யிருக்கிறார்.

வாசிட்டத்திற்றானே சகலதுக்கத்தையுங்கொடா நின்ற இந்த ச்சமுசாரவிருக்ஷம் நாசத்தையடைகிறதற்குத் தன்னுடைய மனோ நாசமொன்றுமாத்திர முபாயமேயொழிய வேறே உபாயங் கிடை யாது. ஆனபடியினாலே, கையோடேகையைப் பிசைந்துகொண்டு பல்லுக்களோடே பல்லுக்களைக்கிட்டிக்கொண்டு யெவ்வருத்தப்பட் டாகிலும் முன்னே தன்னுடைய மனதைச் ஜெயிக்கவேண்டும். யா தொருஜனங்களுடைய மனதினாற்றாங்கள் ஜெயிக்கப்படவில்லையோ அவாள்தான். இந்தப்பூமண்டலத்தில் நல்ல ஞானமுள்ள புருஷாள்

அவாளைத்தான். புருஷகதையி லெடுத்துச்சொல்லலாம். மற்றசஜன ங்கள் புருஷாளன்று. திரியக்குச்சாதிபோலவேயென்று இதுமுதல் வெகுபிரகாரமாக ஸ்ரீவசிட்டருஞ்சொல்லியிருக்கிறார்.

கௌடபாதாசாரியாளும் மனோநிக்கிரகத்தினாலேயே சகல தியானிகளுக்கும் ஞானம், துக்கநாசம், பயமில்லாமை, நித்தியமா யிருக்கிறசாந்தி, யெல்லாங்கிடைக்குமென்று சொல்லியிருக்கிறாள்.

ஸ்ரீகிருஷ்ண மனது மஹாசஞ்சலமன்றோ ஆனதால், அந்த மனதை நிக்கிரகம்பண்ணுவது வாயுவை நிக்கிரகம்பண்ணுகிறதைக் காட்டிலும் வெகுவருத்தமென்கிறதாக அருச்சுனனாலே கீதையில் யாதொருவசனஞ் சொல்லப்பட்டதோ; அது அடநிக்கிரகவிஷயம். அந்தப்படி வாசிட்டத்தில் ஸ்ரீவசிட்டர்சொல்லியிருக்கிறார்.

அதேதென்றால்? அங்குசமன்றியிலே மதம்பிடித்திருக்கிற துஷ்டகஜத்தை யெப்படிச் ஜெயிக்கக்கூடாதோ; அப்படிப்போ லப் பழுதன்றியிலிருக்கப்பட்ட நல்லயுக்தியன்றியிலே மூடனாயொ ருவிடத்திலிருந்துகொண்டு அடிக்கடி யேகாக்கிர சித்தத்தோடே கூடப்பண்ணப்பட்ட அடநிக்கிரகத்தினாலேதானே மனதை ஜெயிக் கக்கூடாது.

அத்தியாத்மவித்தை, சாதுசங்கம், வாசனாக்ஷயம், பிராண சலன நிரோதங்களான இந்தயுக்திகள், மனோஜெயத்தின் பொருட்டு நிரம்பியிருக்கச்சே யெவாள் அடத்தினாலேதானே மனதை நிக்கிரகி க்கிறதற்கேற்படுகிறாளோ அவாள் தீபமன்றியிலே அஞ்சனத்தைக் கொண்டுதானே அந்தகாரத்தைநாசம்பண்ணுகிறதற்கும், தாமரைநூ லுநாலே மதத்தகஜத்தைக் கட்டுகிறதற்கும், யேற்பட்ட புத்திமான்க ளென்று ஸ்ரீவசிட்டர் சொல்லியிருக்கிறார்.

அட நிக்கிரகமென்றுங், கிரம நிக்கிரகமென்றும், நிக்கிரகம் இரண்டுவிதம். அதில்-சக்ஷுசுரோத்திர முதலான ஞானேந்திரியங்களும், வாக்குப்பாணி முதலான கருமேந்திரியங்களும், அந்தந்தக் கோளகத்தைத் தகைந்த மாத்திரத்தினாலே நிக்கிரகிக்கப்படும். அது போலேதானே மனதையு நிக்கிரகிப்போமென்று மூடனாயிருக்கிறவனுக்குப் பிராந்தியுண்டாகும். அது கூடாது. ஏனென்றால்? மனதினுடைய கோளகமான இருதய கமலத்தைப் பாகிய கோளகத்தைப் போலத் தகையக்கூடாத படியினாலே கீழ்ச்சொன்ன பிராந்திகூடாது. ஆனபடியினாலே கிரமநிக்கிரகமே யோக்கியம். அந்தக்கிரமநிக்கிரகத்தில் அத்தியாத்ம வித்தை முதலானது களுபாயங்கள். அந்த வித்தையானது திரிசயமுழுவதும் மித்தையென்றுந், திருக்காயிருக்கிற பிரத்திகாத்மா சொப்பிரகாசரென்றும், அறிவிக்கிற படியினாலே மனதானது தனக்கு விஷயமான திரிசயத்திற் பிரயோசனமில்லையென்றும் பிரயோசனமுள்ள பிரத்திகாத்த மாவைத்தான் விஷயமாகப் பண்ணிக் கொள்ள யோக்கியமன்றென்றும், விவேகத்தினா லறிந்துக்கொண்டு விறகில்லாத அக்னிபோலத் தனக்குத்தானே யுபசாந்தியையடையும். அந்தப்படி சுருதிசொல்லுகிறது.

அதேதென்றால்? விறகு நசித்துப் போனதினாலே அக்கினி தன்னுடைய காரணத்தினாலெப்படி யடங்கிப்போமோ அப்படிவிர்த்தி நசித்ததினாலே மனதுந் தன்னுடைய காரணத்தினாலேயடங்கிப்போகுமென்று சுருதிசொல்லுகிறது.

யாதொரு முமுக்ஷுவானவன் குருவினாலே போதிக்கப்பட்ட போதிலும் பிரமசொரூபத்தை நன்றாயறியவில்லையோ; யாதொருத்த னறிந்தபோதிலும் அந்தச்சொரூபத்தை மறந்து போகிறானோ; அவாளிரண்டு பேர்களுக்கும் மனோநிக்கிரகத்திற் சாதுசங்கமுபாயம்.

ஏனென்றால்? சாதுக்கள் அடிக்கடி சொரூபத்தைப் போதிப்பார்கள். அப்படியே மறந்தசொரூபத்தை நினைக்கும்படியும் பண்ணுவார்கள். ஆனதாற் கீழ்சொன்ன மனோநிக்கிரகத்திற் சாதுசங்க முபாயந் தான். யாதொருத்தன் வித்தியாமதம் முதலான துர்வாசனையினாலே கெடுக்கப்பட்டவனாய்க்கொண்டு சாதுக்களையனுசரிக்கச் சம்மதிக்க வில்லையோ அவனுக்குக்கீழ்ச்சொல்லப்பட்ட விஷயதோஷ விவேக த்தினாலே வாசனாக்ஷயம் பண்ணுவதே மனோநிக்கிரகத்திலுபாயம். துர்வாசனைகள் வெகுபிரபலமாயிருந்து விவேகத்தினாலேகூட அதுக ளைவிடச் சக்தியன்றியிலே போனாலப்போ பிராணசலன நிரோதம் மனோநிக்கிரகத்திலுபாயம். ஏனென்றால்? பிராணசலனம், வாசனை, இரண்டும்சித்தத்தை யலைத்துவைக்கிறபடியினாலே அந்த இரண்டு களையும் நிரோதம்பண்ணும்போது சித்தசாந்தி கூடலாம். அந்தப்படி வாசிட்டத்திற் சொல்லியிருக்கிறது.

அதேதென்றால்? ஏ இராமா காமாதிவிர்த்திகளாகிய பனை களையுடைத்தாயிருக்கிற சித்தமாகிற விருக்ஷத்துக்கு வாசனையென் றும், பிராணசலனமென்றும், இரண்டுவிதைகள். அந்தவிதைகளி னாலே சித்தவிருக்ஷமானது சாகோபசாகையாய் நிமிஷத்துக்கு நிமி ஷம் மேன்மேல்வளருது. ஆனதாற் பீசரூபங்களான வாசனை, பிரா ணசலனங்களை, நிரோதித்தாற் சித்தஞ் சாந்தமாகும். இந்தவிரண்டு களுஞ் சித்தம் விருத்தியாகிறதிலெப்படிக்காரணங்களோ; அப்படி யொன்றுக்கொன்று விருத்தியாகிறதிலுங் காரணமானதால் இரண் டுகளுக்குள்ளேயொன்றுநசித்தால் மற்றதொன்றுந் தனக்குத்தானே நசித்துப்போம். வாசனைநசிக்கிறதற்குபாயங் கீழே சொல்லப்பட்டி ருக்கிறது.

பிராணசலன நிரோதத்திற் குபாயமேதென்றால்? பிராணா யாமத்தினுடைய திடாப்பியாசங், குருவினா லுபதேசிக்கப் பட்டயுக்தி

ஆசனநியமம், ஆகாரநியமம், இதுகளுபாயங்களென்று இப்படி வாசிட்டத்திற் சொல்லப்பட்ட கிரமம். அதில் - ஆசனத்துக்கு லக்ஷணம், அதற்குபாயம், அதின்பலம், மூன்றும். பதஞ்சலிபகவானாலே சூத்திரத்திற் சொல்லப்பட்டிருக்கிறது.

அதேதென்றால் ? பதுமஞ், சுவஸ்த்திகம், முதலான யாதொராசனத்திலிருந்து அதினாலே புருஷனுடைய கால்கைமுதலான அவயவங்களுக்கு விருத்த முண்டாகாமற் சரீரமசையாமல் ஸ்திரமாயிருக்குமோ அதுவே முக்கியமாயிருக்கப்பட்ட சுகாசனம். வீட்டுக்காரியந், தீர்த்தயாத்திரை, யாகம், ஓமம், முதலானதைக்குறித்துண்டாகிற உச்சாகத்தைக்கெடுப்பது ஆசனஜெயத்தில் லௌகீகமான உபாயம். அந்த உச்சாகத்தைக் கொடாவிட்டால் அது பெலோற்காரணத்தினாலே தேகத்தைக்கிளப்பிவிட்டு மூலைக்குமூலை திரியும்படி பண்ணிப்போடும். ஆனதாலதைக் கெடுக்கவேண்டும். ஆயிரம்படங்களோடே பூமியைத்தரித்துக்கொண்டு வெகுதீராயிருக்கிற யாதொரு ஆதிசேஷ பகவானுண்டோ அவரே நாமென்கிறதியானம் ஆசனச்ஜெயத்திற் சாஸ்திரீயமான உபாயம். அந்தத்தியானத்தால் ஆசனச்ஜெயம்வரும்படியான புண்ணியாதிட்ட முண்டாகும். இந்தஉபாயங்களினாலே ஆசனந்திடமாய்ச் சித்திக்கும்போது சீதோஷ்ணங்கள், சுகதுக்கங்கள், மானவமானமுதலான துவந்துவங்கள், முன்போலே புருஷனை வாதியாமலிருப்பதே ஆசனச்ஜெயத்துக்குப்பலம். அப்படிப்பட்ட ஆசனத்துக்கு யோக்கியமான பிரதேசமேதென்றால் ? ஒருஜனமுமன்றியிலே சமமாய்ச், சுத்தமாய்ச், சுக்காங்கல்லு மணற்சமீபத்திலக்கினிசலவாடை யடிக்கும்படியான குளமுதலான பாதகமொன்றுமன்றியிலிருக்கப்பட்டதாய்க், கண்ணுக்கு ரம்மியமாய், மனதுக்குச்

சம்மதமாயிருக்கிறகுகை, மடமுதலானதே ஆசனயோக்கியப் பிரதேசம். இப்படி ஆசனநியமஞ் சொல்லப்பட்டுது.

ஆகாரநியம மாவதேதென்றால்? தனக்கு வேண்டுமென்கிற ஆகாரத்தை உத்தேசமாய்ப் பார்த்துக்கொண்டு அதிலிரண்டுபங்கு வெஞ்சனத்தோடே கூடின அன்னம்புசித்து ஒருபங்கு ஜலம்சாப்பிட்டுப் பின்னொருபங்கு வாயுசஞ்சாரத்தின் பொருட்டுவிடுவதே ஆகாரநியமம். அப்படியே பகவான் கீதையிற்சொல்லியிருக்கிறார்.

ஆசனச்ஜெயம் வந்தவனுக்குப் பிராணாயாமத்தினாலே மனோநாசஞ் சுவேதாசுவதர உபநிடதத்திற் சொல்லப்பட்டிருக்கிறது. அதெப்படியென்றால்? யோகியானவன் வித்யாமதாதி ஆசுரசம்பத்தில்லாதவனும், அதோடேகூடினவனும், இரண்டு விதமாயுமிருப்பன். அதில்முந்தினயோகிக்கிப் பிரமத்தியானத்தினாலேமனது நிக்கிரகிக்கப்படும்போதுஅதற் கவாந்தரபலமாகப்பிராண நிரோதஞ்சித்திக்கும். இரண்டாவதுயோகிக்கிப் பிராணயாமாப்பியாசத்தினாலேபிராணநிரோதம் வரும்போது அதற்கவாந்தரபலமாக மனோநிக்கிரகஞ் சித்திக்குமென்று பிராணயாமத்தினால் மனோநாசஞ் சொல்லப்பட்டிருக்கிறது.

இதற்கு யுக்தி ஏதென்றால்? பிராணன் சலித்தால் மனது சலிக்கிறபடியினாலே பிராணன் யாதொன்றுண்டோ அதுவே மனதினுடைய சலனமானதாற் பிராணனை நிரோதிக்கும்போது மனோநாசஞ் சித்திக்குமென்று வாசிட்டத்திற் சொல்லியிருப்பதே யுக்தி. துஷ்டக் குதிரைகள் தானிழுக்கப்பட்ட ரதத்தை நல்ல வழியைவிட்டுப்போட்டுக் குறுக்குவழியி லிழுத்துக்கொண்டு போனாலுஞ்சாரதியானவன் கடிவாளத்தை இழுத்துப்பிடிக்கும்போது அந்தரதம் நல்லவழியிலெப்படிவந்துசேருமோ அப்படி இந்திரியங்களினாலும், வாசனைகளினா

லும், நாலுதிக்கிலு மிழுத்தலைக்கப்பட்டமனதும் பிராணனுகிறகயி றைத் திடமாயிழுத்துத் தகையும்போது தானுந்தகையப்படுமென்று கீழ்ச்சொன்ன உபநிடதத்திற் சொல்லியிருப்பதும் யுக்திதான்.

பிராணாயாமமாவதேதென்றால்? இடதுமூக்குத் துவாரத்தி னாலே தனக்குச்சக்தியுள்ளமட்டுக்கும் உசுவாசமென்று சொல்லப் பட்ட பிராணவாயுவை வெளியில்விடுவது ரேசகம். பிறகு வலது மூக்குத் துவாரத்தினாலே நிசுவாசமென்று சொல்லப்பட்ட அபான வாயுவை யுள்ளே இழுப்பது பூரகம். பிறகு உச்வாசமும், நிசுவாச மும், அன்றியிற்றேகமசையாதப்படிக்கு வாயுவைத் தடஸ்தமாக நிறுத் திக்கொள்ளுவது கும்பகம். அதுவே பூரகம் பண்ணினபிறகு இருத யத்திற் செய்யப்பட்டா லாந்தரகும்பகம். ரேசகம்பண்ணினபிறகு பாகியத்திற் செய்யப்பட்டால் பாகியகும்பகம். இப்படி இந்தரேச காதிகளைச் செய்யும்போது இவ்வளவுகாலஞ் செய்தோமென்று கண க்குத்தெரிகிறதற்காகப் பிரணவம் பஞ்சாக்ஷரமுதலான மந்திரத் தைச் செபித்துக்கொண்டு யெத்தனையாவிர்த்திவரைக்கும் ரேசகம் பண்ணப்பட்டதோ அத்தனையாவிர்த்தி பூரகம் பண்ணவேண்டும். அத்தனையாவிர்த்தியே கும்பகத்தையும் பண்ணவேண்டும். இப்படி ரேசகாதிமூன்றையும் ஒராவிர்த்திபண்ணினால் அதொரு பிராணா யாமம். தூக்கமயக்கமுதலான பிரபலதோஷமுள்ளவாளிந்த மூன்றை யுங் கீழ்ச்சொன்னபடி செய்யவேண்டும். அந்தத்தோஷமில்லாத வாள் ரேசகபூரகங்களைச் செய்யாமற்றானே உசுவாசமன்றியிற் றட ஸ்தமாக வாயுவை நிறுத்துவதாகிய கேவலகும்பகத்தைமாத்திரம் பண்ணலாம். இப்படித் தினக்கிரமமாக நாளுக்குநாட் கொஞ்சம் அதிகமாகும்படி பிராணாயாமாப்பியாசம் பண்ணினாற் பிராணசல னம் நிரோதிக்கப்படும். அதினால் மனோநாசஞ் சித்திக்கும். இந்தப் பிராணாயாமப் பிரகாரத்தை அடயோகசாஸ்திரத்தில் விஸ்தாரம.

ய்ச் சொல்லியிருக்கிறபடியினாலே இங்கே விசேஷமாய்ச்சொல்ல வில்லை. குருமுகமாகச் ஜகத்து மறந்துபோகும்படியான ஔஷதம் புசிப்பதுமுதலானது குருவினாலுபதேசிக்கப்பட்ட யுக்தி இதுவெல்லாம் அடையோகிகளிடத்திற் பிரசித்தமாயிருக்கும். இப்படி மனோநாசத்துக் குபாயங்களான அத்தியாத்மவித்தை, சாதுசங்கம், வாசனாக்ஷயம், பிராணசலனநிரோதம், நாலுகளுஞ் சொல்லப்பட்டுதுகள்.

இனிஇந்தமனோநாசத்துக்குபாயமான சமாதியைச் சொல்லுகிறோம்.

அதேதென்றால்? ஐந்துபூமிகளோடே கூடிக்கொண்டிருக்கிற மனதிற் புருஷமுயற்சியினாலே மூன்றுபூமிகளை நீக்கிவிட்டபிறகு மிஞ்சாநின்ற இரண்டுபூமி சமாதியென்று சொல்லப்படும். அதில்-முந்தினபூமி சவிகற்பசமாதி. இரண்டாவது பூமி நிர்விகற்பசமாதியென்று விவேகித்தறியவேண்டும். அந்தப்பூமிகளாவது - சித்தம் மூடம், விச்சித்தம், ஏகாக்கிரம், நிருத்தமென்றைந்துபூமிகள். அதில்-ஆசுரசம்பத்து லோகசாத்திர தேகவாசனைகளோடே கூடினமனது சித்தம். நித்திரை மயக்கம் ஆலசிய முதலானதோடே கூடினமனது மூடம். எப்போவாகிலும் ஒருக்காற் றியானத்தோடே கூடினமனது விச்சித்தம். அதிற் சித்த மூடங்களிலே சமாதியென்கிறவார்த்தைகூடக்கிடையாது. விச்சித்தபூமியோடேகூடின மனதில் விக்ஷேபத்தோடேகூட ஒருக்காற் றியானங்கிடைத்தபோதிலும் அது விக்ஷேபத்திலகப்பட்டு அக்கினியிலகப்பட்ட விதைபோலுடனே நசித்துப்போகிறபடியினாலே அந்தத்தியானமுஞ் சமாதியிற் சேர்ந்ததன்று. மனதானதுமுந்தினவிர்த்தியினாலே எந்தவஸ்துவைக் கிரகிக்கிறதோ அந்தவஸ்துவைத்தானே மேன்மேலுண்டாகிற விர்த்திகளினாலுங் கிரகித்துதேயானால் அப்பேது ஏகாக்கிரம். அப்படிப்

ப்ட்டமனதிற் சத்துரூபமான பிரத்தியகபின்ன பிரமசொரூபத்தைத் தோற்றிவைக்கிறதாய்க் கிலேசங்களையும், கருமபந்தங்களையும், நழுவப்பண்ணுகிறதாய் நிர்விகற்பசமாதிக்கிச் சாதனமான சித்தநிரோதத்தை யெதிரேகொண்டுவந்து விடுகிறதாய்த் தயிலதாரைபோல இடைவிடாமலிருக்கிற யாதொருபிரமாகார மனோவிர்த்திப் பிரவாகமுண்டோ அது சவிகற்பசமாதி. இந்தச்சமாதி கிடைக்கும்போது ரசோகுணவிகாரமான மனதினுடைய சலனம் அடங்கிப்போகிறபடியினாலே மனதுமுன்போல நாமரூபவிகாரத்தைக் கிரகியாமல் நிர்விகார சச்சிதானந்தரூபமான பிரத்தியகபின்ன பிரமசொரூபத்தில் நாளுக்குநாட் க்ஷணத்துக்குச்க்ஷணம் ஏகாக்கிரமாகும். சவிகற்பசமாதியினுடைய அப்பியாசபெலத்தினாற்றியானிக்கிறவன் தியானந் தியானிக்கப்பட்ட சொரூபமென்று சொல்லப்பட்ட திரிபுடியன்றியிலே மனது சூக்ஷுமரூபமாக ஒருவனோடேயுமிப்படிப்பட்டதென்று சொல்லக்கூடாததாயிருக்கிற பரமானந்த அநுபவத்தோடேகூடப் பாலிற்கலந்த ஜலம்போலப் பரிபூரண பரமானந்தப் பிரத்தியகபின்னபிரமசொரூபத்திற் கலந்துநிற்பதே நிர்விகற்பசமாதி.

அந்தப்படி யோகசூத்திரத்திற் பதஞ்சலிபகவான் விஸ்தரித்துச் சொல்லியிருக்கிறார். சகலசுருதி ஸ்மிருதி இதிகாசபுராணங்களிற் றாற்பரியத்தோடே சொல்லிமுடிந்த நிஷ்டை இதுவே. சகலவித்துவான்களுமிந்த நிஷ்டையிலே எப்போதும் மகாப்பிரீதியுடைத்தாயிருப்பார்கள். இதற்காகவே சகலமுமூக்ஷுக்களுஞ் சாஸ்திரத்திற் சொன்ன சகலமுயற்சியையுஞ் செய்யவேண்டியது. இந்த நிஷ்டையினுடைய மகிமை பிரம விஷ்ணு ருத்திரன் முதலானபேர்களாலேகூடச் சொல்லிமுடியாது. ஆனதால் முமூக்ஷுக்களெப்போது மிந்த நிஷ்டைகிடைக்கும்படியான முயற்சியை எவ்வருத்தப்பட்டுஞ் செய்யவேண்டும்.

கீழ்ச்சொன்ன சவிகற்பசமாதிக்கி இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், ஆகியவைந்துகளும் பகிரங்கசாதனங்கள்.

அதில்-இயமமாவதேதென்றால்? இமிசையில்லாமை, பொய்யில்லாமை, திருட்டில்லாமை, சம்போகமில்லாமை, ஒருவனிடத்தில்நின்றும் ஒருபதார்த்தத்தை வாங்குவதில்லாமை, ஆகிய இவ்வைந்தும் இயமமென்று சொல்லப்படும். நியமமாவதேதென்றால்? பாகியாந்தரசௌஷம், கிடைத்ததைக்கொண்டு சந்தோஷம், நடந்தமட்டுக்குந்தவசு, வேதஅத்தியயனம், ஈசுரத்தியானம், ஆகிய இவ்வைந்தும் நியமமென்று சொல்லப்படும். ஆசனம், பிராணாயாமங்கள் முன்னேயே சொல்லப்பட்டுதுகள். சத்தாதி விஷயங்களிலே நின்றுஞ் சுரோத்திராதி இந்திரியங்களோடேகூட மனதை அந்தர்முகமாகத்திருப்பிக்கொள்ளுவது பிரத்தியாகாரம். அந்தர்முகமாகத்திருப்பிக் கொண்டமனதைப் பிரத்தியகாத்தும சொரூபத்தில் நிறுத்துவது தாரணை. அந்தச்சொரூபத்தில் மனதுக்குச் ஸஜாதீயவிர்த்திப் பிரவாகமுண்டாகுவது தியானம். அந்தமனதினுடைய ஸஜாதீய விர்த்திப் பிரவாகந்தானே அப்பியாசபெலத்தினாலே திடப்படுவது சமாதி. இந்தத்தாரணை, தியான, சமாதி, ஆகிய மூன்றுகளும் மனோதருமங்களானபடியினாலே சவிகற்பசமாதிக்கி அந்தரங்கசாதனங்கள். எதாகிலும் ஒருபுண்ணியவிசேஷத்தினால் முந்தி அந்தரங்கசாதனங் கிடைத்துவிட்டாற் பகிரங்கசாதனங் கிடைக்கவேண்டுமென்று நிரம்பவருத்தப்படவேண்டியதில்லை. அந்தரங்க சாதனமே போதும்.

சங்கை? சவிகற்பசமாதி அங்கியன்றோ? அப்படியிருக்க அந்தசவிகற்பசமாதியைத் தியானத்துக்குப் பிறகுண்டாகிற யெட்டாமங்கமான சமாதிக்கட்டத்திலெப்படிச் சொல்லலாமென்றால்? ஏழாமங்கமான தியானம், எட்டாமங்கமானசமாதி, அங்கியானசவிகற்ப

சமாதி, இந்தமூன்றுகளுக்கும் நிரம்பப்பேத மில்லாததினாலே எட்டாமங்கமான சமாதிக்கட்டத்தில் அங்கியானச் விகற்பசமாதியைச் சொல்லாமே. அதெப்படிப்போலவென்றால் ? வேதாத்தியயனம் பண்ணுகிற பிரமச்சாரி அடிக்கடி மறந்து மறந்து மறுபடி நினைத்துக்கொண்டு வேதம்சொல்லுகிறான். வேதாத்தியயனம் பண்ணிமுடிந்தவன் சாவதானமாய்ச் சொன்னால் மறவாமற் சொல்லுகிறான். அத்தியயனம் பண்ணிவைக்கிறகுரு சாவதானமன்றியில் மயங்கிவிழுந்துகொண்டு சொன்னபோதிலும் மறவாமற் சொல்லுகிறார். இவாள் மூன்றுபேரும் ஒருவேதத்தையேசொன்னபோதிலும் அப்பியாச தாரதன்மியத்தினாலே சொல்லுகிறதிற் கொஞ்சந் தாரதன்மியமேயொழிய நிரம்பப் பேதமெப்படியில்லையோ அப்படிப்போலச் சச்சிதானந்தபரிபூரண பிரமசொரூபமே நாம். நாமே அந்தப் பிரமசொரூபமென்று செய்யப்பட்ட மனோதருமமாகிய தியானஞ், சமாதி, சவிகற்பசமாதி, மூன்றுகளுக்கும் அப்பியாச தாரதன்மியத்தினாலே கொஞ்சந் தாரதன்மியமேயொழிய நிரம்பப்பேதமில்லை. ஆனதாற் கீழ்ச்செய்த சங்கைகூடாது. கீழ்ச்சொன்ன ஸஜாதீய விர்த்திப்பிரவாகமாகிய தியானம். விச்சின்னத்தியானமென்றுஞ், சந்ததத்தியானமென்றும், இரண்டுவிதம். அதில்-அகண்டேகரசமான பிரமமே நாம் நாமேபிரமமென்று செய்யப்பட்ட பாவனையாகிய தியானஞ் சிலபொழுது தொடர்ந்துவந்து நடுவில்விட்டுவிட்டுப்போய்க் கடபடாதிவிஷயமான விஜாதீயவிர்த்திக ளுண்டானபோதிலுந் திரும்பித்திரும்பிப் புருஷமுயற்சியினாலே விஜாதீய விர்த்திகளைத் தள்ளிச் ஸஜாதீயமாயிருக்கிற பிரமாகார மனோவிர்த்தியைச் சம்பாதிக்கிறதே விச்சின்னத்தியானம். அப்படியில்லாமல் அப்பியாசபெலத்தினாலே தயிலதாரைபோல அவிச்சின்னமாயுண்டாகிற பிரமாகார மனோவிர்த்திப்பிரவாகமே சந்ததத்தியானம். இதில்-விச்சின்னத்தியானத்தைப் பழகப்பழகச் சந்ததத் தியானங்கிடைக்கும்.

அதைப்பழகப்பழகச் சவிகற்பசமாதிகிடைக்கும். அந்தச் சந்ததத் தியானஞ், சவிகற்பசமாதி, இரண்டையும் சர்வாநுபவயோகி சொல்லியிருக்கிறார்.

அதேதென்றால்? அக்ஞானதற்காரியமான சகல கற்பிதப் பிரபஞ்சத்தையுஞ் சிருஷ்டிக்கிரமத்துக்கு விபரீதக்கிரமமாகப் புத்தியினாலே காரியத்தைக் காரணரூபமாய்.நினைப்பதாகிய பிறவிலாபம் பண்ணிக்கொண்டு மிஞ்சியிருக்கிற அதிஷ்டான சச்சிதானந்தரூபப் பிரமசொரூபம் யாதொன்றுண்டோ அதுவே நாம். நாமே அதுவென்று தயிலதாரைபோல இடைவிடாமற் பாவிப்பதே தியானமென்றும். அப்படித் தியானம்பண்ணும்போது சுரோத்திராதி இந்திரியங்களினாலே சத்தாதிவிஷயங்களொன்றும் அறியப்படாமற் றியானுப்பியாசபெலத்தினாலே கிடைத்த ஸஜாதீயமான பிரமாகார மனோவிர்த்தி சவிகற்பசமாதியென்று சர்வானுபவயோகி சொல்லியிருக்கிறார். வாசிட்டவியாக்கியானக்காரரும் அப்படியேசொல்லியிருக்கிறார். ஸ்ரீசங்கராசாரியாரும் அப்படியே சொல்லியிருக்கிறார். ஆனபடியினாலே தியானம்பண்ணும்போது மனதிற்றொடர்ந்த விர்த்திப்பிரவாகமுண்டாகியிருந்தபோதிலும் எவ்வளவுகாலம் வரைக்கும் பாகியாந்தரகரணங்களினாலே பாகியாந்தரவிஷயங்களறியப்படுகிறதுகளோ அவ்வளவுகாலமட்டுக்குந் தியானந்தான். எப்போ ஒருகாணத்தினாலும் ஒருவிஷயமும் அறியப்படாமல் மனதிற் பிரமாகாரமான தொடர்ந்த விர்த்திப்பிரவாகமாத்திரங். கிடைக்கிறதோ அப்போது அது சவிகற்பசமாதி. எப்போ அந்த விர்த்திப் பிரவாகமன்றியிற் பரிபூரணபிரமானந்தத்தில் மனது மூழ்கிப்போய்ச்சமஸ்காரமாத்திரமாகிய சூக்ஷுமரூபமாயிருக்கிறதோ அப்போது அந்தமனதினுடைய ஸ்திதி நிற்விகற்பசமாதியென்று சித்தமாச்சுது. கீழ் கிருத்தமென்று சொல்லப்பட்ட ஐந்தாம்பூமியான இந்தநிற்விகற்ப

சமாதியைப் பதஞ்சலிபகவான் சூத்திரத்திற் சொல்லியிருக்கிறார். அதேதென்றால்? சமாதியி லிருக்கும்போது அதற்கு விரோதங்களான மனோவிகாரங்கள் புருஷமுயற்சியினாலே நாளுக்கு நாட் க்ஷணத்துக்குக்ஷணமடங்கி அந்தமனோவிகாரங்களை நாசம்பண்ணும்படியான நிரோதவாசனை மனதிலுண்டாகும். க்ஷணத்துக்குக்ஷணம் வளராநின்ற அப்படிப்பட்ட நிரோதவாசனையே நிர்விகற்பசமாதியென்று சொல்லியிருக்கிறார்.

சங்கை? மனதுக்குச் சர்வதா பாகியத்திலே ஏதாகிலும் ஒரு விஷயாகாரமான பரிணாமங்காணப்படுகிறதே; அப்படிச் சமாதியில் நிருத்தமான மனதுக்கும் யேதாகிலும் ஒருபரிணாமஞ் சொல்லவேண்டுமேயென்றால்? சொல்லுகிறோம். லோகத்திலே ஸமித்து, நெய், அவிசு, முதலானதை அக்கினியினிடத்தில் ஓமம் பண்ணும்போது அக்கினி மேன்மேல் வளர்ந்து சொலித்தபோதிலும் அந்தச் ஸமித்து முதலானது நசித்துப்போகும்போது அக்கினியும் முந்தினக்ஷணத்திற்கொஞ்சம், இரண்டாஞ்க்ஷணத்திற்கொஞ்சம்,மூன்றாஞ்க்ஷணத்திற் கொஞ்சம், விழுக்காடு மேன்மேலெப்படிச் சாந்தியையடைகிறதோ; அப்படிப்போலச் சமாதியில் நிரோதிக்கப்பட்டமனதும் மேன்மேல் க்ஷணத்துக்குக்ஷணஞ் சாந்திப்பிரவாகரூபமான பரிணாமத்தையடையும். அக்காலத்தில் முன்னமுன்னேயுண்டாகிற சாந்திவாசனையே பின்னுண்டாகும்படியான சாந்தியிற் காரணம். இந்தநிர்விகற்ப சமாதிக்கி விரோதங்களாயும், புருஷமுயற்சியாற் றள்ளத்தக்கதுகளாயும், இருக்கிற மனோவிகாரங்கள். உத்தாலகருடைய சமாதிக்கட்டத்தில் வாசிட்டத்திற் சொல்லப்பட்டிருக்கிறதுகள். அதேதென்றால்? உத்தாலகரானவர் ஒரு மனோவிகாரமுமன்றியில் எப்போ நித்தியசுத்த நிருவிகாரமான பரமபதத்திலே நாம் சித்தவிசிராந்தியையடைவோமென்று வெகுசிந்தையோடேகூட அடிக்கடி உட்கார்ந்து

தியானப்பியாசம் பண்ணினர். அப்போ அவருடையமனது மற்கடம்போலச் சஞ்சலமாய்ச் சமாதியை யடையமாட்டாமற் சில காலம் பாகியவிஷயத்தை நினைத்துக்கொண்டலைந்தது. அதைவிட்ட பிறகு அந்த மனதாகிய மற்கடஞ் சிலகாலம் ஆந்தரவிஷயத்தை நினைத்துக்கொண்டலைந்தது. மறுபடி ஆந்தரவிஷயத்தில் நின்றும் பாகியவிஷயத்திலும், பாகியவிஷயத்தில்நின்றும் ஆந்தர விஷயத்திலும், இது ஆந்தரம் இதுபாகியமென்று ஒன்றுந்தோணமற் பயங்கொண்ட பக்ஷியானது ஆகாசத்திற்கிளம்பிப் பறக்கிறதுபோலச் சில காலம் மூலைக்குமூலை யலைந்துதிரிந்தது. ஒருக்காற் சூரியோதயமானதுபோல விஸ்தாரமாயிருக்கிறதேஜஸை நினைத்தது. ஒருக்கால்நிபிடமாயிருக்கிற தமசைநினைத்தது. ஒருக்கால் ஆகாசம்போல வெட்டவெளியை நினைத்தது. இப்படித்தோணினபடி க்ஷணத்துக்குச் க்ஷணமுண்டாகிற மனோவிகாரங்களையெல்லாம் உத்தாலகரானவர் விவேகத்தினலே உடனேக்குடனே நாசம் பண்ணினர். அப்படி நாசம்பண்ணினபோதிலும் மறுபடியும் விவேகமாகிய சூரியனைமறைக்கும்படியான மைபோலிருக்கப்பட்ட தமசுதோணித்து. அதையும் விவேகத்தினுடைய திடத்தன்மையினலே தள்ளும்போது மறுபடி நிபிடமானதேயிசுதோணித்து. அதையுந்தள்ளும்போது மனது மயங்கிப்போய் நித்திரையை யடைந்தது. விவேகபெலத்தினல் மனதை நித்திரையைவிட்டு வெளிப்படுத்திச் ஜாக்கிரதை பண்ணும்போது மறுபடி ஆகாசம்போல வெளிதோணித்து. அதையுந்தள்ளின பிறகு ஒன்றுந்தோணமல் மனது மூடமாய்ப் போயிற்று. அதிதீராயிருக்கிற உத்தாலகர் அந்த மூட அவத்தையையுந் தள்ளும்போது தேயிசு தமசு நித்திரை மோகம் முதலானதொன்றுமன்றி வாக்குனலே இப்படிப்பட்டதென்றுசொல்ல அருமையான ஒரு நிஷ்டையையடைந்து அதினல் மனது க்ஷணகாலமட்டுக்கும் பரிபூரண பரமானந்த பிரத்தியகபின்ன பிரமசொரூபத்தில் விசிராந்தியை யடைந்ததென்று வாசிட்

டத்திற் சொல்லியிருக்கிறது. ஆனபடியினாலே இக்காலத்திலிருக் கப்பட்ட முமூக்ஷுக்களும் உத்தாலகரைப்போல நிர்விகற்பசமா திக்கி விரோதங்களாக எப்படிப்பட்ட மனோவிகாரங்கள் வந்தாலும் பயந்து நடுவிலே தியானத்தை விட்டுவிடாமற் றயிரியத்தோடே புரு ஷமுயற்சியினாலே திரும்பித்திரும்பித் தியானாப்பியாசத்தையே செய் யவேண்டும். அதினாலெவ்விதமும் ஈசுரானுக்கிரகத்தினாலே நிர்விகற் பசமாதி கிடைக்கும். இப்படி யடயோகசாஸ்திரானுசாரமாக நிர் விகற்பசமாதிக்கிச் சாதனமாயிருக்கப்பட்ட இயமாதி சொல்லப் பட்டுது.

அப்படியே ஸ்ரீ சங்கராசாரியாளாலே அபரோக்ஷாத்மாநுபூ திப்பிரகரணத்தில் அந்தநிற்விகற்பசமாதிக்கிச் சாதனமாயிருக்கிற இய மம் முதலான பதினைந்தங்கம் ராசயோகானுசாரமாகச் சொல்லப் பட்டிருக்கிறது.

அதேதென்றால்? இயமம், நியமம், தியாகம், மௌனம், தேசம், காலம், ஆசனம், மூலபெந்தம், தேகசமத்தன்மை, லக்ஷிய திருஷ்டி, பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி, யென்று பதினைந்தங்கம். அதின் விபரம் யாதெனிற்சொல்லுகிறோம்.

(1) சர்வம் பிரமமென்கின்ற விவேகக்கியானத்தினாலே இந் திரியக்கூட்டத்தினுடைய நிரோதத்தை அடிக்கடிபழகுவதே இயமம்.

(2) அந்த விவேகக்கியானத்தைத்தானே விஜாதீயவிர்த்தி யன்றியிற் ஸஜாதீயவிர்த்திப்பிரவாகரூபமாகக் கிடைக்கும்படி நியம மாய்ப் பழகுவதே நியமம்.

(3) சர்வாதிஷ்டான சச்சிதானந்த பிரமசொரூபத்திற் கற் பிக்கப்பட்ட நாமரூபப்பிரபஞ்சம் அதிஷ்டானத்தைக் காட்டிலும் வேறன்றென்று தள்ளுவதே மகான்களுக்குச் சம்மதமான தியாகம்.

(4) சகலவாக்குக்களும் மனதோடேகூட யாதொருசொரூபத்தை விஷயீகரிக்கமாட்டாமற் றிரும்பிவிடுகிறதுகளோ; யாதொன்ருனது சகலயோகிகளினுலும் அடையும்படியான நித்தியமௌன சொரூபமோ; அப்படிப்பட்ட சொரூபத்தை யெப்போதும் நினைப்பதே மௌனம். வாக்குமாத்திரம் நிரோதமாகிய மௌனம். அவிவேகிகளுக்கேயொழிய விவேகிகளுக்கன்று.

(5) யாதொரு சொரூபத்திற் கீழ்மேல்நடு வொருவிடத்திலும் ஒருஜனமும் பரமார்த்தமாகக்கிடையாதோ; யாதொருசொரூபத்தினுற் சகலமும் ஆகாசத்தினுற்போல வியாபிக்கப்பட்டிருக்கிறதோ; அந்தச்சொரூபமே விவேகிகளுக்கு வசிக்கும்படியான சுத்ததேசம்.

(6) யாதொருசொரூபமானது பிரமாதிசகல சராசரப்பிரபஞ்சத்தையும் நிமிஷகாலத்திற் கற்பனைபண்ணுகிறதோ; அப்படிப்பட்ட அகண்டானந்த அத்தொய்த சொரூபமே காலம்.

(7) எப்படித்தேக அவயவங்களை வைத்துக்கொண்டிருக்கிறதினுலே மனதுக்குத் தேகமூலமாய் வருத்தந்தோணுமலெப்போதும் பிரமானுசந்தானங் கிடைக்குமே; அதுவே சுகமாயிருக்கப்பட்ட ஆசனம்.

(8) யாதொருசொரூபஞ் சகலஜகத்திற்கும், அதைத்தோற்றிவிக்கிற சித்தத்திற்கும், மூலமோ; அதுவே ராசயோகிகளிருக்கிறதற்கு யோக்கியமான மூலபெந்தம்.

(9) சிரவணமனன நிதித்தியாசனப் பெலத்தினுலே மனது சமமானபிரமசொரூபத்தில் லயிப்பதே தேகசமத்தன்மையேயொழிய காஞ்சகட்டைபோல ஒழுங்காகத்தேகத்தை வைத்துக்கொள்ளுவது தேகசமத்தன்மையன்று.

(10) விவேகக்கியானமாகிய திருஷ்டியினாலே சகல ஜகத்தையும் பிரமமயமாகப் பார்ப்பதேலக்ஷியதிருஷ்டி. அல்லது ஞாதா ஞேயம் ஞானமென்று சொல்லப்பட்ட திரிபுடியானது யாதொரு சொரூபத்திலுண்டாகியடங்குகிறதோ; அந்தச்சொரூபத்திற்றிருஷ்டி வைப்பதே லக்ஷியதிருஷ்டி. அப்படியில்லாமல் மூக்குநுனிமுதலானதிற்றிருஷ்டிவைப்பது லக்ஷியதிருஷ்டியன்று.

(11) சித்தமுதலான சகலகற்பிதவஸ்துவையும் அதிஷ்டானப் பிரமசொரூபமாகப் பார்த்துச் சகலசித்தவிர்த்திகளையும் நிரோதிப்பது பிராணாயாமம். அதில் - அக்ஞானதற்காரியமான சகலபிரபஞ்சத்தையும் நேதிபண்ணித்தள்ளுவது இரேசகம். பின்பு நிருபாதிகமான பிரமசொரூபமே நாமென்கிற சித்தவிர்த்தியைச் சம்பாதிப்பது பூரகம். அந்தச்சித்தவிர்த்தியை சலியாமல் நிறுத்திக்கொள்ளுவது கும்பகம். இந்தப்பிராணாயாமமும் விவேகிகளான ராஜயோகிகளுக்குச் சொல்லப்பட்டது. அவிவேகிகளான அடயோகிகளுக்குப் பிராணசலன நிரோதரூபமான பிராணாயாமங் கீழ்ச்சொல்லப்பட்டிருக்கிறது.

(12) திரிசியமான சகலவிஷயங்களையும் ஆத்மசொரூபமாகப்பார்த்து மனதைத் திருக்குரூபமான ஆத்மாவினிடத்திற் றிருப்பிக்கொள்ளுவது பிரத்தியாகாரம்.

(13) மனது யெங்கெந்த விஷயத்திற் போகிறதோ உடனே யந்தவிஷயத்தைப் பிரமசொரூபமாகப்பார்த்து அந்தமனதைச் சொரூபத்திலிருத்திக்கொள்ளுவது தாரணை.

(14) ஒருபற்றுமன்றியிற் சச்சிதானந்த பரிபூரண பரமாத்துவைத பிரத்தியகபின்ன பிரமசொரூபமேநாம் நாமே அதென்று பழ

கப்பட்ட தொடர்ந்த விர்த்திப்பிரவாகமே பரமானந்தத்தைக்கொடுக்குப்படியான தியானம்.

(15) அந்தவிர்த்திப்பிரவாகந்தானே சத்தாதிவிஷயந் தோனுமலிருக்கும்போது சவிகற்பசமாதி. இந்தப் பதினைந்தங்கத்தையும் நிர்விகற்பசமாதி கிடைத்து நித்திய நிரதிசய நிருபாதிக பரமானந்தாநுபவம் வரும்வரைக்கும் நடுவிலே விட்டுவிடாமல் வெகுசிரத்தையோடே பழகினல் அதினலெவ்விதமும் ஈசுரானுக்கிரகத்தினலே நிர்விகற்பசமாதி சாக்ஷாத்காரங் கிடைத்துச் ஜீவன்முக்திச் சுகஞ்சித்திக்குமென்று ஸ்ரீ சங்கராசாரியாள் அபரோக்ஷாத்மாநுபூதிப் பிரகாணத்திற் சொல்லியிருக்கிருள்.

மனோவிகாரங்கள் ஓயும்படியான புருஷ முயற்சியினலே நிர்விகற்பசமாதி உண்டாகுமென்று பகவான் கீதையிலே சொல்லியிருக்கிருர். அதை நாம் இங்கே விஸ்தரித்துச் சொல்லுகிறேம். அதேதென்றல்? சிற்குச், சந்தனம், ஸ்திரீ, புத்திரன், மித்திரன், கிரகஞ், க்ஷேத்திரம், பசு, முதலானவிஷயங்கள். மோக்ஷசாத்திரத்திரத்திற் சமர்த்தாளாயிருக்கிற விவேகிகளுக்குப் பிரசித்தங்களான வெகுதோஷங்களோடே கூடிக்கொண்டிருந்தாலும்; அவிவேகிகளுக்கந்ததோஷங்களை அனுதியான அவித்தையானது மறைந்துப்போட்டு அந்தவிஷயங்களைக் குணத்தை யுடைத்தானதுகள்போலவுஞ், சுகசாதனங்கள்போலவுந், தோற்றிவிடுகிறது. அதினலே இந்த விஷயம் நமக்குவேண்டும் இந்தவிஷயம் நமக்குவேண்டுமென்று ஆசையுண்டாகிறதுகள். அந்தச் சிற்குச்சந்தனுதிவிஷய ஆசைகளையும்; அப்படியே பிரமலோகமுதலானதிலும், அணிமாதி அட்ட ஐஸ்வரியங்களிலும், உண்டாகிற ஆசைகளையும்; விஷயங்களிலிருக்கப்பட்ட அநித்தியதுக்கத்தன்மை முதலான தோஷதரிசனத்தினலே மறுபடி மறு

படி ஆசைகளுண்டாகாமல் நாய்வாந்திபண்ணின அன்னத்தைப் போல சுத்தமாய் விட்டுப்போட்டு இந்திரியங்களைச் சுவாமிதரிசனங் கள் முதலானதிற்கூடப் போகாமற் சுவாதீனப்படுத்திக்கொண்டு பூமிகளின் ஜெயக்கிரமமாக மெள்ளமெள்ளச் சித்தசாந்தியைச் சம் பாதிக்கவேண்டும்.

பூமிகளாவதேதென்றால்? அதுகளைக் கடவல்லி யுபநிடதத் திற் சொல்லியிருக்கிறது. அதில்-வாக்குவியாபாரநிரோதம் முதற் பூமி. இதம் விர்த்திரூபமான மனோநிரோதம் இரண்டாம் பூமி. விசேஷ அகங்கார நிரோதம் மூன்றாம் பூமி. சாமான்னிய அகங்கார நிரோதம் நாலாம்பூமி. இந்த நாலுபூமிகளையுங் கிரமமாகச்சொல்லு கிறோம். லௌகீகமென்றுஞ், சாஸ்திரீயமென்றும், வாக்குவியாபாரம் இரண்டுவிதம். அதில் - வீண்வார்த்தையாகிய லௌகீகவாக்குவியா பாரம் வெகுவித விக்ஷேபயேதுவானபடியினாலே சமாதிபண்ணாத சம யத்திலேகூட அதைவிட்டுவிடவேண்டும். பஞ்சாக்ஷரசெபஞ், சிவ நாமகீர்த்தனம், வேதாந்தவார்த்தை, இவைகள்முதலான சாஸ்திரீய வாக்குவியாபாரஞ் சித்தசுத்திக்கேதுவானதாலும், வெகுவிதவிக்ஷே பத்துக் கேதுவாகாதபடியினாலும், அதைச்சமாதி இல்லாத சமயத் திற் செய்யலாம். சமாதிகாலத்தில் அந்தவியாபாரத்தையும் விட்டு விடவேண்டும். இது முந்தினபூமி. இந்த வாக்குவியாபாரம்நிரோ தமாகிய முந்தினபூமி பிரயத்தனமாத்திரத்தினாலேதானாகட்டுஞ், சில நாள்களிலேதானாகட்டுஞ், சிலமாசங்களினாலேதானாகட்டுஞ். சிலவரு ஷங்களிலேதானாகட்டுந், திடமாகச் ஜெயித்துக்கொண்டு பின்பு இரண்டாம்பூமியில் முயற்சிபண்ணவேண்டும். அப்படி முந்தினபூ மியைத் திடப்படுத்திக்கொள்ளாமல் விருதாஉச்சாகத்தினாலே மேல் ப்பூமியிலேறப்பட்டால் அப்போ முதற்படியைத் திடப்படுத்திக் கொள்ளாமல் மேன்மேல்க்கட்டப்பட்ட மாடியினுடைய படிகளைப்

படி நசித்துப்போமோ; அப்படி முந்தினபூமி திடப்படாததினாலே மேல்ப்பூமிகள் நசித்துப்போகும். வாக்குவியாபாரம்போலச் சக்ஷுவாதி இந்திரியவியாபாரங்களையுஞ் ஜெயிக்கவேண்டுமேயென்றால்? அவசியஞ் ஜெயிக்கவேண்டும். அந்தச்சக்ஷுவாதி வியாபாரநிரோதத்தை எந்தபூமியிற் சம்பாதிக்கலாமென்றால்? இந்தவாக்குப்பூமியிற்றானாகட்டும். அல்லது மேற்சொல்லப்போகிற மனோபூமியிற்றானாகட்டுஞ், சம்பாதிக்கலாம்.

சங்கை? கடவல்லியுபநிடதத்தில் வாக்கை மனதிலடக்கச் சொல்லியிருக்கிறதே அதென்னவென்றால்? நானாவிதவிக்ஷேபத்தையுண்டுபண்ணுகிற வாக்கு, மனது, இரண்டுகளுக்குள்ளே முந்தி வாக்குவியாபாரத்தை விட்டுப்போட்டு மனோவியாபாரமாத்திரத்தோடே யிருப்பது வாக்கைமனதிலடக்குவதென் றுத்தரம்.

ஆடு மாடு குதிரைகளுக் கெப்படி வாக்குவியாபாரமில்லையோ; அப்படி வாக்குவியாபாரநிரோதஞ் சுபாவமாய்ச் சித்தித்த பிறகு மனதை ஞானாத்மாவினிடத்தி லடக்கவேண்டும். அதெப்படியென்றால்? நான் இன்னானுடையபிள்ளை நான் இன்னானென் றுண்டாகிற சரீராதிவிஷயமான அகங்காரம் விசேஷ அகங்காரம். அந்த அகங்காரத்தோடேகூடின ஆத்மா ஞானாத்மா அந்த ஞானாத்மாவினிடத்தில் மனதையடக்கலாவதேதென்றால்? அது இது யென்று நானாவிதமாய்த் தோணுகிற மனோவியாபாரங்களை விட்டுப்போட்டு விசேஷ அகங்காரமாத்திரத்தோடே யிருப்பதுதான் மனோவியாபாரத்தை யடக்குவது. அதுபிரயாசமென்று சொல்லக்கூடாது. ஏனென்றால்? வைராக்கியந், தியானப்பியாச மில்லாதவாளுக்குப் பிரயாசமானாலும்; அதுகளுள்ளவாளுக்குச் சுலபந்தான். அந்தப்படி கீதையிற்சொல்லியிருக்கிறது.

உபாயத்தினுலே மனேவியாபாரத்தை நிக்கிரகிக்கலாமென்று திருஷ்டாந்தத்தோடேகூட கௌடபாதாசாரியாளுஞ் சொல்லியிருக்கிருள். அதெப்படியென்றுல்? சமுத்திரக்கரையிலிருக்கப்பட்ட பக்ஷியினுடைய முட்டைகளேச் சமுத்திரன் அலேயினுலே அபகரித்துப்போட்டான். அப்படிப்பட்ட சமுத்திரனை வற்றடித்துப்போடுவோமென்று அந்தபக்ஷியானது தன்னுடையமூக்குநுனியினுலே ஒவ்வொருவிந்துவிழுக்காடு சமுத்திரஜலத்தை யெடுத்தெடுத்து வெளியில் விடுகிறதற்கேற்பட்டுது. அப்போதந்தப்பக்ஷிக்கி பெந்துக்களான வெகுபக்ஷிகள்வந்து தகைந்தபோதிலுந் தான் ஓயாமற்றுனே அந்தபக்ஷிகளேயுஞ் சகாயமாய்த்தானே யிருக்கவேண்டுமென்று பிராத்தித்துது அதுகளும் அந்தப்படி தாக்ஷணியந்தட்டாமற் சமுத்திரஜலத்தைக் கரையில் மூக்குநுனிகளினுற் கொத்திக்கொத்தி விடுகிறதற்காரம்பித்துதுகள். இப்படி யெல்லாப்பக்ஷிகளும் வெகுகாலம் வருத்தப்படுகிறதை நாரதர்பார்த்துத் தயையினுலே இந்தச் செய்தியை கெருடபகவானுக்கறிவித்து அவரைப்பக்ஷியினிடத்தில் வரும்படி யனுப்பிவித்தார். கருடபகவான் வரும்போதுதானே அவருடைய சிறகுகளினுலுண்டுபண்ணப்பட்ட வாயுவினுலேதானே சமுத்திரன்வற்றிப்போய்ப் பயந்துகொண்டு முன் தானபகரித்துக்கொண்டுபோன பக்ஷியினுடைய முட்டைகளே அந்தப்பக்ஷியின் பொருட்டுக் கொண்டுவந்து கொடுத்தானென்று கௌடபாதாசாரியாள் சொல்லியிருக்கிருள். ஆனதால், இந்தத்திருஷ்டாந்தம்போல முமுக்ஷுவானபுருஷனும் வருத்தத்தைநினேயாமல் உச்சாகத்தோடேகூடமனேநிரோதமாகிய உத்தமதருமத்தில் ஏற்பட்டுத் தியானம் பண்ணும்போது அவனுடைய வருத்தத்தைப்பார்த்துப் பரமதயாளுவாயிருக்கிற பரமசிவனனுக்கிரகம்பண்ணுவர் அதினுலே மனேநிக்கிரகஞ் சித்திக்கும். வருத்தந்தோணுமற் றியானம்பண்ணுகிறதற்குபாயமேதென்றுல்? லோகத்திற் ஜனங்கள் அன்னத்தைப்புசிக்கும்

போது அதில் - அலுப்புத்தோணுமலிருக்கிறதற்காக நடுவிலே கறி குழம்பு, ரசம், பச்சடி, முதலானதைச் சேர்த்துக்கொண்டு அன்னத்தை யெப்படிப் புசிக்கிறார்களோ அப்படிப்போலத் தியானம்பண்ணுகிற புருஷனும் அதில்- அலுப்புவாராம லிருக்கிறதின்பொருட்டு நடுவில் அதற்கனுகூலமான வியாபாரத்தைப் பண்ணிக்கொள்ளவேண்டும். அந்தப்படி வாசிட்டத்திற் சொல்லியிருக்கிறது.

அதேதென்றால்? ஒருநாழிகையாகட்டும், ஒருமுகூர்த்தமாகட்டுஞ், சக்தியுள்ளமட்டுக்கும் முந்தித் தியானம்பண்ணிப் பின்பு ஒருமுகூர்த்தம் வரைக்குஞ் சாஸ்திரசிரவணத்திலுலே தாகைட்டுஞ், சிசுருடையிலுலேதாகைட்டுங், குருவையனுசரித்துப் பிற்பாடு ஒரு முகூர்த்தம்வரைக்குந் தன்னுடைய தேகஸ்திதியைப் பார்த்துக்கொண்டுபின்னொரு முகூர்த்தம்வரைக்குந் தியானத்துக்கந்தரங்கமான சாஸ்திரத்தைப் பரியாலோசனை பண்ணிப்பார்த்துத் திரும்பவுந் தியானத்தை ஒருமுகூர்த்தம் அப்பியாசிக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறது. இப்படித் தியானத்தை முக்கியமாய்வைத்துக்கொண்டு குருசிசுருடை சாஸ்திர சிரவணமுதலான வியாபாரத்தையும் நடுவிற் கலந்துகொண்டு தியானத்தை யப்பியாசிக்கும்போது நித்திரைக்கு முன்னேடேஇன்றையதினத்தில் இவ்வளவுமுகூர்த்தம்வரைக்குந் தியானம்நடந்துதென்றெண்ணிக் கணக்குப்பண்ணிக்கொள்ளவேண்டும். அதற்கு மறுதினத்திலாகட்டுங். மறுபக்ஷத்திலாகட்டும், மறுமாசத்திலாகட்டும், தியானமுகூர்த்தத்தை வளர்க்கவேண்டும். இப்படி யெவ்வொருதியானமுகூர்த்தத்தில் ஒவ்வொரு க்ஷணஞ்சேர்ந்தாலும் ஒருவருஷகாலத்துக்குள்ளே தியானமுகூர்த்தம் அதிகமாகிவிடும். இப்படியாயுள்ளவிற் றியானமுகூர்த்த வளருகிறதிலுலே இதரவியாபாரங்களெல்லாம் இல்லாமற்போமே யென்று சங்கிக்கவேண்டியதில்லை. ஏனென்றால்? சகலவியாபாரங்

களும் இல்லாதவனுக்கே தியானத்தில் முக்கியாதிகாரமானதால் இதரவியாபாரங்களில்லாமை இஷ்டந்தான். இதற்காகவே வித்துவச்சந்நியாசஞ் சுருதிகளினுலே விதிக்கப்பட்டிருக்கிறது. ஆனபடியினுலே தியானமாத்திர நிஷ்டையை யுடைத்தான புருஷன் கிரமமாக மனோவிகார நிரோதத்தையடைவன். அதெப்படிப்போலவென்ருல்? வேத அத்தியயனம்பண்ணுகிற பிரமச்சாரி தினங் கொஞ்சம் விழுக்காடு அத்தியயம்பண்ணிப் பத்து பன்னிரண்டு வருஷத்துக்குள்ளே தாந்தானே பிறருக்கு அத்தியயனஞ் சொல்லிவைக்கும்படியான சாமர்த்தியத்தையடைந்து எப்படி வாத்தியாராக ஆகிருனே யேழையாயிருக்கிறசெட்டி ஜாக்கிரதையாய் வியாபாரம்பண்ணும்போது கிரமமாய்ச் சிலநாளையில் மேன்மேல்ப் பணம்வளர்ந்து எப்படி லக்ஷப்பிரபாகிருனே அப்படி அவர்களோடேகூடத் தியானத்திற்காரம்பித்து அந்தப்பிரமச்சாரி செட்டிகளை யெதிரிகள்போலே பாவித்துக்கொண்டு விடாமற் றியானம் பண்ணிக்கொண்டுவந்தால் பத்துப் பன்னிரண்டுவருஷத்துக்குள்ளே என் மனோவிகாரநிரோதஞ்சித்திக்கமாட்டாது சித்திக்கவே சித்திக்கும். ஆனதால், அடிக்கடிவரப்பட்ட மனோவிகாரங்களையெல்லாம் உத்தாலகர்போலப்புருஷமுயற்சியினுற் ஜெயித்து நானின்னுனுடைய புத்திரன் நான் இன்னுனென் றிதுமுதலான விசேஷ அகங்காரத்தை யுபாதியாயுடைத்தான ஞானத்மாவினிடத்தில் மனதை யடக்கவேண்டும். இந்த விரண்டாம்பூமியைச் ஜெயித்துக்கொண்டு பாலன்போலவும், ஊமைபோலவும், மனோவிகாரமில்லாமற் சுபாவமாய்ச் சித்தித்தபிறகு ஞானத்துமாவை மகாத்துமாவினிடத்தில் அடக்கவேண்டும். அதாவதேதென்ருல்? நானிருக்கிறேனென்று இவ்வளவுமாத்திர முண்டாகிற அகங்காரஞ் சாமான்னிய அகங்காரம். அது சகலமானபேர்களிடத்திலும் வியாபித்துக்கொண்டிருக்கிறபடியினுலே அதற்கு மகத்துவமென்றும் பெயர் அந்த அகங்காரத்தை யுபாதியாயுடைத்தா

னஆத்துமா மாகாத்துமா அந்தச் சூக்ஷமமான சாமான்னிய அகங்காரத்தோடே கூடின மகாத்துமாவினிடத்தில் ஸ்தூலமான விசேஷ அகங்காரத்தை அடக்குவது மூன்ஞம்பூமி. கொஞ்சமயக்கத்தை யடைந்த புருஷனுக்கு விசேஷ அகங்காரமானது தனக்குத்தானே எப்படி அடங்கிப்போகிறதோ; அப்படி மயக்கமுன்றியிற்றுனே அகங்காரம் மறக்கவேண்டுமென்று செய்யப்பட்ட தியானியினுடைய முயற்சியினுலே விசேஷ அகங்காரம் அடங்கிப்போகும். இப்படி லோகப்பிரசித்தமான மயக்கத்துக்குச் சமானமாயுந், தார்க்கீகாளுக்குச் சம்மதமான நிர்விகற்பஞானத்துக்குச் சமானமாயும், இருக்கிற மகதத்துவமென்று சொல்லப்பட்ட சாமான்னிய அகங்காரமாத்திரமாய்மிஞ்சுவதாகிய மூன்ஞம்பூமி அப்பியாசபெலத்தினுலே நன்ஞய்ச் சுவாதீனப்பட்டபிறகு அந்தச்சாமான்னிய அகங்காரத்தோடேகூடினமகாத்துமாவை யொருபாதியுமன்றியில் நிருபாதிகராய்ச் சின்மாத்திர சொரூபராயிருக்கிற சாந்தாத்துமாவினிடத்திலடக்கவேண்டும். மகதத்துவத்தையு மடக்கிப்போட்டுச் சுத்தமாய் விக்ஷேபம் ஆவரணமன்றியிற் சின்மாத்திரமாக மிஞ்சவேண்டுமென்று தாற்பரியார்த்தம். இந்தநாலுபூமிகளுங் கிடைக்கிறதற் கெந்தவிதமும் மனேவிகாரங்கலை மறக்கடித்துப் போடுவோமென்கிற முயற்சியே முக்கியமான உபாயம். இப்படிக் கிராமமாக முயற்சிபண்ணும்போது சாஸ்திரம் படிக்க ஆரம்பித்த புருஷனுக்கு முந்திக் கிரந்தத்துக்குக்கிரந்தம் வியாக்கியானம் வேண்டியிருந்தாலும் சிலநாட் சாஸ்திராப்பியாசம் பண்ணி விற்பத்தியுண்டானபிறகு தனக்குத்தானே மேன்மேல்க் கிரந்தமெப்படித்தோணுகிறதோ அப்படிக் கீழ்ப்பூமியில் ஆலசியமில்லாமல் வருத்தப்பட்டுச் செம்மையாய் அப்பியாசம்பண்ணிக் கீழ்ப் பூமிவசப்பட்டால் அதினுலே மேல்ப்பூமிகிடைக்கும்படியான உபாயந்தனக்குத்தானேதோணும். அந்தப்படியோகபாஷியக்காராள் சொல்லியிருக்கிறுள். ஆனதால், தியானம்பண்ணும்போது எப்படிப்பட்ட

விக்கினம்வந்தாலும் மலைத்துப்பயந்துகொண்டு நடுவிற்றியானத்தை விட்டுவிடாமல் உத்தாலகரைப்போல மஹாதயிரியத்தோடேகூடத் தியானம்பண்ணினால் எவ்விதமும் பரமேசுரானுக்கிரகத்தினாலே நிர்விகற்பசமாதிகிடைக்குஞ் சந்தேகம் லேசமுமில்லை.

கீழ்ச்சொன்ன வாக்குமுதற் சாந்தாத்துமாவரைக்கும் ஒன்றைக்காட்டிலுமொன்று ஆந்தரமாயிருக்கும். அதெப்படி யென்றால்? சாந்தாத்துமா எல்லாத்திற்கும் ஆந்தரராய்ச் சின்மாத்திரசொரூபராயிருக்கிறார். அவரிடத்திற் சடமாய் அவ்வியத்தமாய் ஒறக்ஞானங்கற்பிதமாயுண்டு. அந்தஅவ்வியத்தமானஅக்ஞானம் முந்திச் சாமான்னிய அகங்காரமென்கிற ரூபத்தையும், மகதத்துவமென்கிற நாமத்தையுந், தறித்துக்கொண்டு வியத்தமாகிறது. பின்பு அதற்குப்பாகியத்தில் விசேஷஅகங்காரரூபமாகவும், அதற்குப்பாகியத்தில் மனோரூபமாகவும், அதற்குப்பாகியத்தில் வாக்குமுதலான இந்திரியமாகவும், வியத்தமாகிறது. அந்தப்படி கடவல்லியுபநிடதத்திற்றானே சொல்லியிருக்கிறது. ஆனதால்; சாந்தாத்துமாவைத்தொட்டு வாக்குவரைக்கும் பாகியமானவொன்றொன்றை ஆந்தரமான வொன்றொன்றி லடக்கிக்கொண்டுவரும்போது சர்வாந்தரரா யிருக்கிற சாந்தாத்துமாவினிடத்திற் சமாதிகிடைத்துச் சொரூபானந்தாநுபவங்கிடைக்கும்.

சங்கை ? மகதத்துவத்துக்குஞ், சாந்தாத்துமாவுக்கும், நடுவிலே மகதத்துவத்துக் குபாதானமாக அவ்வியத்தமான அஞ்ஞானஞ் சுருதியிற் சொல்லப்பட்டிருக்கிறதே; அதனிடத்தில் என் மனதிற்கடக்கஞ் சொல்லவில்லையென்றால்? சுழுத்திவந்து நேரிடுமென்றுசொல்லவில்லை. தினந்தோறும் ஒருமுயற்சியுமன்றியிற் கிடைக்கிற சுழுத்திக்காக ஒருநிஷ்டையும் வேண்டுமோ; வேண்டியதில்லை. சுழுத்தி சொரூபசமாதிக்கிப் பிரதிபந்தமென்று மேற்சொல்லப்போகிறோம். ஆனதால், அந்தச்சுழுத்திக்கேதுவான பூமியைச்சொல்லவில்லை.

சங்கை? சவிகற்பசமாதி ஏகாக்கிரவிர்த்தி ரூபமானதாற் சொரூபாநுபவத்திற் கேதுவாகலாம். சாந்தாத்துமாவினிடத்திலடக்கப்பட்டு நிர்விகற்பசமாதியை யடைந்திருக்கிற மனது ஒருவிர்த்தி யுமில்லாததினுலே சுழுத்தியைப்போற் சொரூபாநுபவத்திற்கேது வாகமாட்டாதென்று சங்கைவந்தா லெப்போதுஞ் சுபாவமாய்ச் சித்தித்திருக்கிற சொரூபாநுபவத்தை யொருவராலுந் தள்ளக்கூடாதபடியினுலும், நிர்விகற்பசமாதியில் மனது சமஸ்காரமாத்திரமாகிய சூக்ஷமரூபமா யிருக்கிறபடியினுலும், அந்தச்சங்கைகூடாது, அந்தப்படி சிரேயோமார்க்கமென்கிறகிரந்தத்திற் சொல்லியிருக்கிறதே தென்றுல்? மனதானது சுபாவமாய் ஆத்துமாகாரமாவும், அனுத்துமாகாரமாகவும், யெப்போதுமிருக்கிறது. அதினுல், அனுத்துமாகாரம்நீங்கி ஆத்துமாகாரமாத்திரமா யிருக்கிறதற்காக முமுக்ஷுவானவன் அனுத்துமாகாரம் நீங்கும்படியான முயற்சிபண்ணவேண்டுமேயொழிய ஆத்துமாகாரஞ் சித்திக்கவேண்டுமென்று யாதொருமுயற்சியையும்பண்ணவேண்டியதில்லை. லோகத்திலே எப்படியானுல்; கடமுண்டாகச்சே ஆகாசத்தினுலே நிரம்பினதாகவேயுண்டாகிப்பின்பு புருஷமுயற்சியினுலே அரிசி ஜல முதலானதால் நிரம்பப்படுகிரதோ; அந்தக்கடத்தில் அரிசி முதலானதைத் தள்ளிவிட்டபோதிலும் அதிலிருக்கப்பட்ட ஆகாசத்தைத்தள்ளச் சக்தியில்லையோ; கடத்தினுடைய முகத்தைத் துணிமுதலானதால் மறைத்துப்போட்டாலும்; ஆகாசமுள்ளே யிருக்கவேயிருக்கிறதோ; அப்படிப்போல மனதுண்டாகச்சே ஆத்துமசை தன்னியத்திஞலே நிரம்பினதாகவே யுண்டாயிற்று. உண்டானபிறகு அந்தமனதிற் புருஷனுடைய தருமாதருமவசத்தினுலே கருவிலுருக்கி யூத்தப்பட்ட தாம்பிரமுதலானது போற் கடபடாதியாகார மாகவுஞ், சுகதுக்காதியாகாரமாகவும், விர்த்தியுண்டாகிறது. அதில் கடபடாதியனுத்துமாகாரத்தை நீக்கின போதிலும் ஒருநிமித்தமுமன்றியிற் சொதசித்தமாயிருக்கிற சின்மாத்

திரூபமான ஆத்துமாகாரத்தை மனதுள்ளவரைக்கும் ஒருக்காலும் ஒருவராலும் நினைக்கக்கூடாது. ஆனபடியினாலே நிர்விகற்பசமாதியினால் அனாத்துமாகாரமான ஒருவிர்த்தியு மில்லாவிட்டாலும் மனது சமஸ்காரமாத்திரமாகிய சூக்ஷுமரூபமாக மிஞ்சிச் சின்மாத்திர ஆத்துமாகாரமாய் ஏகாக்கிரமாயிருக்கிறபடியினாலே அப்படிப்பட்ட மனதினாலே யொருபிரதிபந்தமுமன்றியில் நிருவிக்கினமாகச் சின்மாத்திராத்தும சொரூபாநுபவம் வெகுநன்றாய்க் கூடலாமென்று சொல்லியிருக்கிறது. அந்தப்படி வார்த்திகாசாரியாள் சர்வாநுபவ யோகிமுதலானபெரியவாள் வெகுபேர்கள் வெகுவாய்ச்சொல்லியிருக்கிறார்கள். ஆனதால்; ஆத்துமாநுபவம் மனதிற்குச்சொதசித்தமாயிருந்தாலும் அனாத்துமாகாரத்தை நீக்கிறதற்காகத் தியானாப்பியாசம் வேண்டியதென்று சித்தமாச்சுது. தியானாப்பியாசத்தினாற் கிரமமாக நிற்விகற்பசமாதிகிடைக்கும்போது அனாத்துமாகாரம் நீங்கிப் போகும். ஆனதால்; அந்தச்சமாதி கிடைத்தபிறகு ஒன்றையும் நினைக்கக்கூடாது. நிர்விகற்பசமாதியினாற் சுத்த துவம்பதார்த்த சாக்ஷாத்காரம்வந்தாலும் அந்தத் துவம்பதார்த்தத்திற்குச் சுத்ததற்பதார்த்தத்தோடே அபேதத்தை விஷயீகரிக்கும்படியான பிரமவித்தையென்கிறவிர்த்தி யெதினாலுண்டாகுமென்றால்? முன்சிரவணம்பண்ணப்பட்டிருக்கிற மஹாவாக்கியத்தினால் அந்தப்பிரமவித்தையென்கிறவிர்த்தி யுண்டாகும். சுத்த துவம்பதார்த்த சாக்ஷாத்காரத்தில் நிர்விகற்பசமாதியொன்றே ஏதுவென்று நியமங்கிடையாது சிற்சடவிவேகத்தினாலேகூடச் சடமான சரீராதியைக்காட்டிலுந் தற்சாக்ஷியாயிருக்கிற சின்மாத்திர சுத்த துவம்பதார்த்தம் வேறென்று பிரிக்கும்போது அதின் சாக்ஷாத்காரங் கூடலாம், அந்தப்படி வாசிட்டத்திற் சொல்லியிருக்கிறது. அதேதென்றால்? யோகமென்றும், ஞானமென்றுஞ், சித்தநாசம் வருகிறதற்கிரண்டுபாயம். அதில்-சித்தவிர்த்தி நிரோதம்பண்ணுவது யோகம். சிற்சடரூபங்களான ஆத்துமா

ஹத்துமாக்களை நன்றாய்ப் பிரித்துப்பார்ப்பது ஞானம். அதில் சில பேர்களுக்கு யோகஞ்சாத்தியமாய்த்தோன்றும். சிலபேர்களுக்கு ஞானஞ் சாத்தியமாய்த்தோன்றும். யெவர்களுக்கெதில் ருசியுண்டாகிறதோ; அவாள் அதையனுஷ்டிக்கட்டுமென்று பரமேசுரன் இரண்டு பிரகாரத்தையுஞ் சொல்லியிருக்கிறாரென்று வாசிட்டத்திற்சொல்லியிருக்கிறது.

சங்கை? சிற்சடவிவேகமும் அனுபவகாலத்தில் ஆத்மாமாத்திரங் கோசரமான யேகாக்கிரவிர்த்திரூபமா யாகிறபடியினாலே யந்த விவேகஞ் சணிகசவிகற்பசமாதியாகலாமே? ஆனதால், விவேகமும் யோகமாகவேயாகிறபடியா லிரண்டுக்கும் பேதமில்லை. ஏனென்றால்? பேதமுண்டு. அதெதினாலென்றால்? அந்தச் சவிகற்பசமாதிக்கும், நிர்விகற்பசமாதிக்குஞ், சொரூபத்தினாலுஞ், சாதனத்தினாலும், நிரம்பப்பேதமுண்டு. அதினால் நிர்விகற்பசமாதியாகிய யோகத்துக்கும், விவேகத்திலுண்டாகிற சணிகசவிகற்ப சமாதிக்கும், பேதந்தான். அதேதென்றால்? சவிகற்பசமாதியில் விர்த்தியிருக்கிறபடியினாலேயும், நிர்விகற்பசமாதியில் விர்த்தியில்லாததினாலேயுஞ், சொரூபத்தினாலே இரண்டு சமாதிகளுக்கும் பேதம் நன்றாயுண்டு. இரண்டுகளுக்குஞ் சாதனத்தினாலே பேதமாவதேதென்றால்? சவிகற்பசமாதிக்கித் தாரணை, தியானஞ், சமாதி மூன்றும். விர்த்தியோடேகூடினதுகொண்டு ஸஜாதீயமானதால் அந்தமூன்றும் அந்தச்சமாதிக்கி அந்தரங்கசாதனம். நிர்விகற்பசமாதியில் விர்த்தியில்லாததினாலே விர்த்தியோடேகூடின அந்தமூன்றும் இந்தச்சமாதிக்கிப் பகிரங்கசாதனமானதால், இரண்டு சமாதிகளுக்குஞ் சாதனத்தினாலேயும் பேதமுண்டு. விர்த்தியில்லாத நிர்விகற்பசமாதிக்கி விர்த்தியோடேகூடின தாரணைமுதலான மூன்றும் விஜாதீயமானதால், அதற்கு அதுபகிரங்கசாதனந்தான். எப்படியாகுமென்றால்? வெகு விதமான

அனுத்தமவிர்த்திகளைத்தள்ளி உபகாரம் பண்ணுகிறபடியாற் பகிரங்கசாதனமாகலாம். அந்தப்படி பதஞ்சலிபகவான் சொல்லியிருக்கிறார். அதேதென்றால்? யோகமென்றுசொல்லப்பட்ட கீழ்ச்சொன்ன நிர்விகற்பசமாதி சர்வோத்தமமென்று கீதைமுதலான சாஸ்திரத்தைக் கேட்டதினாலே நமக்கந்தயோகமே பரமபுருஷார்த்தசாதனமென்று விசுவாசமுண்டாகும். அந்தவிசுவாசமாகிய சிரத்தையினாலே யெவ்விதமும் யோகத்தைச் சம்பாதிப்போமென் றுச்சாகமுண்டாகும். அதினாலே சாஸ்திரத்திற் சொல்லப்பட்ட யோகங்களை நினைத்துக் கொண்டு அந்த நினைவினாலே சமாதியை நன்றாயனுஷ்டிக்கிறபோது சித்தம் நிருமலமாய் ரிதம்பரப் பிரக்ஞையென்று சொல்லப்பட்ட ஞானமுண்டாகும். அதாவதேதென்றால்? சூக்ஷுமமாயுந் தூரத்திலிருக்கப்பட்டதாயு மிந்திரியகோசரமன்றியிற் குட்டியமுதலானதால் மறைக்கப்பட்டதாயு மிருக்கிற சகலவஸ்துவையும் பிரத்தியக்ஷமாய் அறிகிறஞானமே ரிதம்பரப்பிரக்ஞையென்று சொன்ன ஞானம். அந்தரிதம்பரஞானமும்; விகற்பத்தோடே கூடினதுகொண்டு நிர்விகற்பசமாதிக்கிப் பிரதிபந்தம். ஆனதால், அந்தஞானமும் இந்த நிர்விகற்பசமாதியிற் பகிரங்கசாதனமேயொழிய அந்தரங்கசாதனமன்று. அப்படியிருக்கச் சவிகற்பசமாதி பரிபாகத்தினாலுண்டாகிற அந்த ரிதம்பரஞானத்துக்குக் கீழ்ப்பட்டதாரணை முதலானது நிர்விகற்பசமாதியிற் பகிரங்கசாதனமென்கிறதிற் கேழ்க்கவேண்டியதென்னவென்று சொல்லியிருக்கிறார். அந்தச்சமாதிக் கந்தரங்கசாதனந்தானேதென்றால்? அந்தரிதம்பரஞானத்தை நிரோதித்ததினாற் சகலவிஷயாகாரமான விர்த்திநிரோத முயற்சி யாதொன்றுண்டோ அதுவே நிர்விகற்பசமாதியில் அந்தரங்கசாதனம். அப்படிப்பட்ட அந்தச்சமாதி சுழுத்திக்கிச் சாதனமாகச் சாக்ஷிசைதன்னியத்தினால் விளங்கப்படும். அந்தச்சமாதி யொருவிர்த்தியுமில்லாததினாற் சுழுத்திதானென்று சங்கிக்கக்கூடாது. ஏனென்றால்? சுழுத்தியில் மனது

அக்ஞானத்தில் லயித்து அதிஞகாரமாகித் தன்னுடைய சொரூபமன் றியிற்போகிறது. நிர்விகற்பசமாதியில் மனதானது நிர்விட்சேப நிராவரண பரிபூரண பரமானந்த பிரத்தியகபின்ன பிரமசொரூபத்திற் சமரசப்பட்டுத் தன்னுடைய சொரூபத்தோடேயிருக்கிறது. ஆன படியாற் கீழ்ச்செய்த சங்கைகூடாது. அந்தப்படி கௌடபாதாசாரி யாள் சொல்லியிருக்கிருள். அதேதென்றால்? புருஷமுயற்சியினுல் நிரோதிக்கப்பட்டு நிர்விகற்பசமாதியை யடைந்திருக்கிற மனதினு டைய ஸ்திதி சுழுத்தியைக்காட்டிலும்; விலக்ஷணமேதவிரச்சுழுத்தி யன்று. ஏனென்றால்? சுழுத்தியில் மனது லயித்துப்போகிறதன்றே; சமாதியில் லயிக்கவில்லைப் பின்னையோவென்றால்? சர்வத்திரபரிபூ ரணமாய்ச்சுயம்பிரகாச சித்துரூபமாய் நிர்ப்பயமாய்ப் பரமானந்தரூப மாயிருக்கிற பிரமசொரூபத்திற் பாலிற்கலந்த ஜலம்போல் யேகரச மாய்க்கலந்து சொரூபானந்தாநுபவத்தில் மூழ்கி வெகுசூக்ஷமமா யிருக்கிறது. ஆனதால், சமாதியுஞ் சுழுத்தியுஞ் சமானமென்று ஒருக் காலுஞ் சொல்லக்கூடாதென்று சொல்லியிருக்கிருள். அந்தப்படி பின்னும் வெகுவிடத்திற் சொல்லியிருக்கிறது.

சங்கை? இப்படி நிர்விகற்பசமாதிக்குஞ் சுழுத்திக்கும் வெகு பேதமிருக்கட்டும் ஆனலுஞ்; தத்துவத்தையறியவேண்டுமென்றிச் சிக்கிற சிஞசுவுக்கு ஞானசாதனமாக அந்தச்சமாதி வேண்டியிருந் தாலுந்; தத்துவத்தையறிந்த வித்துவானுக்குச் சுழுத்தியினுலேதானே ராகத்துவேஷாதி கிலேசமாகிய பந்தம் நிவிர்த்தித்துப்போகிற படியினுலே ஞானிக்கிப் பந்தநிவிர்த்திக்காகச் சமாதிவேண்டிய தில்லை. ஏனென்றால்? அதுகூடாது. ஏனென்றால்? தினந்தோறுந் தனக்குத்தானே எப்போதாகிலும் வரப்பட்ட சுழுத்தி ஜாக்கிரதி சையி லநுபவிக்கப்பட்ட பந்தத்தை நீக்கிவைக்கமாட்டாது. அப்பி யாசத்தினுலே நிரந்தரமாய்ச் சம்பாதிக்கப்பட்ட சுழுத்தி பந்த

த்தை நீக்கிவைக்குமென்றுஞ் சொல்லக்கூடாது. ஏனென்றால்? ஜாக்கிரசொற்பன போகத்தைக்கொடுக்கும்படியான கருமம் நசித்து அதனால் வரும்படியான சுழுத்தி கருமநாசமன்றியிலே யெப்பேர்ப் பட்ட அப்பியாசத்தினாலும்; நிரந்தரமாய்க் கிடைக்கமாட்டாது. ஆனபடியினாலே சுழுத்தியினாற் பந்தநிவிர்த்திகூடாததினால் ஞானிக் கிப் பந்தநிவிர்த்தியின்பொருட்டு அவசியம் நிர்விகற்பசமாதி வேண் டவேவேண்டும். அந்தச்சமாதிகிடைக்கிறதற்கு ஆடுமாடு முதலா னதுபோல வாக்குவியாபார நிரோதமாகிய முந்தினபூமியும், பாலன் மூகன் முதலானவர்போல இதம்விர்த்தியாகிய மனோவியாபார நிரோதரூபமான இரண்டாம்பூமியும், மயக்கத்தைப்போல விசேஷ அகங்காரமில்லாமையாகிய மூன்றாம்பூமியுஞ், சுழுத்தியைப்போலச் சாமான்னிய அகங்காரமாகிய மகதத்துவரூபமான நாலாம்பூமியும், உபாயம். இப்படிப் பூமிக்கிரமமாக மனோநாசம் வரவேண்டுமென்கிற அபிப்பிராயத்தினாற் பகவான் கீதையில் மெள்ள மெள்ள மனதை ஓயப்பண்ணவேண்டுமென்று சொல்லியிருக்கிறார். இப்படி மனோ நாசம்பண்ணுகிறதிற் றயிரியமும், விவேகபுத்தியுஞ், சாதனம். சுபா வமாய் வெகுவேகத்தோடேகூட வெகிர்முகமாய்ப் பிரவிருத்திக்கிற மகதத்துவ அகங்கார மனோவாக்கு முதலானதுகளை நிரோதிக்கிற திற் கரைபிரண்டு பிரவேசிக்கிற நதியைத் தகைவதுபோல மஹா தயிரியம்வேண்டும். முந்தினபூமி ஜெயிக்கப்பட்டதோ இல்லையா வென்று பரியாலோசனை பண்ணிப்பார்த்துச் ஜெயிக்கப்பட்டால் மேற்பூமி யாரம்பிக்கவேண்டும். இல்லாவிட்டால் அந்த முந்தின பூமியைத்தானே திரும்பித்திரும்பிப் பழகவேண்டுமென்று இப்படிப் பட்ட விவேகமாகிய புத்தியும் வேண்டும். இப்படித்தயிரியத்தோடே கூடின விவேகபுத்தியினாலே தியானப்பியாசம் பண்ணிக்கொண்டு

வரும்போது அந்தத்தியானத்திற்குப் பிரதிபந்தமாக லயமென்றும், விக்ஷேபமென்றுங், கஷாயமென்றும், ரசாஸ்வாதமென்றும், நாலுண்டு. அந்தப்படி கௌடபாதாசாரியாள் சொல்லியிருக்கிறாள்.

அதில்-லயமாவதேதென்றால்? தியானத்தின்பொருட்டு விஷயங்களிலேநின்றுந் திருப்பப்பட்ட மனது வெகுநாட்சுழுத்திப்பழக்கத்தினாலே சுழுத்தியிற் போகுவதே லயமென்கிற பிரதிபந்தம். யெப்போ லயத்தில் மனது போகிறதோ அப்போது அந்த மனதை லயத்தில் நின்றும் வெளிக்கிளம்பும்படியான முயற்சியினாலே ஜாக்கிரதைபண்ணிவைத்துத் திரும்பித்தியானத்திற் பிரவருத்திப்பிக்கவேண்டும். முயற்சியினாலேதானே நீங்காமல் லயம் பிரபலமாயிருந்தால் அப்போ லயகாரணத்தை நீக்கி அதினால் லயத்தை நீக்கவேண்டும். நித்திரையினுடைய சேஷம், அசீரணம், அதிகபோசனம், அலைச்சல் முதலானதாற் சரீரசிரமம், இந்த நாலும் லயகாரணம். அதில்-முந்தின நித்திரையின் சேஷமாகிய லயகாரணத்தை மிச்ச நித்திரையைப் பண்ணியே நீக்கவேண்டும். அசீரணம், வெகுபோசனம் இரண்டையும் முன்புசித்த அன்னமுதலானது நன்றாய்ச் செரிக்கும் வரைக்கும் போசனத்தைத் தள்ளுகிறதினாலேயுஞ், சொற்பபோசனம் பண்ணுகிறதினாலேயும், நீக்கவேண்டும். அலைச்சல் முதலானதைவிட்டுச் சரீரசிரமத்தை நீக்கவேண்டும். இப்படி லயகாரணத்தை நீக்கும்போது லயம் நீங்கிப்போகும். அல்லது பிராணாயாமத்தினாலேயாவது லயத்தை நீக்கலாம். எவர்களுக்கெந்தமார்க்கத்தில் அப்பியாசமோ அந்தமார்க்கத்தினாலே லயத்தை நீக்கிக்கொண்டு மறுபடிமறுபடி தியானம் பண்ணவேண்டும். விக்ஷேபமாவதேதென்றால்? லயத்தினின்றுந் திரும்பப்பட்டமனது தினந்தோறும் பழகின ஜாக்கிரசமஸ்காரத்தினாலே சத்தாதிவிஷயத்திலும், அதின்போகத்திலும், நினைத்து நினைத்துக்கொண்டு பிரவருத்திப்பதே விக்ஷேபம்.

அந்தவிக்ஷேபத்தை மனதெப்போ அடைகிறதோ அப்போ விவேகி களாலறியத்தக்கதுகளான சத்தாதி போக்கியவிஷயத்தி லிருக்கப்பட்ட தோஷங்களையும், அதினுல் வரப்பட்ட துக்கத்தையுஞ், செம்மையாய் நினைத்துப்பார்த்து. சாஸ்திரப் பிரசித்தமான நிருவிகார பரிபூரண பரமானந்த பரமாத்துவைத பிரமசொரூபத்தையும், நினைத்துப்பார்த்து. அசத்தரூபமான இந்தவிஷயங் காலத்திரயத்திலுஞ் சத்தாயிருக்கிற பிரமசொரூபத்திற் சுழுத்தியிற்போல ஒருநாளு மில்லவேயில்லை யென்கிற வாததிருஷ்டியினுலே தாளுகட்டும், விஷயங்தோணினபோதிலுஞ்; சொற்பன இந்திரசாலம்போலப் பொய்யென்கிற மித்தையாதிருஷ்டியினுலே தாளுகட்டும், எப்படியாளுல்? சொற்பனத்திற் காணப்பட்ட விஷயமுழுவதும் அதைக்காணுகிற சாக்ஷியாயிருக்கிற நம்மைக்காட்டிலும் வேறன்றே; அப்படிச் ஜாக்கிரகாலத்திற் காணப்படுகிற விஷயமுழுவதும் அதைக்காணுகிற சாக்ஷிசித்தரூபமான நம்மைக்காட்டிலும் வேறன்று. பின்னையோவென்ருல்? சகல திரிசியமுங் திருக்காயிருக்கிற நாமே அப்படிப்பட்ட நாம் அகண்டேகரசமான பிரமமென்கிற தன்மயரூபமான பிறவிலாப திருஷ்டியினுலே தாளுகட்டும், அடிக்கடியுண்டாகிற சகலவிக்ஷேபத்தையும் வெகு ஜாக்கிரதையாய் நாசம்பண்ணித் திரும்பித்திரும்பித் தியானம் பண்ணவேண்டும்.

கஷாயமாவதேதென்ருல்? மனதை லயத்திலும் விடாமல் விக்ஷேபத்திலும் விடாமல் நிரோதித்துத் திடமாய்த் தியானம் பண்ணும்போது அந்த மனது தீவிர ராகத்துவேஷாதி வாசனையினுலே சமாதியிற்போல லயவிக்ஷேபமன்றியிற் றுக்கத்தில் மூழ்கி ஏகாக்கிரமாயிருக்கும். அந்தத் துக்கத்தில் ஏகாக்கிரமான அவத்தையே கஷாயம். அதையும் விவேகபுத்தியினுலே சூக்ஷமமாய்ப்பார்த்துச் சமாதியென்று மலையாமற் றள்ளிப்போட்டு மறுபடியுங் தியானம்

பண்ணவேண்டும். அந்தக்கஷாயத்தைத் தள்ளுகிறதற் குபாயமே தென்றால்? விக்ஷேபநாசத்திற்குச் சொன்ன உபாயமே யதற்கு முபாயம்.

ரசாஷ்வாதமாவ தேதென்றால்? சமாதியினுடைய ஆரம்ப காலத்திற் சவிகற்பமாக உண்டாகிற ஆனந்தாநுபவமே ரசாஷ்வாதம். அந்த விகற்பத்தோடேகூடின ஆனந்தாநுபவத்திற்றானே மனதிருந் துவிடாமல் அதையும் விவேகபுத்தியினாற் றள்ளி நிருமலப்பிரக் ஞையோடேகூடத் தியானம் பண்ணவேண்டும். இப்படி வெகுகா லந்தியானப்பியாசம்பண்ணும்போது அந்தத் தியானபரிபாகத்தினா லும், ஈசுரானுக்கிரகத்தினாலும், லய விக்ஷேப கஷாய ரஷாஷ்வாத ரூபங்களான பிரதிபந்தங்கள் நாலுகளுந் தள்ளுப்பட்டு மனது சம மான நிஷ்டையை யடையும். அப்படி சமமான பிரமசொரூபத் தில் மனது நிஷ்டையையடையும்போது இந்த நிஷ்டையும் லயமோ; கஷாயமோ; வென்று மயங்கி இதைவிட்டு மனதைக் கலைத்துவிடா மல் வெகுசூக்ஷுமமான புத்தியினாலே கீழ்ச்சொன்ன லயாதிபிரதிபந் தம் இப்படிப்பட்டதென்றும், அதற்குவிலக்ஷணமான சமசொரூபநிஷ் டை இப்படிப்பட்டதென்றும், நன்றாய்ப் பிரித்துப்பார்த்து அறிந்தந்த நிஷ்டையிற்றானே வெகுமுயற்சியினாலே மனதை நிறுத்தவேண்டும். அப்படி நிறுத்தப்பட்ட அந்தமனதிற் பிரமசொரூபமான பரமானந் தம் நன்றாயாவிற்பவிக்கும். அந்தப்படி கீதையிற் சொல்லியிருக்கி றது. சுருதியிலுஞ் சொல்லியிருக்கிறது. அதேதென்றால்? தியா னஞ் சமாதிகளினாலே சகலபிரதிபந்தமும் நீங்கி ஆத்துமசொரூபத் தில் நிறுத்தப்பட்ட மனதிற்கு யாதொருபரமானந்தமுண்டோ; அந்த ஆனந்தம் இப்படிப்பட்டதென்று வாக்கினாற் சொல்லக்கூடாதபோ னாலும்; அக்காலத்தில் அந்த ஆனந்தம் நிர்விகற்பசமாதியையடைந்த சூக்ஷுமமான மனதினாலே நன்றாயநுபவிக்கப்படுமென்று சொல்லி யிருக்கிறது.

சங்கை? சமாதியில் ஆவிற்பவித்த பிரமானந்தம் மனதினுலே யநுபவிக்கப்படுமென்று சுருதிஸ்மிருதிகளினுலே சொல்லப்படுகிறதே; கௌடபாதாசாரியாள் சமாதியில் ஆனந்தத்தைப் புத்தியினுலே யநுபவிக்கக்கூடாதென்று சொல்லியிருக்கிறுர்களே; ஆனதாலொன்றுக்கொன்று விரோதம்வருகிறதேயென்றுல்; அப்புடிவர வேண்டியதில்லை. ஏனென்றுல்? அந்த ஆசாரியாள் நிர்விகற்பசமாதியில் மனதினுலநுபவிக்கத்தக்கதான நிர்விகற்ப பிரமானந்தத்தை யநுபவிக்கக் கூடாதென்று நிஷேதிக்கவில்லை. பின்னையோவென்றுல்? அந்தச்சமாதிக்கி விரோதமாயிருக்கப்பட்ட சவிகற்ப ஆனந்தாநுபவத்தை நிஷேதிக்கிறுர்கள். அதெப்படியென்றுல்? வெயிற்காலத்திலே நடுமத்தியானவேளையிலே கங்கையினுடைய மடுவிலேமூழ்கியிருக்கிற புருஷனுலே யநுபவிக்கப்பட்ட சைத்தியசுகம் அந்தக்காலத்தி லிப்படிப்பட்டதென்று சொல்லுகிறதற்கு அருமையானுலும் அந்தக் கங்காஜலத்தைவிட்டு வெளிக்கிளம்பினபிறகு அந்தச்சைத்தியசுகம் இப்படிப்பட்டது அப்படிப்பட்டதென்று சொல்லும்படியாயிருக்கிறதோ; இல்லை. அதெப்படியானுல்? சுழுத்தியிற் சூக்ஷுமமாயிருக்கிற அவித்தையாவிர்த்தியினுலே சொரூபசுகம் அநுபவிக்கப்பட்டபோதிலும்; அப்போது அந்தச்சுகஞ் சவிகற்பமான அந்தக்கரணவிர்த்தியில்லாததினுலே சவிகற்பமா யநுபவிக்கிறதற்கு யோக்கியமாகாவிட்டாலுஞ் சுழுத்திபோய்ச் ஜாக்கிராவத்தை வரும்போது சவிகற்பவிர்த்தியினுலே ஸ்புடமாய் நினைக்கப்படுகிறதோ; அப்படிப்போலச் சமாதியில் விர்த்தியில்லாமற் சமஸ்காரமாத்திரமாய் மிஞ்சியிருக்கிற பிரமாகாரமான சூக்ஷுமமனதினுலே சொரூபானந்தாநுபவங் கூடுமென்று சுருதிஸ்மிருதிகளினுலே சொல்லப்பட்டபடிக்கிக் கௌடபாதாசாரியாளுக்குஞ் சம்மதமே. சமாதியைவிட்டு மனது வெகிர்முகமாகி அகோ மகத்தான இந்தச்சமாதிச்சுகத்தை யநுபவித்தோமென்று சவிகற்பமா யாதொரு சுகாநுபவமுண்டோ அது நிர்விக

ற்பசமாதிக்கி விரோதமானதால் அதைமாத்திரம் அந்த ஆசாரியாள் நிஷேதித்திருக்கிறார்கள். ஆனபடியினாலே யாதொரு விரோதமு மில்லை. அந்தப்படி அவாளே மேற்கிரந்தத்திற் சமாதியில் மஹா சுகத்தை யநுபவித்தோமென்றும், அப்படிப்பட்ட சுகத்தைக் கூடச் *சகவாசம்பண்ணுகிற தியானிகளுக்குச் சொல்லவேண்டுமென்றும், உண்டாகிற சித்த விகற்பத்தையெல்லாம் விட்டுவிட வேண்டுமென் றும், குளிர், காற்று, கொசுகு, முதலான உபத்திரத்தினாற்றானகட் டும், ரசாஷ்வாதத்தினாலே தானகட்டும், பிரமானந்தத்தினாலே மூழ் கியிருக்கிற மனது சொரூபத்தைவிட்டுப் பிரிந்து சலித்துதேயானால் உடனேயந்தமனதை நிச்சலமாகப் பிரமசொரூபத்திற் கலந்து ஏகரச மாகும்படி செய்யவேண்டுமென்றுஞ், சொல்லியிருக்கிறார்கள். அப் படிச்செய்கிறதில் நிரோதமுயற்சியே சாதனம். இப்படிக் கௌட பாதாசாரியாள் நாலுபிரதிபந்தங்களையும், அதுகள் நிவிர்த்திக்கிறதற் குபாயத்தையுஞ், சொன்னார்கள். ஸ்ரீ சங்கராசாரியாள் அபரோ க்ஷாத்மாநுபூதிப் பிரகரணத்திற் சமாதிப்பிரதிபந்தம் ஒன்பதுவித மென்று சொல்லியிருக்கிறாள்.

அதேதென்றால்?

1. தியானத்துக் குட்கார்ந்தவுடனே சொரூபாநுசந்தானம் மறந்துபோகுவது.

2. பிற்பாடு தியானம்பண்ணிக்கொள்ளுவோமென்று சோம் பலுண்டாகுவது.

3. போகத்திலிச்சையுண்டாகுவது.

4. தூக்கம்வருகுவது.

---

* சாவாசமென்றும்-பாடம்.

5. அந்தகாரந்தோன்றுவது.

6. நானாவித விஷயங்களை நினைத்து நினைத்து மனது அலைவதாகிய விக்ஷேபமுண்டாகுவது.

7. வெளிச்சந்தோன்றுவது.

8. வேர்வையுண்டாகுவது.

9. சகலதிரிசியத்தையுந் தள்ளினால் அதற்கு விலக்ஷணமாய் ஒருசொரூபத்தையுங் காணேமென்கிற சூன்யபுத்தியுண்டாகுவது.

என்றிப்படிச் சமாதியிலொன்பதுவிதப்பிரதிபந்தமுண்டு. அந்த ஒன்பதுவிதப் பிரதிபந்தத்தையுஞ் சிரவணமனனங்களினாலே பிரம சொரூபம் இப்படிப்பட்டதென்று சமுசயம் லேசங்கூடயில்லாமல் உண்டாயிருக்கப்பட்ட நிச்சயத்தினாலும், எவ்விதமும் நிர்விகற்பசமாதியினாலே அப்பிரதிபந்த அபரோக்ஷ சாக்ஷாத்காரத்தைச் சம்பாதித்துப்போடுவோமென்கிற உச்சாகத்தினாலும், அந்தந்தப் பிரதிபந்தம் போகிறதற்கு யுக்தமான உபாயத்தாலும், மெள்ள மெள்ளத் தள்ள வேண்டுமென்று ஸ்ரீ சங்கராசாரியாள் சொல்லியிருக்கிறாள். உத்தாலகரைவிடப் பின்னொருவருக்குச் சமாதிப்பிரதிபந்தம் உண்டாகப் போகிறதா இல்லை. சகலபிரதிபந்தமுங் கீழ்ச்சொன்ன லயாதிநாலுகளுக்குள்ளே அகப்பட்டதுதான். ஆனதால், லயாதிகளைநீக்கி ரக்ஷிக்கப்பட்ட மனது நிர்விக்கினமாக நிர்விக்ஷேப நிராவரண பரிபூரண பரமானந்தமான பிரமசொரூபத்தில் நிஷ்டையையடையும். அந்தநிஷ்டையே யோகம். அதுவே ஞானம் அதுவே ஜீவன்முக்தி. அதுவே கருமம், உபாசனை, சிரவணாதியப்பியாசம், அடயோகாப்பியாசம், சகலத்திற்கும் பலம். அதுவே சகல சுருதி ஸ்மிருதி இதிகாச புராணங்களுடைய தாற்பரியம் முடிந்தவிடம். அதுவே பரமசிவன்

முதலான பேர்களுடைய அநுபவம். அந்த நிஷ்டையையடைந்த பிறகு பின்னுமொன்றும் அடையவேண்டியதுகிடையாது. ஆனதால், அந்தநிஷ்டையை எவ்விதமும் முமுக்ஷுவானபுருஷன் அடையவேண்டும். அப்படி யடைந்தவனே கிருதார்த்தன். அவனுடைய ஜன்மமே ஸபலம். அவன் ஞானபுருஷன். அந்தப்படி சகலபிரமாணமுங் கோஷிக்கிறது.

இந்தநிர்விகற்ப நிஷ்டையே யோகமென்று பதஞ்சலிபகவான் யோகசூத்திரத்திற் சொல்லியிருக்கிறார். அந்தயோகத்திற்கு லக்ஷணமேதென்றால்? சகலசித்தவிர்த்திகளுடைய நிரோதமே லக்ஷணம். அதற்குச் சாதனமேதென்றால்? அப்பியாசவைராக்கியங்களே சாதனம். அதில் - அப்பியாசமாவ' தெப்படிப்போலவென்றால்? வெகுவேகத்தோடேகூடின நதியினுடைய பிரவாகத்தை அணைக் கட்டினாற் றகைந்து அந்தச் ஜலத்தை வாய்க்காலிலேதிருப்பி வயலுக்கு நேராகக் குறுக்கேபின்னொரு பிரவாகம் உண்டுபண்ணப்படுகிறதோ; அப்படி வைராக்கியத்தினாலே சித்தநதியினுடைய விஷயத்திற்போகிற விர்த்திப்பிரவாகத்தைத் தகைந்து சமாதியப்பியாசத்தினாலே ஆத்மாஅபிமுகமாக நிரோதமென்று சொல்லப்பட்ட சாந்திப்பிரவாகத்தைச் சம்பாதிக்கிறதே யப்பியாசம்.

சங்கை? மந்திரசெபந் தேவதாத்தியான முதலானது கிரியாரூபமானதால் அதற்குத் திரும்பித்திரும்பி ஆவிர்த்திபண்ணுவதாகிய அப்பியாசங்கூடும் சர்வவியாபாரத்தினுடையநிரோதரூபமான சமாதிக்கி அப்பியாசமாவதேதென்றால்? தனக்குத்தானே வெகிர்முகமான விரத்திப்பிரவாகத்தையுடைத்தான சித்தத்தைச் சர்வப்பிரகாரத்தினாலுந் தகைவோமென்கிற உச்சாகத்தைத் திரும்பித் திரும்பி ஆவிர்த்திபண்ணுவதே சமாதியினுடைய அப்பியாசம்.

சங்கை ? இந்தஜன்மத்திற் செய்யப்பட்ட இந்த அப்பியாசந் திடமாகாததினல் அனுதிகாலத்தைத்தொட்டுப் பிரவருத்தித்திருக்கிற சமாதிவிரோதமான வெகிர்முகவாசனைகளை எப்படியடக்குமென்ருல் ? வெகுகாலம்வரைக்கும் இடைவிடாமல் ஆதரவோடேசமாதியப்பியாசம் பண்ணப்பட்டால் அப்போ அது திடமாகி அனுதி வெகிர்முகவாசனைகளை யடக்கும். அப்படியில்லாவிட்டால் அதுகளை யடக்கமாட்டாது. தியானியாயிருக்கிறபுருஷன் வெகுகாலம்வரைக்கும் அப்பியாசம்பண்ணுமற் சிலநாட்களிலேதானுகட்டுஞ், சில மாசங்களிலேதானுகட்டும், யோகசித்தியை யிச்சித்தால் ; அப்படி அவன் சொற்பகாலத்திலே அதையிச்சிப்பது எப்படிப்போல விருக்கிறதென்ருல் ? லோகத்திலிருக்கப்பட்ட வேதங்களோ ; நாலுகள் தான், அதுகளை அத்தியயனம்பண்ணுகிறதற்காக நம்முடைய பிள்ளையாண்டான்போய் ஐந்துநாளாய் விட்டுது இன்னம் அவன் அதுகளை அத்தியயனம்பண்ணிக்கொண்டு வரக்காணுமென்கிற மூடனுடைய வார்த்தைபோலயிருக்கிறது. ஆனதால், வருடங்களிலேதானுகட்டுஞ், ஜன்மங்களிலேதானுகட்டும், வெகுகாலஞ் சமாதியப்பியாசம் பண்ணவேண்டும். அந்தப்படி பகவான் கீதையிற் சொல்லியிருக்கிருர். வெகுகாலம் அப்பியாசம் பண்ணினபோதிலும் ; இடைவிட்டுவிட்டு அப்பியாசித்தால் அப்போ அப்பியாசத்திலுண்டாகிற யோகவாசனைகள் பின்னேடே யிடைவிடுகிறகாலத்தில் வரப்பட்ட சமாதி விரோதமான பாகியவாசனைகளிலே கெடுக்கப்பட்டுப்போகும். அந்தப்படி கண்டனக்காரர் சொல்லியிருக்கிருர். அதேதென்ருல் ? மறதியைத்தானே சுபாவமாயுடைத்தாயிருக்கிற மந்தப்புத்தியானபுருஷன் வேதாத்தியயன முதலானதிற் சுருக்கில் அப்பியாசிக்கவேண்டுமென்று மேன்மேலோடும்போது கீழ்ப்பண்ணின அத்தியயன மெப்படி மறந்துபோய்விடுமோ ; அப்படி இடைவிட்டுவிட்டுச் சமாதியப்பியாசம் பண்ணுகிறவனுக்குச் சமாதியைவிட்டு வெளிப்

பட்டகாலத்திலுண்டாகிற அனுத்துமவாசனைகளினாலே சமாதிகாலத்திலுண்டான ஆத்துமவாசனை மறந்துபோய்விடுமென்று சொல்லியிருக்கிறார். ஆனதால், வெகுகாலம் இடைவிடாமல் அப்பியாசிக்கவேண்டும். அப்படி அப்பியாசித்தபோதிலும்; லயவிக்ஷேபாதிகளைத் தள்ளுவதாகிய ஆதரவில்லாவிட்டால் அப்பியாசம் பண்ணினபோதிலும்; பண்ணினதல்ல. அந்தப்படி ஸ்ரீ வசிட்டர் சொல்லியிருக்கிறார். அதெப்படிப்போலவென்றால்? புராணமுதலானதாற் சொல்லப்பட்டகதையைக் கேழ்க்கிற புருஷன் அதிலாதரவில்லாமற் றன்னுடையமனது எங்கேயாகிலும் ஒருவிடத்திற் போய்விடும்போது அந்தக்கதையைக் கேழ்க்கிறவன்போலப் பிறருக்குத் தோணினபோதிலும்; தான் அந்தக்கதையைக் கேட்டுங் கேட்டவனன்றோ; அப்படி ஆதரவன்றியிற் சமாதியப்பியாசம் பண்ணினபோதிலும்; அதைப் பண்ணினவ னன்றென்று சொல்லியிருக்கிறார். ஆனதால் லயவிக்ஷேபாதியை விவேகத்தினாற் றள்ளுவதாகிய ஆதரவும் வேண்டும். இப்படி வெகுகாலபரியந்தம் யிடைவிடாமல் ஆதரவோடே அப்பியாசிக்கப்பட்ட சமாதி திடமாகும். சமாதிக்கித்திடத்துவமாவதேதென்றால்? விஷயசுகவாசனையினாற்றானாகட்டும், துக்கவாசனையினாற்றானாகட்டும், அசைக்கக்கூடாமையே; இதற்குத் திடத்தன்மை. அந்தப்படி பகவான் சொல்லியிருக்கிறார். அதேதென்றால்? தியானியாயிருக்கிற புருஷன் யாதொரு நிஷ்டையையடைந்து அதினாலே பின்னொருசுகாதியினுடைய லாபத்தை அதிகமென்று நினைக்கமாட்டானோ; யாதொரு நிஷ்டையிலிருக்கப்பட்டவன் மகத்தான துக்கத்தினாலேகூட அசைக்கப்படமாட்டானோ; அது திடசமாதியென்று பகவான்சொல்லியிருக்கிறார். சமாதிலாபம்வந்தவனுக்குப் பின்னொரு லாபம் அதிகமன்றென்கிறதைக் கசன்கதையில் ஸ்ரீ வசிட்டர்சொல்லியிருக்கிறார். அதேதென்றால்? கசனானவன் ஒருக்காற் சமாதியை விட்டு வெளிப்பட்டு ஆனந்தத்தை யடைந்தமனதோடேகூட ஒரு

வருமில்லாதபிரதேசத்தில் யேகாங்கியாயிருந்துகொண்டு தழுதழுத்தவாக்கோடேகூடச் சொன்னபிரகார மென்னவென்றால்? பிரளய காலசமுத்திரஜலம்போல ஆத்மாவினாலே சகலமும் நிரம்பியிருக்கிற படியினாலே நான் யெதைப்பண்ணுவேன் எங்கேபோவேன் எதைக் கிரகிப்பேன் எதைவிடுவேன் ஆத்மாவைத்தவிர ஒன்றையுங்காணேனே சரீரத்திற்கு வெளியிலே யுள்ளே கீளே மேலே திக்குகளிலே எவ்விடத்திலும் ஆத்மாவேயொழிய அனாத்துமாவான ஜகத்தைக்காணவேகாணேனே நானில்லாத விடமுமில்லை யென்னிடத்திலில்லாததுமில்லை இப்படி யிருக்க நானெதைவேண்டு மென்றிச்சிப்பேன் எல்லாஞ் சின்மாத்திரமாகவே நிறைந்திருக்கிறதென்று கசன்சொன்ன பிரகாரத்தை ஸ்ரீவசிட்டர் சொல்லியிருக்கிறார். திடசமாதி மஹா துக்கத்தினாலேகூட அசைக்கப்படாதென்கிறதைச் சிகித்து வசனுடைய மூன்றுவருடங்கிடைத்த சமாதிவிருத்தாந்தத்தினாலே அவரே சொல்லியிருக்கிறார். அதேதென்றால்? சூடாலையானவள் நிர்விகற்பசமாதி யிலிருக்கப்பட்ட சிகித்துவசராஜாவைப்பார்த்து யிவரை இந்தச்சமாதியினின்றும் வெளிப்படுத்துவோமென்கிறதாக ஆலோசித்துக்கொண்டு வனத்திலிருக்கப்பட்ட செந்துக்களெல்லாம் பயப்படும்படியான சிங்கநாதத்தை அடிக்கடி செய்தாள். அப்படிச்செய்த போதிலுஞ்; சமாதியிலிருக்கப்பட்டராஜா பருவதத்திலிருக்கப்பட்ட கல்லுப்போல சமாதியைவிட்டு அசையவேயில்லை. திரும்பவுஞ் சூடாலை ராஜாவையலைத்தாள். கீழேதள்ளினாள். அதொன்றினாலேயும் ராஜா சமாதியைவிட்டு வெளிப்படவேயில்லையென்று ஸ்ரீவசிட்டர் சொல்லியிருக்கிறார் அப்படியே பிரகலாதன் கதையிலுஞ் சொல்லியிருக்கிறார். அப்படியே வீதகவ்வியாதிகளுடைய சமாதியையும் பார்த்துக்கொள்ளவேண்டியது. இப்படி வெகுகாலம்வரைக்கும் நிரந்தரமாயாதரவோடே யப்பியாசம் பண்ணுகிறவனுக்குத்

திடசமாதி கிடைக்குமென்று சமாதிக்கிச் சாதனமான அப்பியாசப் பிரகாரஞ் சொல்லப்பட்டுது.

அதற்குச்சாதனமான வைராக்கியமாவதேதென்றால் ? அதைப் பதஞ்சலிபகவானே சூத்திரத்திற் சொல்லியிருக்கிறார். அதேதென்றால் ? அபரமென்றும், பரமென்றும், வைராக்கிய மிரண்டுவிதம். அதில் - எதமானமென்றும், விதிரேகமென்றும், ஏகேந்திரியமென்றும், வசீகாரமென்றும், அபரவைராக்கியம் நாலுவிதம். இதில்-புஷ்ப்பஞ் சந்தனம் ஸ்திரீ புத்திரமித்திர கிரகச் க்ஷேத்திர தனமுதலான பிரத்தியக்ஷவிஷயத்திலுஞ், சாஸ்திரத்திலைறியப்பட்ட சுவர்க்கமுதலான பரோக்ஷவிஷயத்திலும், ஆசையிருந்தபோதிலும் ; விவேகதாரதன்மியத்திலைலே எதமானம், விதிரேகம், ஏகேந்திரியமென்று சொல்லப்பட்ட மூன்றுவைராக்கியமுண்டாகும். அதில்-இந்தச்ஜகத்திற் சாரமென்ன அசாரமென்னவென்று குரு சாஸ்திரங்களிலைலே அறிவோமென்கிற முயற்சி எதமானவைராக்கியம். தன்னுடையசித்தத்தில் முன்னிருந்த ராகாதிதோஷங்களுக்குள்ளே தன்றைற்பழகப்பட்ட விவேகத்திலைலே இவ்வளவுதோஷங்கள் சாந்தமாச்சுதுகள் இவ்வளவுதோஷங்கள் சாந்தமாகாமல் மிஞ்சியிருக்கிறதுகளென்று பிரித்தறிவது விதிரேகவைராக்கியம். கீழ்ச்சொன்ன பிரத்தியக்ஷ விஷயத்திலும், பரோக்ஷவிஷயத்திலும், வரப்பட்ட பிரவிருத்தி துக்கத்திற் கேதுவென்றறிந்துகொண்டு அந்தப்பிரவிருத்தியை விட்டுப் போட்டு மனதில்மாத்திரம் ஸ்தூலரூபமான ஆசையிருப்பது ஏகேந்திரியவைராக்கியம். இந்த ஆசையில்லாமற்சூக்ஷமரூபமான ஆசை மாத்திரமிருப்பது வசீகாரவைராக்கியம். இந்த அபரவைராக்கியம் நாலும். அஷ்டாங்க யோகத்திற்குக் காரணமானதாற் சவிகற்பசமாதியில் அந்தரங்கசாதனம். நிர்விகற்பசமாதியில் பகிரங்கசாதனம். அந்த நிர்விகற்பசமாதியில் பரவைராக்கியம் அந்தரங்கசாதனம்.

அதாவதேதென்றால் ? சவிகற்பசமாதி யப்பியாசபெலத்தினாலே திரிகுணாத்மகமாயிருக்கிற அக்ஞானதற்காரியமான சரீரத்திரயத்திற்கும் விலக்ஷணராயிருக்கிற பிரத்தியகாத்மாவினுடைய சாக்ஷாத்காரமுண்டாகும். அதினாலே குணத்திரயாத்மகமான சகல விவகாரத்திலுஞ்சூக்ஷுமரூபமான ஆசைகூடயில்லாமை பரவைராக்கியமென்று பதஞ்சலிபகவான் சொல்லியிருக்கிறார்.

அந்தப் பரவைராக்கியத்தினுடைய தாரதன்மியத்தினாலே நிர்விகற்பசமாதி கிடைக்கிறதிற் சீக்கிரதாரதன்மியமுண்டு அதெப்படியென்றால் ? மிருதுவென்றும், மத்தியமென்றுந், தீவிரமென்றும், பரவைராக்கியம் மூன்றுவிதமாயிருக்கும். அந்தவைராக்கியபேதத்தினால் அதையுடைத்தான தியானிகளும் மூன்றுவிதமாயிருப்பார்கள். அவாளுக்குள்ளே மிருதுவென்று சொல்லப்பட்ட மந்தவைராக்கியமுள்ளவனைக்காட்டிலும் ; மத்திய வைராக்கியமுள்ளவனுக்குச் சீக்கிரத்தில் நிர்விகற்பசமாதி கிடைக்கும். அவனைக்காட்டிலுந் ; தீவிரவைராக்கியமுள்ளவனுக்குச் சீக்கிரத்தில் அதுகிடைக்குமென்று தாரதன்மியமறியத்தக்கது தீவிரவைராக்கியவான்களுக்குள்ளேயும் ; மிருதுதீவிரனென்றும், மத்தியதீவிரனென்றும், அதிதீவிரனென்றும், மூன்றுவிதபேதமுண்டு. அதில் - உத்தமோத்தமாளாயிருக்கிற ஜனகன் பிரகலாதன் முதலானவாள் அதிதீவிராள். ஏனென்றால் ? முகூர்த்தமாத்திர விசாரத்தினாலே அவர்களுக்குத்திடநிர்விகற்பசமாதி கிடைத்துதன்றோ ; ஆனதால், அவாள் அதிதீவிராள். அதமாதமாளாயிருக்கிற உத்தாலகன் முதலானவாள் வெகுகாலப்பிரயாசத்தினாலே அந்தச்சமாதியை அடைந்தபடியால் மிருதுவான பரவைராக்கியமுள்ளவாள். இப்படிப் பின்னும் யுக்தமாய்ச் சமாதிகிடைத்த சுருக்குக்குத்தக்கதாய் அங்கங்கே தியானிகளை வைராக்கியபேதத்திற் குதாரணமாய்ப் பார்த்துக்கொள்ளத்

தக்கது இப்படியாயுள்ளளவில் அதிதீவிரனுக்குத் திடமான நிர்விகற்பசமாதி கிடைக்கும்போது அவன்மனது திரும்பிச் சமாதியை விட்டு வெளிக்கிளம்பச் சக்தியன்றியிலே நசித்துப்போகும். அந்த மனோநாசத்தினாலே வாசனாக்ஷயம் ரக்ஷிக்கப்படுகிறதினாலே ஜீவன்முக்தியானது திடமாகிவிடுமென்று சித்தமாச்சுது.

மனோநாசம் வரும்போது விதேகமுக்தியேயொழியச் ஜீவன்முக்தி கிடையாதென்று சங்கிக்கக்கூடாது. ஏனென்றால்? ஸ்ரீ இராம வசிட்டாளுடைய கேள்வி மறுமொழிகளினால் இரண்டு விதமுக்தியும் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறபடியினாற் கீழ்ச்செய்தசங்கை கூடாது. இராமனுடைய கேள்வியென்னவென்றால்? வாருமய்யா எகுரோ தத்துவஞானத்தினாலே சித்தத்தினுடைய சொரூபம் நசித்தபிறகு யோகிகளுக்கு மைத்திரியாதிகுணங்கள் எவ்விடத்திலிருக்கும் யோகிகளுக்குள்ளே சிரேஷ்டராயிருக்கிற உமக்கு யோகநிஷ்டையெல்லாம் நன்றாய்த்தெரியுமே; ஆனதால் என்னுடைய இந்தச்சங்கையைப் பரிகாரம்பண்ணிவைக்க வேண்டுமென்று கேட்டஇராமனைப்பார்த்து ஸ்ரீவசிட்டர் சொல்லுகிறார். வாரும்பிள்ளா இராமா சொரூபமென்றும், அரூபமென்றுஞ், சித்தநாசம் இரண்டுவிதம். அதில்-ஜீவன்முக்தனிடத்திற் சொரூபமனோநாசம். விதேகமுக்தனிடத்தில் அரூபமனோநாசமென்று நியமம். எந்தமனதானது அக்ஞானகாரியமான புத்திர மித்திர களத்திராளை நமதென்று அபிமானித்துக்கொண்டு அதினால் வரப்பட்ட சுகதுக்காதிகளோடே கூடியிருக்கிறதோ; அந்த மனது நசியாதமனது. சமமான நிஷ்டையடைந்திருக்கிற யாதொருதீரனைச் சுகதுக்காதிகள் மூச்சுக்காற்றுப் பருவதத்தை அசைக்கமாட்டாதது போல அசைக்கமாட்டாதுகளோ; மகத்தான ஆபத்து லோபம் உச்சாகம் மதம் மந்தப்புத்தி உச்சவம் முதலானதுகள் யாதொருவனை விகாரியாகப் பண்ணமாட்டாதோ; அவனுடையமனது நசித்தமனது.

ஆசைமுதலான ரூபத்தையுடைத்தான மனது யெப்போ நசிக்கிற தோ; அப்போ அந்தமனதுதானே மைத்திரியாதி குணங்களோடே கூடினதாகித் திரும்பிச் ஜன்மத்திற்கேதுவன்றியிற் சத்துவரூபமென்று பெயரையுடைத்தானதாய்ச் ஜீவன்முக்தனிடத்திலிருக்கும். அந்தச் ஜீவன்முக்தனிடத்திலிருக்கப்பட்ட மனதிற்குச் சத்துவமென்று சொல்லப்பட்ட ரூபமிருக்கிறபடியினுலும், ராகாதிரூபத்திற்கு நாசம் வந்தபடியினுலுஞ், சத்துவரூபத்தோடேகூடின ராகாதிநாசமாகிய சொரூபநாசங்கூடும். அப்படிப்பட்ட சொரூபமனோநாசஞ் ஜீவன் முக்தனிடத்தி லுண்டென்றுசொன்னதும் நன்ருய்க்கூடும். விதேக முக்தியில் மனதினுடைய சத்துவரூபமும்; நசித்துப்போகிறபடியினுலே ரூபமில்லாத நாசமாகிய அரூபமனோநாசம் விதேகமுக்தனிடத்திலென்று சொன்னது நன்ருய்க்கூடுமென்று ஸ்ரீவசிட்டர் சொல்லியிருக்கிருர். ஆனதால், சொரூபமனோநாசஞ் ஜீவன்முக்திக்கிச் சாதனமென்று சித்தமாச்சுது.

இப்படிச் ஜீவன்முக்தியாவதெது? அது உண்டென்கிறதிற் பிரமாணமென்ன? எந்தச்சாதனத்தால் அது சித்திக்கும்? அது சித்தித்ததுகொண்டு பிரயோசனமென்ன? யென்கிறகேள்வி நாலுகளுக்குள்ளே முந்தினகேள்வி மூன்றுகளுக்குங் கிரமமாக இதுவரைக்கும் உத்தரஞ் சொல்லப்பட்டுது.

ஜீவன்முக்திக்கிப்பிரயோசனம்.

இனி நாலாங்கேள்விக்குத்தரஞ் சொல்லுகிறோம்.

அதேதென்றால்? ஞானரக்ஷையென்றுந், தவசென்றும், விசமவாதமில்லாமையென்றுந், துக்கநாசமென்றுஞ், சுகாவிற்பாவமென்றுஞ், ஜீவன்முக்திக்கி ஐந்துபிரயோசனம். இந்த ஐந்துபிரயோசனத்தையுங் கிரமமாகச்சொல்லுகிறோம்.

அதில் - ஞானரக்ஷையாவதேதென்றால்? வேதாந்த மஹாவாக்கிய சிரவணதியிலுண்டான தத்துவஞானஞ் சமுசயவிபரீதங்களினாலே வாதிக்கப்படாமலிருப்பதே ஞானரக்ஷை.

சங்கை? வேதாந்தப் பிரமாணத்தினாலுண்டான தத்துவஞானத்திற் கெதினாலேதானாகட்டும் வாதகம் வருகிறதாயிருந்தால் அப்போ ஜீவன்முக்தியால் அந்தவாதகம் வாராமல் ஞானம் ரக்ஷிக்கப்படுகிறபடியினாலே ஜீவன்முக்திக்கி ஞானரக்ஷை பிரயோசனமென்று சொல்லலாம். அப்படி வாதகமொன்றையுங் காணோமே யென்றால்? வேதாந்தமஹாவாக்கியரூபமான பிரமாணத்தாற் றத்துவஞானமுண்டானபோதிலும்; ஜீவன்முக்தி யில்லாதவனுக்குச் சித்தவிசிராந்தியில்லாததினாலே சமுசயவிபரீதங்க ளுண்டாகும். அந்தச் சமுசயவிபரீதங்களே ஞானத்திற்கு வாதகமென்றறி. அந்தப்படி தத்துவஞ்ஞராயிருக்கிற ஸ்ரீ இராமனுக்குச் சித்தவிசிராந்திவருகிறதற்குமுன்னே சமுசயமிருந்ததென்று ஸ்ரீவிசுவாமித்திரர் வாசிட்டத்திற் சொல்லியிருக்கிறார். அதேதென்றால்? ஏ இராமா நீர் சூக்ஷ்மபுத்தியினாலேதானே எல்லாத்தையும் அறிந்திருக்கிற படியினாலே உமக்கினியறியவேண்டிய தொன்றுமில்லை. அப்படி யறியவேண்டி

யதை அறிந்திருந்தபோதிலுஞ்; சுகரைப்போலச் சித்தவிசிராந்தி மாத்திரத்தை அபேக்ஷிக்கிரீர் பூருவஞ் சுகர் தான்ருனே தத்துவத்தை யறிந்தபோதிலும்; அந்தத் தத்துவஞானத்திற் சமுசயம்வந்து தன்னுடைய பிதாவான வியாசரைக் கேட்கும்போது அவருந் தானறிந்தபடியேசொன்னுர். அப்போதுஞ் சமுசயம்போகாமற் பிதாவினுலே அனுப்பிவைக்கப்பட்டுச் ஜனகமஹாராஜாவினிடத்தில் வந்துசேர்ந்து அவரைக்கேட்கும்போது அவரும் அந்தப்படியேசொன்னுர். அப்போ சுகர் ஜனகமஹாராஜாவைப்பாாத்துக் கேட்கிருர் வாருமய்யா எகுரோ இந்த அசாரமான சமுசாரந் தன்னுடைய மனோவிகற்பமூலமா யுண்டானபடியினுலே அந்தவிகற்பம் நசித்தால் அந்தச்சமுசாரமும் நசித்துப்போகுமென்று யெனக்கு நிச்சயமுண்டாயிருக்கிறது. நான் விவேகத்தினுலே எப்படி யறிந்தேனே; அப்படியே பிதாவு முபதேசித்தார். அந்தப்படியே தம்மாலுபதேசிக்கப்பட்டுது. அப்படியே சகலவேதாந்தசாஸ்திரங்களிலுங் காணப்படுகிறது. ஆனதால், மனோவிகற்பம் நசித்தாற் சகலதுக்கமும் நசித்துப்போய்விடுமென்று நானறிந்தது சரிதானு யெனக்கு நிச்சயம்வரும்படி அனுக்கிரகித்தால் அந்தப்படி தம்மிடத்தில்நின்றுஞ் சித்தவிசிராந்தியையடைந்து சகலமனோப்பிரமையையும் விட்டுப்போட்டுக் கிருதார்த்தனுகிவிடுவேனென்று கேட்டசுகரைப்பார்த்துச் ஜனகமஹாராஜாசொன்னபிரகார மேதென்ருல்? வாருஞ் சுகரே விவேகிகளுக்குள்ளே சிரேஷ்டராயிருக்கிறவரே நீர் உம்முடைய விவேகபுத்தியினுலே எப்படி நிச்சயித்தீரோ; அந்தப்படி சத்தியந்தான். அதில் - அணுமாத்திரங்கூடச் சந்தேகமில்லை. மூன்றுவிதப் பரிச்சேதமுமன்றியில் யெங்கும் பரிபூரணமாயிருக்கிற சின்மாத்திர ஆத்மசொரூபமாத்திரம் யிருக்கிறதேதவிர வேறென்றும் பரமார்த்தமாய்க்கிடைக்கவேகிடையாது. ஆனதால், தன்னுடைய சங்கற்பத்தினுலேயே பந்தம். தன்னுடைய சங்கற்பநாசத்தினுலேயே முக்தியென்கிறது சத்தியமே.

அனந்தகோடி புண்ணியபரிபாகத்தினுலே அதிதீவிர விரக்தராயிருக்கிற உமக்கு ஈசுரானுக்கிரகத்தினுலே இந்த அர்த்தந் தனக்குத்தானே தோணித்து. ஆனதால், யாதொரு சமுசயமுமன்றியிற் சுகமாய் அகண்டசிதாகாய சொரூபத்திற் சித்தவிசிராந்தியையடைந்து கிருதார்த்தராகிவிடு மென்று ஜனகமஹாராஜா சொன்னுர். அப்படிச் சுகரும் பதினுயிரம்வருடம் வரைக்கும் நிர்விகற்பசமாதியிலிருந்து பிற்பாடு விதேகமுக்தியை அடைந்தாரென்று இப்படி ஸ்ரீ இராமனைக் குறித்து ஸ்ரீ விசுவாமித்திரர் வாசிட்டத்திற் சொல்லியிருக்கிறபடியினுலே தத்துவஞான முண்டானபோதிலும்; ஸ்ரீ இராமர் சுகரைப் பேலச் சித்தவிசிராந்தி இல்லாதவனுக்குச் சமுசயமுண்டாகும். அந்தச்சமுசயம் அக்ஞானத்தைப்போல மோக்ஷத்திற்குப் பிரதிபந்தகம். அந்தப்படி பகவான் கீதையிற் சொல்லியிருக்கிருர். அதேதென்றுல்? அக்ஞானஞ், சமுசயம், விபரீதம், மூன்றுமுள்ளவன் மோக்ஷத்தை யடையமாட்டான். அதில் - அக்ஞானவிபரீதங்கள் மோக்ஷமாத்திரத்தைக் கெடுக்கும். சமுசயம், போகமோக்ஷ மிரண்டுகளையுங் கெடுக்கும். அதெப்படியென்றுல்? யெப்போ சமுசார சுகத்திற் பிரவருத்தியுண்டாகிறதோ; அப்போ மோக்ஷமார்க்கத்திலுண்டாயிருக்கிற பிரவருத்தியானது அந்தச்சமுசாரப் பிரவருத்தியைக் கெடுக்கும். அப்படியே எப்போ மோக்ஷத்திற் பிரவருத்தியுண்டாகிறதோ; அப்போ சமுசாரசுகப் பிரவருத்தியானது அந்தமோக்ஷப்பிரவருத்தியைக் கெடுக்கும். எனென்றுல்? இரண்டிலுஞ் சமுசயமிருக்கிறதன்றே; ஆனதால், சமுசயவாத்மாவுக்கு இரண்டுமார்க்கத்திலுஞ் சுகங்கிடையாதென்று சொல்லியிருக்கிருர். இந்த அர்த்தத்தை நன்றுய் விசாரித்துப்பார்த்து முமூக்ஷுவாயிருக்கப்பட்டவன் யெவ்விதமுஞ் சமுசயத்தை நீக்கவேண்டும். அந்தப்படி சுருதியிலுஞ் சொல்லியிருக்கிறது, விபரீதத்திற்கு நிதாகர் உதாரணம். அதேதென்றுல்? ரிபுவென்கிற குருவானவர் மஹாகருணையினுலே நிதாக

ருடைய கிரகத்திற்குவந்து வெகுபிரகாரமாகத் தத்துவத்தைப் போதித்துப்போட்டுத் தன்னுடைய ஆச்சிரமத்திற்குப்போனூர். பிற்பாடு நிதாகர் தத்துவத்தை யறிந்திருந்தபோதிலும்; அந்த தத்துவஞானத்திற் சிரத்தையில்லாமற் கருமங்களே பரமபுருஷார்த்த சாதனமென்று விபரீதஞானத்தையடைந்து கருமானுஷ்டானத்தில் முன்போலவே யேற்பட்டார். மறுபடியும் ரிபுவானவர் சிஷியனுக்குப் பரமபுருஷார்த்தங் கெட்டுப்போகக் கூடாதென்கிறதாக மஹாகிருபையோடேகூட நிதாகரிடத்தில்வந்து முன் தம்மாலே யுபதேசிக்கப்பட்ட தத்துவத்தைத்தானே திடமாக உபதேசித்தார். அப்போதும்; நிதாகர் விபரீதஞானத்தை விடவில்லை. மூன்றுந்தரம் உபதேசிக்கும்போது விபரீதஞானத்தை விட்டுப்போட்டுச் சித்தவிசிராந்தியை அடைந்தார். ஆனதால், சமுசயவிபரீதங்களினுலே தத்துவஞானத்தின் பலமாகிய மோக்ஷம் பிரதிபந்திக்கப்படும். அந்தப்படி பராசர் சொல்லியிருக்கிறூர். அதேதென்றால்? சொலித்துக்கொண்டிருக்கிற அக்கினி மணிமந்திர ஔஷதங்களினுலே பிரதிபந்திக்கப்பட்டுக்கொண்டு விறகுமுதலானதைத் தகிக்கிறதற் கெப்படி யோக்கியமாகவில்லையோ; அப்படிப்போலத் தத்துவஞானமாகிய அக்கினியுந்திடமாய்ச் சொலித்துக்கொண்டிருந்தபோதிலுஞ்; சமுசயவிபரீதங்களினுலே பிரதிபந்திக்கப்பட்டுக்கொண்டு கர்த்துருத்துவாதி கல்மஷத்தை தெகிக்கிறதற்கு யோக்கியமாக மாட்டாதென்று பராசர் சொல்லியிருக்கிறூர். ஆனபடியினுலே சித்தவிசிராந்தி இல்லாதவனுக்குச் சமுசயவிபரீதமுண்டாய் அதினுலே தத்துவஞானபலம் வாதிக்கப்படுகிறதுகொண்டு அந்தச்சமுசயவிபரீதங்களே; தத்துவஞானத்திற்கு வாதகங்கள். அதுகள்வாராமல் ஞானத்தை ரக்ஷிக்கிறதற்குச் ஜீவன்முக்தி சாதனமானதால் ஞானரக்ஷை ஜீவன்முக்திக்குப் பலமென்று சொன்னதுசரியே. சித்தவிசிராந்தியுள்ள ஜீவன்

முக்தனுக்கு மனோநாசங்கிடைத்திருக்கிற படியினாலே எப்போ ஜகத்தே தோன்றவில்லையோ; அப்போ சமுசய விபரீதங்களென்கிற சப்தத்திற்குக்கூட இடங்கிடையாது. ஜகத்தினுடைய தோற்றமில்லாத ஜீவன்முக்தனுக்குச் சரீரவிவகாரம் நடக்கவேண்டுமேயென்றால்? தன்னுடைய முயற்சியன்றியிலே போனாலும்; பரமேசுரனாலேவப்பட்ட பிராணவாயுவினாலே தேகவிவகாரம் நடக்கும் அந்தப்படி சாந்தோக்கிய உபநிடதத்திற் சொல்லியிருக்கிறது. அதேதென்றால்? ஜீவன்முக்தனுக்கு அதுவிதுவென்று மனனம்பண்ணும்படியான மனது இல்லாததினாலே பிராரத்தநாசபரியந்தம் இருக்கப்பட்ட தன்னுடைய சரீரத்தைத்தான் நினைக்கிறதற் கிடமில்லாவிட்டாலும்; சமீபத்திலிருக்கிற பேர்களினாலே ஜீவன்முக்தனுடைய தேகமிருக்கிறதென்று அறியப்படலாம். அப்படிச் ஜீவன்முக்தன் சரீரத்தைமறந்து யாதொருமுயற்சியுமன்றியிலிருக்கும்போது அந்தச் சரீரத்திற் பிராணனிருக்கிறதற்கேதுவென்னவென்றால்? பரமேசுரனுடைய ஆக்ஞையே எது எப்படியானால்? சாரதியினால் மார்க்க சஞ்சாரத்தில் யேவப்பட்ட குதிரைமுதலானது அடிக்கடி யந்தச்சாரதியினுடையமுயற்சியை அபேக்ஷிக்காமற்றானே ரதமுதலானதை யெதிரேயிருக்கப்பட்ட கிராமமுதலானதிற் கொண்டுபோய்ச் சேர்க்கிறதோ; அப்படிப்போலச் சரீரரக்ஷணத்தின்பொருட்டுப் பரமேசுரனா லேவப்பட்ட பிராணவாயுவு ஜீவனுடைய முயற்சி யிருந்தபோதிலு மில்லாதபோதிலுந் தன்னுடைய காரியமான சரீரரட்சணத்தை நிறைவேற்றுமென்று சொல்லியிருக்கிறது. அப்படியே பாகவதத்திலும் மத்தியபானம்பண்ணினவன் தன்னுடைய தேகாதியை மறப்பதுபோல நிருவிகாரசொரூபத்தை யடைந்து ஜகத்தினுடைய தோற்றமில்லாத ஜீவன்முக்தனும் பிராரத்தாதினமாய்த் தன்னுடைய தேகமிருந்தபோதிலும், போனபோதிலும், அதையறிய மாட்டானென்று சொல்லியிருக்கிறது.

சங்கை? சாந்தோக்கிய உபநிடத்திலும், பாகவதத்திலுஞ், ஜீவன்முக்தனுக்குத் தேகாதிப்பிரதீதி கிடையாதென்று சொல்லுகிறபடியால் அந்தச்ஜீவன்முக்தன் ஒருவிவகாரம்பண்கிறதற்கு இடமில்லையே; அப்படியிருக்க வாசிட்டத்திலே ஜீவன்முக்தாள் சமீபத்திலிருக்கப்பட்டவர்களினுலே சமாதியில்நின்று வெளிப்படுத்தப்பட்டவாளாய்த் தங்கள்தங்கள் வருண ஆச்சிரமங்களுக் குசிதமான விவகாரம் பண்ணுவாளென்று சொல்லியிருக்கிறதே; ஆனதால், ஒன்றுக்கொன்று சாஸ்திரங்களில் விரோதம்வருகிறதே யென்றுல்? ஜீவன்முக்தாளுடைய சித்தவிசிராந்தி தாரதன்மியத்தினுலே அந்தச் சாஸ்திரவசனத்திற்கு அந்தந்தப் பூமியில் நியமஞ்செய்யவேண்டியதானதால் அப்படி விரோதம் வரவேண்டியதில்லை. இந்த அபிப்பிராயப்படிக்கி கடவல்லி யுபநிடதத்திற் பிரமவித்தென்றும், பிரமவித்துவரனென்றும், பிரமவித்துவரியானென்றும், பிரமவித்துவரிட்டனென்றும், நாலுபேர்களுண்டென்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்தநாலுபேர்களுக்குஞ் சுபேட்சைமுதலான யேழுபூமிகளுக்குள்ளே முந்தின மூன்றுபூமிகள்போக மற்றநாலுபூமிகளையுங் கிரமமாக அடைந்தபேர்களென்று அறியத்தக்கது.

அந்தப்பூமிகளாவதேதென்றுல்? சுபேட்சையென்றும், விசாரணையென்றுந், தனுமானசியென்றுஞ், சத்துவாபத்தியென்றும், அசஞ்சத்தியென்றும், பதார்த்தாபாவனையென்றுந், துரியமென்றும், யேழுவிதங்களென்று வாசிட்டத்திலே சொல்லியிருக்கிறது. அதுகளுக்கு லக்ஷணமும் அதிலேயேசொல்லியிருக்கிறது. அதேதென்றுல்? என்விருதாவாய் மூடனுகிப்போகிறேம் வைராக்கியமுதலான சாதனத்தோடேகூடச் சாதுக்களிடத்தில்நின்றும் சற்சாஸ்திரத்துவாரமாக அறியவேண்டிய பரமானந்த பிரமசொரூபத்தை யெவ்விதமும் அறிந்து கிருதார்த்தனுகிவிடுவோமென்கிற திடமாயிருக்கப்பட்ட பிர

மசாக்ஷாத்கார இச்சையே; சுபேக்ஷையென்று சொல்லப்பட்ட முந்தினபூமி. பின்பு சாதனசதுஷ்டய சம்பன்னனுகிக் குருமுகமாக வேதாந்தசாஸ்திர அர்த்தத்தைச் சிரவணம்பண்ணி அதை மனனம் பண்ணுவது விசாரணையென்று சொல்லப்பட்ட இரண்டாம்பூமி. கீழ்ச்சொன்ன இரண்டுபூமிகளுடைய அப்பியாசபெலத்தினுலே நிதித்தியாசனம் பண்ணி அந்த நிதித்தியாசனமானது அப்பியாசபெலத்தினுலே சவிகற்பசமாதிபரியந்தஞ் சித்திப்பது தனுமானசியென்று சொல்லப்பட்ட மூன்றும் பூமி. கீழ்மூன்று பூமிகளுடைய அப்பியாசபெலத்தினுலே மனதிற்கு விஷயத்திற் றிடவைராக்கியம் வந்து அந்தமனது பரமானந்த சொரூபாயிருக்கிற சத்து வஸ்துவினிடத்திற் பாலுஞ் ஜலமும்போலக் கலந்து யேகரசப்பட்டு சூக்ஷுமரூபமாத்திரமாய்ச் சேஷித்து நிர்விகற்பசமாதியை யடைவது சத்துவாபத்தியென்று சொல்லப்பட்ட நாலாம்பூமி. இந்த நாலாம்பூமியிற்றுன் அப்பிரதிபந்த அபரோக்ஷ சாக்ஷாத்காரம். இதற்குமேற்பட்ட மூன்றுபூமிகளும் நிர்விகற்பசமாதி அப்பியாசத்தினுலுண்டாகிற சித்தவிசிராந்தி தாரதன்மியத்தினுற் சித்திக்கும்படியான பூமிகளென்று வாசிட்டத்திற் சொல்லியிருக்கிறது. அந்த யேழுபூமிகளுக்குள்ளே முந்தின மூன்றுபூமிகள் அப்பிரதிபந்த அபரோக்ஷ ஞானத்திற்குச் சாதனங்களேதவிர அந்தஞானத்தில் அகப்பட்டதன்று. ஏனென்றுல்? அந்த மூன்றுபூமிகளிலுஞ் ஜகத்துச்சத்தியமென்கிற புத்தி நீங்காதபடியால் அதுகள் ஞானத்தில் அகப்பட்டதன்று. ஆனதால், அந்த மூன்றுபூமிகளுக்குஞ் ஜாக்கிரமென்றுபெயர். அந்தப்படி வாசிட்டத்திற் சொல்லியிருக்கிறது. அதேதென்றுல்? ஏ இராமா முந்தின மூன்றுபூமிகளிலுஞ் ஜகத்துச்சத்தியமென்கிறபுத்திபோகாமல் முன்போலவே சத்தியமாகத்தோணுகிறபடியால் அதுகளுக்குச்ஜாக்கிரமென்று பெயரென்று ஸ்ரீ வசிட்டர் சொல்லியிருக்கிறுர். நாலாம்பூமிசர்வாதிஷ்டானமான பிரத்தியகபின்ன பிரமசொரூபத்தை நிர்

விகற்பசமாதியினல் நன்ருயறிந்து அந்தச்சொரூபத்திற் கற்பிக்கப்பட்டதிரிசியமான நாமரூபப் பிரபஞ்சமுழுவதும் மித்தையென்று திடஞானமுண்டாகிறபடியால் முமுக்ஷுக்களுக்கு முன்சொன்ன மூன்றுபூமிகளாகிய ஜாக்கிரத்தைக்காட்டிலும் இந்நாலாம்பூமி சொற்பனமென்று சொல்லப்படும். அந்தப்படி வாசிட்டத்திற் சொல்லியிருக்கிறது. இந்த நாலாம்பூமியை அடைந்த ஞானியே பிரமவித்தென்று சொல்லப்படுவன் ஐந்தாம்பூமிமுதல் மூன்றுபூமிகளுஞ் ஜீவன்முக்தியினுடைய பேதத்திற் சேர்ந்தது அந்தச் ஜீவன்முக்தியின் பேதமான மூன்றுபூமிகளும் நிர்விகற்பசமாதி அப்பியாசபெலத்தினுற் கிடைக்கப்பட்ட சித்தவிசிராந்தி தாரதன்மியத்திஞற் சித்திக்கத் தக்கதுகளென்று கீழ்ச்சொல்லப்பட்டிருக்கிறது. அதில்-ஐந்தாம்பூமியிலிருக்கப்பட்ட ஞானியானவன் நிற்விகற்பசமாதியில் நின்றும் அப்போ அப்போ தான்ருனே வெளிப்படுவன் அந்தஞானி பிரமவித்துவரனென்று சொல்லப்படுவன். ஆரும்பூமியிலிருக்கப்பட்ட ஞானி சமீபத்தி லிருக்கப்பட்டவர்களிஞலே போதிக்கப்பட்டால் அந்தச்சமாதியில் நின்றும் வெளிப்படுவன் அப்படிப்பட்டஞானி பிரமவித்துவரியானென்று சொல்லப்படுவன். அந்த ஐந்தாவது, ஆருவது ஆகிய இரண்டு பூமிகளுஞ் சுழுப்தியென்றுங் காட்ட சுழுப்தியென்றும் பெயர். அந்தப்படி வாசிட்டத்திற் சொல்லியிருக்கிறது. அதேதென்ருல்? ஐந்தாம்பூமியையடைந்தஞானி நாமரூபமொன்றுந்தோணுமற் சச்சிதானந்தபரமாத்துவைத பிரத்தியகபின்ன பிரமசொரூபத்திற் சித்தவிசிராந்தியையடைந்து பாகியவிவகாரம் பண்ணினபோதிலும்; பாதித்தூக்கத்திலெழுந்திருந்து சீரான்னம் முதலானதைப் புசிக்கிறபாலன்போல அந்தர்முகனுகவே யிருக்கிறபடியாலும் பார்க்கிறபேர்களுக்குச் சுழுப்தன்போலக் காணப்படுகிறபடியாலும் அந்த ஐந்தாம்பூமி கீழ்ச்சொன்ன சொற்பனத்தைக்காட்டிலுஞ், சுழுப்தியென்று சொல்லப்படும் பின்பு அந்தப்பூமியைச் சிலகா லப்பியாசிக்

கும்போது அந்த அப்பியாச பெலத்தினாலே முன்னையைவிடப் பின்னும் அதிகமாக வாசனைகள் சாந்தமாகி சித்தவிசிராந்தி விசேஷமாய்க் கிடைக்கிறபடியினாலே காட்டசுழுப்தியென்று சொல்லப்பட்ட ஆரும்பூமியை ஞானியடைவன். அதாவதேதென்றால்? சத்தென்றும், அசத்தென்றும், அகங்காரமென்றும், அகங்காரமில்லாமையென்றுந், துவிதமென்றும், அத்துவிதமென்றும், இதுமுதலான ஒருமனனம் ஆரும்பூமியையடைந்த ஞானிக்கில்லாததினாலேயும், முன்னையைவிட அதிகமாய்ச் சித்தவிசிராந்தியை அடைந்திருக்கிறபடியினாலேயும், அந்தஞானியானவன் ஆகாசத்தின் நடுவிலிருக்கப்பட்ட கடம்போல உள்ளிலும் வெளியிலும் நாமரூபப்பிரதீதிசூனியனாயுஞ், சதா சச்சிதானந்த அகண்டேகரசப் பிரமசொரூபத்தில் மூழ்கியிருப்பதினாலே சமுத்திரத்தினடுவி லிருக்கப்பட்ட கடம்போலப் பூரணனாயும், இருப்பன். அப்படிப்பட்ட நிஷ்டையே காட்டசுழுப்தியென்று சொல்லப்பட்ட ஆரும்பூமி. ஏனென்றால்? கீழ்ச்சொன்ன சுழுப்தியைக்காட்டிலும்; இந்தப்பூமி திடமானதால் இது காட்டசுழுப்தியென்று சொல்லப்படுமென்று வாசிட்டத்திற் சொல்லியிருக்கிறது. அந்தப்பூமியினுடைய அப்பியாசபெலத்தினாலே அதற்கும் அதிகமான சித்தவிசிராந்தியை யுடைத்தான துரியமென்று சொல்லப்பட்ட ஏழாம்பூமியை ஞானியடைவன். அதையடைந்த ஞானி தானாகனேயாகட்டும், பிறராற்றானாகட்டும், நிர்விகற்பசமாதியில்நின்றும் வெளிப்படத்தக்கதில்லைக் கீழ்ச்சொன்ன ஜாக்கிர, சொற்பன, சுழுப்தி மூன்றையுங்காட்டிலும்; இந்தப்பூமி நாலாவதானதால், இதற்கு துரியமென்றுபெயர். இந்தப்பூமியை அடைந்தஞானிபிரமவித்து வரிட்டனென்று சொல்லப்படுவன். இந்த யேழாம்பூமியிலேதான் நிர்விகற்பசமாதியைச் சொல்லாநின்ற சகலயோகசாஸ்திரமும் ஞானசாஸ்திரமும் முடிந்தது. இதற்குமேற் கிடைக்கவேண்டியது யாதொன்றுமில்லையென்று சித்தாந்தம். இப்படியாயுள்

ளளவில் யாதொருஜகத்துப் பிரதீதியும், விவகாரமும், அன்றியிவிரு க்கப்பட்டபிரமவித்துவரிட்டனைக்குறித்துக் கீழ்ச்சொன்ன சாந்தோக் கிய உபநிடதத்தினுடையவசனமும், பாகவதவசனமுந், தேகாதிமற தியையும் விவகார அபாவத்தையுஞ், சொல்வித்து. சமாதியில்நின்றும் பிறரால் வெளிப்படுத்தும்படியான பிரமவித்துவரியானைக்குறித்து வாசிட்டவசனந் தங்கள்வருணாச்சிரமங்களுக் குசிதமான விவகாரத் தைச் சொல்லி பிரமவித்துவரியானுக்குக் கீழ்ப்பட்ட பிரமவித்து வான், பிரமவித்து, ஆகிய இவர்களுக்கு விவகாரமுண்டென்கிறதிற் கேட்கவேண்டியதென்ன; இப்படிச் ஜீவன்முக்தனுக்கு விவகாரத் தைச் சொல்லுகிறதாயும் அதின் அபாவத்தைச் சொல்லுகிறதாயுமி ருக்கிற அந்தந்தச் சாஸ்திரவசனத்திற் கந்தந்தபூமியில் நியமஞ்சித்தித்த படியினாலே ஒன்றுக்கொன்று சாஸ்திரவசனங்களுக்கு யாதொருவி ரோதமும் வரவேண்டியதில்லை. இந்தப்பிரகாரம் ஐந்தாம்பூமி முத லான மூன்றுபூமி ரூபமான ஜீவன்முக்தியையடைந்த ஞானிகளுக் குச் சித்தவிசிராந்தி வந்திருக்கிறபடியினாலே சமுசய விபரீதங்களுக் கேதுவில்லை. ஆனதால், வேதாந்தப் பிரமாணத்தினாலுண்டான தத்துவஞானம் யாதொருவாதகமுமன்றியிற் ஜீவன்முக்தியினால் ரக்ஷி க்கப்படலாம். அப்படிப்பட்ட ஞானரக்ஷையே; ஜீவன்முக்திக்கி முந்தினபிரயோஜனம்.

அதற்கிரண்டாம் பிரயோசனமாகிய தவசாவதேதென்றால்? கீழ்ச்சொன்ன யோகபூமிகள் தேவாதிபதத்திற்குச் சாதனமானதால் அதுகளே தவசென்று சொல்லப்படும். அந்தபூமிகள் தேவாதிபதத்தி ற்குச் சாதனமென்கிறது ஸ்ரீ இராமவசிட்டாளுடைய கேள்வி மறு மொழிகளினாலே அறியப்படுகிறது. அதெப்படியென்றால்? வாரு மையா ஸ்ரீ குரோ முதற்பூமியாகட்டும், அல்லது இரண்டாம்பூமி யாகட்டும், மூன்றும் பூமியாகட்டும், அடைந்து திடஅபரோக்ஷஞான

மன்றியில் மரித்துப்போனவனுக்கு யென்னகதியென்று கேட்ட ஸ்ரீ இராமனைப்பார்த்து ஸ்ரீவசிட்டர்சொன்னதென்னவென்றால் ? வாரும் பிள்ளாய் இராமா யோகபூமியையடைந்து மரித்தஜீவனுக்குத் தானடைந்த யோகபூமியினுடைய அமுசத்துக்குத் தகுமானபடி சஞ்சித பாவம் நசித்துப் புண்ணியம் விருத்தி யடைந்திருக்கிறபடியினாலே அந்தச்ஜீவன் தேவவிமானங்களிலே யேறிக்கொண்டு இந்திராதிலோகத்திலும், மேருமுதலான உத்தமலோகத்திலிருக்கப்பட்ட உத்தியானவனமுதலானதிலும், நல்லநல்ல ஸ்திரீகளோடேகூட ரமித்துக்கொண்டு புண்ணியத்திற்கு தகுமானபடி சுகத்தை யநுபவித்துப் போட்டுப் பின்பு இந்தலோகத்திற் சுத்தாளாய்க் குணவான்களாய் பாக்கியசாலிகளாயிருக்கிற சாதுக்களுடைய குலத்திற் ஜன்மத்தை யடைந்து பூருவஜன்மத்தில் அப்பியாசிக்கப்பட்ட யோகவாசனையின் பெலத்தினாலே இந்தச்ஜன்மத்திலும் முன்னடைந்த பூமிவரைக்குஞ் சீக்கிரத்திலடைந்து அதற்குமேற்பட்ட யோகபூமியையும்; முயற்சியினாலே கிரமமாக அடைந்து கிருதார்த்தனாகிவிடுவனென்று ஸ்ரீ வசிட்டர் சொல்லியிருக்கிறார். இப்படி யோகபூமிகள் தேவாதிலோகத்திற்குச் சாதனமானதால், அதுகள் தவசென்று சொன்னதுசரியே. நாலாம்பூமியிற் கிடைக்கும்படியான அப்பிரதிபந்த அபரோக்ஷஞானத்திற்குக் கீழ்ப்பட்ட மூன்றுபூமிகளே தவசாகும்போது அந்தஞானத்திற்குப் பிறகுண்டாகும்படியான நிர்விகற்பசமாதி பரிபாகதாரதன்மிய ரூபங்களான ஐந்தாவது முதலான மூன்றுபூமிகளுந் தவசென்கிறதிற் கேட்கவேண்டியதென்ன ; அதுகள் தவசுதான். அந்தப்படி ஸ்மிருதியிற் சகல இந்திரியங்களோடே மனதினுடைய யேகாக்கிரரூபமான நிக்கிரகம் யாதொன்றுண்டோ ; அதுவே மஹாதவசு. அதுவே தருமங்களுக்குள்ளே உத்தமமான தருமமென்கிறதாகச் சொல்லியிருக்கிறது. அப்படிப்பட்டதவசுனாலே ஜீவன்முக்தனுக்கு அடையும்படியான ஜன்மமுதலானதில்லாவிட்டாலும்; அந்தத்தவசு லோகா

னுக்கிரகத்தின்பொருட்டுபயோகிக்கும். அந்தப்படி பகவான் சொல்லியிருக்கிறார்.

அந்தலோகமென்று சொல்லப்பட்ட ஜனங்கள் சிஷாளென்றும், பக்தாளென்றும், தடஸ்தாளென்றும், மூன்றுவிதங்களா யிருக்கும். அதில் சிஷஜனங்களுக்குச் சதா அந்தர்முகரா யிருக்கிற ஜீவன்முக்தரான குருவினிடத்தில் அத்தியந்தஞ் சிரத்தையுண்டாகி அதினாலே அவரால் உபதேசிக்கப்பட்ட பிரத்தியகபின்ன பிரமத்துவத்தில் மிகவும் நம்பிக்கைவந்து சீக்கிரத்தில் சித்தவிசிராந்திகிடைக்கும். அந்தப்படி சுவேதாசுவதர உபநிடதத்திற் பரமேசுரனிடத்திலெப்படிப் பக்தியிருக்கவேண்டியதோ ; அப்படித் தன்குருவினிடத்திலும் பக்தியுள்ளவனுக்கே வேதாந்தசாஸ்திரத்துவாரமாக உபதேசிக்கப்பட்ட மஹாவாக்கியார்த்தம் முதலான சகல அர்த்தமுங் கரதலாமலகம்போல நன்றாய்ப் பிரகாசிக்குமென்று சொல்லியிருக்கிறபடியினாலே அந்தர்முகராயிருக்கிற குருவினிடத்தில் சிஷர்களுக்குச் சிரத்தையுண்டாகி அவராலுபதேசிக்கப்பட்ட அர்த்தத்திற் சீக்கிரமாய்ச் சித்தவிசிராந்தி கிடைக்குமென்று சொன்னது யுக்தந்தான். பக்தாளாயிருக்கிற ஜனங்கள் அப்படிப்பட்ட ஜீவன்முக்தருக்கு அன்னமுதலானதைக் கொடுக்கிறதினாலும், மடமுதலான நல்ல இடமுண்டுபண்ணிக்கொடுக்கிறதினாலுஞ், சிசுருடைசெய்வதினாலும், அவருடையதவசுக்குச் சமானமான புண்ணியவிசேஷத்தைத் தாங்களுமடைந்து கிருதார்த்தாளாகிவிடுவாள். அந்தப்படி கௌஷதகி யுபநிடதத்திற் சொல்லியிருக்கிறது.

தடஸ்தாளென்று சொன்ன ஜனங்கள் ஆஸ்திகாளென்றும், நாஸ்திகாளென்றும், இரண்டுவிதங்களாயிருக்கும். அதில்-சகலசாஸ்திரார்த்தமுஞ் சத்தியமென்று நம்பியிருக்கிற ஆஸ்திகஜனங்களான பேர்கள் ஜீவன்முக்தருடைய நல்ல ஆசாரத்தைப்பார்த்து மஹாத்து

மாவாயிருக்கிற இவரே இப்படி நல்லநடத்தையிலிருக்கச்சே நாமும் நல்லநடத்தையைச் செய்யவேண்டுமென்று தோணி அந்தப்படி நடப்பார்கள். அப்படியே பகவான் சொல்லியிருக்கிறார்.

ஏதோ சாஸ்திரத்திற் சொல்லியிருக்கிறது யார் யெதைக் கண்டாள் பிரத்தியக்ஷமாய் நடக்கிறகாரியமே சத்தியமென் றிது முதலான வெகுதுர்ப்புத்தியை யுடைத்தான நாஸ்திகாளும் மஹாத்துமாவாயிருக்கிற ஜீவன்முக்தருடைய திவ்வியமான திருஷ்டியில் விழுந்தமாத்திரத்தினாலே வெகுவிதபாவங்களிலேநின்றும் விடுபடுவார்கள். அந்தப்படி சூதசங்கிதையிற் றிடாநுபவபரியந்தங் கிண்டத்திருக்கிற பிரமநிஷ்டையையுடைத்தான ஜீவன்முக்தருடைய திருஷ்டியி லெதிர்ப்பட்ட பெயர்களெல்லாம் வெகுவிதபாபங்களிலே நின்றும் முக்தாளாகிவிடுவார்களென்று சொல்லியிருக்கிறது. அதற்காக இதிகாசமுஞ் சொல்லப்பட்டிருக்கிறது. இப்படிச் ஜீவன் முக்தருடைய தவசு சர்வபிராணிகளுக்கும் உபயோகிக்குமென்கிற அபிப்பிராயத்தினால் அந்தச்ஜீவன்முக்தருடைய குலமேபரிசுத்தம். அவருடைய மாதாவேகிருதார்த்தை. அவராலேஇந்தப்பூமியெல்லாம் பரிசுத்தமென் றிதுமுதல் வெகுமகிமை ஜீவன்முக்தருக்குச் சூதசங்கிதையிற் சொல்லப்பட்டிருக்கிறது. ஜீவன்முக்தருடைய சாஸ்திர விவகாரந் தவசென்கிறதில் அதிசயமென்ன ; அவருடைய லௌகீகமான சகல விவகாரமுங்கூடத் தவசுதானென்று தைத்திரியவுபநிடதத்தில் வெகுவிஸ்தாரமாய்ச் சொல்லியிருக்கிறது. இப்படிச் ஜீவன் முக்திக்கி இரண்டாம் பிரயோசனமாகிய தவசுசொல்லப்பட்டுது.

அதற்கு மூன்றும் பிரயோசனமாகிய விசமவாதமில்லாமை யாவதேதென்றால் ? லௌகீகளுகட்டுஞ், சாஸ்திரஞ்ஞளுகட்டுஞ், ஜீவன்முக்தரோடே ; கலகமென்றும், நிந்தையென்றுஞ், சொல்லப்

பட்ட விசமவாதத்தைச் செய்யாமலிருப்பதே விசமவாதமில்லாமை. அதெப்படியென்றால்? லௌகிகனானவன் கலக ஏதுவான குரோத முதலான சித்தவிகாரமில்லாதவராயும், எப்போதும் அந்தர்முகராயுமிருக்கிற ஜீவன்முக்தரோடே; எப்படிக் கலகஞ் செய்யப்போகிறான் செய்கிறதற்கிடமில்லை. ஆனதால், கலகரூபமான விசமவாதமில்லாமை சித்திச்சுது. ஜீவன்முக்தர் இன்னநடத்தையையுடைத்தானவரென்று லௌகிகனாலே நிச்சயிக்கக்கூடாதபடியால் அவன் அவரையெப்படி நிந்திக்கப்போகிறான் நிந்திக்கிறதற்கு மிடமில்லை. ஆனதால், நிந்தைரூபமான விசமவாதமில்லாமையுஞ் சித்திச்சுது. இப்படிச் ஜீவன்முக்தரோடே; லௌகிகனாற் செய்யும்படியான இரண்டுவித விசமவாதமில்லாமை சொல்லப்பட்டுது. சாஸ்திரக்ஞானவன் ஜீவன்முக்தரோடேகூடச் சாஸ்திர அர்த்தத்திலாகட்டும், அல்லது அவருடைய நடத்தையிலாகட்டுங், கலகஞ் செய்யவேண்டும். அந்தஇரண்டுக்கு மிடமில்லை. ஏனென்றால்? ஜீவன்முக்தரானவர் சதா ஆத்துமத்தியானம் பண்ணவேண்டும். இதர வார்த்தைகளை விட்டுவிடவேண்டும். இதரவார்த்தைகளை வெகுவாய்ச்சொன்னது கொண்டு வாக்குக்கு வலியுண்டாகுமேயொழிய வேறேபலங்கிடையாதென் றிதுமுதலான உபநிடதத்தின் அர்த்தத்திலே தாற்பரியமுள்ளவரானபடியினாலே அவர் பிரதிவாதிகள்முன்னே அவாளுடைய சாஸ்திரார்த்தத்தைத் தூஷிக்கப்போகிறதில்லை. அப்படியே; தானியங்கிடைத்தபிறகு வைக்கோலைத் தள்ளுவதுபோலப் பிரமசொரூபத்தையறிந்து திடமான நிஷ்டைகிடைத்தபிறகு வேதாந்த சாஸ்திரத்தையும் விட்டுவிடவேண்டுமென் றிதுமுதலான உபநிடதத்தின் அர்த்தத்திற் றாற்பரியமுள்ளவரானபடியினாலும், பிரதிவாதிகளைக்கூடத் தன்னுடையசொரூபமாகப் பார்க்கிறவரானபடியினாலும், அவாளுடையமுன்னே தன்னுடைய அத்துவைதமான வேதாந்தசாஸ்திர அர்த்தத்தையுஞ் சாதிக்கப்போகிறதில்லை. ஆனதால்,

அப்படிப்பட்ட ஜீவன்முக்தரோடே; சாஸ்திரம்படித்தவன் ஒருவனுஞ் சாஸ்திரார்த்தத்தில் வரப்பட்ட கலகரூபமான விசமவாதம் பண்ணுகிறதற்கிடமில்லே. அப்படியே; லோகாயுதமதமொழிந்த மற்ற சகலமதத்திலு மிருக்கப்பட்ட சாஸ்திரக்ஞாளுஞ் ஜீவன்முக்தருடைய நடத்தையில் நிந்தைரூபமான விசமவாதத்தைச் செய்யப்போகிறதில்லே. எனென்றால்? லோகாயுதபின்னமான அருக, பௌத்த, தார்க்கீக, சைவ, வைஷ்ணுவ, சாத்த, சாங்கிய, யோகாதிசாஸ்திரங்களிற் சொல்லப்பட்ட சாஸ்திர அர்த்தம் நானுவிதமாயிருந்தாலும் அந்த யெல்லாச்சாஸ்திரத்திலும் மோக்ஷசாதனமான இயமநியமாதி அஷ்டாங்கயோகம் ஒன்றாகவே சொல்லப்பட்டிருக்கிறபடியினாலே யொருசாஸ்திரக்ஞாளுஞ் ஜீவன்முக்தருடைய சர்வோத்தமமானநடத்தையில் நிந்தைரூபமான விசமவாதத்தைச் செய்யவேமாட்டார்கள். ஆனதால், ஜீவன்முக்தர் சர்வசம்மதமாகவே இருப்பரென்று சித்தமாச்சுது. அந்தப்படி வாசிட்டத்தில் வெகுவாய்ச்சொல்லியிருக்கிறது. இப்படிச் ஜீவன்முக்திக்கி மூன்றும்பிரயோசனமாகிய விசமவாதமில்லாமை சொல்லப்பட்டுது.

அதற்கு நாலாவது ஐந்தாவது பிரயோசனமாகிய துக்கநாசஞ் சுகாவிற்பாவங்களேப் பஞ்சதசப்பிரகரணத்தில் ஆனந்தபஞ்சகத்தினுடைய நாலாமத்தியாயமாகிய வித்தியானந்தமென்கிற பிரகாணத்தில் விஸ்தரித்துச்சொல்லியிருக்கிறோம், ஆனதால், அந்தஇரண்டையும் இங்கேசங்கிரகித்துச் சொல்லுகிறோம். அதேதென்றால்? இகலோகதுக்கநாசமென்றும், பரலோகதுக்க நாசமென்றுந், துக்கநாசம் இரண்டுவிதம். அந்தஇரண்டுஞ் ஜீவன்முக்தருக்குண்டு. அது எப்படியென்றால்? அக்கியானஞ், சமுசயம், விபரீதம், ஒன்றுமன்றியிற் றேகாத்துமஞானங் திடமா யெப்படியுண்டாகிறதோ;

அப்படிப் பரமானந்தரூபமான பிரத்தியகபின்ன பிரமசொரூபமே நாமென்று அக்ஞானமுதலானதன்றியிற் றிடஅபரோக்ஷஞானத்தையடைந்து சித்தவிசிராந்தி கிடைத்திருக்கிற ஜீவன்முக்தருக்குச் ஜகத்தினுடைய பிரதீதியே இல்லாததினுலே இகலோகத்திற் சுரமுதலான ரோகத்தினுல் வரப்பட்டதுக்கமுங், பரலோகத்தில் நரகாதியினுல் வரப்பட்டதுக்கமும், எப்படித்தோன்றுந் தோன்றமாட்டாது. ஆனபடியினுலே அவருக் கிரண்டுவித துக்கநாசமும் உண்டு. அந்தப்படி பிரகதாரணியகம், தைத்திரியம், முதலான உபநிடதத்தில் நன்ருய்ச் சொல்லியிருக்கிறது. அந்தத் துக்கநாசமே ஜீவன்முக்திக்கி நாலாம் பிரயோசனம்.

அதற்கைந்தாம் பிரயோசனமாகிய சுகாவிற்பாவமாவ தேதென்ருல்? நிர்விகற்பசமாதி சாக்ஷாத்காரங்களினுல் விக்ஷேபம், ஆவரணம், இரண்டும் நீங்கியிருக்கிறபடியினுலேயும், பரமானந்தரூபமான பிரத்தியகபின்ன பிரமசொரூபத்திற் சீரோதகம்போல மனது யேகரசப்பட்டுச் சம்ஸ்காரமாத்திரமாகச் சேஷித்திருக்கிறபடியினுலேயுஞ், சொரூபசுகஞ் சூக்ஷ்மமான ஜீவன்முக்தருடைய மனதில் ஆவிற்பவிக்கும். அந்தச்சுகாவிற்பாவஞ் ஜீவன்முக்திக்கைந்தாம்பிரயோசனம்.

சங்கை? இந்தத் துக்கநாசஞ், சுகாவிற்பாவம், இரண்டுந் தத்துவஞானத்தினுலேதானே சித்தித்திருக்கிறபடியினுலே இதைச் ஜீவன்முக்திக்குப் பிரயோசனமென்று எப்படிச் சொல்லலாமென்ருல்? சொல்லலாமே. ஏனென்ருல்? தத்துவஞானஞ் ஜீவன்முக்திக்கிப்பூருவமே சிரவணுதியினுலே யுண்டாயிருந்தபோதிலும்; அந்தத் தத்துவஞானஞ் ஜீவன்முக்தியினுலே சமுசயவிபரீதங்கள் வாராமல் ரக்ஷிக்கப்படுகிறபடியினுலே அப்படி ரக்ஷிக்கப்பட்ட அந்தஞானம்

எப்படிச் ஜீவன்முக்திக்கிப் பிரயோஜனமோ; அப்படி ஞானத்திஞலே ஜீவன்முக்திக்கிப் பூருவமே துக்கநாசஞ், சுகாவிற்பாவம், இரண்டு முண்டாயிருந்தபோதிலும்; அந்த இரண்டுஞ் ஜீவன்முக்தியிஞலே விக்ஷேபம்வாராமல் ரக்ஷிக்கப்பட்டுத் திடமாகிறபடியிஞலே அப்ப டிப்பட்ட துக்கநாசஞ், சுகாவிற்பாவம், இரண்டுஞ் ஜீவன்முக்திக்கிப் பிரயோஜனமென்று நன்ருய்ச் சொல்லலாம்.

சங்கை? இப்படியாயுள்ளளவில் ஐந்துபிரயோசனங்களோ டேயுங்கூடின ஜீவன்முக்தியையுடைத்தான ஞானியன்ரே; சமாதி யன்றியில் லோகவிவகாரம் பண்ணிக்கொண்டிருக்கிற ஞானியைக் காட்டிலுஞ், சிரேட்டனென்று சொல்லவேண்டும். அப்படிச்சொல் லக்கூடவில்லை. ஏனென்ருல்? வாசிட்டத்திலேயே சர்வஞ்ஞரா யிருக்கிற ஸ்ரீ வசிட்டபகவானே; ஒருவன் லோகவிவகாரம்பண்ணின போதிலுஞ் சிலகாலங்கிடைத்த சமாதியிஞற் திடப்பட்ட ஞான பெலத்திஞலேதானே சுகமாய்ச் சாந்தனுயிருக்கிருன். மற்ருருவன் யெப்போதும் ஏகாந்தவாசம் பண்ணிக்கொண்டு சமாதியைவிட்டுப் பிரியாமலேயிருக்கிருன். இது மெய்யென்றுகூறிஞர், ஆஞல், அவர் கள் இரண்டுபேர்களுக்குள்ளே யார்தான் சிரேஸ்டனென்கிறதை யெனக்குச் சொல்லவேண்டுமென்று கேட்ட ஸ்ரீஇராமனைப் பார்த்து ஸ்ரீ வசிட்டர் சொன்னபிரகார மென்னவென்ருல்? ஏ இராமா! திடஞானியா யிருக்கிறவனுக்கு மனதுகுளிர்ந்திருப்பதே சமாதி. ஆனதால், ஒருவன் சர்வத்திற்குஞ் சாக்ஷியாயிருக்கிற சின்மாத்திர சொருபமான நமக்குத் திரிசியமாயிருக்கிற அகங்காராதிப்பிரபஞ்ச த்தோடே யாதொருசம்பந்தமுங் கிடையாதென்று திடநிச்சயத் தோடேகூட லோகவிவகாரம் பண்ணினபோதிலுங்; குளிர்ந்திருக் கிற னதோடேகூடியிருப்பன். அப்படியில்லாமற் பின்னெரு வன் சதா சமாதியிலேயிருப்பன். மனதுமாத்திரங் குளிர்ந்திரு

ந்துதேயானல்; அவர்களிரண்டுபேர்களுஞ் சமானுள்தான். மனதி னுடைய குளிர்மையன்றோ; சகலத்திற்கும் பலமென்று ஸ்ரீ வசிட் டர் சொல்லியிருக்கிறபடியினுலே லோகவிவகாரம் பண்ணுகிற திடஞானியைக்காட்டிலுஞ்; சமாதியிலிருக்கப்பட்ட ஜீவன்முக்தன் சிரேஸ்டனென்று சொல்லக்கூடவில்லையேயென்று சங்கைவந்தால் ஸ்ரீவசிட்டருடைய மறுமொழியின் அபிப்பிராயத்தை ஆலோசித்துப் பார்க்கும்போது அப்படிப்பட்ட சங்கைவரவேண்டியதில்லை. அவ ருடைய அபிப்பிராயந்தான் ஏதென்றுல்? ராகாதிவாசனக்ஷயமா கிய மனதினுடைய குளிர்மை அவசியஞ் சம்பாதிக்கத்தக்கதென் றிவ் வளவே அவருடையமறுமொழியின் அபிப்பிராயமேதவிர அந்த வாச னக்ஷயத்திற்கு மேற்கிடைக்கும்படியான மனோநாசரூபமான சமாதி சிரேஸ்டமென்கிறதை நிஷேதிக்கிறது அபிப்பிராயமன்று ஏனென் றுல்? அந்த ஸ்ரீவசிட்டரே மேற்கிரந்தத்தில் மனதினுடைய குளிர் மையென்பது ஆசையினுடையசாந்தியென்று ஸ்புடமாய்ச் சொல்லி யிருக்கிருர். அதேதென்றுல்? மனது ஆசைமுதலான மலின வாச னையன்றியில் உள்ளேகுளிர்ந்திருந்தால் வெளியிற் சகலஜகத்தும் அமிர்தசமுத்திரத்தினுல் நனைக்கப்பட்டதுபோலக் குளிர்ந்ததாய்த் தோன்றும். அந்தமனது ஆசைமுதலானதால் உள்ளேதாபத்தைய டைந்தால் வெளியிற் சகலஜகத்துங் காட்டுத்தீபற்றிக்கொண்டதினு லெரிக்கப்பட்ட வனம்போலத் தாபத்தோடே கூடினதாய்த் தோன்று மென்று மேற்சொல்லியிருக்கிருர். ஆனதால், ராகாதிவாசனக்ஷய ரூபமான மனதினுடைய குளிர்மையாகிய சமாதி லோகவிவகாரம் பண்ணுகிற ஞானிக்குஞ், சமாதியிலிருக்கிற ஜீவன்முக்தனுக்குஞ், சமானமானபோதிலும்; அந்த வாசனக்ஷயத்திற்கு மேற்பட்ட மனோ நாச ரூபமான சமாதி சிரேஸ்டமென்கிறதில் யாதொரு விரோதமு மில்லை. இப்படியாயுள்ளளவில் விவகாரம் பண்ணிக்கொண்டிருக்கிற

தத்துவக்ஞனைக் காட்டிலுஞ்; சமாதியிலிருக்கப்பட்ட ஜீவன்முக்தர் சிரேஸ்டரென்று சொன்னது யுக்தந்தான்.

சங்கை ? அந்தவாசிட்டத்திலே சமாதியிலிருக்கப்பட்டவனுடைய மனது நானாவிதவிர்த்திகளினாலே சஞ்சலமாயிருந்தால் அப்போது அந்தச்சமாதி உன்மத்தனுடைய கூத்துக்குச் சமானமென்று சமாதிநிந்தையும், உன்மத்தனுடைய கூத்துப்போலத் தோணினபடி விவகாரம் பண்ணினபோதிலும்; மனதுமாத்திரம் மலினவாசனையன்றியிலிருந்தால் அப்போது அந்தத் தத்துவஞானியினுடைய விவகாரஞ் ஜீவன்முக்தனுடைய சமாதிக்கிச் சமானமென்று விவகாரஸ்துதியுஞ், சொல்லப்படுகிறதே, ஆனதால், விவகாரியைக்காட்டிலுஞ்; சமாதிஸ்தன் எப்படிச் சிரேஸ்டனாகுவன் ஆகவேமாட்டானென்று சங்கைவந்தால் அந்தச்சங்கையும் வரவேண்டியதில்லை. ஏனென்றால் ? சமாதிநிந்தையையும், விவகாரஸ்துதியையுஞ், சொல்லுகிறதுபோலத் தோன்றுகிற வாசிட்டவசனத்திலுஞ், சமாதிசிரேஸ்டமென்கிறதை ஒப்புக்கொண்டு வாசனையை நிந்திக்கப்படுகிறதேதவிர; சமாதி நிந்திக்கப்படவில்லை. அதெப்படியென்றால் ? சொல்லுகிறோம். விவகாரத்தைகாட்டிலுஞ் சமாதிசிரேஸ்டமானபோதிலும்; அந்தச்சமாதி வாசனைகளோடே கூடியிருந்தால் அப்போது அது நிர்வாசனையாயிருக்கிற தத்துவக்ஞனுடைய விவகாரத்தைக்காட்டிலுங்; கீழ்ப்பட்டதுதான். சமாதிபண்ணுகிறவன், விவகாரம் பண்ணுகிறவன், ஆகிய இரண்டுபேர்களுந் தத்துவஞானமில்லாதவர்களாயும், வாசனையோடே கூடினவர்களாயும், இருந்தால் அப்போது சமாதி உத்தமலோகத்தையடைகிறதற்குச் சாதனமாயிருக்கப்பட்ட புண்ணியரூபமானதால் விவகாரத்தைவிடச் சமாதியேசிரேஸ்டம். இரண்டுபேர்களுந் தத்துவஞானிகளாயும், வாசனையில்லாதவர்களாயும், இருந்தால் அப்போது மனோநாசரூபமான, சமாதி வாசனக்ஷயத்தை ரக்ஷிக்கிறபடியினாலே

விவகாரத்தைக்காட்டிலுஞ்; சமாதியேசிரேஸ்டமானதாற் சமாதியிலிருக்கப்பட்ட ஜீவன்முக்தரே விவகாரியாயிருக்கிற தத்துவக்ஞனைக் காட்டிலுஞ்; சிரேஸ்டரென்றுசித்தமாச்சுது. ஆனபடியினாலே அந்தப் பிரயோசனங்களோடேகூடின ஜீவன்முக்தியில் யாதொருவிக்கின முங்கிடையாதென்று சித்தமாச்சுது.

இந்தப்பிரகாரம் ஸ்ரீவித்தியாரண்ணியசுவாமிகளினாலே ஜீவன்முக்தியினுடைய சொரூபம், பிரமாணஞ், சாதனம், பிரயோசனம், ஆகிய நாலுகளோடேயுங்கூடின ஜீவன்முக்திப்பிரகரணஞ் சொல்லப்பட்டுது.

அவாள் சொன்னபிரகாரம் அந்தப்பிரகரணத்தினுடைய அர்த்தத்தை ஸ்ரீ சாம்பநடேசருடைய பிரசாதலேசத்தினாலேயுஞ், சற்குருவினுடைய கிருபையினாலேயும், புத்திக்கித்தோணினமட்டுக்கும் நான் றமிழினாலே சொன்னேன். அப்படிச்சொல்லப்பட்ட இந்தத் தமிழ்மொழிரூபமான ஜீவன்முக்திப்பிரகரணம் ஸ்ரீ சாம்பநடேசருக்கே அர்ப்பணஞ்செய்யப்பட்டுது.

ஆனதால் இதிலிருக்கப்பட்ட பிழைகளை ஸ்ரீ சாம்பசிவபக்தாளாயிருக்கிற சாதுக்கள் சகித்துக்கொள்ளவேண்டியது.

ஜீவன்முக்திப்பிரகரணம் சமாப்தம்.

திருச்சிற்றம்பலம்.

சர்வஞ்சின்மயம்.

குருபரம்பரை

வணக்கம்.

பரமாகவொளிர்சச்சி தானந்தமாம்விண்டு
பங்கயன்வசிட்டர்சத்தி
பராசமாமுனிமகா வியாசர்சீர்சுகர்கௌட
பாதர்கோவிந்தயோகி
யருளுருவமாஞ்சங்க ராசாரியாமிறைக
ளமர்பத்மபாதருயரத்
தாமலகர்தோடகா சிரியர்வார்த்தீகர்வித்
தியாரண்யராகுமுரவோ
ரிருளுருவமற்றவவர் மரபதனில்வந்தசுப்
பிரமணியதேவனயின
வீசனழகப்பாவா ரியன்வீரபத்திரகுரு
வின்பமுத்தையவடிக
டெருளுருவமாமுகந் தையனன்மைகளிலாத்
தீயனேன்றனையுமாண்ட
சீர்முத்துராமலிங்க வருணாசலசிதம்பர
தேசியர்க டிகழ்பதமிறைஞ்சுவோமே.

குருஸ்துதி.

பாசமனைத்தையுந் தனித்தனிப் பரிந்திடநீக்கி
நேசமாகிய வறிவுரு நீயெனக்காட்டிப்
பேசுமேழ்வகைப் பிறப்புனக்கிலை யெனப்பேசித்
தூசுநீக்கிய சுயஞ்சிதாகாசனைத் தொழுவாம்.

பரிசோதன பத்திரம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
37	13	விதனப்படுகின்றது ..	விதனப்படுகிறது.
59	13	சூத்திரபரஷியத்திற் ...	சூத்திரபாஷியத்திற்.
80	17	அனுஷ்டிக்கிறுரகள ...	அனுஷ்டிக்கிறுர்கள்.
86	8	மலினவானசனைகளினுற் ...	மலினவாசனைகளினுற்.
105	20	ஆசனஜெயத்துக்குப்பலம	ஆசன ஜெயத்துக்குப்பல [ம்.
107°	26	விஸ்தாரம ...	விஸ்தாரமா.
116	16	கிடைக்குமே ...	கிடைக்குமோ.
117	15	நிரோதருபயான ...	நிரோதரூபமான.
121	16	கருடபகவான் ...	கெருடபகவான்.
122	8	சக்த்தி ...	சக்தி.
123	7	அத்தியயம் ...	அத்தியயனம்.
124	18	கலை ...	கனை.
124	19	கிராமமாக ...	கிரமமாக.
149	3	போதிலும் ...	போதிலும்.
		வடமொழி தென்மொழி பாடபேதங்களாற் சொற் பேதங்கள் 9-வது பக்கம்.	வடமொழி தென்மொழி பாடபேதங்களாற் சொற் பேதங்கள் 15-வது பக்கம்.

THE MADURA TAMIL

S. Murthy & Co., Printers, Madras.